# கிழக்கும் மேற்கும்

அ.நி.மன்னார்குடி பானுகுமார்

**விஜயா பதிப்பகம்**
*20,* ராஜா வீதி,
கோயம்புத்தூர் - *641 001.*
vijayapathippagam2007@gmail.com

© விஜயா பதிப்பகம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **கிழக்கும் மேற்கும்** |
| ஆசிரியர் | : | அ.நி.மன்னார்குடி பானுகுமார் |
| முதல் பதிப்பு | : | ஏப்ரல் 2015 |
| வெளியீடு | : | **விஜயா பதிப்பகம்**<br>20, ராஜ வீதி,<br>கோயம்புத்தூர் - 641 001.<br>✆ 0422 - 2382614 / 2385614 |
| ஒளியச்சு / புத்தக வடிவமைப்பு | : | ஐரிஸ் கிராபிக்ஸ், கோவை. |
| அட்டை வடிவமைப்பு | : | சரவணன், சென்னை. |
| அச்சாக்கம் | : | ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை - 5. |
| பக்கம் | : | 184 |
| விலை | : | ரூ.120/- |

**ISBN - 81-8446-680-3**

**KIZHAKKUM MERKUM**

| | | |
|---|---|---|
| Author | : | A.N.Mannarkudi Banukumar |
| First Edition | : | April 2015 |
| Published By | : | **VIJAYA PATHIPPAGAM,**<br>20, Raja Street, Coimbatore - 641 001.<br>✆ 0422 - 2382614 / 2385614 |
| Layout & Laser type set | : | IRIS Graphics, Coimbatore. |
| Cover Design | : | Saravanan, Chennai. |
| Printed At | : | Jothy Enterprises, Chennai - 5. |
| Pages | : | 184 |
| Price | : | Rs.120/- |

# வாழ்த்துரை

அறிஞர்கள், கவிஞர்கள், தொழில் நிபுணர்கள், இவர்களின் வாழ்வில் பல்வேறு சூழ்நிலைகளில் எண்ணிறந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நடந்தேறுகின்றன.

உலக மக்களுக்கு அவர்களது அனுபவங்களைப் பேச்சாலும், எழுத்தாலும், கவியாலும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்கள். அவர்கள் அந்தத் துறையில் அந்தந்த நிகழ்ச்சியில் அந்தந்தச் சமயத்தில் தாங்கள் அடைந்த இன்பங்களையும், துன்பங்களையும் உலக மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

அவர்களின் இத்தகைய முயற்சியால் அவர்கள் அடைந்த இன்பத்தை ஒருவர் அறிந்து கொண்டது முதல் அதை நினைக்குந்தோறும் ஓரளவு இன்பமும், அதே இன்பத்தைத் தானும் வாழ்வில் பெற வேண்டும் என்ற முயற்சியும், அதைத் தொடர்ந்து, முயற்சிக்கேற்ற பயனையும் அடைய முடிகிறது.

அவர்கள் அடைந்த துன்பத்தை ஒருவர் அறிந்து கொள்வதனால் அது போன்ற துன்பம் வாழ்வில் தனக்கு ஏற்படாமல் விழிப்பாக இருப்பதற்கும் அப்படி ஏதேனும் சூழ்நிலை சந்தர்ப்ப நிர்பந்தங்களினால் ஏற்பட்டு விட்டாலும் அதைச் சமாளிக்கவும், குறைத்துக் கொள்ளவும் ஏற்ற அளவில் திறமை, தகைமை, பொறுமை இவைகளை அவர்கள் பெற்று வருகிறார்கள்.

ஆகவே, அறிஞர்களின் அனுபவசாலிகளின் - கருத்துக்களும், சரித்திரங்களும் அவற்றைக் கற்கும் எல்லோருக்கும் பலவிதத்திலும் நற்பயனையே தருகின்றன.

என்ற அருட்தந்தை கூறியதை மனதிற்கொண்டு, மேற்கில் தோன்றிய சிந்தனையாளர்கள் கருத்தை கிழக்கில் தோன்றிய வேதாத்திரி மகரிஷியின் தத்துவங்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளார் இந்நூலாசிரியர்.

வேதாத்திரியத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் நம் ஞானத்தந்தைக்கு மேலும் ஒரு புகழ் மாலை சூட்டிய ஆசிரியர் பானுகுமார் தொண்டினை வாழ்த்தி மகிழ்கிறேன்.

மனவளக்கலை அன்பர்கள் மட்டுமின்றி, ஒவ்வொருவரும் அவசியம் படித்துப் பாதுகாக்க வேண்டிய அருமையான கருவூலமாகும்.

வேதாத்திரியத்தொண்டில்
**பேரா. பிரம்மகுட்டி அம்மாள்**
துணைத்தலைவர்,
உலக சமுதாய சேவா சங்கம்.

# அணிந்துரை

மேற்கில் திருக்குறளோ அல்லது மகாபாரதமோ உரிய கவனம் பெறவில்லை என்று நமக்குத் தோன்றலாம். ஆனால் அவர்களும் அவ்வாறே கருத வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

மேற்கு தன் அறிவு உலகின் மூலமாக கிரேக்க சிந்தனையையும், நாகரித்தினையும் கருதுகிறது. சீனா அல்லது இந்தியாவை அல்ல.

இதையே வேறு வார்த்தைகளில் சொல்வதானால்

அவர்களுக்கு வியாசரை விட ஹோமர் மிக முக்கியமானவராக, திருவள்ளுவரை விட அரிஸ்டாட்டிலும், பிளேட்டாவும் முக்கிய மானவர்களாக இருப்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

மேற்கின் அங்கீகாரமே உலகின் அங்கீகாரம் என்று நாம் ஏன் கருத வேண்டும்.? திருக்குறளோ அல்லது சிலப்பதிகாரமோ அல்லது மகாபாரதமோ அவர்களைப் பொருத்த வரை கிழக்கத்திய நாகரிகத்தின் பங்களிப்புகள் என்று மட்டுமே புரிந்து கொள்ளப்படலாம்.

மகாபாரதம் இதிகாசம் அல்லது காவியம் என்ற அளவில் புரிந்து கொள்ளப்படலாம்.

மேற்கு கிழக்கினை பல்வேறு கோணங்களில் பார்க்கிறது, , புரிந்து கொள்ள முயல்கிறது. அதில் ஒன்று கிழக்கினை, அதன் பண்பாட்டினை exotic, mysterious, ஆகப் பார்ப்பது. இன்னொன்று கிழக்கினை வெறும் கடந்த காலமாக அருங்காட்சியகப்படுத்துவது.

மேற்கு கிழக்கினை ஒரு பிறவாக (the other) கருதுவதும் உண்டு. இப்படி மேற்கு கிழக்கினை எப்படியெல்லாம் புரிந்து கொள்கிறது, புரிந்து கொண்டது, புரிந்து கொள்ள முயல்கிறது என்பது பற்றி விரிவான நூல்கள் இருக்கின்றன.

பல விமர்சனங்கள், குறைகள் இருந்தாலும் Edward Said எழுதிய Orientalism இந்த விதத்தில் முக்கியமான நூல்.

உலகப் பொது மறை என்று நாம் கருதினாலும், அப்படி ஒரு பொது மறை இருக்க முடியுமா என்ற கேள்வியும் இருக்கிறதே. இதை நாம் எப்படிப் புறக்கணிக்க முடியும்.

அரிஸ்டாட்டில் அறம் குறித்து கூறியவை அவர்களுக்கு முக்கியமாக இருப்பதால் அறம்,அறநெறி குறித்த பாடத்திட்டங்களில் அரிஸ்டாட்டில் எழுதியவை இடம் பெறுவதில் வியப்பில்லை.

அது போல் ரோமானிய சட்டங்கள், கிரேக்க நீதி குறித்தும் அவர்கள் அதீத அக்கறை காட்டுவதில் ஆச்சரியமில்லை.

எனவே திருக்குறளோ அல்லது மனுஸ்மிருதியோ அவர்களைப் பொருத்தவரை ஆதி காலத்து நீதி நூல்கள் என்ற அளவில் கவனிக்கப்பட வேண்டியவை.

அவற்றின் விழுமியங்கள், நீதிக் கோட்பாடுகள் அந்த நாகரிகத்தின் நீதிக் கோட்பாடுகள், விழுமியங்களின் துவக்கப் புள்ளிகள் அல்ல. இதை நாம் மறந்து விடக்கூடாது.

தப்பித்தவறி யாராவது சிலர் பண்டைய நீதி நூல்கள் குறித்த ஒப்பீட்டாய்வில் ஈடுபடும் போது திருக்குறளைப் பற்றி விரிவாக ஆராய்ந்து, புரிந்து கொண்டு எழுதக் கூடும்.

ஒரு சில பாடத்திட்டங்களில் திருக்குறள் குறித்த கட்டுரை அல்லது அதன் பகுதிகள், வேறு சிலவற்றுடன் இடம் பெறக்கூடும். எனவே திருக்குறளை பல்வேறு தளங்களில் பல்வேறு முறைகளில் அறிமுகம் செய்ய நாம் முயலலாம்.

வெகுஜன வாசகர்களுக்கு திருக்குறள் முன்னிறுத்தும் நீதி, அறம் குறித்து எளிமையான நடையில் விளக்கும் வகையில் நூல்கள், மொழிபெயர்ப்புகள் இருக்கலாம்.

ஆனால் திருக்குறள் முன்னிறுத்தும் பல விழுமியங்கள் மேற்கத்திய கலாச்சாரத்திற்கு அந்நியமானவை என்பதால் திருக்குறள் எழுதப்பட்ட காலம், பண்டைத் தமிழர் பண்பாடு குறித்த ஒரு அறிமுகமும் தேவை.

இல்லையென்றால் திருக்குறளை ஒரு நிலப்புரபுத்துவ அறவியல் நூல் அல்லது ஆணாதிக்க அறவியல் நூல் என்ற புரிதலை அடிப்படையாகக் கொண்டு இன்றைய வாசகர் அதை முற்றுமாக ஒதுக்கிவிடும் அல்லது நிராகரித்துவிடும் சாத்தியக் கூறுகளும் உள்ளன.

மேலும் இன்றைய வேகமாகச் செல்லும் நவீன வாசகரிடம் உலகப் பொதுமறை நூல் என்று ஒன்றை அறிமுகம் செய்வது சரியாகவும் இருக்காது. உலகப் பொது மறையாக அதை விளம்பரப்படுத்துவது ஒரு எதிர் மறையான கண்ணோட்டத்தினையே உருவாக்கும்.

ஒரு படைப்பாளி உலகின் பிறக் கலாச்சாரங்களின் உன்னத படைப்புகள் குறித்து ஏதும் அறியாமலேயே சிறந்த ஆக்கங்களைத் தரமுடியும்.

மகாபாரதமோ, சிலப்பதிகாரமோ படிக்காத ஒரு அமெரிக்க எழுத்தாளர் அல்லது கிழக்கு ஐரோப்பிய எழுத்தாளர் தன் சூழலில் இருந்து கொண்டு உலகம் குறித்த தன் கண்ணோட்டம் கொண்டு சிறந்த படைப்பினைத் தர முடியும்.

மேலும் ஒரு பிரதியைப் படித்தாலும் அப்பிரதிக்குரிய கலாச்சார விழுமியங்களை, குறியீடுகளை, மதிப்பீடுகளைப் புரிந்து கொள்வது எளிதல்ல.

உதாரணமாக கீகர்கார்டினை நாம் என்னதான் விழுந்து விழுந்து படித்தாலும் அவரது கேள்விகள், பிரச்சினைகளை நம்முடைய பிரச்சினைகளாக 100% பார்க்க முடியாது.

அவரது சூழல், கிறித்துவ அறம், விழுமியங்கள் போன்றவை நமக்கு எழுத்து மூலமே பரிச்சயம் என்பதால் கீகர்கார்டினை நாம் முழுதுமாக ஒரு ஐரோப்பியர் போல் உள்வாங்குவது எளிதல்ல, அது எந்த அளவிற்குச் சாத்தியம் என்ற கேள்வியும் இருக்கிறது.

இது போல்தான் ராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் ஒரு ஐரோப்பியரால் அல்லது ஆப்பிரிக்கரால் எந்த அளவு உள்வாங்கப்படும் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

காம்யு புரோமிதியஸ் குறித்து எழுதும் போது கிரேக்க புராணக்கதையிலிருந்து ஒரு முன்மாதிரியினை எடுத்துக் கொள்கிறார்.

அவர் திரிசங்கு என்ற பாத்திரத்தை எங்காவது குறிப்பிட்டால் அல்லது பயன்படுத்தினால்தான் ஆச்சரியப்பட வேண்டும்.

எனக்கு புரோமிதியசை விட திரிசங்கு கலாச்சார ரீதியாக நெருக்கமான பாத்திரம். புரோமிதியஸ் போன்ற பாத்திரம் என் தேசத்து இதிகாசங்களில் இல்லை என்பதால் நான் காம்யுவைப் படித்து ஏதாவது எழுதினால் எப்படி இருக்கும்?

அது புலியைப் போல் சூடு போட்டுக் கொண்ட பூனை போல் கதையாகி விடக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

ஷேக்ஸ்பியரும், ஆங்கிலம் மூலமாக கிரேக்க நாடகங்களும் நம் நாடகச் சூழலில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.

ஆனால் ஸ்பானிஷ் மொழி, பிரெஞ்சு மொழி நாடகங்கள், காவியங்கள் நமக்கு அறிமுகம் அதிகம் ஆகவில்லை என்பதால் அவற்றின் தாக்கம் மிகக்குறைவாகவே உள்ளது.

இதற்கு ஒரு முக்கிய காரணம் காலனியாதிக்கப் போட்டியில் இந்தப் பகுதியில் ஆங்கிலேயர் செல்வாக்கு மேலோங்கியது.

இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு மிகவும் சாதுரியமான முறையில் கிழக்கில் தோன்றிய தத்துவஞானி வேதாத்திரி மகரிசியை உலக சிந்தனையாளர்களுடன் ஒப்பிட்டு அருமையான நூலை படைத்திருக்கிறார் பானுகுமார்.

மேற்கில் வேதாத்திரியம் வீறுகொண்டு மானுடத்தை வழிநடத்தி செல்லும் காலம் மிக அருகில் உள்ளது என்பதில் ஐயமில்லை.

கே. பானுமதி குமார்,

**பொறுப்பாசிரியர், அண்ணாநகர் தவமையம்.**

. செங்கற்பட்டு

# என்னுரை

சமுதாயத்தில் ஒவ்வொரு நூற்றாண்டிலும் மானுடம் தழைத்து முன்னேறுவதற்குப் பல சிந்தனையாளர்கள் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றி தன்னாட்டை வளப்படுத்தி உள்ளார்கள்.

அந்த வகையில் மேற்கில் உதித்த சிந்தனையாளர்கள் சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், ஜேம்ஸ் ஆலன், மாக்கியவல்லி, நியூட்டன், பெஞ்சமின் பிராங்ளின், எமர்சன், காரல் மார்க்ஸ், இங்கர்சால், ஐன்ஸ்டைன் ஆகியோர் புகழ் பெற்ற சிந்தனையாளர்கள்.

இந்த வரிசையில் கிழக்கில் தோன்றி இருபதாம் நூற்றாண்டில் புகழ்பெற்ற சிந்தனையாளராக அருள்தந்தை வேதாத்திரி மகரிசி வருகிறார்

அருள்தந்தை வேதாத்திரி மகரிசி எழுதிய நூல்கள்யாவும் உலகச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கியதாகவும் மனிதகுலம் உயர்வதற்கான உயர்த் தத்துவங்களையும் உன்னத இலட்சியங்களையும் உணர்த்துவனவாகவும் உள்ளன

மிகச்சிறந்த நாகரிகமாகப் போற்றப்படும் சுமேரியாவில் கி.மு. 2,700 ஆம் ஆண்டில் நூலகங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன.

ஒரு நூலகத்தில் 30 ஆயிரம் மண்பலகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் கவிதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், புராணங்கள் முதலிய இலக்கிய வகைகள் எழுதப்பட்டுள்ளன.

கிரேக்க நாட்டுக்குப் பெருமை சேர்த்தவை தலைசிறந்த சிந்தனையாளர்களாக விளங்கிய சாக்ரடீஸ், அரிஸ்டாடில், பிளேட்டோ ஆகியோரின் கருத்துகள் மட்டுமல்ல, அந்நாட்டின் பெருங்கவிஞர் ஹோமர் எழுதிய ''ஒடிசி' மற்றும் ''இலியட்' ஆகிய காவியங்களும் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் முடிவு.

கிரேக்க வரலாற்றில் பொற்காலம் படைத்தவர் பெரிக்ளிஸ் இவர் சிறந்த மேதை, பேச்சாளர், அரசியல்வாதி தளபதியாக இருந்து நிர்வாக அவையின் தலைவர் ஆனவர்; மக்களாட்சியை நிறுவி சிறந்த ஆட்சி நடத்தினார்.

இந்த ஆட்சிக்கெல்லாம் மகுடம் சூட்டுவன அந்நாட்டுச் சிந்தனைச் செல்வங்களே! அதனால்தான் அவரது காலம் கிரேக்க செவ்வியல் காலமாகக் குறிப்பிடப்படுகிறது.

இங்கிலாந்து நாட்டுக்குப் பெருமை என்ன? சூரியனே அஸ்தமிக்காத காலனி நாடுகளா? இல்லை, இலக்கிய உலகம் ஏற்றுப் போற்றும் ஷேக்ஸ்பியர் காவியங்களே!

''எண்ணிக்கையில் அடங்காத காலனி நாடுகளை வேண்டுமானால் இழப்போமே தவிர, ஷேக்ஸ்பியர் காவியங்களை ஒருபோதும் இழக்க மாட்டோம்' என்ற அவர்களின் தீர்மானம் சரிதானே!

ஒவ்வொரு மொழியிலும் செவ்வியல் காலகட்டமே பொற்காலமாகப் போற்றப்படுகிறது.

சங்க காலத்தைப் பொற்காலமாகவும், செவ்வியல் காலமாகவும் உலகம் ஏற்றுக் கொள்ளுவதற்குக் காரணமாக இருப்பன சங்க இலக்கியங்களே. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பன செவ்வியல் இலக்கியங்களாக வைத்துச் சிறப்பிக்கப்படுகின்றன.

மனிதன் பிறந்த நிலையிலேயே விட்டுவிடப்பட்டால் அவன் மனிதனாக இருக்க மாட்டான். அவன் அரக்கனாகவே மாறி விடுவான். அவன் வாழும் சூழ்நிலை அவனது இயற்கைத் தன்மையைச் சூறையாடிவிடும்.

கல்வி பெறாத மனிதன் தன் தேவைகள் இன்னதென உணராமலேயே இறந்து போவான். இதுபற்றி மேலைநாட்டு அறிஞர்களும் கீழை நாட்டு அறிஞர்களும் ஆராய்ந்துள்ளனர்.

இவ்வாறு மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காகச் சிந்தித்த அறிஞர்களையும், அவர்களது படைப்புகளையும் உலகம் மனமுவந்து பாராட்டி வரவேற்றதாகவும் வரலாறு இல்லை.

அறியாமை நிறைந்த அக்காலத்தில் அவர்கள் கடுமையான எதிர்ப்புக்கும், தண்டனைக்கும், மரணத்துக்கும்கூட ஆளானார்கள்.

சாக்ரடீஸ் நஞ்சு கொடுத்துக் கொல்லப்பட்டதையும், வால்டேர், ரூசோ, கார்ல் மார்க்ஸ் போன்றோர் நாடு கடத்தப்பட்டதையும், அவர்களது படைப்புகள் தடை செய்யப்பட்டதையும் வேதாத்திரி மகரிசி சொந்த ஊரிலிருந்து விரட்டப்பட்டதையும் வரலாறு சோகத்தோடு சுட்டிக்காட்டுகிறது.

அவர்கள் அக்காலத்தில் தேசத்துரோகிகளாகச் சித்திரிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வளவு துன்பங்களையும் தாங்கிக்கொண்டுதான் உலக மக்களுக்காக ஒப்பற்ற நூல்களைப் படைத்தளித்துள்ளனர்.

உலகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய பிரெஞ்சுப் புரட்சியை மனித சமுதாயம் மறக்காது. அதற்குக் காரணமான வால்டேர், ரூசோ மரணமடைந்த பிறகே அவர்களது தேவையையும், மதிப்பையும் பிரான்ஸ் நாடு உணர்ந்தது. அவர்களுடைய லட்சியக் கனவுகளை நிறைவேற்ற மக்கள் திரண்டனர்; பிரெஞ்சுப் புரட்சியால் உலகமே குலுங்கியது.

அறிஞர் ரூசோ மரணமடைந்து 11 ஆண்டுகளுக்குப் பிறகு அவருடைய உடல், குக்கிராமப் புதைகுழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு, மிகப்பெரும் ஆடம்பர மரியாதைகளுடன் பாரீஸ் நகரம் நோக்கி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

அவருடைய மிகச்சிறந்த படைப்பான ''சமுதாய ஒப்பந்தத்தை'த் தீயிட்டுக் கொளுத்திய பாரீஸ் நகரம், இப்போது மரியாதைக்கும் மதிப்புக்கும் உரிய நூலாகக் கருதி மாலையிட்டு வழிபாடு செய்தது.

18-ஆம் நூற்றாண்டை ''வால்டேரின் யுகம்' என்று வரலாறு கூறுகிறது. ''சுதந்திரம்! சமத்துவம்! சகோதரத்துவம்!' என்ற புதிய முழக்கம் புரட்சி முழக்கமாக உலகமெங்கும் எதிரொலித்தது.

வால்டேர் பழமையை உடைத்தான் என்றும், ரூசோ புதுமையைப் படைத்தான் என்றும் காலம் கைநீட்டிக் காட்டியது.

‘‘ஒரு தேசம் சிந்திக்கத் தொடங்கிவிட்டால், அதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது...’’ என்று வால்டேர் முழங்கினார்.

உலகம் முழுவதும் இவரைப் போன்ற சிந்தனையாளர்களின் எழுத்துகளே மக்களைத் தட்டி எழுப்பி சிந்திக்கத் தூண்டியது.

தமிழ் கூறு நல்லுலகத்தைப் பொருத்தவரை இருபதாம் நூற்றாண்டை ‘‘வேதாத்திரியின் யுகம்’ என்று கூறலாம்.

சிந்தனையாளர்களால்தான் உலகம் உடனுக்குடன் புதுப்பிக்கப் படுகிறது. சிந்திப்பது என்பது விலங்குகளிடமிருந்து மனிதனைப் பிரித்து அவனது தனித்தன்மையைக் காட்டுகிறது.

சிந்தனைசெய்வது கடினம்தான் என்றாலும் சிந்தித்தே ஆக வேண்டும் என்று அறிஞர்கள் கூறுவதும் அதனால்தான்.

இந்த உலகத்தை மாற்றியமைத்த மாபெரும் சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ் காலமானபோது, ஏங்கெல்ஸ் செய்த சொற்பொழிவு குறிப்பிடத்தக்கது.

‘‘1883 மார்ச் 14-ஆம் நாள் பிற்பகல் 2.45 மணிக்கு உலகத்தின் மிகப்பெரிய சிந்தனையாளர் - இந்தக் கார்ல் மார்க்ஸ் சிந்திப்பதை நிறுத்தி விட்டார்...’’ என்று பிரகடனம் செய்தார்.

மனிதன் தன் மரணத்தின் போதுதான் சிந்திப்பதை நிறுத்த வேண்டும். ஆனால், நம் நாட்டில் பல பேர் இப்போது உயிருடன் இருக்கும்போதே சிந்திப்பதை நிறுத்தி விட்டார்கள் என்பதுதான் வேதனையிலும் வேதனை.

‘ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்’ என்ற பாடல் மாணவர்களுக்கு மட்டும் கூறப்பட்டதல்ல; ஒவ்வொரு மனிதனுக்கும் கூறப்பட்டதுதான்.

படிப்படியாய் முன்னேறுவதற்குத்தான், ‘படி படி’ என்று நம் முன்னோர்கள் கூறினர். அந்தப் படிப்பினையை நாம் மறக்கலாமா?

படித்தால் மட்டுமே போதாது; படித்தபடியே நடக்க வேண்டும். ‘கற்க’ என்று கூறிய திருவள்ளுவரும் கற்றபடியே ‘நிற்க’ என்றும் கூறுகிறார்.

இந்த நாட்டின் சீரழிவுக்கு எல்லாம் அடிப்படையாக இருப்பது படிப்புக்கும், செயல்பாட்டுக்கும் இருக்கும் இடைவெளிதான். இந்த இடைவெளி குறைக்கப்பட வேண்டும். இதைத்தான் வேதாத்திரியம் சுட்டிக் காட்டுகிறது.

அந்த வகையில் கிழக்கும் மேற்கும் என்ற இந்த ஆய்வுநூல் சிறந்த மூலதனமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த என் முயற்சிக்கு பலவகையிலும் ஊக்கமும் ஆலோசனைகளும் வழங்கியும், ஒத்துழைப்பு நல்கிய வாழ்க்கைத் துணைவியார் அருள்நிதி பானுகுமார், என் இல்லத்து ஞானச் செல்வங்கள் பிரம்மஞானிகள் நிவேதிதா சீனிவாசன், நரேந்திரன், மதுமிதா மற்றும் ஆகான்ஸா அவர்களுக்கும், வாழ்த்துரை அணிந்துரை வழங்கியவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

உலக சிந்தனையாளர்கள் நூல்கள் அனைத்தையும் ஓராண்டாக ஆய்வு செய்த களம் - அமெரிக்காவின் எடினா நகரத்து பொது நூலகம். இங்கு எடுத்த குறிப்புகள் தான் இப்புத்தகத்தின் அடித்தளம் என்பது உண்மை.

இந்த நூலைச் சிறந்த முறையில் கொண்டு வந்துள்ள கோவை விஜயா பதிப்பக உரிமையாளர்கள் திரு.மு.வேலாயுதம், திரு.சிதம்பரம் அவர்களுக்கும் நன்றியுடையேன்.

இந்நூலைப் படிக்கும் வாசகர்கள் அனைவரும் உடல்நலம், நீளாயுள், நிறை செல்வம் உயர் புகழ் மெய்ஞானம் ஓங்கி வாழ்க வளமுடன் என வாழ்த்தி மகிழ்கிறேன்.

குருவின் தொண்டில்

**பானுகுமார்.**
banukumar.v.@gmail.com

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வேதாத்திரி மகரிசி வாழ்க்கை வரலாறு | 15 |
| 2. | வேதாத்திரி மகரிசி படைப்புகள் | 20 |
| 3. | உண்மைக்கே உயிரளித்த சாக்ரட்டீசும் வேதாத்திரியும் | 23 |
| 4. | கிரேக்க தத்துவஞானி பிளேட்டோவும் வேதாத்திரியும் | 34 |
| 5. | கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டிலும் வேதாத்திரியும் | 47 |
| 6. | சர் ஐசக் நியூட்டனும் வேதாத்திரியும் | 60 |
| 7. | வேதாத்திரியத்தில் வால்டேர் சிந்தனைகள் | 75 |
| 8. | ரால்ப் வால்டோரா எமர்சனும் வேதாத்திரியும் | 84 |
| 9. | சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரிசியும் | 96 |
| 10. | வேதாத்திரியத்தில் காரல் மார்க்ஸ் | 106 |
| 11. | இராபர்ட் கிரீன் இங்கர்சாலும் வேதாத்திரியும் | 121 |
| 12. | சிக்மண்ட் பிராய்டும் வேதாத்திரி மகரிசியும் | 137 |
| 13. | ஜேம்ஸ்ஆலனும் வேதாத்திரி மகரிசியும் | 150 |
| 14. | ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும் | 160 |
| 15. | வேதாத்திரியத்தில் கன்பூசியஸ் | 173 |
| | துணைநின்ற நூல்கள் | 181 |
| | ஆசிரியரின் பிற நூல்கள் | 183 |



# 1. வேதாத்திரி மகரிசி வாழ்க்கைக் குறிப்பு

சிந்திப்பவர்கள் ஞானிகளாகிறார்கள், சிந்தனையாளர்கள் உள்ளத்தில் இயற்கை தன் இரகசியங்களை விடுவிக்கின்றது.

தம் சீரிய சிந்தனைகளில் இயற்கை இரகசியங்களை வெளிக்கொணர்ந்த உலக சிந்தனையாளர்கள் வரிசையில் வேதாத்திரியும் இடம் பெறுகிறார்

**பிறப்பும் இளமையும்**

வேதாத்திரி மகரிஷி கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்பன், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் 14.8.1911 ஆம் நாள் பிறந்தார்..

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்திக் கதைகளையும், புராணக்கதைகளையும் அறிந்து கொண்டார்.

இவரது குடும்பச்சூழல் இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்பத் தொழிலான தறி நெய்தலை செய்யத் தொடங்கினார்.

18வது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது. சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளை கற்றார்.

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால் உந்தப்பட்டு சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவத் துறைகளைக் கற்று தேர்ச்சிப் பெற்றார்.

மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார். பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

இவரின் சொத்து இவர் சந்தித்த சாதுக்களே! பாதை காட்டிய பாலகிருஷ்ண நாயக்கர், வைரமாக்கிய வைத்திய பூபதி எஸ். கிருஷ்ணராவ், பட்டை தீட்டிய பரஞ்சோதி மகான், இராமலிங்க வள்ளலார் என்று பல குருமார்கள் இவருக்கு கிடைத்தார்கள்.

### ஆன்மீகத் தேடல்

தனது சகோதரியின் மகளை (லோகாம்பாள்) மணந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார். இல்லறத்திலும், நெசவுத் தொழிலிலும் ஈடுபாடு அதிகமிருந்த போதிலும் தனது ஆன்மீகத்தேடலில் மிகுந்த ஆர்வத்துடன் நாட்டம் கொண்டிருந்தார்.

சித்தர்களின் நூல்களைக் கற்று, தியானத்தில் வெகுவாக ஈடுபட்டு தன்னை அறிதல் என்ற அகத்தாய்வு முறையில் விடாமுயற்சியுடன் ஈடுபட்டார்.

இவரது ஆழ்ந்த ஆன்மீகத் தேடலின் விளைவாக தனது 35வது வயதில் ஞானம் பெற்றார். அதிலிருந்து அடுத்த 15 ஆண்டுகளில் பல உன்னதமான ஆன்மீகக் கருத்துக்களை தனது எழுத்துக்களின் மூலமாகவும், உரைகளின் மூலமாகவும் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர் தனது நெசவுத் தொழிலை முற்றிலும் விட்டு விட்டு தன்னை முழுமையாக ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

மகரிசி 22 முறை உலக நாடுகளைச் சுற்றி வந்தார். மேற்கத்திய கலாச்சாரத்திற்கும் நமது கலாச்சாரத்திற்கும் ஒத்ததாக மனவளக்கலையை வகுத்தார்.

மனவளக்கலையில் ஜாதி, மத, மன, மொழியில்லை. உடலும் உயிரும் உள்ள மனிதன் அனைவருக்கும் பொருத்தமானதாக வடிவமைத்தார்.

அதற்கு உலக சமுதாய சேவா சங்கம் என்று பெயரிட்டார். அவருடைய வாழ்க்கை அனுபவங்களே அகத்தாய்வாக மாறின.

**மனவளக்கலை மன்றங்கள்**

தான் கண்டுணர்ந்ததை மனவளக் கல்வியை பாடத்திட்டமாக வடிவமைத்தார்கள்.

''மனவளக்கலை'' என்னும் வாழ்க்கை வளக் கல்வியானது ஐந்து படித்தளங்களைக் கொண்டதாகும். அவை :

1) உடல்நலம் காத்தல்,

2) மன இயக்கத்தை, எண்ணங்களைச் சீர் அமைத்து மனவளம் காத்தல்,

3) கூடி வாழும் மக்களிடையே ஒத்தும் உதவியும் இனிமைகாத்து வாழும் நட்புநலம் காத்தல்,

4) பழைய வினைப் பதிவுகளால் தரம் குறைந்துள்ள கருமையத்தை நலம் பயக்கும் செயல் முறைகளைத் திட்டமிட்டுச் செய்து, தூய்மை செய்தல்,

5) பேரியக்க மண்டலத்தின் உற்பத்தி, இயக்கம், விளைவுகள் அனைத்துக்கும் மூல ஆற்றலான இறைநிலையையும் அறிவையும் உணர்தல், என்பனவாகும்.

இதனை பருவமடைந்த 14 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலரும் கற்கலாம். இந்தக் கல்வியானது உரை விளக்கங்களோடு செயல் முறை திட்டங்களும் அடங்கியதாகும்.

இந்த ஐந்திணைப்பு வாழ்க்கை வளக் கல்வியானது குடும்ப வாழ்வை ஏற்றுள்ள கணவன் மனைவி இருவருக்கும் மிக்க நலமளிக்கும். குடும்ப வாழ்வைத் தவிர்த்து சமுதாயத் தொண்டிற்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு வாழும் இருபால் பிரம்மச்சாரிகளுக்கும் நலமளிக்கும்.

கல்வி கற்கும் இளைஞர்களுக்கும், நிர்வாகத்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் மன அமைதியையும், திறனையும் அளிக்கும். இந்த ஆன்மீகக் கல்வி மனித குலத்திற்கு வாழ்க்கை விளக்கமாகும்

இன்று பட்டிதொட்டியெல்லாம் மனவளக்கலை மன்றங்கள் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## அறிவுத்திருக்கோயில்கள்

மக்கள் நல்ல அறிவாட்சித் தரம் பெற்றால் உலகில் அரசியல், பொருளாதாரம், மதம் இவை மூன்றும்ஒழுங்குபடும். இந்த மூன்றும் ஒழுங்கு பெற்றால், மனித குலம் அமைதி அடையும்.

அத்தகைய முறையில் உலகை முழுமையாக மாற்றியமைக்கும் பணி இறைநிலை உணர்வில் இருந்து தான் வரவேண்டுமே தவிர, இடையில் இருந்து இல்லை.

வேறு எங்கு இருந்தும் இல்லை, அப்பணியைத் தொடங்கவும், நடத்தவும் உதவுவதற்குரிய இடம் தான் வேதாத்திரி தொடங்கிய அறிவுத்திருக்கோயில். அறிவுக்குத் திருக்கோயில் அமைத்த முதல் மகான்.

இன்று நூற்றுக்கு மேற்பட்ட அறிவுத்திருக்கோயில்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இறைநிலைப்பயணம்..

வேதத்தை விளக்கிய வேதாத்திரியை இறையாற்றல் 28.03-2006 செவ்வாய்கிழமை பிற்பகல் 12.20க்கு தன்னிடம் இணைத்துக் கொண்டது. 95 வயதில் முக்தியடைந்தார்

வேதாத்திரி, சிறுவயதில் தறியில் அமர்ந்து அன்றாடம் வயிற்றுப்பிழைப்புக்கு வழி தேடியதும் உண்டு. ஐக்கிய நாடுகள் சபையில் அறிஞர்களிடையே உரை நிகழ்த்தியதும் உண்டு.

இரண்டு கார்களுடன் வசதியாக வாழ்ந்தது உண்டு. அடுத்த வேளைச் சாப்பாட்டிற்கு தவித்ததுமுண்டு.

சுத்தவெளியே ஆதி, கடவுள், இறையென்று கண்டு கொண்டதும் உண்டு. அந்த வெளியே சிவமென்றும், பிரம்மமென்றும் உலகுக்கு உணர்த்திய பெருமையுமுண்டு.

வாழ்வின் வசதிகளை எல்லாம் இழந்து, புட்டுச் சுட்டு விற்று, தன் வயிற்றைக் கழுவியதும் உண்டு. உலக முழுவதும் பலமுறை சுற்றியதுமுண்டு.

அமெரிக்க ரக்கட்ஸ் பல்கலைக்கழகத்தில் வேதாத்திரி சொற்பொழிவு செய்கிறார். பல்துறை விஞ்ஞானிகளும் மகரிசியின் தத்துவங்களில் நிறைவு பெற்று மெய்மறந்திருக்கின்றனர்.

இளம் விஞ்ஞானி ஒருவர்? Swamiji Which University you have Studied? (தாங்கள் எந்தப் பல்கலைக் கழகத்தில் படித்தீர்கள்?)

"I have Studied in the city of Universe" (நான் பிரபஞ்சத்திலிருந்து அனைத்தையும் படித்துக் கொண்டிருக்கிறேன்.)

இந்த பிரபஞ்சத்தை எடுத்துக் கொண்டு அதில் உள்ள ஒவ்வொரு பொருளாக ஆராய்ந்து படித்தேன். அந்தப்படிப்புத்தான் எனக்குண்டு.

வள்ளலாருக்கும், ஸ்ரீராமகிருஷ்ணருக்கும் வேதாத்திரிக்கும் இயற்கையே ஆசான். பிரபஞ்சமே பள்ளிக்கூடம்.

இவரது வாழ்க்கை வெறும் நிகழ்ச்சிகளின் தொகுப்பு அன்று. மானுடம் வியக்கும் ஓர் இனிய காவியமே.



# 2. வேதாத்திரி மகரிசியின் படைப்புகள்

1. மனவளக்கலை பாகம் ஒன்று
2. மனவளக்கலை பாகம் இரண்டு
3. மனவளக்கலை பாகம் மூன்று
4. எளியமுறை உடற்பயிற்சி
5. எனது வாழ்க்கை விளக்கம்
6. ஞானமும் வாழ்வும்
7. பாடு பாப்பா
8. மகரிஷி மணிமொழிகள்
9. உலக சமுதாய சேவா சங்கம்
10. காந்த தத்துவம்
11. என் குருநாதர்
12. உலக சமாதானம்
13. அருட்பேராற்றலின் அன்புக்குரல்
14. வான் காந்தத்தத்துவம்

15. திருக்குறள் உட்பொருள் விளக்கம்
16. இறையுணர்வும் அறநெறியும்
17. ஜீவகாந்தம்
18. அருள்தந்தையின் பதில்கள் பாகம் 1
19. அருள்தந்தையின் பதில்கள் பாகம் 2
20. பிரம்மஞானம்
21. இன்பமாக வாழ
22. குடும்ப அமைதி
23. வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஐந்து
24. செயல் விளைவுத் தத்துவம்
25. மாக்கோலமாய் விளைந்தமதி விருந்து
26. சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்
27. மனம்
28. ஞானக் களஞ்சியம்1,2
29. வாழ்க்கை மலர்கள் (நாள் ஒரு நற்சிந்தனை)
30. வேதாத்திரியம்
31. ஆன்மீக விளக்கு
32. அணுவிஷம்
33. பிரம்மஞான சாரம்
34. இறைநிலை அறிவு
35. மதமும் மனிதனும்
36. அறிஞர்களின் கடமை
37. அருளருவி பாகம் 1
38. வாழ்வியல் விழுமியங்கள்
39. அருள்தந்தை வேதாத்திரி மகரிசி பன்முக ஆய்வு
40. வேதாத்திரியத்தின இறைநிலை விளக்கம்
41. நான் யார்?

42. கடவுளும் கருமையமும்

43. உலகச் சமுதாய வாழ்க்கை நெறி

44. அருளருவி பாகம்.2

ஆங்கிலம்

1. karma yoga
2. Prosperity of India
3. The Story of My life
4. Altruism
5. Physiocal
6. Yoga for Modern Age
7. Physical Transformation of soul
8. Science and Religion
9. State of Life Before and After Death
10. Does God Exist?
11. Sex and Spiritual Development
12. Sings and thieir Imprints
13. Seven Lectures on Unified Force.
14. The World Order Of holisitic Unity
15. Blueprint for World Peace
16. Bliss Beyond Words (verse)
17. Philosophy of Magnetism
18. Philosophy of Universal Magnetism
19. Bio-Magnetism
20. journey of Consciousness
21. Unifed Force
22. Logical solutions for the problems of Huimanity
23. mind
24. Genetic Centre, the Secrets of the soul

எனப் பல்துறை நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்கள்.



# 3. உண்மைக்கே உயிரளித்த சாக்ரட்டீசும் வேதாத்திரியும்

**சா**க்ரட்டீசும் வேதாத்திரியும் வேறுபட்ட தலைமுறைகளிலும் மாறுபட்ட சூழ்நிலைகளிலும் வாழ்ந்தார்கள். இருவரும் கொள்கைளிலும், நடைமுறைகளிலும் பகுத்தறிவான சிந்தனைகளிலும் ஒருமைப்பாட்டை உணர்த்தினார்கள்.

அறிவை தெளிவாக்குகின்ற, வளர்க்கின்ற ஆதார சக்தியான தத்துவத்தை உலகிற்கு அறிமுகம் செய்தவர் சாக்ரட்டீஸ். இவர் **தத்துவ அறிஞர்களின் தந்தை** (Father of Philosophers) என அழைக்கப்படுகிறார்.

ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளால் மக்களிடையே சிந்தனையை விதைத்தவர் சாக்ரட்டீஸ். இந்த சிந்தனையை பாமரனிடமும் மலர வைத்தவர் வேதாத்திரி.

**சாக்ரட்டீஸ் வாழ்க்கை வரலாறு [கி.மு.469 399]**

நாகரிகத்திலும், கலை இலக்கியத்திலும், வீரத்திலும் சிறந்து விளங்கிய நாடான கிரேக்கம் தான் சாக்ரட்டீசின் தாய் நாடு. கிரேக்க நாட்டின், ஏதென்ஸ் நகரில் பேநாரட்டி-சாப்ரோநிஸ்கஸ் ஆகியோருக்கு கி.மு.470 ஆம் ஆண்டு சாக்ரட்டீஸ் பிறந்தார்.

இவரின் தந்தை ஒரு சிற்பி. அதனால் சாக்ரட்டீஸ் இளம் வயதிலேயே சிலைகளை வடிக்கக் கற்றார். இந்தப் பயிற்சி தான் பிற்காலத்தில் அவருக்கு அறிவை செதுக்க உதவியது.

கேள்வி எனும் உளியால் தேவையற்ற பகுதிகளான மூட கருத்துக்களைச் செதுக்கி நீக்கினால், பகுத்தறிவு எனும் உண்மையின் சிலை உருவாகிவிடும் என்பதை சாக்ரட்டீஸ் நடைமுறை பயிற்சியிலே தெரிந்து கொண்டார்.

### ஏன்? எதற்கு? எப்படி? எப்போது?

சாக்ரட்டீசுக்கு கேள்விகளை கேட்பதில் மிகவும் ஆர்வம். ஏன்? எதற்கு? எப்படி? எப்போது? என்றெல்லாம் கேட்டுக் கொண்டே இருப்பார்.

இந்த ஆர்வத்தில் அனாக்சா கோரஸ் என்ற ஆசிரியரிடம் ஒரு மாணவராக முதலில் போய் சேர்ந்தார். மைர்டோன், சான்தீப்பி என்ற இரு பெண்களைத் திருமணம் செய்து கொண்டார்.

அக்கால வழக்கப்படி அவர் தன் தாய் நாட்டுக்கு சேவை செய்ய போருக்குச் செல்ல வேண்டியிருந்தது. ராணுவத்தில் பல பதவிகளையும், பொறுப்புகளையும் வகித்தார். ஒரு சூழ்நிலையில் அவர் ராணுவப் பணியை விட்டு வெளியேற வேண்டி இருந்தது.

சாக்ரட்டீஸ் மிகவும் எளிமையானவர். ஒரே ஒரு ஆடையுடன், கால்களில் செருப்பின்றி பல இடங்களுக்கும் சுற்றித்திரிந்து அறிவை பரப்பினார்.

மக்கள் கூடும் இடங்களிலும், இளைஞர்கள் கூடும் இடங்களிலும் அவர் பேசினார். சாக்ரட்டீஸ் எழுதப் படிக்கத் தெரியாதவராக இருந்திருக்கலாம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

அவரின் கருத்துக்கள் நூலாக அவரால் எழுதப்படவில்லை. சாக்ரட்டீசின் மாணவர்களான பிளாட்டோவும், செலோபோனும் அவரின் கருத்துக்களை தங்களின் நூல்களிலே எழுதி வைத்தார்கள்.

### பகுத்தறிவு தந்தை

சாக்ரட்டீஸ் பகுத்தறிவினை பயன்படுத்தச் சொன்னார். அறிவுக்கு முதன்மையான இடத்தை அளித்தார். மூட நம்பிக்கையை நீக்கச் சொன்னார்.

எதையும் ஏன், எதற்கு என கேள்விகளுக்கு உட்படுத்தி ஆராயாமல் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றார்.

இவரிடம் கேள்வி கேட்கும் மக்களிடம், பல கிளை கேள்விகளைக் கேட்டு சிக்கலின் அடிப்படையை புரிந்து கொள்ளும்படி சாக்ரட்டீஸ் உதவி செய்வார்.

**மரண தண்டனை**

சாக்ரட்டீசின் பேச்சு வன்மையால் இளைஞர்களும், மக்களும் கவரப்பட்டனர். அதனால் அன்று இருந்த முடியாட்சியினர் அஞ்சினர்.

**சாக்ரட்டீஸ் மீது சாட்டிய குற்றங்கள்**

சாக்ரட்டீஸ் கடவுள்களை நம்ப மறுக்கிறார். கடவுள் நம்பிக்கையை அவர் அழிக்கிறார். ஏதேதோ பேசி இளைஞர் உள்ளங்களைக் கெடுக்கிறார்.

சாக்ரட்டீஸ் இளைஞர்களைத் தவறான கருத்துக்களின் மூலம் கெடுக்கிறார். ஜனநாயகக் கருத்துக்களைச் சொல்கிறார். விழிப்புணர்வு ஊட்டுகிறார். கடவுளர்களைப் பழிக்கிறார். அவர் ஒரு நாத்திகர் என்றெல்லாம் அவர் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர். நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை அளித்தது.

கி.மு.399 ஆம் ஆண்டு அவரின் 71 ஆம் வயதில் ஹெம்லாக் என்ற பெயருடைய நஞ்சை, ஒரு குவளையில் ஊற்றி குடிக்க வைத்தார்கள். அவர் சிறையிலேயே மரணமடைந்தார்.

விசாரணையின்போது அவர் மன்னிப்பு கேட்டிருந்தால் அவரை நீதிபதிகள் விடுவித்து விட்டிருப்பார்கள். அவரோ உண்மையே பேசினார். அவரின் நண்பரான கிரிப்டோ சிறையிலிருந்து தப்பிச் செல்ல உதவுவதாக சொன்னார். ஆனால் அதையும் கூட அவர் மறுத்துவிட்டார்.

''நாம் எதை இழந்தாலும் தன்மானத்தை இழக்க இடம் தரக் கூடாது'' என்று பேசியவர் சாக்ரட்டீஸ். அதனால் அவர் போதித்த கருத்துக்கு உண்மையாக இருந்தார்.

எதைச் சொல்கிறோமோ அதன்படி நடக்க வேண்டும் என்பதற்கும், இறுதிவரை உண்மையில் உறுதியுடன் இருக்க வேண்டும் என்பதற்கும் சாக்ரட்டீஸ் சான்றாகத் திகழ்ந்தார். அவர் உண்மைக்காக உறுதியுடன் நின்ற ஒரு கருத்துப் போராளி.

**சாக்ரட்டீஸ் பற்றி வேதாத்திரி மகரிசி**

(19.11.2001) அன்று சென்னை MIT வளாகத்தில் மகரிசி ஆற்றிய உரை)

**சாக்ரட்டீஸால் புகழைடைந்த கோனியம்.**

மெய்ப்பொருள் என்பது சுத்தவெளி, சூன்யம், பிரம்மம் என்பது ஆதிகாலத்திலேயே வந்து விட்டது. அது பழக்கம் ஆகிப் போய்விட்டது.

பழக்கம் இல்லாத நாட்டில் சாக்ரட்டீஸ் என்ற ‘மகான் உண்மையான கடவுள் எது என்பதைக் கண்டுபிடித்தார்.

இதுதான் கடவுள், நீங்கள் சொல்வதெல்லாம் கடவுள் இல்லை என்று சொன்னார். அவ்வளவுதான்.

அப்படிச் சொன்னது மட்டுமல்லாமல் பாடம் கேட்க வந்த இளைஞர்களுக்கும் பாடமாக அந்த அரூபத் தத்துவத்தைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

இதைப் பார்த்த அரசியல் தலைவர்களுக்குப் பொருந்தவில்லை.

இவரை உயிரோடு விட்டு வைத்தால் எல்லா இளைஞர்களும் கெட்டு விடுவார்கள் என்று தீர்மானித்துக் கொண்டு தான் அவருக்கு மரண தண்டனை கொடுத்து விட்டார்கள்.

கோனியம் என்றொரு விஷம் இருக்கிறது. அந்த விஷத்தைச் ‘சாப்பிட்டால், காலிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உணர்வுகுன்றி மரத்துக் கொண்டே வரும்.

அப்படியே மரத்துக் கொண்டே வந்து. இருதயத்திற்கு வருகின்ற போது செயல்பாடு நின்று விடும்.

சாக்ரட்டீஸிக்கு மரண தண்டனையாக அந்த மாதிரி விஷம் கொடுக்கின்ற போது தான், நீ சொன்னதெல்லாம் தப்பு என்று இப்போதாவது ஒத்துக் கொள், தண்டனையை மாற்றி விடுவோம். என்ன, இப்பொழுதாவது நீ சொன்னதை மறுத்துவிடுகிறாயா என்று கேட்டார்கள்.

உண்மையை உணர்ந்த பிறகே அதை மறுக்க முடியுமா? பேசிக் கொண்டே, உண்மையை விளக்கிக் கொண்டே, விஷத்தை வாங்கி சாப்பிட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக. கீழிருந்து மேலாக உடல் மரத்துக் கொண்டே வர, உயிர் விட்ட மகான் தான் சாக்ரட்டீஸ்.

**சாக்ரட்டீஸீம் வள்ளுவரும்**

சாக்ரட்டீஸ் எவ்வாறு உணர்ந்த தத்துவவாதியாக இருந்து. எவ்வளவு பொறுமையைக் காட்டி, அநியாயமாகக் கொடுத்த அரசியல்

தண்டனைக்குக்கூட ‘எதிர்த்துப் ‘பேசாமல், அந்த மரண தண்டனையை ஏற்றுக் கொண்டார் என்ற பண்பாட்டின் உயர்வை வெளிக் ‘காட்டி, வள்ளுவர் குறளில் கொடுத்திருக்கிறார்.

சாக்ரட்டீஸ் காலத்திற்குப் பின் ஐநூறு ஆண்டுகள் கழித்து வள்ளுவர் வந்ததனால்,

**பெயகண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்.** - (குறள்: 580)

என்று சொல்கிறார்.

ஒரே ஒரு நிகழ்ச்சி, பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர். அதாவது மற்றவர்கள் முரண்டு பிடிப்பவர்களாக இருந்தால் ஊசி போட்டு வருத்துவார்கள்.

அந்தக் காலத்திலிருந்து மெய்ப்பொருள் விளக்கம் யார் யார் கொடுத்தார்களோ அவர்களையெல்லாம் தீர்த்துக் கட்டி விட்டது உலகம். இப்பொழுது அவ்வாறெல்லாம் செய்யவே முடியாது.

ஏனெனில் உலகம் சிந்திக்க ஆரம்பித்து விட்டது. சிந்தனை உள்ளவர்கள் இன்று அதிகம், சிந்தனை உள்ள இளைஞர்கள் வந்துவிட்டார்கள்.

இனி ஒருவரையும் மெய்ப் பொருள் விளக்கம் கொடுத்ததற்காக உலகம் மாய்க்க முடியாது.

அந்த அளவு உலகத்தினரின் அறிவு விரிந்ததனால், இந்த மெய்ப் பொருளை முந்நூறு பேருக்கு மத்தியில் உட்கார்ந்து பேசக் கூடிய காலம் வந்திருக்கிறது. உயர்ந்த காலம். அறிவில் மிக்க காலம் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் இதுவரையில் ஏதோ கற்பனையில் வந்ததெல்லாம் விழுந்து விடுமே, கெட்டுப் போகுமே என்று நினைக்காமல் நல்ல மாற்றம் வந்தால் நல்லது தானே? மெய்ப்பொருள் விளக்கம் இல்லை என்றால் உலகம் என்ன ஆகும்?

## ஒளிமிகுந்த காலம் இது

மெய்ப்பொருள் விளக்கத்திலேயே அறிவு நிற்கின்ற போதுகடவுள் யார், எப்படி இருக்கிறார் என்ற விளக்கம் எந்த மூலையில் எவன் சிந்தித்தாலும், நீங்கள் என்ன விளக்கம் கண்டீர்களோ அந்த விளக்கம் அங்கே அவர்களுக்குக் கிட்டும். அவர்களிடம் போய்ப் பதிந்து விடும்.

ஆகவே, மெய்ப் பொருள் விளக்கம் இனி உலகத்தில் எளிதாக கிடைத்துவிடும். அன்றே எழுதினேன்.

**அற்புதமாம் அறிவினிடத் தத்துவத்தை**
**அனைவரும் எளிதாக உணர்ந்து கொள்ள**
**விரிந்துரைக்க முறைகள் பல வகுப்பான் என்றும்**
**கற்பனைக்கே இடமின்றி ஆழ்ந்து ஆய்ந்து**
**கண்ட முடிவுகளில் நின்று வழுவிடாத**
**நற்பண்பின் எல்லையிலே மனிதன் வாழும்**
**நாட்களோ தூரத்தில் இல்லை இல்லை.**

அந்த முறையில் பார்த்தால் சிறந்த அறிவு, ஒளி மிகுந்த காலம் இது. குழப்பங்கள் இருக்கலாம். போர், அச்சம் இருக்கின்றது.

ஆனால், நான் ஒன்று சொல்கிறேன். ஐம்பது வயதுடையவர் களுக்கெல்லாம் இது தெரியும்.

முப்பதாண்டுகளுக்கு முன்னதாக கிராமங்களில் பகலில் அரிசிச் சோறு என்பதைக் காணாத குடும்பங்கள் எண்ணிறந்தன. பகலிலேயே இல்லையென்றால் இரவில் என்ன இருக்கும் என்று யூகித்துக் கொள்ளுங்கள்.


ஏதோ ஒரு கூழ், கஞ்சி இவற்றைக் கொண்டு வாழ்ந்தார்கள். சொக்காய் என்பது ஆயுள் பரியந்தம் காணாமலேயே உயிர்விட்ட ஜீவன்கள் இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக எத்தனையோ பேர்.

இன்று உலகம் வறுமையிலிருந்து விடுபட்டிருக்கிறது. இதற்கு விஞ்ஞான வளர்ச்சி பகுத்தறிவு வளர்ச்சியையும் அதிகரித்துள்ளது. இனி மெய்பபொருள் விளக்கம் சீக்கிரம் வந்து விடும்.

**வேதாத்திரியத்தில் சாக்ரட்டீஸ்**

உண்மைக்கே உயிரளித்த சாக்ரட்டீஸ் என்று வானளாவப் புகழ்ந்தவர் வேதாத்திரியார்.

உண்மைக்கு வடிவம் கொடுத்தவர் சாக்ரட்டீஸ். உண்மைக்கு இலக்கணமாக திகழ்ந்தவர் சாக்ரட்டீஸ்.



**சாக்ரட்டீஸ்**

உண்மை என்பது ஒப்புவமை இல்லாதது. அது முழுமையானது என்பார் வேதாத்திரியார்.

உண்மையைத் தேடுவது என்பது அபூர்வமானது. விந்தையானது, தனிப்பட்டது, இணையற்றது, ஒப்பற்றது, என்றும் கூறுவார்.

சாக்ரடீஸ் அறிவுச் சுதந்திரம் பெருகுவதற்கு ஆர்வம் காட்டினார்.

யார் எதைச் சொன்னாலும் உன் அறிவைக் கொண்டு நீயாகச் சிந்தித்து உண்மையை உணர்ந்து கொள் என்று சாக்ரடீஸ் ஆரம்பித்த முழக்கம், அவருக்குப் பகைவர்களைத் தேடித் தந்தது.

உண்மையை பொய்மையினின்று விடுவிக்க உளப்பூர்வமாக முயன்றார்.

சாக்ரடீஸ் எனும் ஞான விளக்கு அளித்த பேரொளியின் பாய்ச்சல் இதிலிருந்துதான் ஆரம்பித்தது.

ஒவ்வொருவரும் உலகத்தை உணர்ந்து கொள்ள விரையுமுன் தன்னை உணர்ந்து கொள்ள வேண்டும். தன்னைச் சரியாக உணர்பவனால் தான் மற்றவர்களைப் பழுதின்றி அறிந்து கொள்ள முடியும்.

இளமையிலிருந்தே இயல்பாக அவரிடமிருந்த அறிவுப்பசி, அவரோடு சேர்ந்தே அதிவேகமாக வளர்ச்சியுற்று, அவரை ஓர் அறிவுக் களஞ்சியமாகத் திகழ வைத்தது பின்நாளில்.

ஏன்? எதற்காக? எப்படி? எதனால்? எவ்வாறு? என்னும் கேள்வி களால் மக்களின் சிந்தனையைத் தூண்டிக் கொண்டேயிருந்தார்.

அவர்கள் தாமாகவே சிந்தித்து விடையளிக்க முயன்றார்கள். இல்லையென்றால் எவ்வகையிலாவது அக்கேள்விகளுக்குரிய விடைகள் அறிந்து கொள்ள விழைந்தார்கள்.

இவ்வாறு மக்களிடையே அறிவுப்பசியைத் தூண்டும் அரும் பணியில் அவர் அயராது பாடுபட்டார்.

சாக்ரடீஸ் உலகப் பெரும் சிந்தனையாளராக விளங்கியது பல நூல்களைத் தாம் எழுதியதாலல்ல. மக்களிடம் நேரடியாகப் பேசியே அவர் தம் மகத்தான சிந்தனைகளைப் பரப்பினார்.

தம் குருநாதர் சாக்ரடீஸின் சிந்தனைகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்தவர் பிளேட்டோ

தாழ்ந்த குலத்திலே பிறந்தவர் என்று கருதப்பட்ட சாக்ரடீஸின் சிந்தனைகளும் கொள்கைகளும் பழம் பெருமைமிக்க உயர்ந்த குலத்தைச் சார்ந்தவர் என்று கருதப்பட்ட பிளேட்டோவைப் பின்பற்ற வைத்தன.

கிரேக்கத்தின் பெருஞ் சிறையில் சிறைப்படுத்தப்பட்ட சாக்ரட்டீஸ் தன் மரணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

அப்போது அவருடன் அந்தச் சிறையில் இருந்த மற்றொரு கைதி ஒரு பாடலைப் பாடினான்.

உடனே சாக்ரட்டீஸ், அக்கைதியிடம் ஓடிச்சென்று அந்தப் பாடலைத் தனக்கு மீண்டும் ஒரு முறை பாடிக் காட்டுமாறு கோரினார்.

மரண தண்டனைக் கைதியான உனக்குச் சாகப்போகும் நேரத்தில் இது எதற்கு? என்று ஏளனமாகக் கேட்டான் அந்தக் கைதி.

இதைக் கேட்டுவிட்டு சாக்ரட்டீஸ் சொன்னார்-சாவதற்குள் இன்னும் ஒரு புதிய விஷயத்தைக் கூடுதலாகத் தெரிந்து கொள்ளலாமே என்றுதான் என்றார்.

வாழ்க்கையின் ஒவ்வொரு அனுபவத்திலும் பாடங்கற்றுக் கொள்பவனே புத்திசாலி என்பார் சாக்ரட்டீஸ்.

அனுபவம் என்பது நாமே நம் புலன்களைக் கொண்டும் இன்பதுன்பங்களை அனுபவித்தும் வாழ்க்கையில் நேர்முகமாக அறியப்படும் உண்மையாகும் என்பார் வேதாத்திரியார்.

எதையும் துருவித் துருவித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்தான் எத்தனை ஆர்வம் கிரேக்க ஞானி சாக்ரட்டீஸ் அவர்களுக்கு.

தன்னடக்கம், தெளிவான சிந்தனை. நல்லொழுக்கம், நேர்மை. இரக்கம், சுயகட்டுப்பாடு, புலனடக்கம், வாய்மை. தூய்மை, இன்மொழி பேசல் போன்ற பண்புகளுக்கு உறைவிடமாகத் திகழ்ந்தவர் உத்தம ஞானி சாக்ரடீஸ்.

உன்னையே நீ எண்ணிப் பார் என்பதே அவர் உரைத்த உயர்ந்த மந்திரம்.

நான் மக்களை மறந்து அவர்கள் மத்தியிலே பேசாமல் தனித்து வாழ்வதாகச் சொன்னால், இந்த முறை என்னை மன்னித்து விடுவதாகக் கூறுவீர்கள். நான் என் மக்களை எப்படி மறப்பேன்? அவர்கள் மடமையிலிருந்து விடுவிக்க, தொடர்ந்து அவர்களை கேள்விகளுக்கு மேல் கேள்விகளாகக் கேட்டுக் கொண்டேதான் இருப்பேன்! என்

வினாக்களுக்கு ஏற்ற விடைகளை மக்கள் தெரிந்து கொள்ளும்வரை அவர்களை விடாமல் கேட்டுக் கொண்டேயிருப்பேன்! என் நாட்டு மக்களை சிந்திக்கச் செய்வதை விடச் சிறந்த பணி வேறு எதுவாக இருக்க முடியும்?

உன்னையே நீ அறிவாய் என்பது கிழக்கில் தோன்றிய சூரியன் வேதாத்திரி மகரிசி உரைத்த தாரக மந்திரம்.

இரும்பு ஒரு கரண்டியாக்கப்பட்டிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு இரும்பு என்றாலும் கரண்டி என்றாலும் அது ஒரு பொருளையே குறிக்கும்.

அதுபோல தெய்வம் என்ற அருட்பேராற்றலே பேரியக்க மண்டலத்தில் இயங்கும் எல்லாமாக இருக்கிறது. நீயாக மனித வடிவமாக இருப்பதும் அதுவே.

இந்தக் கருத்தில் மனத்தைப் பதித்துக் கொண்டு உண்மையை உணர்ந்து கொள். நீயென்றாலும் தெய்வமென்றாலும் ஒரு பொருளையே குறிக்கும்.

கரண்டியை உருக்கிவிட்டால் இரும்புக்குக் கொடுத்த வடிவம் மறைந்து விடுகிறது. அவ்விரும்புக்குக் கரண்டி என்று கொடுத்த பெயர் மறைந்து விடுகிறது. என்ன மிச்சம்?

இரும்புதான். இரும்பைப் பல வடிவங்களாக்கி, பெயர்களை அக்கருவிக்குக் கொடுக்கிறோம். வடிவத்தையும் பெயரையும் கழித்து விட்டால் மிஞ்சுவது இரும்புதானே!

அதேபோன்று, நீ உன்னையறிந்து கொள்ள முயற்சி செய்! மனிதனென்ற வடிவத்தையும், உன் செயல் பதிவுகளாக உள்ள வினைப்பதிவுகளையும் கழித்துப் பார்! உன்னில் மிஞ்சுவது எல்லாம் வல்ல அருட்பேராற்றலாக விளங்கும் பரம்பொருளே.

உனது உடல் உயிர்த்துகள்களால் (விண்துகள்களால்) ஆனது. உயிர்த்துகளோ இறைத்துகள்களின் கூட்டு. இறைத்துகளோ இறைநிலையின் நுண்பகுதி. எனவே உன்னில் இறைநிலை இருக்கிறது.

எனவே, உன்னில் நான் யார்? என்ற வினாவிற்குப் பதில் நான் இறைநிலை. இறைநிலையே நானாக இருக்கிறது. அதுவே நீயாக இருக்கிறது.

எனவே, ஒவ்வொரு மனிதரும் இறைநிலையே. ஒவ்வொருவரும் விண்துகளால் ஆனவர். ஒவ்வொருவரும் இறைத்துகளால் ஆனவர். விண்துகளோ இறைத்துகளின் தொகுப்பு. இறைத்துகளோ இறைவெளியின் நுண்பகுதி. எனவே ஒவ்வொருவரும் இறைநிலையே.

சாக்ரடீஸ் வினாவிடைகள் மூலமாக சிந்திக்க வைத்துக் தெளிவுபெற செய்த முறை சாக்ரடீஸ் முறை என்னும் பெயர் பெற்றது.

அவர் சொன்னார். இவர் சொன்னார் என்று எதையும் சிந்திக்காமல் ஏற்றுக் கொள்ளாதே. எவர் சொன்னதானாலும் ஏன், எதற்கு, எவ்வாறு என்று கேள்விகளை எழுப்பி உண்மையை உணர்ந்து கொள் என்று சாக்ரட்டீஸ் கருத்துக்கு செயல் வடிவம் தந்தவர் அருட்தந்தை.

**சொல்லால் மட்டும் நம்பாதே**

**சுயமாய் சிந்தித்தே தெளிவாய்**

என்று கூறி தாம் கூறியதை சிந்தித்து உண்மை என்றால் ஏற்றுக் கொள்ளச் செய்த ஞானி வேதாத்திரி மகரிசி.

இன்றைய கால கட்டத்தில் மனிதன் அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயப்படுதல் என்ற மூன்று காரணங்களால் பல தவறுகள் செய்கிறான். அதனால் பல துன்பங்களைத் சந்திக்கிறான்.

இதற்குக் காரணம் வாழ்க்கையில் சிந்திக்காமல் முடிவெடுப்பது தான் என்கிறது வேதாத்திரியம். இதற்கு வேதாத்திரியம் கூறும் வழி சுருதி, யுக்தி, அனுபவம் என்பதாகும்.

சுருதி என்பது நூல் வழியாகச் சிந்தனையாளர்களின் கருத்துகளை அறிவது.

யுக்தி என்பது ஆறாவது அறிவால் சிந்திக்கும் பொழுது மனம் இறையுணர்வை நோக்கிச் செல்வது. அத்தகைய முறை மூலம் பல சிக்கலான தீர்வுகளுக்கும் விடை காண முடியும் என்கிறது வேதாத்திரியம்.

அனுபவம் என்பது நம் புலன்களைக் கொண்டும் அனுபவ அறிவைக் கொண்டும் நல்லது கெட்டதை அறிதல்.

இத்தகைய அறிவை வளர்த்து மனிதர்கள் வாழ்வில் அமைதியும், நிம்மதியும் பெறுங்கள் என்கிறது வேதாத்திரியம்.

✣ ''நல்ல ஞானமுள்ள தேவர்களை சந்திக்கச் செல்வேன் என்று (இதைப் பற்றி வேறெதையும்விட நிச்சயமாக இருக்கிறேன்) நான் ஏற்றுக் கொள்ளாவிட்டால், என்னைப் பிரிந்து சென்றவர்களை சந்திப்பேன் என்று ஒப்புக் கொள்ளாவிட்டால், மரணத்தின்போது ஒருவேளை நான்

துயரப்படலாம். எனவே நான் மற்றவரைப்போல் துயரப்படுவதில்லை. ஏனெனில் இறந்தவர்களுக்கு இன்னும் ஏதோ இருக்கிறது என்ற நல்ல நம்பிக்கை எனக்கிருக்கிறது'' சாக்ரட்டீஸ்.

சாக்ரட்டீஸ் தரும் நம்பிக்கையை வேதாத்திரியமும் தருகிறது. மரணத்தை வெல்லும் வழியை தருகிறது வேதாத்திரியம். சாக்ரட்டீஸ் போன்று அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ வழி காட்டுகிறது வேதாத்திரியம்.

**வேதாத்திரியம்**

வேதாத்திரியம் கொளுத்திய வித்தக ஞான ஒளி விளக்குகள்!

ஞான நல நாட்ட நன்னம்பிக்கை அகலா அகிலவுலக அருள் சுடர்கள்!!

கருத்தரித்த பெருங் கருத்துக்களின் உருப் பெருக்க உள் புதையல்கள்!

ஆழ்ஞான அக மனக் கடலிலிருந்து அகழ்ந்தெடுத்த அரும் முத்துக்கள்!!

மனித இனப் பலப்பல வேறுபாடுகளை மகா ஊறு கூறு கூறுபாடுகளை பொசுக்கப்புறப்பட்ட பூலோகப் பெரு ஞான அக்கினி ஜ்வாலைகள்!

மூட நம்பிக்கைகளை வேரறுத்த பகுத்தறிவு கருவூலம்.

மன வறுமை வலி நோய் போக்கி கன எளிமைப் பொலிவு நல்கும் அருள் ஞான வானப் பூந்துணர்கள்!! மதம் பிடித்த யானை மக்கள் இதயங்கள் இதம் பிடிக்குமாறு இணைக்கச் செய் சங்கிலிகள்!

உலகம் முழுவதும் உய்வதற்காக புடம் போட நாடி' தேடி வந்த புத்தம் புதிய ரசவாத மூலிகைகள்!!

கண்ட நாட்டு வேலிகளைத் தகர்த்த உலக மக்களை களையெடுத்து ஒரே குடைக்கீழ் கொண்டு வந்து ஒருலகச் சமத்துவப் பேராட்சியால் சரிநிகர் சமன்பாடு செய்ய வந்த சட்டத்தின் சத்தியக் கருவூலங்கள்!

வேதாத்திரியாரின் உபதேசங்களின் தொகுப்புதான் வேதாத்திரியம்.

பகுத்தறிவின் தந்தை சாக்ரட்டீஸின் தத்துவங்களை உள்ளடக்கியது தான் வேதாத்திரியம். இந்த பகுத்தறிவாதிகள் பாதையில் சென்று நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைப்போம்.



# 5. கிரேக்க தத்துவஞானி பிளேட்டோவும் வேதாத்திரியும்

**க**ணிதவியல் அறிஞர் பிளேட்டோ பெரும் செல்வாக்குள்ள கிரேக்கத் தத்துவ ஞானியாவார். பிளேட்டோ சாக்ரட்டீசின் சீடர், அரிஸ்டாட்டிலின் குரு.

மனிதன் எந்த அரசியலில் எந்த விதமாக எதற்காக வாழ்வது எனச் சிந்தித்தவர். இந்த சிந்தனைக்குரிய வடிவத்தை, ஐக்கியநாடு சபைகள் வரை கொண்டு சென்றவர் வேதாத்திரி.

**பிளேட்டோ வாழ்க்கை வரலாறு [கிமு 427 – கிமு 347]**

கிரேக்க நாட்டிலுள்ள ஏதென்ஸ் நகரில் கி.மு. 427 ல் பிளேட்டோ பிறந்தார்.

தந்தையின் பெயர் அரஸ்டோன். தாயின் பெயர் பெரிகட்டியோனி. அவனது இயற்பெயர் அரிஸ்டோக்கிளீஸ்.

பிளேட்டோவுக்கு முன்னால் உடன் பிறந்த சகோதரர்கள் இருவர். சகோதரி ஒருவர்.

பிளேட்டா என்றால் கிரேக்க மொழியில் விசாலம் என்று பொருள்.

அழகிகள் கண்டு மயங்கக் கூடிய அவனது விசாலமான தோள்களைக் கண்டோ, இன்றைய அறிவாளிகளும் மலைக்கக் கூடிய அவனது விசாலமான அறிவை நினைத்தோ, அவனுக்குப் பிளேட்டோ என்ற புனைபெயர் ஏற்பட்டுவிட்டது.

சாக்ரட்டீஸ் கொலைத் தண்டனை பெற்றபோது பிளேட்டோவுக்கு இருபத்தெட்டு வயதுதான். அமைதியாக வாழ்ந்த தியாகசீலரின் கோரமான சோகமான முடிவு. மாணக்கனின் நெஞ்சிலுள்ள ஒவ்வொரு அணுவிலும் அழியாச் சின்னமாகப் பதிந்து விட்டது.


இவர் தனது குருநாதர் சாக்ரடீஸ் மற்றும் தனது மாணவர் அரிஸ்டாட்டிலின் உடன் இணைந்து மேற்குலகின் தத்துவம் மற்றும் அறிவியலுக்கான அடிக்கல்லை நாட்டினார்

**பிளேட்டோவும் வேதாத்திரியும்.**

பிளாட்டோவின் ‘‘இலட்சிய குடியரசு‘‘வில் இருந்து...

கிறிஸ்து பிறப்பதற்கு 469- ஆண்டுகளுக்கு முன்னால் கிரீஸ் நாட்டில் ஏதென்ஸ் நகரத்தில் பிறந்தவர் சாக்ரடீஸ்.

வரலாறுகளில் காணப்படும் கிரேக்க நாகரீகத்தின் முன்னோடிகளாகவும், பெரிகிளீஸ் (Pericles) ஆட்சியின் காலமான நாகரீக அரசியல் காலத்திற்கு பிறகே சாக்ரடீஸ் பிறந்தார்.



**பிளேட்டோ**

சாக்ரடீசும் அவருடைய நண்பர்களும் தத்துவ விவாதங்களையும், கலந்துரையாடல்களையும் உன்னிப்பாக கவனித்து எழுத்துக்களால் அவற்றை பதிவு செய்தவர் பிளேட்டோ.

இப்படி 20- க்கும் மேல் சாக்ரடீசின் உரையாடல்கள் மட்டும் நூல்களாக எழுதி இருக்கிறார் பிளாட்டோ.

சாக்ரடீஸ் தன் தத்துவங்களையும், சிந்தனைகளையும் எழுதவில்லை. பிளாட்டோவின் மூலமே சாக்ரடீசின் வரலாறு உலகத்திற்கு தெரிகிறது.

சாக்ரடீசின் மாணவனான பிளாட்டோ ஆற்றல் மிக்க இளைஞன்; குத்துச் சண்டை வீரன்; பேரழகன்; வசதிப்படைத்தவன்; அறிவில் சிறந்தவன்; கவிதை, நாடகங்கள் எழுதும் திறன் உண்டு.

கி.மு. 399- இல் இருந்து 12- ஆண்டுகள் இத்தாலி, ஆப்பிரிக்கா, எகிப்து, யூதேயா மற்றும் சில நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்தார்.

தனது பயணத்தில், மற்ற சமூகத்தைச் சேர்ந்த மக்களின் பண்பாடு, கலாச்சாரங்கள் அது குறித்த ஆராய்ச்சிகள் என உலக மக்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்துணரும் ஆர்வம் அவருக்குள் இருந்தது.

12- வருடங்கள் உலகம் சுற்றிய வாலிபன் பிளாட்டோ சொந்த நாட்டுக்கு வந்த பின்பு மக்களுக்கு கல்வி அறிவின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும் என்ற வேட்கை அவருக்குள் அதிகரித்தது.

அகடெமியா என்ற பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தினார் பிளாட்டோ. அந்த காலத்தில் அகடெமியா (Acadamus) என்ற மாவீரன் இருந்தான். அவனுடைய நினைவாகவே பல்கலைக்கழகத்திற்கு அப்பெயர் வைக்கப்பட்டது. பள்ளிப் படிப்பை முடித்த இளைஞர்களின் அறிவுத் தேடலுக்கு அவை முக்கியத்துவம் கொடுத்தன.

உலகின் முதல் பல்கலைக்கழகம் அகடெமியா தான். கி.மு.387- இல் பிளாட்டோவினால் உருவாக்கப்பட்ட அகடெமியா 200- ஆண்டுகள் தொடர்ந்து இயங்கியது. அதில் அறிவியல், தத்துவஞானம் என்ற இரண்டு பிரிவுகள் இருந்தன.

நாட்டின் அரசியலில் எதிர்காலத்திற்கு தக்க பயிற்சியுடைய இளைஞர்கள் இருக்க வேண்டும் என்பது பிளாட்டோவின் கருத்து.

வசதிப்படைத்த இளைஞர்கள் அந்தக் காலங்களில் குடியும், கூத்தும், பெண்களுடன் பாலியல் தொடர்புகளிலும் இருந்த கிரீஸ் நாட்டு இளைஞர்களில் இருந்து பிளாட்டோ மிகவும் மாறுபட்டு இருந்தார்.

உலகத்தின் மானுட சமத்துவம், அறிவுடைய மானுட வம்ச விருத்தி, சமதருமம், பொதுவுடைமை, பெண் உரிமை, குடும்பக்கட்டுப்பாடு, கட்டற்ற காதல் உரிமை, பேச்சு சுதந்திரம், ஒழுக்க நியதி நெறிமுறைகள், சொத்துரிமை, பொதுவுடைமைக் குழந்தைகள் என சாக்ரடீஸ் தன் நண்பர்களுடனும், மாணவர்களுடனும் விவாதித்துக் கொண்டிருந்தார்.

சங்கம் அமைத்து ஏதென்ஸில் விவாதித்ததை பிளாட்டோ கல்வி அறிவுக்குள் புகுத்திவிட்டார்.

பிளாட்டோவின் அரசியல் சீர்திருத்த சிந்தனைகளை குடியரசு தொகுதிகளாக்கி வைத்திருப்பதை கேள்விப்பட்டு கிரேக்க நகர மன்னன் டையோனிஸஸ், பிளாட்டோவை அழைத்து குடியரசு சித்தாந்தங்களை பார்த்தான்.

பிளாட்டோவின் சிந்தனைகள் அவனுக்கு தீவிரவாதத் திட்டங்களைப் போன்று இருந்திருக்க வேண்டும்.

மன்னனுக்கு கோபத்தைக் கொடுத்தது. பொது பொண்டாட்டி, பொது புருஷர்கள், பொது குழந்தைகள் என்று என்ன கண்டபடி கிடக்கிறது என்ற கோபம். மன்னன் அதைத் தத்துவஞானமாக ஏற்றுக் கொள்ளவில்லை.

பிளாட்டோவை பிடித்து சிறையில் அடைக்கச் சொல்லி உத்தரவு போட்டான். தலையை வெட்டியெறியும் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அதிர்ந்து போன பிளாட்டோவின் நண்பர்கள் சிலரின் தலையீட்டினால் பிளாட்டோ உயிர் தப்பினார். அவரைப் பிடித்து அடிமையாக வேறு நாட்டுக்கு விற்க கட்டளையிட்டான் மன்னன்.

பிரபு வம்சத்தைச் சேர்ந்த ஒருவர் பிளாட்டோவை அடிமையாக விலைக்கு வாங்கினார். தன்னுடைய குழந்தைகளுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதற்கு உபயோகித்த அவர் சில காலங்களில் பிளாட்டோவை விடுவித்தார்.

இனி தனக்கு அடிமையில்லையென்றும், இனி சுதந்திர மனிதனாக இருக்கலாம் என்றும் அனுப்பிவிட்டார். மீண்டும் ஏதென்ஸ் வந்த பிளாட்டோவுக்கு கிரேக்க மன்னரான டையோனிஸஸ் தவறுக்கு மன்னிப்புக் கேட்டு ஓர் கடிதம் அனுப்பினான்.

அகடெமியா பல்கலைக்கழகத்தில் தன் இறுதிக் காலம் வரையில் இளைஞர்களுக்கு தத்துவம், அறிவியல் விவாதத்தில் கவனஞ்செலுத்தினார் பிளாட்டோ. அவர் இறக்கும் போது வயது 81.

பிளாட்டோ தத்துவங்கள் அவர் வாழ்ந்த சூழலுக்கு ஏற்ப ஆய்வு செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது.

கிரேக்க நாகரித்தில் ஒருபுறம் செல்வச் செழிப்புகளும், மறுபுறம் ஏழ்மையும், பட்டினி, பஞ்சமும் உடைய மற்றொரு சமூகமும் இருந்தது.

செல்வந்தர்கள் ஆடம்பரம், மது, பெண்கள் தொடர்பு, கொண்டாட்டங்கள் என ஆடம்பரமாக இருந்தனர். திடீர் திடீரென இதர நாடுகளின் படையெடுப்பு; வெற்றி கட்டாயம் பெற்றாக வேண்டிய சூழல்.

தோல்வியடைந்தால் தங்களுடைய செல்வங்கள், உடைமைகள் அனைத்தையும் பறி கொடுத்தாக வேண்டிய கட்டாயங்கள் போன்ற சூழல்களால் பிளாட்டோவின் சித்தாந்தம் கம்யூனிஸ்ட் கோட்பாடுகள் போல் இருந்ததோ என்னவோ என்று ஆராய்ச்சியாளர்கள் குழம்பினர். .

இவரைப்பற்றி ஆய்வாளரான ஏ. என். ஒயிட்ஹெட் பின்வருமாறு கூறியுள்ளார்:

ஐரோப்பிய தத்துவ பாரம்பரியத்தின் பாதுகாப்பான பொதுவான குணாதிசயம் என்னவென்றால் அது பிளாட்டோவின் அடிக்குறிப்பு வரிசையை கொண்டிருப்பதுதான்.

அவர் எழுதியவற்றின் சாராம்சங்களை அறிஞர்கள் சந்தேகத்துடன் எடுத்துக் கொண்ட சிந்தனையின் முறையான திட்டம் என்ற பொருளில் நான் சொல்லவில்லை.நான் அவற்றில் பரவியுள்ள பொதுவான கருத்துக்களின் செறிவைத்தான் சொல்கிறேன்.

பிளாட்டோ ஒரு சிறந்த எழுத்தாளர் என்பது அவர் எழுதியுள்ள சாக்ரடீஸின் கேள்வி பதிலில் இருந்து தெரிகிறது. இதில் முப்பத்தாறு உரையாடல், பதிமூன்று கடிதங்களை இவர் எழுதியுள்ளதாக கூறப்படுகிறது.

பிளாட்டோவின் எழுத்துக்கள் பல வடிவங்களில் வெளியிடப் பட்டுள்ளன. இதன் காரணமாக பிளாட்டோ எழுதியவற்றுக்கு பெயரிடுதல் மற்றும் குறிப்பிடுதலை பற்றி விவாதிக்கும் பல்வேறு கூட்டங்கள் நடைபெற வழிவகுத்தது.

பிளாட்டோவின் உரையாடல்கள் தத்துவம், தர்க்கம், நெறிமுறைகள், சொல்வளம் மற்றும் கணிதம் உள்ளிட்ட பல துறைகளை கற்பிக்க பயன்பட்டது.

**பிளேட்டோவும் வேதாத்திரியும்**.

பிளேட்டோ 36 நூல்கள் எழுதினார். அவை பெரும்பாலும் அரசியல், அறவியல் பற்றியவை.

திருமணம் குறித்து பிளேட்டோவின் பார்வை

பிளேட்டோ மனிதன் அழிவற்ற நிலையில் ஒட்டிக் கொள்ள வேண்டும். என்றென்றும் தன் ஸ்தானத்தில் தனக்குப் பின்னால் கடவுளின் தொண்டர்களாக விளங்கத் தன் குழந்தைகளின் குழந்தைகளை விட்டுச் செல்ல வேண்டும். இதைக் கவனிக்காமல் ஜனங்களின் மத்தியில் தனியாளானாக இருப்பானாகில், முப்பத்தைந்து வயதுவரை இன்னும் மணம் செய்துக் கொள்ளாமல் இருப்பானாகில், அவன் அபராதம் செலுத்துவானாக....

சந்ததியாகிற நூலை அறுத்துவிடாமலிரு என்று இதைத்தான் தைத்திரியோபநிஷத் வலியுறுத்துகிறது.

சந்ததிக்கு அழகு வந்ததி செய்யாமை என்று ஔவையாரும் பிளேட்டோ கருத்தை ஆதரிக்கிறார்.

ஆனால்.......திருமணப் பொருத்தம் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற பிளேட்டோவின் கருத்து...........

(நாம் வீட்டில் வளர்க்கும் நாய் முதலான மிருகங்கள் நல்ல குட்டிகள் போட வேண்டுமானால் எந்த முறையை அனுஷ்டிக்கிறோம்? நல்ல நாயை, அதைப்போல நல்ல உடல் ஆரோக்கியமும், யௌவனமும் உள்ள நாயோடு பக்குவமான வயதில் சேர வைத்தால் நல்ல நல்ல குட்டிகள் உற்பத்தியாகும். கிழட்டு நாயை யௌவன நாயோடோ, ஆரோக்கியமான நாயை ஆரோக்கியமற்ற நாயோடு இணைய விடுவதில்லை.)

இந்த நிலையைத் தான் மனித இனங்கள் விஷயத்திலும் அனுசரிக்க வேண்டும் என்று தனது குடியரசில் விளக்கியுள்ளார்.

உடற்பொருத்தம், மனப் பொருத்தம், சுபாவப் பொருத்தம், அறிவுப் பொருத்தம் முதலான எல்லாவற்றிலும் உயர்ந்தவர்களே (திருமணத்தில்) ஒன்றுசேர விடவேண்டும். பலகீனமானவர்களை பலகீனமானவர்களோடு இணைவதைக் கூடியவரை குறைத்துவிட வேண்டும்.

உடற் பலமும் திறமையும் வாய்ந்த வீர வாலிபர்களுக்குப் பெண்களுடன் அடிக்கடி உறவு வைத்துக் கொள்ள அதிக வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அத்தகையவர்களுக்கு முடிந்த வரை எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் நாட்டுக்கு நல்லது தானே?

காவடியின் பாரம் போல் காதல் இருபக்கமும் பொருந்தி இருந்தால் தான் இன்பமாகும் என்ற திருக்குறள் கருத்து இங்கு ஒப்பு நோக்கற்பாலது.

ஒவ்வொரு மணமகனுக்கும் மணப்பெண்ணிற்கும் முன்னதாக ஆரோக்கிய சர்டிபிகேட் தேவை (குடியரசு சட்டம 772).

பிளேட்டோவின் இந்த முறை சுவாமி சிவானந்த பரமகம்சரால், இந்தியாவில் இன்றளவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தலைமையிடம், சித்தசமாஜம், வடகரை, கேரளாவில் அமைந்துள்ளது..

**எளிமையான திருமண முறையை வரவேற்கும் வேதாத்திரி**
**காதல் மணத்தை வரவேற்கும் வேதாத்திரி மகரிசி,**
**பெண்கள் தம் விரும்பம்போல் கணவன் தேர்ந்து**
**பிரியமுடன் காதல் வாழ்வெய்தல்நன்று** (ஞா.க.)

**ஆண்பெண் உளம் ஒன்றுபட்டு உலகில் வாழ**
**எண்ணத்தால் முடிவு கொண்டோ செயலில் கண்டோ**
**ஒருவர் ஒருவர்க்கு உடல்பொருளோ டாற்றல்**
**உவந்து அர்ப்பணித்த உளநிலையே காதல்** (ஞா.க.)

என்று கூறும் வேதாத்திரியார் தங்கள் பெற்றோர்களின் விருப்பம்போல் மணந்தாலும் நன்று என்கிறார்.

மேலும் திருமணத்தை எளிமையான முறையில் ஆடம்பரமின்றி வீண் செலவின்றி செய்தால் அனைவருக்கும் நலம் பயக்கும் என்கிறார்.

### பருவத்தே பயிர் செய்

பிளோட்டா மேலும் சொல்கிறார்...... யௌவனப் பருவத்தில் உள்ளவர்களுக்குத்தான் குழந்தைகள் உற்பத்தியாக வேண்டும்.

பெண்களுக்கு இருபது வயதிலும், ஆண்களுக்கு முப்பது வயதிலும் பரிபக்குவமான யௌவனப் பருவம் துவங்குகிறது.

பெண்கள் இருபது வயதிலிருந்து நாற்பது வயது வரை குழந்தைகள் பெறலாம். ஆண்களோ, வாழ்வின் ஜீவத் துடிப்பு மிகுந்த பக்குவம் அடைந்ததும் இருபத்தைந்து வயதில் இருந்து ஐம்பத்தைந்து வயது வரை குழந்தைகள் பெறலாம். அவைதான் உடலும் அறிவும் பூரண மலர்ச்சி பெற்ற வீரிய சக்தியுடன் விளங்கும் வருஷங்களாம்.

இந்த வயது எல்லைகளைத் தாண்டிப் பிறக்கும் குழந்தைகள் புனித மற்றவையென ராஜ்யத்தால் புறக்கணிக்கப்படும். (குடியரசு)

(மேற்கூறிய ஜனன வரையறைக் காலத்திற்கு முன்போ பின்போ எந்த நேரத்திலும் சரியான ஜோடிகள் காதலின்பத்தில் ஈடுபடலாம். ஆனால் குழந்தைகள் பிறக்காமல் கர்ப்பதடை செய்ய வேண்டும். ஏனெனில் ஆரோக்கியமற்ற குழந்தைகள் பிறக்காமல் கட்டுப் படுத்துவது தேச நலத்தை எதிர் நோக்கியுள்ள ஒரு கடமையாகும்.)

## பொதுவளர்ப்பு முறை

குழந்தைகளுக்கு பொதுவளர்ப்பு முறை வேண்டும் என்பது வேதாத்திரியத்தின் கருத்தாகும்.

பெண் பெருமைப்படுத்தப்பட்டு முன்னேற்றமடைந்தால் சமூக மேம்பாடு, உலகச் சமாதானம் தாமே தோன்றிவிடும் என்று வேதாத்திரி குறிப்பிடுகிறார்.

எதிர்கால உலகச் சமாதான வித்தாய் திகழ்வது குழந்தை. அக்குழந்தை வளர்ப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவும் உலக அமைதியின் தொடக்கத்திற்கு உதவி செய்யவும் நமக்கு விடுதலை கிட்டவும் பெண் தான் பெற்ற குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்குவதற்குத் தன் பாசத்தைத் துறந்து பெண் விடுதலைக்கும் உரியதான அந்தத் தியாகத்தைச் செய்ய வேண்டும்.

**பிறக்கின்ற குழுந்தைகளைப் பொதுச் சொத்தாக்கி,**
**பெற்றோர் மக்கள் பாசம் எழாமல் செய்து,**
**இறக்கின்றோர் சொத்தும்,முதியோர், நோயுற்றோர்,**
**இவர்களையும் பொது ஆட்சி ஏற்றுக் கொண்டு,**
**அறப்பணிக்கே தகுதியாகக் குழந்தைகட்கு**
**அறிவு, தொழில், கல்விகளைப் புகட்டவேண்டும்.**

(ஞா.க.)

என்கிறார். இந்த மனநிலை ஒவ்வொருவருக்கும் வாய்க்குமானால் மக்கள் முந்தைய இயற்கை நிலைக்குத் திரும்புவர்.

சித்த சமாஜ ஆசிரமத்தில் பிளேட்டோவின் முறைப்படி இன்றளவும் குழந்தைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதை யாம் அந்த ஆசிரமத்தில் முன்று நாட்கள் தங்கியிருந்து ஆய்வு செய்தோம்.

சாதி, மதம், இனம், மொழி, செல்வம் இவற்றைப் பற்றி எழும் பேத உணர்ச்சிகள் அனைத்தும், பெற்றோர்களே குழந்தைகளை வளர்ப்பதால் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கின்றன.

பெற்றவர்களின் பாசத்தால் எண்ணிறந்த குழந்தைகள் சமூக வாழ்விற்குப் பயனற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

அறிவு உடல் தத்துவமறிந்த அறிஞர்களின் திட்டப்படி பொது முறையில் வளரும் குழந்தையால்தான் எதிர்காலத்தில் மனித இனம் சிறப்புற வாழ முடியும் என வேதாத்திரியார் உறுதியாக நம்புகிறார்.

**ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றுத் தந்து,**
**உலகிலுள்ள குழந்தைகளை உமதாய்க்கொண்டு**
**வாழ்வதே சிறந்தது** என்கிறார். (ஞா.க.)

இதனால் உலக மக்கள் எல்லாரும் அமைதியாக, அன்பாக, இன்பமாக, வாழவும் மனித இனத்தின் இறுதி இலட்சியமான உலகச் சமாதானமும் பற்றற்ற வாழ்வும் பெறலாம்.

இந்த நல்விளைவுகளைக் கருத்தில் கொண்டு, பெண்கள் தம்மக்கள் என்ற பாசத்தைத் தியாகம் செய்ய வேண்டும் என்று பல இடங்களிலும் வற்புறுத்துகிறார்.

**மாலை நேரங்களிலே எவரென்றாலும்,**
**மழலை மொழிக் குழந்தைகளின இருப்பிடம் ஆம்**
**சோலை சூழ்நிலையங்கட்கென்றும் சென்று,**
**சுதந்திரமாய்க் குழந்தைகளோடு ஆடலாகும்** (ஞா.க.)

தன் குழந்தை என்ற குறுகிய நினைவை ஒழிப்பதும் தவிரக் குழந்தைகளிடம் பெற்றோர்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்பையும் கடமையையும் வேதாத்திரி மகரிசி எந்த வயதிலும் குறைத்துக் கொள்ள் அவர்களை வற்புறுத்தவில்லை.

**நல்ல முறையில் குழந்தைகளை வளர்க்க**
**நாடனைத்தும் சேர்ந்து ஒருதிட்டம் கண்டால்,**
**அல்லல் படும் தாய்மார்கட் கமைதி கிட்டும்.** (ஞாக.)

குழந்தைகளைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கு, உலக நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஒரு நல்ல உயர்வான திட்டம் வகுத்துவிட்டால், அன்றுதான் பெண்ணினத்திற்கு வாழ்வில் அமைதி கிட்டும்.

(கேரளாவில சித்த சமாஜ ஆசிரமத்தில் பிளேட்டோவின் முறைப்படி இன்றளவும் குழந்தைகள் பொதுமுறையில் வளர்க்கப்பட்டு வருகிறது)

நீதி, நியாயம், உண்மை, அழகு, பொதுநலம் Rightness எல்லாமே இதில் அடக்குகிறார் பிளாட்டோ. அவரிடம் அந்தக் கட்டுப்பாடுகள் இருந்ததால் தான் ஏதென்ஸ் இளைஞர்களுக்கு பள்ளிப்படிப்புடன் தர்க்கவியல், அறிவியல் அறிவுக்கு பழக்கி விட்டால் மேன்மையடையும் சமூகம் உருவாகலாம் என்ற சிந்தனை இருந்தது.

தனிமனித சுதந்திரத்தை ஸொஃபிஸ்டுக்கள் (Sophist) வேறு நோக்கில் கையாண்டார்கள். பலசாலியின் கருத்தே நீதியின் அடிப்படை என்றார்கள்.

பிளாட்டோவுக்கு அவை சகிக்க முடியாதவைகளாக இருந்தன. அப்போது உருவாக்கியவைதான் பிளாட்டோவின் இலட்சியக் குடியரசு என்ற நூல்.

அரசு நிர்வாகத்தை நடத்தும் உரிமை திறமையும், அறிவும் உள்ளவர்களே நிர்ணயிக்க வேண்டும் என்றார்.

''மனிதர்களின் பிளவுக்கு நான் என்னும் உணர்ச்சியான தன்னலம் ஒழிய வேண்டுமானால், நான், எனது, என் மனைவி, என் மக்கள், என் குடும்பம், என் வீடு, என் நிலம் என்ற தன்னல உணர்வுகளை ஒழித்து விட்டால் எல்லாம் பொதுவாகி விடும். தன்னலத்திற்கு இடம் இருக்காது என்று பிளாட்டோ கருதினார்.

பொதுவுடைமை வாழ்க்கையில் தன்னலமின்மையால் ஏற்படும் நேர்மை என்னும் சமன்பாடு ஏற்படும். தனி மனிதன் சிறந்த நிலையில் இருப்பான் அதுவே **இலட்சியக் கூட்டுறவு** Ideal Commonwealth என்ற பிளாட்டோவின் கூற்றுக்கள் குடியரசு என்னும் உரையாடல்களில் ஐந்நூறு பக்கங்களுக்கு மேல் விளக்கி இருக்கிறார்.

இருப்பினும் பிளாட்டோவின் மாணவரான அரிஸ்டாட்டில் (Aristotle) உள்பட பல மாணவர்களிடம் இலட்சியக் கூட்டுறவு சிந்தனையில் கருத்து வேறுபாடுகள் இருந்தன.

பிளேட்டோ வகைப்படுத்தியுள்ள அரசாங்கத்துறைகள்

1. பூரண அறிவு மிகுந்த அரசு
2. பூரண அறிவற்ற அரசு
3. அறிவற்ற அரசு

**பூரண அறிவு மிகுந்த அரசு** (The State of Perfect Knowledge)

இவ்வாறான அரசின் இறைமையை இவ்வரசு பாதுகாத்துக் கொள்ளும். மிகச் சிறந்த இலட்சிய நோக்கம் கொண்ட அரசாக செயற்படும். இதனால் இவ்வாறான அரசுடன் ஒப்பிட்டுத் தான் ஏனைய அரச முறைமைகளை மதிப்பீடு செய்ய முடியும்

**பூரண அறிவற்ற அரசு** (State where there is Unprotected Knowledge)

இவ்வாறான அரசுகளால் மனிதன் தன் பூரண சுதந்திரத்தினை இழந்தவனாயிருப்பான். இவ்வரசின் சட்டங்கள் மிக அழுத்தம் கொடுப்பனவாகவிருக்கும். இருந்த போதிலும் இவ்வரசின் சட்டமுறை களுக்கு மனிதன் அடிபணிந்து நடப்பான்

''மக்களை ஆளும் அரசாங்கம் நேர்மை தவறாதிருக்க வேண்டும். அரசாங்கத்தில் மக்களின் சார்பாக பொறுப்பில் இருப்பவர்களுக்கு கடுமையான சட்டத்திட்டங்கள் இருக்க வேண்டும். அவர்களுக்கென்று சொத்துக்கள் வைத்துக் கொள்ளும் உரிமை இருக்கக் கூடாது. சம்பளமும் கிடையாது. பொது உணவு நிலையங்களில் உணவும்,

அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க கட்டடத்தில் தங்கவும், தூங்கவும் அனுமதிக்க வேண்டும். அப்படி செய்வதால் சுயநலம் அவர்களிடம் இருக்காது. இலஞ்சங்களுக்கு விலை போகமாட்டார்கள். அவர்களுடைய குறிக்கோள் சமுதாயத்தில் நேர்மை என்னும் அறத்தை நிலைநாட்டுதல் ஒன்றையே குறியாக கொண்டு செயல்பட வேண்டும்.''

தன்னலம் மறைந்து பொதுநலம் பெருகிய நாட்டில்தான் அறநெறி சான்ற குடியாட்சி மலரும் என்பார் வேதாத்திரியார்.

**பிறர்நலம் காக்கும் பெருநோக் கறிவு**
**பெரும்பாலோர்க்குப் பெருகுகிற நாட்டில்தான்**
**அறிநெறி சான்ற ஆட்சிக் குடிகளால்**
**அமுல் எளிதாகும் அமைதியும் உண்டாம்.** (ஞா.க.)

இத்தகைய குடிமக்களால் அமைதி உண்டாகும் எனத் தெளிவாக உரைக்கிறார் வேதாத்திரியார்

இன்றைய அரசியலும் ஆட்சியும் சீர்குறைந்து நிற்பதை உணரும் வேதாத்திரியார்,

- ★ ஒவ்வொரு நாட்டிலும் அரசியல் அமைப்பு உரிமைகளைச் செயல்படுத்துவதைத் தீர்மானிப்பதில் இரண்டு அரசியல் கட்சிகள் மட்டுமே போதுமானது.
- ★ அரசியல்வாதிகளுக்கும் அரசு நிர்வாகிகளுக்கும் கல்வி போதிக்கும் வகையில் பல்கலைக்கழகங்களில் தனியாக ஒரு துறை இருக்க வேண்டும். ஆன்மீகம், உளவியல், உடலியல், சமூகவியல், பொருளாதாரம், ஒழுக்கம், பண்பாடு, செயல் விளைவு தத்துவம் இவையனைத்தும் இக்கல்வி முறையில் அமைய வேண்டும்.
- ★ ஒருசில ஆண்டுகளில் இக்கல்வி கற்றவர்கள் மட்டுமே தேர்தலில் நிற்க வேண்டும் என்ற சட்டம் வரவேண்டும்.
- ★ அவர்களுக்குப் பிற வாழ்க்கைத் தொழில் பார்ப்பவர்களைப் போன்று நல்ல ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
- ★ மேலும் அரசியல் தொடர்புள்ள அவர்களுக்கு வேறு எவ்விதமான தொழிலில் ஈடுபடவும் வாய்ப்பு இருக்கக் கூடாது என்கிறார்.

வேதாத்திரி மகரிசியின் இந்த அருமையான கருத்து மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்தால் ஆட்சி உயர்வானதாக அமையும்.

**உலகம் என்றமண் மீது அனைவரும் பிறந்தோம்**
**உயிர்காக்கும் ஒன்றே மூச்சு விடுவதற்கு**
**உலகெங்கும் ஒளிவீசும் சூரியனும் என்றே**
**உள்ள கடல் ஒன்றே நீர் ஆவியாகிப் பொழிய**
**உலகில் இன்று உள்ளோர் இதில் ஒன்றும் செய்ததில்லை**
**ஒவ்வொருவரும் பிறந்து வாழ்ந்து செத்துப் போவார்**
**உலகில் உள்ளோர் அனைவருமே உடன்பிறந்தோராவார்**

ஓர் உலக ஆட்சி பற்றி அவரது இப்பார்வை உலகம் முழுவதையும் சேர்த்தே காணுமளவிற்கு விரிந்து இருக்கிறது.

- ★ இயந்திர, விஞ்ஞான, உலக மக்கள் எண்ணிக்கை இவை மிகுந்த இக்காலத்தில் அந்தந்த நாட்டவர் தம் எல்லை காக்க, அடுத்த நாட்டைத் தாக்க, சேனை வதைத்து எந்தச் சமயத்திலுமே பயந்து கொண்டே, இருப்பதெனில்மனிதரது வாழ்வென்னாகும்? இந்த நிலையை மாற்றி அறத்தைக் காக்க ஏற்படுத்த வேண்டும் ஓர் உலக ஆட்சி.

என்கிறார் அந்த ஆட்சியும் குடியாட்சி முறையாக இருக்க வேண்டும் என்ற பிளேட்டோவின் கருத்துடன் ஒத்துப்போகிறார்.

**குடியாட்சி** முறை உயர்வாய்க் கொண்ட அறிஞர் ஒரு

**குடியாட்சி** பிற நாட்டைக் கொடுமை செய அனுமதியார்

**குடியாட்சி** பிற நாட்டால் கலைய விடாத ஓர் உலகக்

**குடியாட்சி** அமைப்பதிலே குறிப்பாகத் தொண்டு செய்வார். (ஞா.க.)

இவ்வாறு ஆட்சி அமைந்தால்

**பார் முழுதும் ஏழ்மை போம். பண்பாடு சிறந்தோங்கும்**
**சீர்திருத்த வாழ்வு அப்போ சித்திக்கும் சிந்திப்பீர்,** (ஞா.க.)

மேலும் கூறுகிறார்.......

★ உலக ஆட்சியின் கீழ் அகில உலகப் பேரறிஞர்களைக் கொண்ட ஒரு தொண்டு நிலையம் அமைக்கப்படும். அது அவ்வப்போது மனித இன வாழ்வின் உயர்வுக்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்கவும் மக்களுக்குத் தொண்டாற்றவும் ஒரு பொது சமுதாய சீர்திருத்த இணைப்பு நிலையமாகப் பணி ஆற்றும். ஆன்மீகம், பொருளாதாரம், சுகாதாரம், விஞ்ஞானம், அரசியல் என்ற ஐந்து வகையையும் இணைத்து அறிஞர்களும் நிபுணர்களும் கூடிய ஆராய்ச்சிக் குழுவினரால் மக்கள் வாழ்வை அவ்வப்போது சீர்திருத்த, ஏற்றபடி வழிகளை வகுத்துக்காட்டும் என்கிறார்.

வேதாத்திரி மகரிசியின் கனவு ஒரு நாள் நிறைவேறும். அப்போது உலகெங்கும் இன்பமயமாக இருக்கும். உலகம் அமைதியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.



# 6. கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டிலும் வேதாத்திரியும்

**சா**க்ரட்டீசும், பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் முப்பெரும் கிரேக்கத் தத்துவஞானிகளாவர்.

சிந்தனை ஏன் எனச் சிந்தித்தவர் அரிஸ்டாட்டில். பாமரனையும் சிந்திக்க வைத்தவர் வேதாத்திரி.

அரிஸ்டாட்டில் ஒரு கிரேக்கத் தத்துவஞானி மற்றும் பல்துறை வல்லுநர்.

அவரது எழுத்துக்களில் இயற்பியல், கவிதை, நாடகம், இசை, தர்க்கம், சொல்லாட்சி, மொழியியல், அரசியல், ஒழுக்கவியல், உயிரியல், மற்றும் விலங்கியல் ஆகியன இடம் பெற்றிருக்கும்.

பிளேட்டோவும், இவரும் மேலைத்தேசச் சிந்தனையில் மிகஅதிக செல்வாக்குச் செலுத்தும் இருவராகக் கருதப்படுகிறார்கள்.

அரிஸ்டாட்டில் மேற்கத்திய தத்துவத்தின் மிக முக்கியமான நிறுவனர் ஆவார்.அரிஸ்டாட்டிலின் படைப்புக்களே மேற்கத்திய தத்துவம், ஒழுக்கவியல், அழகியல், தர்க்கம், அறிவியல், அரசியல் ஆகியவற்றின் ஒரு முதல் விரிவான அமைப்பை உருவாக்கின.

அரிஸ்டாட்டிலின் இயற்பியல் கருத்துக்கள், ஆழ்ந்த அறிவைத் தரும் இடைக்கால வடிவ இயற்பியல் கோட்பாடுகளாக அமைந்தன.

நியூட்டனின் இயற்பியல் தத்துவங்கள் அரிஸ்டாட்டில் தத்துவத்தின் ஒரு நீட்சியே ஆகும்.

அரிஸ்டாட்டிலின் அவதானிப்புகள் விலங்கியல் அறிவியலைப் பொருத்தவரை துல்லியமாக இருப்பதை, 19 ஆம் நூற்றாண்டில் அறிவியலாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

அரிஸ்டாட்டிலின் தத்துவங்கள் நவீன முறைப்படி பத்தொன்பதாம் நூற்றாண்டில் இணைக்கப்பட்டன. சாக்ரட்டீசும் பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலின் குரு.

சாக்ரட்டீசின் சிந்தனைகள் மற்ற இருவரின் மீதும் ஆழமான தாக்கம் கொண்டிருந்தன. மாவீரன் அலெக்சாண்டர் இவருடைய சீடர் ஆவார்.


அரிஸ்டாட்டிலின் தத்துவங்கள் இடைக்காலத்திய இஸ்லாமிய மற்றும் யூத மரபுகளில் தத்துவ மற்றும் இறையியல் சிந்தனையில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. அதுவும் குறிப்பாக கிறிஸ்துவர்களின் இறையியலில் அவரின் தாக்கம் அதிகமாக இருந்தது..

## அரிஸ்டாடிலும் வேதாத்திரியும்

அரிஸ்டாட்டில் எழுதிக்குவித்த நூல்களின் எண்ணிக்கை 170 என்று ஒரு பண்டையப் பட்டியல் கூறுகிறது.அரிஸ்டாட்டிலின் சிந்தனைகள் தமிழ்,ஆங்கிலம்,லத்தீன், சிரியாக், அராபிக், இத்தாலியன், ஃபிரெஞ்ச், ஹீப்ரு, ஜெர்மன் போன்ற பல உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

## வாழ்க்கை வரலாறு [கி.மு. 384 – 322]

அரிஸ்டாட்டில் என்றால் ''சிறந்த நோக்கம்'', என்று பொருளாகும். இவர் ஸ்டகிரா,ஷல்சிடிஸில் கி.மு. 384 இல் பிறந்தார்.



அரிஸ்டாட்டில்

தற்கால தெஸாலோனிகி யில் இருந்து 55 கி.மீ. (34 மைல்) கிழக்கே. அவரது தந்தை நிகோமசுஸ், மாசிடோனியாவின் மன்னர் அமயின்டாஸின் தனிப்பட்ட மருத்துவர் ஆவார்.

அரிஸ்டாட்டிலின் குழந்தை பருவத்தைப் பற்றி அதிக தகவல்கள் இல்லை என்றாலும், ஒருவேளை அவர் மாஸிடோனியன் மாளிகையில் சிறிது காலம் கழித்திருப்பார் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

பதினெட்டு வயது நிரம்பிய அரிஸ்டாட்டில் பிளேட்டோவின் அகாடமியில் அவரது கல்வியை தொடர ஏதென்ஸ் சென்றார்.

அரிஸ்டாட்டில் பிளேட்டோ வழிவந்த சிந்தனைச் செம்மல். பிளேட்டோ விட்டுச் சென்ற பணிகளை நிறைவேற்றிய தர்க்கமேதை.

பிளேட்டோவிற்கு வயது அறுபது. அப்போது அவரது அகாதெமி (Achademy) எனும் பள்ளியில் ஆர்வமுடன் பயிலவந்த மாணவன் அரிஸ்டாட்டிலுக்கு வயது பதினேழு.

கற்பதில் ஆர்வமும் இளமைத் துடிப்பும் கூரிய விழிகளும் தெளிந்த பார்வையும் கட்டமைப்பான உடல்வளமும் - தீர்க்க சிந்தனையும் - அறிவு நுட்பமும் கொண்ட இளைஞன் அரிஸ்டாட்டில் தம் தகுதிகளால் பிளேட்டோவைக் கவர்ந்தார்.

பிளேட்டோவின் பள்ளியில் கற்பதற்காக அரிஸ்டாட்டில் தம் பெயரைப் பதிவு செய்தார். அப்பதிவு பிளேட்டோவின் வாழ்வில் ஒரு திருப்புமுனையாயிற்று.

அரிஸ்டாட்டிலின் அறிவாற்றலால் ஈர்க்கப்பெற்ற பிளேட்டோ, அவரைத் தம் கல்விக் கூடத்தின் மூளை (Mind of the Achademy) என்றே குறிப்பிட்டுள்ளார்

பிளேட்டோ, தமது இளம் சீடனின் அறிவுக் கூர்மையை விரைவிலேயே உணர்ந்து கொண்டார்.

புத்தகங்களை வாங்கி வாங்கிச் சேர்த்து வைத்துப் படிப்பதில் அரிஸ்டாட்டிலுக்கு தீராத ஆசை. அவர் இல்லமே, படிப்பின் உறைவிடம் என்று பிளேட்டோ கூறியிருக்கிறார்.

அரிஸ்டாட்டிலும் தன் ஆசிரியரின் புகழையும், மேதா விலாசத்தையும் உணராமலில்லை. ஆனால் குரு சொல்வதே வேதவாக்கு என்ற எண்ணம் மட்டும் மாணவனிடம் இல்லை.

ஞானம் என்பது பிளேட்டோவுடன் அஸ்தமித்து விடும் என்று மட்டும் சொல்லிவிடக் கூடாது என்று அவர் கூறினாராம்.

பிளேட்டோவுக்கு இதில் வருத்தம்தான். கன்று தன் தாயின் மடியிலுள்ள் பால் முழுவதையும் குடித்து விட்டு அதை எட்டி உதைக்கச் தான் செய்யும் என்றாராம் அவர்.

இந்த மனவேற்றுமையில் ஆச்சரியமே இல்லை. தேர்ந்த அறிஞர்கள் அருகருகே இருப்பது, வெடி மருந்தும் நெருப்பும் போலத்தான். குருவை மிஞ்சிய சீடர்களும் உண்டு.

அரிஸ்டாட்டில் கி.மு. 348/47 ஏதென்ஸ் விட்டு செல்வதற்கு முன் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் அகாடமியில் கல்வி கற்றார்..

கி.மு. 347 ஆம் ஆண்டில் பிளேட்டோ மறைந்தார். அவரது மறைவிற்குப் பின்னர் அவரது கல்விக் கூடத்தின் (Achademy) தலைமைப் பதவி ஏதென்ஸ் நகர விதிமுறைகளின்படி அவரது சகோதரியின் மகன் ஸ்பெசிப்பஸ் (Speusippus) என்பவர் வசம் சென்றது.

அதனால் அரிஸ்டாட்டில் பிளேட்டோவின் வழிவந்த ஜெனோகிரேட்டீஸ் (Zenocrates) துணையுடன் அஸ்செஸ் (Asses) என்ற நகர் சென்று அந்நகரில் செல்வ வளம் மிக்க ஹெர்மியாஸ் (Hermias) என்ற இளவரசரைச் சந்தித்தார்.

அவரது சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். அவரது துணையுடன் மாசிடோனியாவை ஆண்ட மன்னன் பிலிப்ஸ் என்பவரைச் சந்தித்தார்.

அதற்கு அடுத்த ஏழு ஆண்டுகள், தான் சந்தித்த அந்த மன்னனின் மைந்தனுக்கு (மகன்) கல்வி கற்றுத் தந்து உலக வரலாற்றில் உன்னத இடம்பெற்றார்.

இவர் கல்வி கற்றுத் தந்த இளைஞன் வேறுயாருமல்ல; உலகப் புகழ்பெற்றவரும், மாசிடோனிய நாட்டின் பெருமையை நிலைநாட்டிய பேரரசரும் அஞ்சா நெஞ்சம் கொண்டவரும் ஆகிய அலெக்சாண்டர் ஆவார்.

அரிஸ்டாட்டில் மாசிடோனியா ராயல் அகாடெமியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

கி.மு. 335 அவர் ஏதென்ஸ் திரும்பினார், அங்கு லைசியம் என்ற தனது சொந்தப் பள்ளியை நிறுவினார். அரிஸ்டாட்டில் அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் அங்கு பள்ளியில் படிப்புகளை நடத்திக்கொண்டிருந்தார்.

தம் மாணவர்க்கு மெய் விளக்கியல் கொள்கைகளைக் கற்பிப்பதற்காக ஏதென்ஸ் நகரத்திலிருந்த ஒரு தோட்டத்தில் இதை அவர் நிறுவினார். இதற்கு உலாப் பள்ளி என்ற பெயரும் உண்டு.

அரிஸ்டாட்டில் இங்கு உலாவிக் கொண்டே பாடம் சொல்வது வழக்கமாக இருந்ததால் இப்பெயர் ஏற்பட்டது என்பர். ஏதென்ஸில் அரிஸ்டாட்டில் இருந்த போது, அவரது மனைவி பிதியாஸ் இறந்தார்.

அரிஸ்டாட்டிலின் பல படைப்புகள் இயற்றப்பட்டது அவர் ஏதென்ஸில் இருந்த கி.மு. 335 முதல் 323 வரையான காலகட்டத்தில் என்று நம்பப்படுகிறது.

அலெக்ஸாண்டர் இறந்த அதே ஆண்டில் இயற்கை காரணங்களால் இயுபோஇயா வில் அரிஸ்டாட்டில் இறந்தார்.( இறப்பு- கிமு 322 (வயது 61 அல்லது 62)

அரிஸ்டாட்டிலிற்கு அடுத்து அவரது மாணவர் ஆன்டிபாத்தரர் அவரின் இடத்திற்கு வர வேண்டும் என்றும் அவரது மனைவிக்கு அடுத்து புதைக்கப்படவேண்டும் என்றும் ஒரு உயில் விட்டு சென்றாராம் அரிஸ்டாட்டில்.

## அலெக்சாந்தரும் அரிஸ்டாட்டிலும்

அலெக்சாந்தர் தன் ஆசிரியரின் ஆராய்ச்சிகளுக்குத் தேவைப்பட்ட நிதி உதவிகள் அனைத்தையும் தாராளமாக வழங்கினார்.

ஒரு விஞ்ஞானி தம் ஆராய்ச்சிக்காக அரசிடமிருந்து பெருமளவில் நிதியுதவி பெற்றது உலக வரலாற்றில் இதுவே முதல் நிகழ்ச்சி ஆகும்.

ஆனால்,அலெக்சாந்தருடன் அரிஸ்டாட்டிலும் கொண்டிருந்த தொடர்புகள் சில ஆபத்துகளையும் தோற்றுவித்தன.

அலெக்சாந்தரின் சர்வாதிகார முறை ஆட்சியை அரிஸ்டாட்டில் கொள்கையளவில் எதிர்த்தார். அரசு துரோகக் குற்றம் செய்ததாக ஐயத்தின் பேரில் அரிஸ்டாட்டிலின் மருமகனை அலெக்சாந்தர் தூக்கிலிட்டார்.

அரிஸ்டாட்டிலின் மக்களாட்சி ஆதரவுக் கொள்கையை அலெக்சாந்தர் விரும்பவில்லை. அதே சமயத்தில் அவர் அலெக்சாந்தருடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தமையால் ஏதென்ஸ் மக்களும் அவரை நம்பவில்லை. அதன் பின் அவர்கள் பிரிந்தனர்.

## குருவும் சீடரும்

குருவும் சீடனும் எப்படி வாழ்ந்திருப்பார்கள்? குருவோ தத்துவஞானி, அறுபதாண்டு கடந்தவர். சீடன், விஞ்ஞானத்தில் அதாவது, எதையும் கண்டு, ஆராய்ந்து தெளிந்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற தர்க்க மனப்பான்மையில் பற்றுக் கொண்ட காளை.

பிளேட்டோ தாம் கண்ட உண்மைகளை உள்ளபடியே ஏற்றுக் கொள்ளும் இயல்பினர் (Subjective); ஆனால், அரிஸ்டாட்டில் தாம் கண்டவற்றில் ஏற்புடையது எது? நடைமுறைக்கு ஏற்றது எது? என்று ஆய்ந்து, பின்னர் சரியானவற்றை ஏற்றுக் கொள்ளும் தன்மையர் (objective) பிளேட்டோ ஆரம்பித்தது பல்கலைக்கழகம்; ஆனால், அரிஸ்டாட்டில் ஆரம்பித்தது நடமாடும் பல்கலைக்கழகம்.

இவ்விருவரும்-ஏசுகிறிஸ்து பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே உலகில் கல்விக்கண் திறந்த சிந்தனையாளர்கள்.

ஆடவருடன், மகளிரும் சமமாகக் கல்வி கற்க அடித்தளம் அமைத்த மாண்பினர். அவர்கள் காட்டிய வழியில்தான் இன்றைய உலகம் சென்று கொண்டிருக்கிறது. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்பதே இவர்கள் காட்டிய கொள்கை.

அரிஸ்டாட்டில், பிளேட்டோ, சாக்ரட்டீஸ் ஆகிய மூவரும் ஆசிரியர், மாணவர்கள் போன்றவர்கள். ஆனால் இவர்கள் மூவரும் ஒன்றாக இருப்பது போல் ஒரு ஓவியம் வாட்டிகன் மியூசியத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

### அரிஸ்டாட்டிலும் வேதாத்திரியும்

சுமார் 2400 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய அரிஸ்டாட்டிலின் சிந்தனைகள் உலக வளாச்சிக்கு உரமாக விளங்கின.

நவீனச் சிந்தனையாளர்கள் உட்பட அனைவருக்குமே அவர் துருவ நட்சத்திரமாக விளங்கி வருகிறார். சிந்தனை ஏன் என்பதைப் பற்றியும் சிந்தித்த மாபெரும் சிந்தனையாளார் அவர்.

மனிதன் தோன்றிப் பத்து லட்சம் ஆண்டுகள் ஆகின்றன. எழுதும் கலை தோன்றிச் சுமார் ஆறாயிரம் ஆண்டுகள் இருக்கலாம்.

எழுதும் கலை தோன்றிச் சுமார் முப்பது நூற்றாண்டுகள் கழிந்த பிறகு, சிந்தனைகள் தோன்றலாயின. தோன்றியவை வளர்ந்து, பெருகி செழித்து அடர்ந்து நின்றன.

### சிந்தனை என்றால் என்ன?

சிந்தித்தல் அல்லது சிந்தனை சிந்தை அல்லது மூளையில் முதன்மையாக இடம்பெறும் ஒரு அடிப்படைச் செயற்பாடு. ஆங்கிலத்தில் இதை ஒரு cognitive process (அறிதிறன் வழிமுறை) என்று கூறுவர்.

சிந்தித்தலின் ஊடாக சிந்தனைகள் அல்லது எண்ணங்கள் பெறப்படுகின்றன. இந்த எண்ணங்கள் மொழி, கணிதம், ஓவியம், இசை, கலைப்பொருட்கள், மனித செயற்பாடுகள் என பல வடிவங்களில் வெளிப்படுகின்றன.

ஓடுவது, நடப்பது, வாசிப்பது போன்றே சிந்திப்பதும் ஒரு செயற்பாடு எனினும் சிந்திப்பதை விவரிப்பது கடினமானது.

அறிவியல் நோக்கிலும் சிந்தித்தல் என்றால் என்ன என்பது தொடர்பாக ஒரு முழுமையான விளக்கம் அல்லது கோட்பாடு இன்னும் இல்லை.

எடுத்துக்காட்டாக ஒருவர் கடுமையாகச் சிந்திக்கிறார் அல்லது திறமையாகச் சிந்திக்கிறார் என்பதை வரையறை செய்வது சிக்கலானது. சிந்தித்தல் முதன்மையாக ஒரு அகச் செயற்பாடு என்பதால் புறவய நோக்கில் அதை விவரிப்பது இன்னும் சிக்கலான ஒன்றாகவே இருக்கிறது.

இருப்பினும் மனிதர் எப்படி சிந்திக்கிறார்கள்? மூளையின் எந்த எந்தப் பகுதிகள் எந்த எந்த வகையான சிந்தனைகளில் பெரிதும் ஈடுபடுத்தப்படுகின்றன. சிந்திக்கும் பொழுது மூளையில் ஏற்படும் வேதியியல் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் எவை? என பல வழிகளில் சிந்தித்தல் தொடர்பாக ஆய்வுகள் நடைபெறுகின்றன.

சிந்தனை ஏன் வேண்டும்?

மனிதன் சிந்திக்கத் தொடங்கியது முதல் மக்களது நடவடிக்கைகள். அறிஞர்களின் சிந்தனைப் போக்கை ஒட்டியே இருந்து வந்திருக்கின்றன.

முற்காலத்திலும் சரி, தற்காலத்திலும் சரி, இந்த உண்மை பொருந்தும்.

ஒரு நாட்டைப் பற்றியோ அல்லது ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தைப் பற்றியோ அறிந்து கொள்வதற்கு அந்த மக்களுடைய தத்துவத்தையும் சிந்தனைகளையும் அறிந்து கொள்ளத்தான் வேண்டும்.

மேலும், உலகின் சிந்தனையாளர்கள் பலரையும் பற்றிப் படித்து அறிந்து கொள்வதால் நாம் நமது கருத்துக்களின் மேல் வைத்திருக்கும் பிடிவாதப் பிடிப்பும் தளரும்.

சில கருத்துக்களை நாமனைவரும்ஒப்புக் கொண்டு, அவைதான் பொது அறிவு என்று கூறுகிறோம். மற்றவர்கள் வேறு கருத்துக்கள் கொண்டிருக்கலாம் என்றும், நமது கருத்துக்களே ஒரு காலத்தில் சிந்தனையாளார்களின் வெறும் யூகமாத்தான் இருந்தவை என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

தனி மனிதனும் சரி, ஒரு தேசமும் சரி வருங்காலத்துக்குத் திட்டம் வகுத்தாக வேண்டும்.

பகுத்தறிவுடன் இதைச் செய்ய வேண்டுமானால் சிந்தனைகளைப் பற்றிய சித்திர அறிவு சிறிதேனும் இருக்க வேண்டும்.

கடந்த கால அனுபவத்தை வைத்துக் கொண்டு எப்படியோ, ஏதோ செய்துவிட்டால் வருங்காலத்தை அவன் கவனித்துக் கொள்கிறான் என்போர் சிலர்.

உலகமே ஒரு இயந்திரமாகி விட்டது. நாம் இப்போது என்ன செய்தாலும் நடப்பது நடந்தே தீரும் என்போர் சிலர்.

ஆனால் வருங்காலம் நம்மைப் பொறுத்தே இருக்கிறது. உருவாகும் சரித்திரத்தில் நாமும் ஒரு பிரிவுதான் என்ற கருத்தே செய்கைக்குத் தூண்டு கோலாக இருக்கும். சிந்தனைகளைப் பற்றிய அறிவு இதற்குத் துணை செய்யும்.

சிந்தனைத் திறன் எல்லோருக்கும் உண்டு.

ஒரு அரிஸ்டாட்டிலுக்கோ, பிளேட்டோவுக்கோ, சாக்ரட்டீசுக்கோ, எமர்சனுக்கோ, மார்க்சுக்கோ நேர்ந்த அனுபவங்கள், பல்லாயிரக் கணக்கான மக்களுக்குத் தினமும் தோன்றுகின்றன.

ஆனால், நிதர்சனமான சம்பவங்கள் இசைக்கும் நுண்ணொளி, ஒரு அரிஸ்டாட்டிலுக்கோ, பிளேட்டோவுக்கோ, சாக்ரட்டீசுக்கோ, எமர்சனுக்கோ, மார்க்சுக்கோ தான் கேட்கும்.

அவைதான் சிந்தனைகளுக்குத் தூண்டுகோல். அந்தத் தூண்டுகோல் எட்டாத மக்கள், சிந்தனைகளையேனும் உணர்வது அவசியம்.

வளமான சிந்தனை வேண்டும்.

வளமான சிந்தனையுடன் கட்டுக்கோப்பான முயற்சி இருந்தால் தொடர்ந்து முன்னேறமுடியும். சிந்தனையைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ள ஓர் குட்டிக்கதை அனைவரும் அறிந்ததே;

ஒரு கிராமம், அதில் ஓர் இளைஞன், அவனுக்கு நிறைய உழைக்க வேண்டும் என்று ஆசை.

எனவே அவன் ஓர் முனிவரிடம் சென்று தான் நிறைய உழைக்கத் தேவையான உடல் மற்றும் மன வலிமையை எப்படி வளர்ப்பது என்றும் தனக்கு உதவுமாறும் வேண்டினான்.

உடனே முனிவர் அவனுக்கு ஓர் குட்டி பூதத்தைப் பரிசாகக் கொடுத்து, அவன் காதில் ஓர் இரகசியம் கூறினார்.

அந்த இரகசியம், நீ இந்த பூதத்திற்கு தினமும் வேலைகளைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும், இது அனைத்தையும் தட்டாமல் செய்து கொடுக்கும், ஆனால் நீ வேலைகள் கொடுப்பதை நிறுத்திவிட்டால் இது உன்னை விழுங்கிவிடும் என்று கூறி அனுப்பினார்.

அவனும் தினம் தினம் அந்த பூதத்திற்கு வேலைகளைக் கொடுத்தான். ஆடம்பரமான வீடு, பணம், நகை, விவசாயம் என அனைத்தையும் பூர்த்தி செய்துவிட்டது அந்தக் குட்டி பூதம்.

அவனின் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகிவிட அவன் எந்த வேலையையும் பூதத்திற்குத் தரவில்லை.

முன்பு முனிவர் கூறியதுபோலவே அது அவனை விழுங்க நெருங்கி வந்தது. உடனே அந்த முனிவரிடம் ஓடிச்சென்று காலில் விழுந்து உதவி கேட்டான்.

பின், மறுபடியும் அவர், இளைஞனின் காதில் ஓர் இரகசியம் சொன்னார்.

அதன்படி அவன் பூதத்திடம் ஓர் பெரிய இரும்புத்தூண் ஒன்றை உருவாக்கச் சொன்னான்.

மிக உயரமான அந்தத் தூணை அந்தக் குட்டி பூதம் தினம் தினம் ஏறி இறங்க வேண்டும், அவன் அழைக்கும்போது மட்டும் அது வந்து உதவி செய்ய வேண்டும். மிக அழகான யோசனை

இதன் கருத்து நம் வளமான சிந்தனை என்பது குட்டி பூதம் போன்றது. தினம் தினம் அதற்கு வேலைகளைக் கொடுத்துக் கொண்டே இருத்தல் வேண்டும்.

இல்லையென்றால் அது தவறான பாதையில் சென்று தீய பழக்கங்களுக்கு அடிமையாகி நம்மையே விழுங்கிவிடும். வளமான சிந்தனை என்ற முக்கிய பூதம் நம்முள் எப்போதும் இருக்கிறது. அதைத் தக்க தருணத்தில் நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

**சிந்தனைக் குறித்த பழமொழிகள்.**

1. இரவும் இருளும் சிந்தனைக்குத் தாய்மார்கள்! - டென்மார்க்
2. கையின் வலிமையைவிட சிந்தனையின் வலிமை அதிகம்! - கிரீஸ்

3. ஒருவன் தனக்குத்தானே பேசிக் கொள்வது சிந்தனை! - ஸ்பெயின்
4. நிறைய சிந்தனை செய் குறைவாகப் பேசு. - பிரான்ஸ்
5. ஆரம்பிக்கும் போதே முடிவை சிந்தனை செய்! - பல்கேரியா
6. சிந்தனை என்பது உள்ளத்தின் விளக்கு! - மலாய்
7. தொடக்கத்தில் சிந்திக்காதவன் கொட்டாவி விடுகிறான். - இத்தாலி.
8. இரண்டாம் முறை சிந்தித்துப் பார்ப்பது குற்றமல்ல! - அயர்லாந்து
9. இழிவான சிந்தனைகளை எண்ண வேண்டாம். - சீனா
10. சிந்தித்து அதன்பின் செயல்படு செயலில் இறங்கியபின் சிந்தனை செய்யாதே!

**அரிஸ்டாட்டில் சிந்தனை**

சுமார் இண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய அரிஸ்டாட்டிலின் சிந்தனைகள் உலக வளர்ச்சிக்கு உரமாக விளங்கின.

நவீனச் சிந்தனையாளர்கள் உட்பட அனைவருக்குமே அவர் துருவ நட்சத்திரமாக விளங்கி வருகின்றார். சிந்தனை ஏன் என்பதை பற்றியும் சிந்தித்த மாபெரும் சிந்தனையாளர் அவர்.

உலகங்களின் படைப்பு, இயக்கங்களின் குறிக்கோள் கடவுள், கலை, கவிதை, காதல் , ஜனப்பெருக்கம், சமுதாயம், அரசியல், அணு ஆராய்ச்சி. ஆன்மீக ஆராய்ச்சி, பௌதிகம், தாவரம், உயிரின நூல், தர்க்க சாஸ்திரம்... என்று அரிஸ்டாட்டில் சிந்தனைக்கு உட்படும் பொருள்கள் கணக்கிலடங்கா.

அவற்றுள் சில இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் முன்னும், நாகரீக முன்னேற்றத்தின் முன்னும் சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனால் அவருடைய அவசியமோ தரமோ அதனால் குறைந்து விடாது.

இவருடைய தனிக் கோட்பாடுகளை விடப் பெருமளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது இவருடைய பகுத்தறிவு அணுகு முறையாகும்.

மனித வாழ்க்கையின் மற்றும் சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சமும், சிந்தனைக்கும், பகுப்பாய்வுக்கும் உரிய முதல் பொருளாக அமையும் என்ற கோட்பாடு இந்த அண்டம், முறையற்ற தற்செயல் நிகழ்வுகளினாலோ மந்திர தந்திரத்தினாலோ, மனம் போல நடக்கிற தெய்வங்களின் விருப்பு வெறுப்புகளினாலோ கட்டுப்படுத்தப் படவில்லை.

மாறாக, பகுத்தறிவு சார்ந்த விதிகளுக்கு உட்பட்டு அண்டம் இயங்குகிறது என்னும் கொள்கை;

இயற்கை உலகின் ஒவ்வொரு அம்சம் குறித்தும் மனிதர்களை முறையான ஆராய்ச்சிகள் செய்வது பயனுடையதாக இருக்கும் என்ற நம்பிக்கை;

நமது முடிவுகளைச் செய்வதில் அனுபவ நோக்கறிவினையும், தருக்க முறைப் பகுத்தறிவினையும் பயன்படுத்த வேண்டும் என்பதில் ஆழ்ந்த பற்றுறுதி;

இவை அனைத்தும் அரிஸ்டாட்டிலின் எழுத்துகளில் அழுத்தமாக இழையோடக் காணலாம்.

**வேதாத்திரியின் சிந்தனைகள்**

சிந்திப்பதும் எழுதுவதுமே வாழ்க்கையாகக் கொண்ட வேதாத்திரி மகரிசியின் படைப்புகளைக் கொண்டே சிந்திப்பதால் ஒருவர் அடையும் பயனை நன்கு உணர முடியும்.

இதுமட்டுமன்று. மாதந்தோறும் படைக்கும் தமதுஅன்பொளியில் இடம் பெறும் அன்பு மடலில், அவர் சிந்தனையில் சிறந்த மனவளக் கலைஞர்களே என்று குறிப்பதை வைத்துப் பிறரைச் சிந்திக்கத் தூண்டுபவரும் அவர் எனலாம்.

சமுதாய நலமே விரும்பும், இரவு பகலாகச் சிந்தித்து வருகின்ற உங்கள் சகோதரன் ஒருவன் எடுத்துக் காட்டுகின்றான். நமது சிந்தனையை உயர்முறையில் திருப்புகிறான் என்று எண்ணி உங்கள் ஆராய்ச்சியை உயர்த்திப் பெருநோக்ககத்தில் செயல்புரிய நீங்கள் இன்றுமுதல் முயல வேண்டும் என்று எல்லோரையும் அரவணைத்து வழி நடத்துகின்றார்.

சிந்தனைத் திறன் வளர மூன்று இணைப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்கிறார் வேதாத்திரியார்.

1. திட்டமிட்டுச் செயல்புரிதல் (Planned work)
2. விழிப்பு நிலை (Awareness)
3. தற்சோதனை ( Introspection)

இவற்றில் விளைவைக் கணித்து அதற்கு ஏற்ற அளவிலும் முறையிலும் மனம், மொழி, செயல்களைப் பயனபடுத்தலே திட்டமிட்டுச் செயல்புரிதலாகும்.

தேவை, பழக்கம், சூழ்நிலை இவற்றால் உணர்ச்சிவயப்படாது தன்னையும் தான் அடைய வேண்டிய பயனையும் மறவாத விழிப்பு நிலையிலே செயலாற்றும் திறன்தான் விழிப்பு நிலையாகும்.

ஒவ்வொரு செயல் முடிவிலும் விளைவைக் கணித்து. தான் செய்த முறை, அதில் விளைந்த தவறுகள் அல்லது நன்மைகள் இவற்றைச் சிந்தித்து உணர்வது.

**இன்பத்தும் துன்பத்தும் இயற்கையும் கற்பனையும்**
**சிந்தித்து அறிபவன் சிறப்பாக வாழ்வான்**

என்று சிந்தனையின் சிறப்பினை வேதாத்திரி மகரிசி அழகாக மானுடத்திற்கு எடுத்துரைத்துள்ளார்கள்.

**அரிஸ்டாட்டில்** உன்னதமானவன். வாழ்வின் விபத்துக்களை அழகுடன் பெருமிதத்துடன் ஏற்றுக்கொண்டு, அந்த சூழலில் சிறப்பானதைச் செய்கிறான்.

**வேதாத்திரி மகரிசி** வந்த துன்பம் ஏற்றுச் சகித்து அவற்றைப் போக்க வழிகண்டு, முறையோடு ஆற்றி இன்பம் காத்து எந்தத் துன்பம் வரினும் எதிர்நோக்கி நிற்பாயேல் இன்பமே மிகுதிபடும். துன்பங்கள் தோல்வியுறும்.

**அரிஸ்டாட்டில்** கற்பது என்பது செழுமையின் ஆபரணம், ஏழ்மையின் புகலிடம், முதுமையின் முன்னேற்பாடு.

**வேதாத்திரி மகரிசி** உடலுக்கு உரமளிக்கும் நல்லுணர்வு, உள்ளத்திற்கு உணர்வளிக்கும் கல்வி.

**அரிஸ்டாட்டில்** தன் சகமனிதனை நேசிப்பவனை நாம் புகழ்கிறோம்.

**வேதாத்திரி மகரிசி** அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் கடமையெல்லாம் அன்பின் செயலாகும்.

**அரிஸ்டாட்டில்** அண்டவெளியானது நிலம், நீர், காற்று, நெருப்பு என்னும் நான்கு தனிப்பொருளின் கட்டமைப்பே

**வேதாத்திரி மகரிசி** - பஞ்ச பூதங்கள் எனப்படும் பௌதீகப் பிரிவுகளாகிய பருப்பொருள் நீர்ப் பொருள் வெப்பம். காற்று விண் இவை ஐந்தும் பஞ்ச பூதங்கள்.

சமுதாயம் மேம்பட உலகச் சிந்தனையாளர்கள் காலந்தோறும் வாழ்வின் பட்டறிவையும், சிந்தனைகளையும் அள்ளித் தருகின்றனர்.

சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற பெரியோர்களின் அரிய பெரிய கருத்துக்களை மானுட சமுதாயம் வளம்பெறத் தந்துள்ளனர். அவர்களின் எண்ணங்களை எளிமைப்படுத்தி அவற்றை வாழ்வியல் நெறியாக்கித் தந்துள்ளார் வேதாத்திரி மகரிசி.



# ௬. சர் ஐசக் நியூட்டனும் வேதாத்திரியும்

உலகில் தோன்றிய விஞ்ஞானிகள் அனைவரிலும் தலை சிறந்தவராகவும், செல்வாக்குமிக்கவராகவும் திகழ்ந்தவர் ஐசக் நியூட்டன்.

ஐசக் நியூட்டன் ஆங்கிலக் கணிதவியலாளரும், அறிவியலாளரும், தத்துவஞானியும் ஆவார். அறிவியல், கணிதம், இயந்திரவியல் துறைகளிலும், ஈர்ப்பு விசை பற்றியும் பெரிதும் ஆய்வுகள் மேற்கொண்டவர் நியூட்டன்.

இது நாள் வரை வாழ்ந்த அறிவியலாளர்களுள் மிகவும் செல்வாக்கு உள்ளவர்களுள் ஒருவராகவும், அறிவியல் புரட்சியில் முக்கியமான ஒருவராகவும் இவர் இருந்தார்.

1687ல் ஈர்ப்பு சம்பந்தமான விளக்கங்களை உள்ளடக்கிய, *Philosophiae Naturalis Principia Mathematica* என்னும் நூலை வெளியிட்டார். இவருடைய இயக்க விதிகள் மூலம், (*classical mechanics*) என்னும் துறைக்கு வித்திட்டார்.

கோட்பிறைட் வில்ஹெல்ம் லீப்னிஸ் என்பவருடன் சேர்ந்து, வகையீட்டு நுண்கணிதத் துறையின் உருவாக்கத்தில் பங்கு கொண்டார்.

நியூட்டனின் பிரின்சிப்பியாவிலேயே, பின்வந்த மூன்று நூற்றாண்டுகளில் பௌதீக அண்டம் தொடர்பான அறிவியலாளரின் நோக்கில் ஆதிக்கம் செலுத்திய, இயக்க விதிகள், பொது ஈர்ப்பு ஆகியவை உருவாக்கம் பெற்றன.

இது புவியில் பொருட்களின் இயக்கங்களையும், அண்டவெளியில் உள்ள கோள்கள் முதலிய பொருட்களின் இயக்கங்களையும் ஒரே கோட்பாடுகளின் அடிப்படையில் விவரிக்கலாம் என விளக்கியது.

நியூட்டன் நடைமுறைச் சாத்தியமான முதலாவது தெறிப்புத் தொலைநோக்கியை உருவாக்கியதுடன், முப்பட்டைக் கண்ணாடி வெள்ளொளியைப் பிரித்துப் பல நிற ஒளிகளைக் கொண்ட நிறமாலையாகத் தரும் கவனிப்பை அடிப்படையாகக்கொண்டு நிறக் கோட்பாடு ஒன்றையும் உருவாக்கினார்.

ஒலியின் வேகம் குறித்தும் இவர் ஆய்வுகள் செய்தார். நுண் கணிதத்தில் இவரது ஆய்வுகளுக்குப் புறம்பாக, ஒரு கணிதவியலாளராக, அடுக்குத் தொடர் குறித்த ஆய்வுகளுக்கும் இவர் பங்களிப்புச் செய்துள்ளார்.

**நியூட்டன் வாழ்க்கை வரலாறு (கி.மு. 1643–1727)**

தலைசிறந்த வானநூல் அறிஞராகத் திகழ்ந்த கலிலியோ 1642ல் காலமானார்.

அதே ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று (டிசம்பர்-25) இங்கிலாந்தில் லிங்கன்ஷயர் கவுண்டியில், கோல்ஸ்டர்வேர்த்துக்கு அருகிலுள்ள வூல்ஸ்தோர்ப் என்னும் ஒரு சிற்றூரில் ஒரு சராசரி விவசாய குடும்பத்தில் பிறந்தார்.



**ஐசக் நியூட்டன்**

இவர் பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே இவரது தந்தையார் இறந்துவிட்டார். இரண்டு ஆண்டுகள் கழிய நியூட்டனை அவரது பாட்டியின் கவனிப்பில் விட்டுவிட்டு, தாயாரும் தனது புதிய கணவருடன் வாழச் சென்றுவிட்டார்.

**கல்வி**

நியூட்டன் கிராந்தாம் கிறமர் பாடசாலையில் பயின்றார். ஆரம்பத்தில் அவர் படிப்பில் சரியாக கவனம் செலுத்தவில்லை.

குழந்தைப் பருவத்திலேயே எந்திர நுட்பத்தில் மிகுந்த நாட்டமுடையவராகவும் கைவினைகளில் தேர்ந்தவராகவும் திகழ்ந்தார்.

இவர் திறமை வாய்ந்த மாணவராக விளங்கிய போதிலும், பள்ளியில் அசட்டையாக இருந்தார். இவர் குமரப் பருவத்தை எட்டியபோது, இவருடைய தாய் இவரைப் பள்ளியிலிருந்து நிறுத்தினார். வயல் வேலைக்கு அனுப்பினார்.

இவர் ஒரு வெற்றிகரமான பண்ணைக் குடியானவராக விளங்குவார் என இவருடைய தாய் நம்பினார்.

ஆனால் ஒருமுறை தன்னைக் கேலி செய்த வயதில் தன்னைவிட பெரிய சிறுவனை நையப் புடைத்த பின் தன்னம்பிக்கை அதிகரித்து நன்றாகப் படிக்கத் தொடங்கினார்.

சிறுவயதிலிருந்தே நியூட்டனுக்கு அறிவியலில் ஈடுபாடு இருந்தது, தண்ணீரிலும் வேலை செய்யும் கடிகாரத்தை அவர் சிறுவயதிலேயே உருவாக்கினார்.

நியூட்டன் மாடு மேய்க்கச் செல்லும்போது, மாடுகளை எங்கேயோ போக விட்டு விட்டுப் புத்தகங்களைப் படிப்பார். சிறு சாமான்களை வைத்துக்கொண்டு சோதனைகள் நடத்திப் பார்ப்பார். இதன் மூலம் தனது அறிவை வளர்த்துக் கொண்டார்.

அவருக்குப் பதினான்கு வயதானபோது குடும்ப ஏழ்மையின் காரணமாகப் பள்ளிப் படிப்பைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

நியூட்டனின் கல்வி ஆசையை அறிந்துகொண்ட அவரது மாமன் 1661ல், அவரைப் புகழ்பெற்ற கேம்பிரிஜ், கிறிஸ்துவக் கல்லூரியில் சேர்த்தார்.

அக்காலத்தில் கல்லூரியின் கற்பித்தல், அரிஸ்டாட்டிலைப் பின்பற்றியதாகவே இருந்தது. ஆனால் நியூட்டன், டெஸ்கார்ட்டஸ், கலிலியோ, கோப்பர்னிக்கஸ் மற்றும் கெப்ளர் போன்ற அக்காலத்து நவீன தத்துவ வாதிகளுடைய கருத்துக்களையும் கற்க விரும்பினார்.

அங்கு இவர் அறிவியலையும் கணிதத்தையும் மிக விரைவாகக் கற்றுத் தேர்ந்தார். விரைவிலேயே தமது சுதந்திரமான ஆராய்ச்சி பயிற்சிகளைத் தொடங்கினார்.

தமது 21 ம் வயதிலிருந்து 27 ஆம் வயதிற்குள்ளாக, பிற்காலத்தில் உலகில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்திய அறிவியல் கோட்பாடுகளுக்கு இவர் அடித்தளங்களை அமைத்தார்.

1665ல், ஈருறுப்புத் தேற்றத்தைக் கண்டுபிடித்ததுடன், பிற்காலத்தில் நுண்கணிதம் என வழங்கப்பட்ட, புதிய கணிதக் கோட்பாடொன்றை உருவாக்கத் தொடங்கினார்.

1665ல் இவர் பட்டம் பெற்றதும், பெருங் கொள்ளைநோய் காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டது. அடுத்த இரண்டுவருடங்கள் வீட்டிலிருந்த படியே, நுண்கணிதம், ஒளியியல், ஈர்ப்பு என்பவை பற்றி ஆராய்ந்தார்.

மிகச்சிறப்பாகக் கற்றுத் தேர்ந்து 1665 ஆம் ஆண்டு இளங்கலை பட்டப்படிப்பை முடித்தார் நியூட்டன். அவரது பல்கலைக்கழக நாட்கள் பற்றிய குறிப்புகள் அவ்வளவாக இல்லை. ஆனால் அவர் பட்டம் பெற்ற இரண்டு ஆண்டுகளில் அவரது அறிவியல் மூளை அபரிமிதமாக செயல்படத் தொடங்கியது.

நவீன கணிதத்தின் பல்வேறு கூறுகளை அவர் கண்டுபிடித்தார். Generalized binomial theorem, infinitesimal calculus, போன்ற நவீன கணிதத்தின் பிரிவுகள் அவர் கண்டுபிடித்தவைதான். வளைந்த பொருள்களின் பரப்பையும் கெட்டியான பொருள்களின் கொள்ளளவையும் கண்டுபிடிக்கும் முறைகள் அவர் வகுத்துத் தந்தவையே.

**பணிகள்**

1667 ஆம் ஆண்டு தனது 25-ஆவது வயதில் நியூட்டன் டிரினிடி கல்லூரியில் இயற்பியல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். டிரினிடி கல்லூரியில் அவருக்கு கௌரவப் பொறுப்பு வழங்கப்பட்டது.

அடுத்த சில ஆண்டுகளை அவர் முழுநேரமாக பல்வேறு ஆராய்ச்சிகளில் செலவிட்டார். ஒளியின் தன்மைப் பற்றி ஆழமாக ஆராய்ந்ததோடு தொலைநோக்கிகளை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தினார்.

ஓராண்டில் அவர் ஓர் தொலைநோக்கியையும் உருவாக்கினார். அதன்மூலம் ஜூபிடர் கோளின் நிலவுகளை அவரால் பார்க்க முடிந்தது.

இன்றைய நவீன தொலைநோக்கிகள் நியூட்டனின் அந்த முதல் தொலைநோக்கியின் அடிப்படையில்தான் அமைந்திருக்கின்றன.

1669 ஆம் ஆண்டு டிரினிடி கல்லூரியில் கணக்கியல் பேராசிரியராக நியூட்டன் பொறுப்பேற்றார். அதன்பின் பிரசித்திப் பெற்ற ராயல் சொசைட்டியில் அவர் உறுப்பினராக சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

**கண்டுபிடிப்புகள்**

புவிசார் மற்றும் விண்வெளிசார் இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் இயற்கை விதிகளை முதன்முதலில் விளக்கியவர் இவரேயாவார்.

இவர் அறிவியல் புரட்சியுடனும், சூரியமையக் கோட்பாட்டின் வளர்ச்சியுடனும் தொடர்புபட்டிருந்தார்.

கோள்களின் இயக்கத்துக்கான கெப்ளரின் விதிகள் தொடர்பில் கணிதரீதியான நிறுவல்களை வழங்கியதில் நியூட்டனுக்கும் பங்கு உண்டு.

வால்வெள்ளி போன்ற விண்பொருட்களின் சுற்றுப்பாதைகள் நீள்வட்டமாக மட்டுமின்றி, பரவளைவாகவும், அதிபரவளைவாகவும்கூட இருக்கலாம் எனவும் வாதித்து, மேற்படி விதிகளை விரிவாக்கினார்.

**ஒளியியல் ஆய்வுகள்**

பட்டகம் (Prism) எனப்படும் முக்கோணத்தில் ஒளி விழும்போது ஏற்படும் விளைவுகளை அவர் கண்டறிந்தார். ஒரு பட்டகத்தின் (Prism) ஊடே கதிரவனின் ஒளிக்கதிர் செல்லும்போது அது ஏழு வண்ணங்களாகப் பிரிவதைச் செய்முறையில் விளக்கினார்.

மேலும், பல வண்ணங்களைக் கொண்ட நியூட்டன் தகட்டைச் (Newton’s disc) சுழற்றும்போது அது வெண்மை நிறம் கொண்டதாக மாறுவதையும் செய்து காட்டினார்.

வெண்ணிற ஒளி, பல நிற ஒளிகளின் சேர்க்கையென முதலில் விளக்கியவரும் இவரே. வண்ணங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய அவர் ஒரு கண்ணை மூடிக்கொண்டு மறு கண்ணால் சூரியனை பார்த்துக் கொண்டே இருந்தார்.

திடீரென்று வண்ணங்கள் மாறத்தொடங்கின. ஆனால் நியூட்டனுக்கு அந்த கண்ணில் பாதிப்பு ஏற்பட்டது. அதன் காரணமாக அவர் பல நாட்கள் இருட்டறையில் இருந்து கண்களின் முன் மிதந்த புள்ளிகளை அகற்ற வேண்டியிருந்தது.

ஒளியின் இமிசன் கோட்பாடு நியூட்டன் வகுத்து தந்ததுதான். வெகுதொலைவில் உள்ள ஓர் ஒளிரும் பொருளிலிருந்து வெளியாகும் துகள்கள் பரவெளியில் வினாடிக்கு நூற்றி தொன்னூராயிரம் மைல் வேகத்தில் விரைந்து வருவதுதான் ஒளியாக நமக்குத் தெரிகிறது என்பதுதான் அந்தக்கோட்பாடு.

ஒளி, துணிக்கைகளால் ஆனது என்ற வாதங்களுக்காகவும் இவர் குறிப்பிடத்தக்கவராக இருக்கிறார். பார்க்க: அலை-துணிக்கை

இருமைத்தன்மை இரண்டு துணிக்கைளுக்கிடையிலான ஈர்ப்பு விசையானது அவற்றின் திணிவுகளுக்கு நேர்விகிதசமனெனவும் அவற்றுக்கிடையிலான தூரத்துக்கு நேர்மாறுவிகிதசமனெனவும் கருத்தறிவித்தார்.

**நியூட்டனின் படைப்புகள்**

நியூட்டன் அறிவுச்செல்வத்தை சேர்த்து வைத்திருப்பதை உணர்ந்த அவரது நண்பர் ஹேய்லி அவற்றையெல்லாம் புத்தகமாக வெளியிட நியூட்டனுக்கு ஊக்கமூட்டினார்.

அதன்பலனாக 1687 ஆம் ஆண்டு Mathematical Principles of Natural Philosophy என்ற புத்தகம் வெளியானது. "Principia" என்றும் அழைக்கப்பட்ட அந்த புத்தகம்தான் இதுவரை வெளியிடப்பட்டிருக்கும் அறிவியல் நூல்களிலேயே மிகச்சிறந்ததாகக் கருதப்படுகிறது.

1692ஆம் ஆண்டு முதல் 1694 ஆம் ஆண்டு வரை இரண்டு ஆண்டுகள் நியூட்டன் கடுமையான நோய்வாய்ப்பட்டார். அவருக்கு நரம்பு சம்பந்தமான பிரச்சினையும், தூக்கமின்மை பிரச்சினையும் ஏற்பட்டது.

நியூட்டனுக்கு புத்தி பேதலித்து விட்டதாக வதந்திகள் பரவின. ஆனால் பின்னர் நன்கு குணமடைந்து பல்கலைக்கழகப் பணிகளில் ஈடுபட்டார்.

**நூல்கள்**

- மெத்தேட் ஆஃப் ஃபிளக்சியான்ஸ் (*Method of Fluxions*) (1671)
- ஆப்டிக்ஸ் (*Opticks*) (1704)
- அரித்மெட்டிகா யுனிவர்சலிஸ் (*Arithmetica Universalis*) (1707)

**சிறப்புகள்**

1703 ஆம் ஆண்டில் நியூட்டன் ராயல் சொசைட்டியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அடுத்த 25 ஆண்டுகள் அவர் ஒவ்வொரு ஆண்டுமே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

1705 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ராணி (Queen Anne) கேம்ஃப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்கு வருகை மேற்கொண்டபோது நியூட்டனுக்கு 'சர்' பட்டம் வழங்கி சிறப்பித்தார்.

ஐசக் நியூட்டன் இயற்பியல் துறையில் மிகப்பெரிய சாதனை புரிந்திருந்தபோதும் தம் சாதனையைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

''நான் இவ்வுலகிற்கு எவ்வாறிருப்பினும் என்னைப் பொருத்தமட்டில் நானொரு கடற்கரையில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவன், மென்மையான கூழாங்கல்லையும் அழகிய சங்கையும் கண்டுள்ளேன், ஆனால் விரிந்து பரந்துள்ள பெருங்கடலோ என் கண்முன்னே காணப்படாமல் உள்ளது''.

## இறுதிக்காலம்

இங்கிலாந்தின் மிகச் சிறந்த விஞ்ஞானியாக இன்றும் கருதப்படும் ''சர் ஐசக் நியூட்டன்'' நோய்வாய்ப்பட்டு 1727 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் தேதி இயற்கை எய்தினார்.

அவர், புகழ் சான்ற பிரிட்டிஷ் பெருமக்கள் அடக்கம் செய்யப்படும் இடமான வெஸ்ட் மினிஸ்டர் அபேயில் அடக்கம் செய்யப்பட்டார். ஒரு சாதாரணக் குடிமகனுக்கு முதலில் அளிக்கப்பட்ட பெருமை இதுவாகும்

லண்டனில் புகழ்பெற்ற "Westminster Abbey யில் அடக்கம் செய்யப்பட்டார். மனித குலத்தின் மிகச் சிறந்த விலை மதிப்பில்லா மாணிக்கம் (The Best and Invaluable Gem of Mankind) என்று அவர் கல்லறையில் பொறிக்கப்பட்டது.

நியூட்டனுக்கு பலர் அஞ்சலி செலுத்தினாலும் போப் எழுதிய அஞ்சலி மிக ஆழமானது. இந்த வாசகம் நியூட்டன் பிறந்த அறையில் இன்றும் பொறிக்கப்பட்டிருக்கிறது!

''இயற்கையும் அதன் விதிகளும் இருளில் கிடந்தன, கடவுள்... நியூட்டன் பிறக்கட்டும் என்றார் ஒளி பிறந்தது''.

## நியூட்டனும் வேதாத்திரியும்.

ஞாலத்திலிருந்து மூலத்தைத் தேடும் விஞ்ஞானிகளும், மூலத்திலிருந்து ஞாலத்தைத் தொடும் மெய்ஞ்ஞானிகளும் ஒன்றே ஒன்றைத் தான் கிராவிட்டி என்றும் கடவுள் என்றும் சொல்லுகிறார்கள்.

இரண்டும் உருவமற்றவை. காண முடியாதது. யூகிக்கலாம். உணரலாம்.

ஒருபொருள் இன்னொரு பொருளை ஈர்க்கிறது என்கிறார் நியூட்டன். ஆனால் பொருள்கள் ஈர்ப்பதில்லை என்று கூறி, அவைகளை நெருக்குவது வெளி என்றார் வேதாத்திரி மகரிசி.

வெளி, பொருள்களை ஒன்றோடொன்று நெருங்குமாறு இறுக்குகிறது. ஆனால், இரு பொருள்களுக்கு இடையே எழும் காந்த அலைகள் அப்பொருள்களை விலக்குகிறது. வெளியின் இறுக்க விசையே நியூட்டன் சொன்ன கிராவிட்டி.

நியூட்டன் தந்த கிராவிட்டியைப் புரட்டிப்போட்டு உண்மையில் கிராவிட்டி என்ன என்பதையும், அதுவேதான் கடவுள் என்ற கருத்தையும் விஞ்ஞான அணுகு முறையோடு உலகில் உள்ள அனைத்து அறிஞர்கள் முன் வைக்கிறார் வேதாத்திரியார்..

**ஈர்ப்பு விதி கண்டுபிடிப்பு**

நியூட்டன் ஆப்பிள் மரமொன்றின் கீழ் இருந்தபோது, ஆப்பிள் பழமொன்று அவர் தலையில் விழுந்ததாகவும், இது அவர் சிந்தனையைக் கிளறி, புவிசார்ந்த, விண்வெளி சார்ந்த ஈர்ப்புபற்றிய எண்ணக்கரு உதித்ததாகவும் கதை நிலவுகிறது..

1667ல், தனது கண்டுபிடிப்புக்கள் குறித்த முடிவிலித் தொடர்கள் மூலமான பகுப்பாய்வு பற்றி (*De Analysi per Aequationes Numeri Terminorum Infinitas*) என்ற நூலினையும் பின்னர் தொடர்களினதும், பிளக்ஸியன் களினதும் வழிமுறைகள் பற்றி (*De methodis serierum et fluxionum* ) என்ற நூலினையும் வெளியிட்டார்.

நியூட்டனும், லீப்னிசும் நுண்கணிதக் கோட்பாடுகளைத் தனித்தனியே உருவாக்கியதுடன், வெவ்வேறு குறியீடுகளையும் பயன்படுத்தினார்கள்.

நியூட்டன் அவருடைய வழிமுறைகளை லீப்னிசுக்கு முன்னரே உருவாக்கியிருந்தும், பின்னவருடைய குறியீடுகளும்,வகையீட்டு வழிமுறையும், மேம்பட்டதாகக் கருதப்பட்டுப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நியூட்டன், அவர் காலத்தைச் சேர்ந்த மிகத் திறமையான அறிவியலாளருள் ஒருவராக இருந்தும், அவருடைய கடைசி 25 வருடங்கள், லீப்னிசுடனான பிரச்சினைகளால் பாழாக்கப்பட்டது.

லீப்னிஸ் தன்னுடைய கண்டுபிடிப்புக்களைத் திருடியதாக அவர் குற்றஞ்சாட்டி வந்தார். நியூட்டனுக்கு தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் தான் தூண்களாக இருந்தன. அவருடைய கோட்பாடுகள் வன்மையாக எதிர்க்கப்பட்ட போதெல்லாம் அவர் மனம் தளர்ந்து விடவில்லை. தன்னம்பிக்கையோடு தனது ஆராய்ச்சிகளை தொய்வின்றி தொடர்ந்தார்.

1669ல், கணிதத்துக்கான லூக்காசியன் பேராசிரியராகத் தேர்வு செய்யப்பட்டார். இவருடைய இந்தப்பதவி இவர், கல்லூரியின் ஆய்வாளராக (Fellow) நீடிப்பதற்குத் தேவாலயத்துக்குச் செல்ல வேண்டுமென்ற விதியிலிருந்து விலக்குப் பெற்றதுடன், அவருடைய எதிர்-திரித்துவவாதக் கருத்துக்கள் காரணமாக மரபுவாதத் தேவாலயத்துடன் ஏற்படவிருந்த முரண்பாடுகளையும் தவிர்த்துக் கொண்டார்.

**விசை பற்றிய நியூட்டனின் கோட்பாடுகள்**

- ★ எல்லாப் பொருள்களும் ஒன்றையொன்று ஈர்க்கும் தன்மையுடையன; அந்த ஈர்ப்பு விசை இரு பொருள்களுடைய நிறைகளின் பெருக்கலுக்கு நேர் விகிதத்திலும், அவ்விரு பொருள்களின் இடையே உள்ள தூரத்தின் வர்க்கத்திற்கு எதிர் விகிதத்திலும் இருக்கும்.
- ★ ஒவ்வொரு வினைக்கும், அதற்கு எதிர்த் திசையிலிருந்து சமமான எதிர் வினை நிகழும்.
- ★ ஒரு நிலையான பொருளை நகர்த்துவதற்கு, புற விசை இன்றியமையாதது.

**பிரபஞ்ச ஒருங்கிணைப்பு ஆற்றல்–கிராவிட்டி**

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஒன்று, கருத்து அனுமானங்களாகவோ மற்றொன்று, பரிசோதனைக் கூடத்தில் நிரூபிக்கப்பட்டதாகவோ இருக்கும்.

கெப்லர் தந்த பரிசோதனைகளை வைத்து நியூட்டனின் கிராவிட்டி அனுமானங்கள் அமைந்தன. அது பிரபஞ்சத்தை நான்காகத் தொட்டது. அவை பொருள், சக்தி, வெளி. காலம்.

ஐன்ஸ்டைன் அந்த நான்கை இரண்டாக்கினார். பொருளும் சக்தியும் வேறு வேறு அல்ல ஒன்று தான். அது போல வெளியும் காலமும் வேறு அல்ல. ஒன்று தான்.

வேதாத்திரி மகரிசி மேலும் ஒரு படி கடந்து எல்லாமே ஒன்று தான். அதுதான் கிராவிட்டி. கடவுள் என்கிறார்.

இதற்கு வேதாத்திரி இரண்டு கோட்பாடுகளை நம் முன் வைக்கிறார்.

1. சுத்தவெளி பிரபஞ்சத்துக்கு மூலமாகவும். அதன் உள்ளேயும் வெளியேயும் இருப்பாகவும் இருப்பது. அது எல்லையற்ற தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலையும், இயக்க அறிவையும் உள்ளடக்கியது.

2. சுத்தும் வெளி - சுத்தவெளி தன்னைத் தானே இறுக்கியும் அழுத்தியும் சின்னச்சின்ன மிக நுண்ணிய சுழலும் துகள்களை உருவாக்குகின்றது.

இதுவே பிரபஞ்சத்தின் முதல் பொருள்.

கோடிக்கணக்கான இந்த நுண்ணிய சுழல் துகள்களின் வேக வேறுபாட்டிற்கேற்ப அவைகள் இணையவும் பிரியவும் ஆரம்பித்தன. இணைந்தவை மூலங்கள் ஆயின. இணைந்தவற்றிலிருந்து பிரிந்தவை காந்த அலைகளாயின.

**பிரபஞ்ச ஒருங்கிணைப்பு ஆற்றல் = கிராவிட்டி**

பிரபஞ்சம் என்னும் பொருள் = (சுத்தவெளி+ சுழலும் துகள்கள்)

= (இறுக்கும் ஆற்றல் + விலக்கும் ஆற்றல்)

இரு எதிர்மறை ஆற்றல்களின் விளைவே பொருள்.

இதன் விஞ்ஞான விளக்கங்களை இப்பொழுது கவனிப்போம்.

மாஸ்=பொருள்; கிராவிட்டி= இறுக்க விசை

நியூட்டனின் கிராவிட்டி பார்முலா கீழே தரப்பட்டுள்ளது.

The law of Gravitation $F = GMm/r^2$.....Eq.(1)

நாம் சூரியனையும் பூமியையும் உதாரணமாக எடுத்துக்கொள்வோம்.

F = கிராவிட்டி இறுக்க விசை

G = கிராவிட்டேஷனல் கான்ஸ்டன்ட்

M = சூரியனின் மாஸ்

m = பூமியின் மாஸ்

r = அவைகளுக்கு இடையே உள்ள தூரம்

சூரியன் ஒரு கோளம். அதைச் சுற்றி தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றல். $C_5$ per unit area, அழுத்திக் கொண்டிருக்கிறது. சூரியன் சுழல்வதால், கொண்டிருக்கிறது. சூரியனின் ஆரம் R என்றால் அதன் பரப்பளவு $4\pi R^2$

ஆதலால் மொத்தம் இறுக்கும் ஆற்றல் = $4\pi R^2 C_5$

அது போல மொத்த விலக்கும் ஆற்றல் = $4\pi R^2 R_5$

ஆக நிகர இறுக்கும் ஆற்றல் = $4\pi R^2 (C_5 - R_5)$

சூரியனின் மாஸ் என்பது நிகர இறுக்கும் ஆற்றலுக்கு நேர்விகிதத்தில் அமைகிறது.

Mass of the sum $\propto$ $4\pi R^2 (C_5 - R_5)$

ஆகையால் சூரியனின் மாஸ்

Mass of the sum $M = 4\ p\ R_2\ (C_5 - R_5)$ or....................................Eq.(2)

$(C_5 - R_5) = M/\beta\, 4\pi R^2$........................................................................Eq.(3)


Where $\beta$ = Universal Constant

இப்பொழுது நாம் வேதாத்திரியின் கிராவிட்டி ஈகுவேஷனுக்கு செல்வோம். ஒரு யுனிட் ஏரியா உள்ள ஒரு மிகச்சிறிய சோதனைத் துகள் (p),r என்ற தூரத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம்.


(அதன்மீது செயல்படும் இறுக்கும் ஆற்றல்)

(அதன்மீது செயல்படும் நிகர இறுக்க ஆற்றல்)


Comrpressive Pressure at a
Distance 'r' on a unit mass (p) of unit area




Repulsive Pressure at a Distance 'r'
on a unit mass (p) of unit area



Repulsive pressure equals $K^*r$




படத்தில் காட்டியுள்ள படி r நீளமுள்ள சிலிண்டரிலுள்ள ஒவ்வொரு துகளும் தனது சுழற்சியினால் மற்றொரு துகளைத் தள்ளுவதனால், சோதனைத் துகள் (p) தள்ளுவிசைக்கு உட்படுகிறது. சிலிண்டரில் உள்ள துகள்களினால் (p) மீது ஏற்படும் தள்ளுவிசை = $K^*r$ ($K^*$ ஒரு நம்பர்)

ஈகுவேஷன் (4) நான்கிலிருந்து, வரும் நிகர இறுக்கும் ஆற்றல்

$F= (C_5-R_5)\, R_2/R_2 - K^*r$......................................................................(Eq.5)

(ஈகுவேஷன் (3) மூன்றிலிருந்து என்பதை ஈகுவேஷன் (5) ஐந்துக்கு மாற்றினால்,

$F= (1/4\pi\beta).M./r^2 - K^*r$....................................................(Eq.6)

$K^*r$மிகமிகக் குறைவாகயிருக்கும்போது $F=Gm/r^2$

(Eq.6) தான் புதிய கிராவிட்டி விதி. இதுதான் வேதாத்திரியின் கிராவிட்டி விதி.

வேதாத்திரி மகரிசி அவர்கள் நியூட்டன் தந்த கிராவிட்டியைப் புரட்டிப் போட்டு உண்மையில் கிராவிட்டி என்ன என்பதையும், அதுவேதான் கடவுள் என்ற கருத்தையும் விஞ்ஞான அணுகு முறையோடு விளக்கியுள்ளார்.

ஈர்ப்பு எனும் சக்தி எழுமிடம் அணுவாகும்.

இயங்குமிடம், அண்ட, பிண்ட, சராசரம். (மா..வி.ம.)

வருகிற நூற்றாண்டின் விஞ்ஞானம், மூலம் ஒன்றே என்ற வேதாத்திரியின் சுத்தவெளித் தத்துவத்தின மேல் அமையும். அப்படி அமையும்போது, அது நியூட்டன் மற்றும் ஐன்ஸ்டைன் சித்தாந்தங்களை விரித்து ஒரு முழுமையான தத்துவமாக, கிழக்குத் தந்த தத்துவமாக, வேதாத்திரிய விஞ்ஞானமாகப் பல தனித்தன்மைகளோடு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## செயலும் விளைவும்

நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் தக்க விளைவு உண்டு அதையே நியூட்டன் "For Every action, there is equal and opposite reaction" என்று கூறியுள்ளார்.

பரம்பொருளுக்கு மட்டுமே பொருந்துகிற நியூட்டனின் விஞ்ஞானக் கோட்பாட்டையும் தாண்டி வேதாத்திரி மகரிசி அவர்கள் மெய்ஞ்ஞானத்தின் துணைக் கொண்டு நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு என்பதையும், விளைவாக வருவது யார் என்பதையும் செயல் விளைவுத் தத்துவம் மூலம் விளக்கி உள்ளார்கள்.

நாம் ஒரு இயந்திரத்தை இயக்கும் போது அந்த இயந்திரம் ஒரு விளைவைத் தரும்படி அந்த இயந்திரத்தை வடிவமைத்தவர் செய்துள்ளார்.

அந்த இயந்திரத்தை வடிவமைத்தவரின் அறிவே அந்த இயந்திரத்தை இயக்கும் போது ஏற்படும் விளைவிற்குக் காரணமாக இருக்கிறது.

அதே போல பிரபஞ்சத்தில் உள்ள எல்லா அமைப்புகளையும் இயக்கிக் கொண்டிருப்பது எல்லையற்ற இறையறிவாகும். அந்த இறையறிவு எந்த இடத்திலும், எந்த உருவத்திலும் அதற்கேற்ற இயக்கச் சீர்மையோடு துல்லியமாகச் செயலாற்றி வருகிறது.

தோற்றப் பொருட்களில் இவ்வாற்றல் வடிவம், துல்லியம், இயக்க ஒழுங்கு எனும் மூன்றிணைப்புச் சீர்மையாக இயங்குகிறது. அதுவே தனது பரிமாணச் சிறப்பில் மனிதனிடம் மன ஆற்றலாகவும் செயல் புரிகின்றது.

மன ஆற்றலே எந்தப் பொருளோடு தொடர்பு கொள்கிறதோ அதற்கேற்ப விரிந்தும், சுருங்கியும் எல்லை கட்டிக் கொண்டும் இயங்குகிறது.

மனித மனமோ. காலம், தூரம், பருமன், வேகம் என்கிற கணக்கில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது.

எப்பொருளை நினைத்தாலும் அதைப் போலவே வடிவத்தாலும், குணத்தாலும் தன்மாற்றம் பெறவல்லது மனம்.

அந்த மன ஆற்றல் இறையாற்றலின் ஒரு சிறு பகுதியே.. இருப்பினும் அதற்குத் தனிமதிப்பும், சிறப்பும் உண்டு.

இறையாற்றலின் பரிணாமம், இயல்பூக்கம், கூர்தலறம் எனும் மூன்று சிறப்புகளையும் மனித மனம் இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்னும் நான்கு நிலைகளால் உணர்ந்து இரசிக்க வல்லது என்கிறார் வேதாத்திரி.

நாம் என்ன தவறு செய்தாலும், நல்லது செய்தாலும் அப்படியே சுருக்கி வைத்திருந்து காலத்தே நமக்குத் திருப்பிக் கொடுப்பது தான் இறையறிவின் செயல்.

நம் முன்னோர்கள் அதையே முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்றார்கள்.

வாழும் காலத்தில் என்ன செயல் செய்கிறோமோ அதற்குத் தகுந்தவாறு விளைவு உடனோ. பின்னோ வருகிறது. அது அந்தந்த செயலின் தன்மையொட்டியும் சூழ்நிலையையொட்டியும் ஏற்படும். இதனை வேதாத்திரியார்

**விளைவு இலா வினையில்லை, வினையினூடே**
**விளைவு பல தொக்கி நிற்கும் இயற்கை நீதி**
**விளைவுக்கும் வினைக்குமிடை கால நீளம்**
**விளைவு தரம் இவ்வினையின் தன்மை ஒக்கும்** (ஞா.க.)

என்கிறார்.

வினை விளைவாகும் காலத்தைக் கணிக்க இயலாது. செயலாற்றுபவரின் நோக்கம், இடம், காலம், தொடர்பு கொள்ளும் பொருளுக்கு ஏற்ப இன்ப, துன்ப, அமைதி, பேரின்ப உணர்வுகளாக வருகின்றன.

செயலிலே விளைவாகத் தெய்வ ஒழுங்கமைப்பிருக்க பயனென்ன, தவறிழைத்துப் பரமனைப் பின் வேண்டுவதால்? என்கிறார் வேதாத்திரி மகரிசி.

செயலிலே ஒழுக்கம் பெற்று நற்செயல்களைச் செய்தால் கருமையக் களங்கம் தேயும் என்கிறார்.

நமக்கு செயலில் திருத்தம் வர வேதாத்திரி மகரிசி அவர்கள் இரண்டொழுக்கப் பண்பாட்டினைக் கொடுத்துள்ளார். அது

**''நான் யாருடைய உடலுக்கும், மனதிற்கும் துன்பம் தரமாட்டேன்**

**துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்''**

இப்பண்பாட்டினைக் கடைப்பிடித்து நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைப்போமாக.



# 7. வேதாத்திரியத்தில் வால்டேர் சிந்தனைகள்

பிரெஞ்சு மறுமலர்ச்சி இயக்கத்தின் போது முன்னணித் தலைவராக விளங்கியவர் வால்டேர் ஆவார். இவரது இயற்பெயர் பிரான்ஸ்வா மேரி ஆரூவட் என்பதாகும். ஆனால் இவரது புனைபெயரான வால்டேர் என்ற பெயரிலே உலகம் நன்கறியும்.

வால்டேர் ஒரு கவிஞர். நாடகாசிரியர், கட்டுரையாளர், நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், வரலாற்றாசிரியர். தத்துவஞானி, சுதந்திரமான முற்போக்குச் சிந்தனை இயக்கத்தின் திருத்தூதராக அவர் திகழ்ந்தார்.

**வால்டேர் வாழ்க்கை வரலாறு** (1964–1778)

வால்டேர் 1694 இல் பாரிஸ் நகரில் பிறந்தார். அவரது தந்தை சராசரியான சட்ட வல்லுநர். வெகு நோஞ்சான் குழந்தையாக இவரைப் பெற்ற தாய் அவரைக் கவனித்துக் கொள்ள வாய்ப்பு இன்றி ஏழு ஆண்டுகளிலேயே உயிர் நீத்தார்.

ஆதலினால் நோயாளியாகவே வளர்ந்தார்; வாழ்ந்தார்.

உடல் பலவீனம் மன எழுச்சிக்குத் தடையாக இல்லை.

இளம் வயதிலேயே சமூகத்தின் அவலங்களைக் கண்டு மனம் பதறி சீற்றம் கொண்டு எழுதத் தொடங்கினார். அவரது அனல் பறக்கும் எழுத்துகளைப் படித்த பிரெஞ்சு இளைஞர்கள்ஆவேசம் கொண்டு எழுந்தனர்.

ஆட்சி பீடம் ஆத்திரம் கொண்டு அவரை பாஸ்டில் சிறைச் சாலையில் அடைத்தது. அந்த இருண்ட சிறைச்சாலைக்குள்ளே யிருந்து பிரெஞ்சுப் புரட்சியின் தீச்சுடர்கள் எழுத்துகளாக வெளிவந்தன.

அப்போது வால்டேர் என்ற பெயரிலேயே எழுதினார். அந்தப் பெயரே வரலாற்றில் நிலைத்து விட்டது. பிறகு ஆட்சியாளர்களிடையே அச்சம் தோன்றி வால்டேரை நாடு கடத்தி விட்டார்கள்.

அங்கிருந்து கொண்டே நாட்டையும், சமுதாயத்தையும், அரசியலையும் தம் எழுத்துகளால் சீர்திருத்தினார்.

அவர் சொன்னார் இந்தியர்கள் எல்லாம் அதிசாதுவான மனிதர்களாக இருந்து வருகின்றார்கள். அவர்களுடைய மதமும் சீதோஷ்ண நிலையும் அவர்களை அமைதியுள்ள சாதுப்பிராணிகளாக வளர்த்திருக்கின்றன.

நம்முடைய ஆட்டுத் தொழுவங்களிலும் புறாக்கூடுகளிலும் வெட்டியழிப்பதற்காகப் பிராணிகளை வளர்க்கிறோமே அதுபோலவே தான் இந்தியர்கள் உள்ளார்கள் என்றும் அங்கே அந்தணர்கள் வெகு காலமாக மன்னர்களாக இருந்து வந்திருக்கின்றனர், தெய்வீக ஆதிக்கம் அந்தப் பரந்த தேசத்தில் நிலையூன்றியது போல இந்த உலகில் வேறு எந்த தேசத்திலும் இல்லை என்று நம் நாட்டைப் பற்றி கூறியுள்ளார்.

**மனிதனின் சிந்தனைச் சுதந்திரத்திற்காகவும், மனித உரிமை களுக்காகவும் போராடிய அப்பெருமகன் தமது 83ஆம் வயதில் 30.05.1778 அன்று என் எதிரிகள்மீது எவ்வித வெறுப்புகளின்றி மூட நம்பிக்கைகளை எதிர்த்துக் கொண்டே சாகிறேன் - வால்டேர் என்று எழுதி கையொப்பமிட்டு விட்டு முடிவெய்தினார்.**

நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் மறுக்கிறேன்; ஆனால் அதைச் சொல்ல உனக்குள்ள உரிமைக்காகச் சாகும் வரை போராடுவேன் என்று சொன்ன உரிமை வேட்கையின் சின்னம் மாமனிதர் வால்டேர்.

அவர் இறந்து விட்டார். அவர் எண்ணப் படியே பாரிசுக்கு 100 மைல் தூரத்தில் உள்ள சீன நதிக்கரை இடமான ரோமிலியில் அவர் அடக்கம் செய்யப் பட்டார். அவரது இறப்புச் செய்திகூடப் பல நாள்களுக்குப் பத்திரிகைகளுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

அவர் அடக்கம் செய்யப்பட்ட மறுநாள் தேவாலயத்திலிருந்து தாக்கீது வந்தது. இறந்தோரைப் புதைக்கும் புனித பூமியில் அவர் புதைக்கப்படக் கூடாது என்று. இது வருவதற்கு முதல் நாளே அவர் புதைக்கப்பட்டு விட்டார்.

கிறித்துவ மத உலகம் எவ்வளவு கோபம் கொண்டிருந்தது அவர்மீது என்பதை இச்சம்பவம் சுட்டிக் காட்டும். அவர் மத நிந்தகர், இவர்கள் கூறும் கடவுளை ஏற்காதவர், மூடநம்பிக்கைகளைச் சுட்டெரித்தவர், பகுத்தறிவாளர். இவை போதாதா மதவாதிகளுக்கு?

13 ஆண்டுகளுக்குப்பிறகு, பிரான்சின் தேசிய சட்டமன்றத்தின் ஆணைப்படி அவரது கல்லறை திறக்கப்பட்டு, எலும்புகள் எடுத்து வரப்பட்டு பாரிசில் மீண்டும் புதைக்கப் பட்டன.

1791 ஜூலை 6-ஆம் தேதி நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியில் வால்டேரின் நினைவுக்கு என எழுதப்பட்டு அவரது எலும்புகள் எடுத்து வரப்பட்டன.

வந்த வழியெல்லாம் மக்கள் வெள்ளம். விழாவில் கலந்து கொள்வது போல் ஆடை அணிந்து உற்சாக வரவேற்பு அளித்தார்கள்.

ஜூலை 19-இல் பாரிசுக்கு வண்டி வந்தது. அவரது எலும்புகள் அடங்கிய பெட்டி எடுத்து வரப்பட்டு பாஸ்டில் சிறையின் உயர் கோபுரத்தில் வைக்கப்பட்டது.

இந்த இடத்தில்தான் சர்வாதிகாரம் உங்களைச் சங்கிலியால் பிணைத்தது. இன்று அதே இடத்தில் மக்கள் உங்களுக்கு வீர வணக்கம் செலுத்துகிறார்கள் என்ற வரிகள் பொறிக்கப் பட்டிருந்தன.

மறுநாள் பாரிஸ் நகரெங்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நாடகக் கொட்டகைக்குக் கொண்டு வரப்பட்டது. அங்கே பிரெஞ்சுப் புரட்சி கீதமான விழித்தெழுங்கள் மக்களே! உங்களைப் பிணைத்திருக்கும் சங்கிலிகளை உடைத்தெறியுங்கள் என்ற பாடல் இசைக்கப்பட்டு புரட்சியின் கர்த்தாவுக்கு வீர வணக்கம் செலுத்தப் பட்டது.

அங்கிருந்து வண்டி புறப்பட்டது. இரு பக்கத்திலும் இருந்த எல்லா கட்டடங்களின் சாளரங்களும் திறந்திருந்தன. அதன்வழியே மக்கள் திரள் ஊர்வலத்தைப் பார்த்தனர், ஒரே ஒரு சாளரத்தைத் தவிர.

அந்தச் சாளரத்தின் பின்னால் அமர்ந்திருந்தது - மேரி அன்டாய்னட் - ரொட்டி கிடைக்கவில்லையா? அப்படியானால் கேக் சாப்பிடுங்களேன் என்று பாரிஸ் நகரத்துப் பசித்த மக்களைப் பரிகாசம் செய்த லூயி மன்னனின் பத்தினி! கில்லட்டின் கத்தியின் கீழே தன் கழுத்தை வைக்கும் நாளுக்காகக் காத்திருந்தவள்.

இரவு பத்து மணிக்கு இலேசான மழை. தோண்டப்பட்டிருந்த குழியில் வால்டேரின் எலும்புகள் கொண்ட பெட்டி இறக்கப்பட்டு மண் மூடப் பட்டது. இந்தக் குழிக்குப் பக்கத்திலேதான் நான் சிந்திக்கிறேன், அதனால் தான் இருக்கிறேன் என்கிற புகழ்மிக்கச் சொற்களுக்குச் சொந்தக்காரரான தெகார்தே புதைக்கப்பட்டிருந்தார்.

நிரந்தரமான நினைவுச் சின்னத்தை பிரெஞ்ச் அரசு வால்டேருக்கு நிறுவியது. பாரிசை விட்டுப் போய் ஏறத்தாழ 30 ஆண்டுகள் அவர் வாழ்ந்த பெர்னி நகருக்கு பெர்னி வால்டேர் எனப் பெயர் சூட்டியது.

(அந்த ஊரில்தான் சுதந்திரத் தொழிற் சங்கமான (கம்யூனிஸ்ட் பிடிப்பில்லாத) பன்னாட்டு அரசு அலுவலர் கூட்டமைப்பு (Public Services Int ernational) இயங்கி வருகிறது.

### வால்ட்டேரும் வேதாத்திரியும்



**வால்டேர்**

ஒரு நாடு சிந்திக்கத் தொடங்கி விட்டால் அந்த நாட்டை எந்தச் சக்தியாலும் நிறுத்தி வைக்க முடியாது என்றார் பிரெஞ்சு நாட்டுத் தத்துவ அறிஞரான வால்டேர்.

ஆலயத்தின் நிழலில் அநீதிமன்றம் நடத்தாதே! மூடக்கொள்கைகளை நம்பாதே! என்று முழக்கமிட்டார்.

மனிதன் என்பவன் சுதந்திரமாகப் படைக்கப்பட்டவன். அவன் தன்னைத் தானே ஆள வேண்டும். மனிதர்களுக்கு மேலே கொடுங்கோலர்கள் இருந்தால் அவர்களை ஆட்சி பீடத்திலிருந்து தூக்கியெறிய வேண்டும்! என்று சொல்லி பொதுமக்களே விழித்தெழுங்கள்! கைவிலங்குகளை உடைத்தெறியுங்கள்! என்ற அறைகூவல் பிரெஞ்சு மக்களின் நெஞ்சங்களிலே அனலை மூட்டியது!

அவர் வழங்கிய மூன்று மூல முழக்கங்களான சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டது. உலக வரலாற்றில் பெரும் மாற்றத்தையே நிலைப்படுத்தியது..

வால்டேர் எழுதிக் குவித்த நூல்கள் கணக்கற்றவை. அவர் எழுதிய நூல்களின் பட்டியலைவிட, அவர் தம் வாழ்நாளில் பரப்புவதற்குப் பாடுபட்ட அடிப்படைக் கொள்கைகளே முக்கியமானவை.

அவர் மிகத் தீவிரமாக வலியுறுத்திய கொள்கைகள் பேச்சுரிமையும் பத்திரிகைச் சுதந்திரமும் ஆகும்.

நீ சொல்வதை நான் ஏற்கவில்லை. ஆனால், அதைச் சொல்வதற்கு உனக்குள்ள உரிமையை சாகும் வரை நான் பாதுகாப்பேன் என்றகூறிய மேற்கோள் காட்டப்படும் ஒரு கூற்று.

கொடுங்கோல் ஆட்சியை மாற்ற வேண்டும் என்பதில் வேதாத்திரி மகரிசியும் வால்ட்டருடன் ஒன்றுபடுகிறார்.

**பணமுடையோர் ஆட்சியதிகாரம் என்ற**
**பதியுளார் குழுவினராயும் தனித்தும்**
**உணவு உடை வீடெனும்முப்பொருளைத் தோற்றும்**
**உழைப்பாளர்தமை அடிமை கொண்டு தங்கள்**
**குணத்திற்கும் விருப்புக்கும் ஏற்றவாறு**
**கொடுங்கோலாய் அரசியலை மாற்றும் போக்கை**
**உணர்த்தி சமுதாய நலம் அன்பின் போக்கில்**
**உயர்வதற்கு உழைப்பதுவே அறிந்தோர் செய்கை**

(ஞா.க.)

வேதாத்திரி மகரிசி அவர்கள் கூறும் நீதி முறை வால்டேரையே ஏன் மானுடத்தையே சிந்திக்க வைப்பதாக உள்ளது.

இவ்வுலகில் அனைத்து ஜீவராசிகளும் இயற்கை நியதியை ஒட்டி வாழ்ந்து வருகின்றன. ஆனால் மனிதன் தன் எண்ணம், செயல்களால் இயற்கைக்கு முரணான பல சிக்கல்களையும் துன்பங்களையும் ஏற்படுத்துகிறான்.

மனித வாழ்க்கை என்பது அனைத்து நிலையிலும் நாகரிகம் நிறைந்ததாக இருக்க வேண்டும். நாகரிகம் என்பது சிந்தனை, சொல், செயல் அனைத்தும் முரண்படாமையால் ஒன்றுபட்டு இயைந்து இயங்க வேண்டும் என்பதாகும்.

இது முரண்பட்டு இயங்கினால் அவன் இயற்கைக்கு விரோதி. சமுதாயத் துரோகி. தன்னுடைய வாழ்க்கையின் நலன்களையே அழித்துக் கொள்கிறான். அதனால் நாகரிகத்தோடு மனிதன் வாழ வேண்டும் என்று வேதாத்திரியார் கூறுகிறார்.

இதனடிப்படையில் வகுக்கப்பட்டதுதான் அனைத்து நாடுகளிலும் உள்ள அரசியல் சட்டங்கள். ஒரு குற்றவாளியைப் போதிய சாட்சி இல்லாததாலேயோ, வேறு சில பொருத்தமான காரணங்களினாலேயோ தண்டிக்காமல் விட்டுவிடலாம்.

ஆனால் எந்தக் காரணத்தினாலும் குற்றம் செய்யாதவரைத் தண்டிப்பது கூடாது. அது நீதிக்கு விரோதம். மக்களின் குல வாழ்வுக்கே துரோகம். இந்த நியதியை உணர்ந்து இது பற்றித் தெளிவுள்ள மக்கள் தான் நீதிகளை வகுக்க வேண்டும்.

இக்காலத்தில் சட்டத்தை உருவாக்குபவர்கள், நாடாளுமன்றம், பாராளுமன்றம் என்ற இரு சட்டமன்றங்களிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள்தான்.

ஒரு குமாஸ்தா வேலைக்குக்கூட சில தகுதிகளை எல்லா நாடுகளிலும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் மனிதகுலத்தை பாதுகாக்கச் சீரமைக்க அவ்வப்போது புதிய திட்டங்களை வகுக்கும் நாடாளுமன்றம், பாராளுமன்றம் இவற்றில் பொறுப்பேற்பவர்கள் இத்தகைய கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ளார்களா?

சட்டம் வகுப்பவர்களுக்கும், அதை நிர்வாகம் செய்பவர்களுக்கும் ஒழுக்கப் பண்பாடு என்பது அவசியம். ஆட்சிப் பொறுப்பேற்க வரும் முக்கியமான பணியாளர்கள்

- ✯ நான் யாரிடமும் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, மற்றவர்கள் மூலமாகவோ, எந்த இடத்திலும் இலஞ்சம் வாங்கமாட்டேன் என்பதை என் மனசாட்சியாக வைத்து உறுதி அளிக்கிறேன் என்று உறுதிமொழி ஏற்க வேண்டும் என்கிறார் வேதாத்திரியார்.

குற்றங்கள் ஒழிய வழிகளையும் காட்டுகிறார் வேதாத்திரியார்.

**சமுதாய அமைப்பினிலே உள்ள குறைபாடே**
**தனிமனிதன் குற்றங்கள் அனைத்திற்கும் மூலம்**
**சமுதாயம் தனியாரைத் தண்டித்து மேலும்**
**தவறிழைக்கும் செய்கையினை நீதியெனில் நன்றோ?**
**சமுதாய அமைப்புமுறை சீர்திருந்தி பொருட்கள்**
**சமத்துவமாய் அனைவருக்கும் கிட்டுமெனில் உலக**
**சமுதாயத்தில் குற்றம் நிகழ இடமேது?**
**தண்டனைக்கு எனவகுத்த சட்டங்கள் ஏனோ** (ஞா.க.)

குற்றங்கள் நடைபெறுவதற்கு சமுதாய அமைப்புத்தான் காரணம் என்றும் வாதிடுகிறார்.

**குற்றவாளி பாவியென்று யாருமில்லை உலகினில்**
**குறைகளுக்குக் காரணமோ பழைய சமுதாயம்...** (ஞா.க.)

வாழ வைக்கும் ஆட்சியே வேண்டும் என்று வேதாத்திரியார் வலியுறுத்துகிறார்.

**கடன் வறுமைக் கல்வியின்மை என்ற மூன்று**
**களங்கங்கள் உலகினிலே மறைய வேண்டும்**
**உடன் பிறந்தார் போல் உள்ளம்ஒன்றி மக்கள்**
**உயர்நிலையில் வாழவைக்கும் ஆட்சி வேண்டும்** (ஞா.க.)

நாடு வளம் பெறுவதற்குரிய வழிமுறைகளையும் வகுத்துத் தந்துள்ளார்.

**வீடு விளைநிலம் தொழிற்சாலை**
**வியாபாரம் இந்நால் வகையும்**
**நாடு முழுதும் கூட்டுறவில்**
**நடத்தும் முறையின் அமுலாக்க**
**ஓடும் வறுமை தொழில் பெருகும்**
**உழைப்பிற்கே நன்மதிப்புண்டாம்**
**ஈடு வட்டி கடன் கோர்ட்டு**
**ஏது அப்போ சிந்திப்பீர்,** (ஞா.க.)

ஆலயத்தின் நிழலில் அநீதிமன்றம் நடத்தாதே! என்ற வால்டேர் கருத்துக்கு வலுசேர்க்கும் விதமாக நேர்மையான நீதிமுறைக்கு வழிகாட்டுகின்றார் வேதாத்திரியார்.

✯ மனிதவாழ்வின் பண்பாட்டிலும் வாழ்க்கைத் திறனிலும் வாழ்க்கை முறையிலும் சமுதாய ஒருமைப்பாட்டிலும் பல குழப்பங்கள் நிலவி வரக் காண்கிறோம். இவை அனைத்தையும் சீர்திருத்திக் கொண்டு செம்மையாக வாழ வேண்டிய பொறுப்பு பொதுவாக இன்றுள்ள எல்லா மக்களுக்கும் தேவை. அதற்கு வேண்டிய முறையில் சிந்தனை செய்து நல்வாழ்விற்கான வழிகளை அமைத்துக் கொடுக்க வேண்டியது சமுதாயத்தின் தலைமை ஏற்றுள்ள அறிஞர்களின் பொறுப்பு என்று சொல்லும் வேதாத்திரியார்,

அதற்கொரு வழி காட்டலாக

☆ கல்வி கற்கும் காலத்திலேயே, கல்வியின் ஒரு பகுதியாக நீதி உணர்வையும் உணர்த்த வேண்டும் என்கிறார்.

இன்றுவரையில் அப்பழுக்கற்ற நீதி முறையும் அதைச் செயல் படுத்துகின்ற முறையும் உலகில் உள்ள எந்த நாட்டிலும் உருவாகவில்லை என்கிறார்.

இந்தப் பெருங்குறைவே மனித வாழ்வை அவ்வப்போது ஆங்காங்கே துன்பங்களில் ஆழ்த்தி வருகிறது.

துன்பம் தவிர்த்த, நட்டம் தவிர்த்த வாழ்க்கையை உருவாக்க நினைக்கின்ற நாம், நேர்மையான நீதி முறைகளைத் தேர்த்தெடுத்து அமுல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

வால்டேர் புரட்சியைப் போன்று வேதாத்திரியார் ஆன்மீகத்தில் பல புரட்சிகளை செய்தார்கள்.

வேதத்தை பாமரனும் தெரிந்து கொள்ளும் வகையில் , பிரம்மஞானத்தை அனைத்து மக்களிடமும் கொண்டு சென்றார்கள்.

ஆன்மீகத்தில் மூடு மந்திரமாக இருந்த பல தத்துவங்களை எளிய முறையில் மானுடம் முழுவதும் விதைத்தார்.

ஆன்மீகத்தில் உள்ள பல மூட நம்பிக்கைகளை வேரறுத்தார்கள்.

ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு. கோயில்களில் கடவுளை வேண்டுவதால் மட்டும் தான் செய்த செயலிலிருந்து தப்ப முடியாது என்ற இறைநீதியை உணர வைத்தார்.

பக்தி மிகுதியால் கடவுளுக்காக பற்பல கோவில்களைக் கட்டும் இந்த நூற்றாண்டில் மனிதனைச் சிந்திக்க வைத்து அவர்கள் அறியாமையைப் போக்க அறிவுக்காக ஒரு திருக்கோயிலை கட்டிய மகான் மகரிசியே.

வால்டேர் 18 ஆம் நூற்றாண்டில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்.

வால்டேரின் செல்வாக்கு பிரான்ஸ் நாட்டுடன் நின்றுவிடவில்லை. தாமஸ் ஜெபர்சன், ஸேம்ஸ் மாடிசன், பெஞ்சமின் பிராங்க்ளின் போன்ற அமெரிக்கப் புரட்சித் தலைவர்களும் வால்டேரின் நூல்களைப் படித்து அவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டார்கள்.

அறிவின் முழுமை நோக்கிய பயணத்தை ஊக்கப்படுத்த வந்தவர்கள் தான் வால்டேரும் வேதாத்திரியும்.

அதாவது மழுங்கிய அறிவைக் கூர்மைப்படுத்த அவர்களின் சிந்தனைத் தெளிவு வேண்டும். சொற்கள் சாதாரணப் பாமர மக்களுக்கும் புரிய வேண்டும். வாழ்வியல் பிறருக்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டும் என்பதே அதன் விளக்கம்.

இந்த வகையில் வால்டேர் மற்றும் வேதாத்திரியின் சிந்தனைகளும், சொல்லும், எழுத்தும், வாழ்வும் அமைந்துள்ளன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வால்டேரைப் போல் வேதாத்திரியாரும் சமூக முன்னேற்றம் குறித்த கருத்தை எல்லா நிலைகளிலும் மிகுந்த வலிமையோடு முன்வைத்துள்ள இந்திய துறவியாவார்.

வேதாத்திரி ஒரு துறவியல்ல. ஒரு சமூகப் புரட்சியாளர் என்பதே உண்மையாக இருக்க முடியும்.

இவரது படைப்பின் ஒவ்வொரு வரியும் சமூக உருவாக்கம் குறித்தே பேசுகின்றன. சமூகம் என்னும் மாமண்டபத்தைத் தூக்கி நிறுத்தியுள்ள தனிமனிதன் குறித்து விவரிக்கின்றது. அவனது மனம், உடல் உருவாக்கம் பற்றித்தத்துவார்த்தமாக எளிமையாகப் பேசுகின்றன.

மேலும், அவரது எண்ண அலைகள் தனி மனிதனிலிருந்து சமூகத்தை நோக்கி, குறிப்பாக சாதி, மதம், மொழி, பால் எனப் பிரிந்து கிடக்கும் கிளைச் சமூகங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு, உலக-சமூக நலன் குறித்து தம் கருத்தை மானுடத்திற்கு தந்துள்ளார்கள்.



# 8. ரால்ப் வால்டோரா எமர்சனும் வேதாத்திரியும்

**ரா**ல்ப் வால்டோரா எமர்சன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அருந்தவப் புதல்வர். அமெரிக்க நாடு செய்த தவப்பயனாக வட அமெரிக்கவின் பாஸ்டனில் அவதரித்தார். உலகமும் மனிதனும் ஏன் எனச் சிந்தித்தவர் எமர்சன்.

ரால்ப் வால்டோரா எமர்சன் (*Ralph Waldo Emerson* ) என்பவர் ஐக்கிய அமெரிக்க நாடுகளைச் சார்ந்த எழுத்தாளராகவும், சொற்பொழிவாளராகவும், கவிஞராகவும் விளங்கி, 19ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியில் ‘‘கடப்புவாதம்’’ (*Transcendentalism*) என்னும் கொள்கையை முன்னெடுத்துச் சென்ற அறிஞர் ஆவார்.

**ரால்ப் வால்டோரா எமர்சன் வாழ்க்கை வரலாறு.** [1803 – 1882]

ஐக்கிய அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் 1803 ஆம் ஆண்டு மே 25 ஆம் நாள் ரால்ப் வால்டோரா எமர்சன் பிறந்தார்.

தந்தையின் பெயர் வில்லியம் எமர்சன். தாயார் பெயர் ரூத் ஹஸ்கின்ஸ்.

ரால்ப் என்பது தாயார் இட்ட முதல் பெயராகும். அது அவள் சகோதரன் ரால்ப் ஹஸ்கின்ஸ் நினைவாக வைத்த பெயராகும்.

அடுத்து தந்தை குடும்பத்தில் வழங்கி வரும் நினைவாக வால்டோ என்ற பெயரைச் சூட்டினார்.

வில்லியம் எமர்சன் தம்பதிகளுக்கு பிறந்த எட்டுக் குழந்தைகளில் எமர்சன் இரண்டாவது குழந்தையாவார்.

எமர்சனுக்கு ஒன்பது வயதிருக்கும் போது அவரது தந்தையார் வயிற்றுப் புற்று நோயால் இறந்தார். அப்பொழுது அவருக்கு வயது 42 தான்.

எமர்சனை ஒன்பதாவது வயதில் பாஸ்டனில் உள்ள பொது இலத்தீன் பள்ளிக்கு அனுப்பினார்கள்.



**ரால்ப் வால்டோரா எமர்சன்**

எமர்சனுக்கு போட்டுக் கொள்ள ஒரு சட்டைக்குக் கூட வழியில்லை. ஒரே சட்டையை அவனும் அவன் சகோதரனும் மாற்றி மாற்றி போட்டுக் கொண்டு பள்ளிக்குச் செல்வார்கள். அதைக் கண்டு மற்ற மாணவர்கள் அவர்களைப் கேலி செய்வார்கள். ஞானம் உள்ள இடத்தில் வறுமை என்பது இயற்கை தானே?

பின்னர் ஹார்வேர்டு பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்று பட்டம் பெற்றான்.

கல்வி தொடர்பான செலவுகளுக்கு நண்பர்களிடமிருந்தும் தேவாலயங்களிலிருந்தும் நிதியுதவி பெற்றான்.

எண்ணோடு எழுத்தின் வனப்பே வனப்பு என்பதை உணர்ந்த எமர்சன் இளமையின் கஷ்டங்களைப் பொருட்படுத்தாது வருந்திக் கல்வி கற்றான்.

கல்லூரிப் படிப்பு முடிந்து வெளி வந்த பின்னர், ஒரு பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் வேலைப் பார்த்தான்.

தனது 25 வயதில் எல்லன் லூயிஸா தக்கர் என்ற பெண்ணை காதல் மணம் புரிந்து கொண்டார். தன் காதலியின் பொருட்டு பல காதற் கவிதைகளை எழுதியுள்ளார்.

இல்லற வாழ்வைத் தொடங்கிய அதே ஆண்டில் மாந்தேன், ரூஸோ, கூப்பர், ஸ்காட், காம்பி ஆகியோர்களின் நூல்களை வாங்கிப் படித்தார்.

ஹார்வேர்ட் கல்லூரி நூல் நிலையத்திலிருந்து பிளேட்டோ, மார்க்கஸ் அவரேலியர், கெர்டர் ஆகியோரின் தத்துவ நூல்களை இரவல் வாங்கி படித்தார்.

செனோபன், அரிஸ்டாட்டில், புளுடார்க், லூக்ரெட்டியஸ், பிளேட்செர், மாசிங்கர், ஸ்விப்ட், ரிச்சர்ட்சன், லாம்ப், சில்லர், கெதே முதலியவர்கள் புத்தகங்களையும் படித்து தேர்ந்தார்.

எமர்சன் கல்லூரி மாணவனாயிருந்த போதே ஜெர்மன் அறிஞர்களின் புத்தகங்களையும், கிரேக்க புராணங்களையும், ஆங்கில இலக்கியத்தையும் படித்து அந்த ஆசிரியர்களின் கருத்துக்களைப் பற்றிச் சிந்திப்பான்.

கோலோரிட்ஜின் நண்பனும் காம்பியின் மனித அமைப்பு விதிகளும் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தன. .

பின்பு ஆசிரியர் வேலையை விட்டு விட்டு மதகுரு வேலையை ஒப்புக் கொண்டான். இந்த காலத்தில் அவனுக்கு அறிஞர்கள் பலர் தொடர்பு ஏற்பட்டது.

அவனது புதிய கருத்துக்கள், மனிதனே கடவுள் என்ற புதிய தத்துவம் கேட்போரின் உள்ளத்தைக் கவரத் தொடங்கின.

மனிதனுக்கும், இயற்கைக்கும் என்ன தொடர்பு? இயற்கை யிடமிருந்து இந்த ஓர் பெரும் இரகசியத்தை ஆராய்ந்தார்.

வள்ளுவரும் மெய்ப்பொருள் பற்றிச் சிந்தித்தவர்களை ‘கற்றீண்டு மெய்ப் பொருள் கண்டார் தலைப்படுவர்’ என்று போற்றி, உலகின் தலைவர்களாக அவர்களைப் போற்றினார்.

சிந்தனையாளர் எமர்சன் வள்ளுவரின் இந்த இலக்கணத்திற்கு முற்றிலும் தகுதியடையவராக இருப்பதால் தான் உலகம் அவருக்குப் புகழ்மாலை சூடி அவரைச் சிரமேல் வைத்துப் போற்றுகிறது.

எமர்சனைப் பற்றி தெரிந்து கொள்ளவும், அவரது சிந்தனைகளை பற்றி உய்த்துணரவும் நாமும் அவாவுறுகின்றோம்.

எமர்சன் கசடற கற்ற கல்விமான். ஆயதுறைகள் அனைத்தைப் பற்றியும் ஆராய்ந்தவர். அகப்பொருள் உண்மையறிந்து உலகிற்கு எடுத்தோதியவர். இயற்கை நமக்களித்த பெரும் பிரதிநிதி, சிந்தனை யாளர்களுக்கெல்லாம் தலை சிறந்த சிந்தனையாளர்.

உலகெங்கும் சுற்றித் தனது சொற்பொழிவுகளை மக்களிடம் விதைத்தார். மத சொற்பொழிவும் செய்தார். அவரது புகழ்பெற்ற சொற்பொழிவுகள்....இயற்கையின் பிரயோஜனங்கள்,தண்ணீர், மனிதப் பண்பாடு, மனிதவாழ்க்கை, தற்காலயுகம், போன்றவையாகும்..

எமர்சனும் அவரது நண்பர்களும் இணைந்து 1859ல் ஆழ்நிலை மன்றம் என்ற அமைப்பை உருவாக்கினார்கள். தி டயல் என்ற இதழை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

எமர்சனில் கீதையும் வேதங்களும் பெரும் பாதிப்பைச் செலுத்தின. குறிப்பாக வேதங்கள் இயற்கையை இறைவடிவமாகக் காணும் ஆழ்நிலையே அவரை ஆழ்நிலைவாதத்தின் அடிப்படைக் கருதுகோள்களை உருவாக்கச்செய்தது என்று சொல்லலாம்.

எமர்சன் விதைத்த வித்துக்குள் செடியாகி, மரமாகி தளிர்விட்டுப் பூத்துக் குலுங்கத் தொடங்கியது. அவர் புகழ் ஐரோப்பாக் கண்டமெங்கும் பரவியது. பிரிட்டன் நாடு அவர் சிந்தனைகளைப் புகழ்ந்தது.

1880ம் ஆண்டின் இறுதியில் அவர் உடல்நலம் குன்றத் தலைப்பட்டது. சிறிது நேரம் தொடர்ந்தாற் போல் பேசுவதற்குக் கூடச் சக்தியற்றவரானார். 27-4-1982 ஆம் ஆண்டு இயற்கையிடம் இரண்டறக் கலந்தார்.

அமெரிக்க சிந்தனை என்பது இரு பெரும் சிந்தனைப்பள்ளிகள்தான்.

ஒன்று எமர்சன் தோரோ ஆகியோரால் உருவாகி வளர்ந்த ஆழ்நிலைவாதம். இன்னொன்று செயல்முறைவாதம் என்று பொதுவாகச் சொல்லப்படும் சிந்தனை மரபு.

இரண்டும் அடிப்படையில் ஒன்றுக்கு ஒன்று எதிரானவை. ஆழ்நிலை வாதம் அமெரிக்க கருத்துமுதல்வாதம் என்றும் செயல்முறைவாதம் அமெரிக்க பொருள்முதல்வாதம் என்றும் சொல்லலாம். அவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று உரையாடி வளர்ந்தவை

எமர்சன் ஒரு பெரும் பேச்சாளர். அவரது தந்தை ஒரு பாதிரியார். எமர்சனும் மத சிந்தனைகளில் இருந்தே ஆரம்பிக்கிறார். மெல்ல மெல்ல அவர் சுதந்திர ஆன்மீகம் என்னும் கருத்துநிலை நோக்கி நகர்ந்தார்.

கட்டுரைகளாக வந்த அவரது உரைகளில் மூன்று உரைகள் வழியாக அவரை நன்றாக புரிந்துகொள்ளலாம். தற்சார்பு - இயற்கை அமெரிக்க அறிஞன்.

ஒட்டுமொத்தமாக எமர்சனின் சிந்தனைப்பங்களிப்பு என்ன? கிறித்தவ மரபு முன்வைத்த கூட்டான ஆன்மீகம் என்ற நிலைக்கு எதிராக தனிமனித ஆன்மீகம் என்பதை அவர் முன்வைத்தார்.

ஒரு தனிமனிதன் தன் ஆன்மீக விடுதலையையும் வாழ்க்கை நிறைவையும் நோக்கி முடிவிலாது முன்னேறுவதற்கான உரிமை அளிக்கும் ஒரு சமூகத்துக்காக அவர் வாதிட்டார். அதன் மூலம் தனிமனித உரிமையை அடிப்படையாகக் கொண்ட அமெரிக்க இலட்சியவாதம் உருவாவதற்கு பெரும் பங்களிப்பாற்றினார்.

அவர் தனிமனிதவாத ஆதரவாளராகவும், சமூகத்தில் நெருக்கடி கொணர்கின்ற காரணிகளை விமர்சிக்கும் முன்னறிவு கொண்டவராகவும் போற்றப்படுகிறார்.

அவர் தம் சிந்தனைகளை எண்ணிறந்த கட்டுரைகள் வழியாகவும், ஐக்கிய அமெரிக்கா நாடெங்கும் வழங்கிய சொற்பொழிவுகள் வழியாகவும் வெளியிட்டுள்ளார்.

வேதாத்திரி மகரிசியும் தனிமனிதவாத ஆதரவாளராகவும், சமூகத்தில் நெருக்கடி கொணர்கின்ற காரணிகளை விமர்சிக்கும் முன்னறிவு கொண்டவராகவும் போற்றப்படுகிறார்

தனி மனிதன் அமைதி பெறவும், இறையுணர்வைப் பெற்றிடவும், இறைநீதியை உணரவும் வழி காட்டிய வள்ளல் வேதாத்திரி.

**கட்டுரைகளும் பேருரைகளும்**

எமர்சன் சம கால சமய நம்பிக்கைகள், சமூகக் கருத்துகள் ஆகியவற்றிலிருந்து படிப்படியாக விலகிச் சென்றார். 1836இல் ''இயற்கை'' (*Nature*) என்ற தலைப்பில் அவர் ஒரு கட்டுரை வெளியிட்டார்.

அதில் அவர் ''கடப்புவாதம்'' (*Transcendentalism*) என்ற தமது மெய்யியல் கொள்கையை முன்வைத்தார்.

புகழ்மிக்க அந்தக் கட்டுரை வெளியீட்டுக்குப் பின் எமர்சன் 1837இல் ''அமெரிக்க அறிஞர்'' (*The American Scholar*) என்ற தலைப்பில் ஒரு பேருரை ஆற்றினார். அவ்வுரை பற்றி விமர்சித்த ஆலிவர் வெண்டெல் ஹோம்சு என்பவர், அதை ''அறிவுசார்ந்த விடுதலை முழக்கம்'' என்று விவரித்துள்ளார்.

எமர்சன் வெளியிட்ட முக்கிய கட்டுரைகள் முதலில் பேருரைகளாக வழங்கப்பட்டவை. பின்னர் எமர்சன் அவற்றை மறுபார்வை செய்து அச்சுக்கு அனுப்பினார். அவர் வெளியிட்ட கட்டுரைத் தொகுப்பின் முதல் பகுதியும் இரண்டாம் பகுதியும் அவருடைய சிந்தனைகளின் மையக் கருத்துகளை உள்ளடக்கி இருக்கின்றன.

அவை முறையே 1841, 1844 ஆண்டுகளில் வெளியாயின. அக்கட்டுரைத் தொகுப்புகளில் அவர் எழுதிய ''தற்சார்பு'' (*Self-Reliance*), ''மேல்-ஆன்மா'' (*The Over-Soul*), ''வட்டங்கள்'' (*Circles*), ''கவிஞன்'' (*The Poet*), ''அனுபவம்''(*Experience*) போன்ற கட்டுரைகள் அடங்கியுள்ளன.

## மையக் கொள்கைகள்

''இயற்கை'' (*Nature*) என்னும் கட்டுரையும் மேலே குறிப்பிட்ட கட்டுரைகளும் 1830களின் நடுப்பகுதியில் இருந்து 1840களின் நடுப்பகுதிவரையான காலக்கட்டத்தில் வெளியானதோடு, எமர்சனின் எழுத்துவளம் மிக்க காலத்தைச் சார்ந்தவையாகவும் உள்ளன.

எமர்சன் இறுகிய மெய்யியல் கொள்கைகளை ஏற்காதவர். பல பொருள்கள் பற்றிய சிந்தனைகளை அவர் வழங்கியுள்ளார். அவர் விளக்கும் சில மெய்யியல் கருத்துகளுள் ''தனித்துவம்'', ''சுதந்திரம்'', ''மனிதர் நினைத்தால் எதையும் சாதிக்கலாம்'', ''ஆன்மாவும் சூழல் உலகும் உறவு கொண்டவை'', ''பிரபஞ்சம் என்பது இயற்கை மற்றும் ஆன்மாவின் தொகுப்பு'' போன்றவை அடங்கும்.

எமர்சனின் மெய்யியல் சிந்தனைகளை விளங்கிக்கொள்வது கடினம் என்று சம காலத்தவர் கருதினார்கள். அவரது எழுத்துப் பாணியைப் புரிவது இன்றும் கடினம்தான்.

என்றாலும், அமெரிக்க சிந்தனையாளர்களுள் தலைசிறந்த ஒருவராக எமர்சன் விளங்குகிறார். அவருக்குப் பின் வந்த பல எழுத்தாளர்களும் கவிஞர்களும் அவரிடமிருந்து பலவற்றைக் கற்றுள்ளார்கள்.

எமர்சனிடம், அவருடைய சிந்தனையின் மையம் என்ன என்று கேட்டபோது அவர், ''தனிமனிதன் எல்லையற்ற தன்மையினன் என்பதே எனது மையக் கொள்கை'' என்றுரைத்தார்.

## எமர்சனின் தெரிவுசெய்யப்பட்ட படைப்புகள்

- *Essays: First Series* (1841)
- *Essays: Second Series* (1844)

- *Poems* (1847)
- *Nature; Addresses and Lectures* (1849)
- *Representative Men* (1850)
- *English Traits* (1856)
- *The Conduct of Life* (1860)
- *May Day and Other Poems* (1867)
- *Society and Solitude* (1870)
- *Letters and Social Aims* (1876)

**Individual essays**

- Nature (1836)
- Self-Reliance(*Essays: First Series*)
- Compensation(*First Series*)
- The Over-Soul (*First Series*)
- Circles (*First Series*)
- The Poet (*Essays: Second Series*)
- Experience (*Essays: Second Series*)
- Politics (*Second Series*)
- The American Scholar
- New England Reformers

**Poems**

- Concord Hymn
- The Rhodora

கிழக்கித்திய மேற்கத்திய இரண்டு மேதைகளின் புகழ்பெற்ற சில சிந்தனைகள் மானுடத்தை நோக்கியே பயணிக்கின்றன..

### எமர்சனும் வேதாத்திரியும்

**எமர்சன்:** வருங்காலத்து உபாத்தியாயர் கடினமான பாடங்களுக்கு வியாக்கியானம் செய்வதைக் காட்டிலும். மனிதரின் ஒழுக்க அடிப்படை பற்றி விசாரணையும், வியாக்கியானமும் செய்வதிலே அதிகமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

**வேதாத்திரி:** காலத்திற்குத் தக்கவாறு வாழவேண்டும். அதற்கு உடல்நலம் அவசியம். மனவளமும் அவசியம். நாம் தொடர்பு கொண்டு வாழக்கூடிய மக்களிடம் அந்தத் தொடர்பில் நட்பு பாராட்ட வேண்டியது. நட்பை காப்பாற்ற வேண்டியது அவசியம். இதற்குத் தேவையானவற்றைத் தெரிந்து கொள்ளக் கூடியதுதான் கல்வி. எப்படி வாழவேண்டும் என்பதைப் படித்துக் கொள்வதுதான் கல்வி.

**எமர்சன்:** ஒரு மனிதன் எப்படிப்பட்டவன் என்பதை அவன் படிக்கும் புத்தகங்களினாலும், அவன் வைத்துக் கொள்ளும் சகவாசத்தினாலும், அவன் வழங்கும் புகழுரைகளாலும், அவனுடைய ஆடையாலும், அவனுடைய ருசி, அருசிகளாலும் (விருப்பு வெறுப்புகளாலும்) அவன் சொல்லும் கதைகளாலும், அவனுடைய நடையாலும், அவனுடைய கண் அசைவாலும், அவனுடைய வீட்டின் தோற்றத்தாலும், அவனுடைய கொலுக் கூடத்தாலும் கண்டு கொள்ளலாம். இயற்கையின் விருந்தாளியாக நடந்து கொள்ள வேண்டுமே தவிர, சோம்பேறியான ஆண் தேனீயைப் போல் நடந்து கொள்ளக் கூடாது.

**வேதாத்திரி:** உலகிலேயே மிக உயர்ந்த பிறப்பு மனிதப் பிறப்பு. எல்லாம் வல்ல, இறைநிலையை முழுமையாக எடுத்துக் காட்டி பிரதிபலிக்கும் கண்ணாடி மனிதனே.

மனித உருவாம் இறைநிலையின் ஆற்றல்கள் அனைத்தும் உள்ளடக்கமாகப் பெற்று அதன் பெருமையை அன்பு, கருணை, அறம், ஞானம் என்ற மதிப்புமிக்க அறிவு செறிந்த செயல்களால் மற்ற மக்களுக்கும், உயிரினங்களுக்கும் விளக்கிக் கொண்டிருக்கும் இறைவனின் தூதுவர்.

வாழ்க்கை நெறி. மனம், இயற்கை, சமுதாயம் என்ற முக்கோணத்துக்குள் தான் மனிதன் வாழ்ந்தாக வேண்டும். ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனிதனின் வாழ்வின் நோக்கம் அறிவு முழுமை பெற வேண்டும்.

**எமர்சன்:** ஒரு நண்பனைப் பெற ஒரே வழி நண்பனாக இருப்பதுதான்.

**வேதாத்திரி:** எல்லோரும் ஒன்றுதான். அவர்களுக்கு நலமேதான் செய்ய வேண்டும். யாருக்கும் தீமை செய்யக் கூடாது என்ற அன்பும் பண்பும் உண்டாவதுதான் நட்பு.

**எமர்சன்:** பொறுமையும் மனோதிடமும் எல்லாவற்றையும் வெற்றி கொள்ளும்.

**வேதாத்திரி:** எவ்வளவு பெரிய குழப்பமானாலும் பொறுமை ஒன்றினாலேயே வெற்றி கண்டுவிடலாம்.

**எமர்சன்:** தனக்குத் தானே உதவிக் கொள்ளாமல் எவனாலும் அடுத்தவனுக்கு உதவ முடியாது என்பது உலகின் மிக அழகிய இயல்புகளில் ஒன்று.

**வேதாத்திரி:** நீ மற்றவர்களுக்கு என்ன மாதிரியாக உதவ முடியுமோ அதற்கு மனதை விரித்து வைத்துக் கொண்டு தயாராக இருந்தால் உனக்கு வேண்டியதெல்லாம் உனக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

**எமர்சன்:** விதி அல்லது ஊழ்வினை என்ற சொல் மனித ஜாதியின் புலனறிவை வெளிப்படுத்துகிறது. உலகின் சட்டங்கள் எப்பொழுதும் நமக்கு அனுகூலமாக இருப்பதில்லை. நமக்குக் கேடு விளைவித்து, நம்மை நசுக்கக்கூடியதாக இருக்கின்றன. விதி இயற்கை. அல்லது சூட்சும வடிவில் நம் மீது பல்லழைப் போன்று ஒட்டி வளர்கின்றது.

**வேதாத்திரி:** விதை போட்டால் மரம் முளைக்கும் இது விதி. பலாவிதை போட்டால் பலாமரம் முளைக்கும் இது வினை. பலாக்கனி விளைவு. விளைவை வேண்டு வினையைத் தேர்ந்தெடுக்கிறோம். அதுவும் ஒரு விதியை அனுசரித்தே தேர்ந்தெடுக்கிறோம்.

**எமர்சன்:** மனித மனங்கள் மண்ணுலகத்தைச்சுற்றி வருவது போலவே விண்ணுலகத்தையும், சொர்க்கத்தையும் சுற்றி வருகின்றன.

அதனால் துருக்கி தேசத்துச் சொர்க்கம் என்பது மங்கையரின் அந்தப்புரமாகும், ஜ்காண்டிநேவியன் தேசத்துச் சொர்க்கம் என்பது ஒரு வேட்டை வனமாகவும், அராபிய தேசத்து‘ சொர்க்கம் என்பது கோதுமை ரொட்டிகளுக்கும், முறுமுறுக்கும் நீர்ச்சுனைகளுக்கும் உரிய ஒரு ஸ்தலமாகவும் இருந்து வருகிறது.

சொர்க்கம் என்பது ஒழுக்கம் என்பதைத் தவிர, வேறு ஏதோ அன்று.

**வேதாத்திரி:**

உடலையே நான் என்று கொள்ளும் மயக்க நிலையில் சில பொருளையும், சில மக்களையும் மட்டும் தனது என்று எண்ண வேண்டி வரும்.

அதன் விளைவாகப் பொருள் உரிமை, மக்கள் உரிமை இரண்டும் எழுந்து, இவற்றைக் காக்க சாதி, மொழி, இன, மத, தேச அளவில் மனிதன் எல்லை கட்டும் போது மனித மனத்தில் பிரிவு உணர்ச்சிகள் தோன்றித் துன்பங்கள் பெருகி வருகின்றன.

இதற்கு மாற்றுச் சொல் தான் சுவர் அகம் சுவர்க்கம் என்பது. சுவர் என்றால் வான் அதாவது உயிர் என்று பொருள். உடலைத் தாண்டி உயிரே நான் என்று உணரும் சிறப்பு நிலை.

தியானம் செய்து பேரியக்க மண்டலம் முழுவதும் நீக்கமற நிறைந்த மகாகாசத்தின் பின்னநிலை தான் இவ்வுடலில் உள்ள உயிர் என்ற அகன்ற நினைவு (Universal Thought) வரும் பொழுது, உடலளவில் நான் என்ற எண்ணம் மாறி, உயிர் அளவில் நான் என்ற உணர்வு வந்துவிடும்.

எல்லா உயிர்களையும் தன்னைப் போல் நினைக்கின்ற மனப்பக்குவம் வந்துவிடும். அதைத் தான் சுவர்க்கம் என்று சொன்னார்கள்.

**எமர்சன் –** மனிதன் எவனொருவன் கடந்த காலத்தின் படிப்பினைகளை உணர்ந்து காலத்தைத் தன் வயப்படுத்தி எதிர்காலத்திற்கு எல்லா நம்பிக்கைகளும் உடையவனாக இருக்கின்றானோ அவனே அறிஞன்.

அவன் சகலகலா விற்பன்னனாக இருக்க வேண்டும். கண்ணியமும் தயாளமும் உடையவனாக இருக்க வேண்டும்.

### வேதாத்திரி

அறிவின் இருப்பிடம், இயல்பு, இயக்கம் அறிந்து ஒழுகுவோர் அறிஞர்கள் ஆவர்.

சக்கரம் சுழல்வதால் வண்டி ஓடுவதுபோல, அறிஞர்களின் சிந்தனைச் சக்கரங்களின் சுழற்சிக்கேற்ப, உலக சமுதாய வாழ்வு எனும் வண்டி ஓடுகிறது.

### எமர்சன்

இன்பியல் நாடகமும், துன்பியல் நாடகமும் எப்போதும் ஒன்றோடு ஒன்று கைகோர்த்துக் கொண்டே போகும்.

### வேதாத்திரி

பிறந்துவிட்டோம், வாழ்கிறோம், அனுபவித்தோம் பெற்றபலன் இன்பம்-துன்பம் இரண்டேயாகும்.

### எமர்சன்

நம்மின் மாபெரும் பெருமை எப்பொழுதும் தோற்காமல் இருப்பதில் இல்லை; ஒவ்வொரு முறை வீழ்கிற பொழுதும் அயராது கம்பீரமாக எழுந்து நிற்பதில் தான் இருக்கிறது.

**வேதாத்திரி**

அழகு மாறிக்கொண்டே இருக்கும். அன்பு ஊறிக்கொண்டே இருக்கும். தோல்வி ஜெயத்தில் முடியும்.

**எமர்சன்**

எதை செய்ய அஞ்சுகிறீர்களோ, அதையே எப்பொழுதும் செய்யுங்கள்.

**வேதாத்திரி**

தவறான செயல்களின் விளைவைக் கண்டோ அல்லது தனது வாழ்வின் போக்கில் ஊறு விளைவிக்கும் என்று கற்பனை செய்து கொண்டோ துணிவிழந்து வருந்துதல் அச்சமாகும்.

**எமர்சன்**

அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து. அறிவை வளர்த்துக்கொண்டால் எல்லாவிதமான பயங்களும் அகன்றுவிடும்.

**வேதாத்திரி**

மனிதனால் ஆறாவது அறிவை அறிந்து தெளிவாகப் பயன் கொள்ளும் தகுதி, திறமை இவை ஏற்படும் வரையில் மனிதனுடைய அறிவு ஒளிமங்கியதாகவே இருக்கின்றது.

**எமர்சன்**

உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர்ந்த வெற்றி எதையுமே சாதிக்க முடியாது.

**வேதாத்திரி**

உழைப்பவன் உண்ண வேண்டும். உண்பவன் உழைக்க வேண்டும். இது இயற்கைக்கு ஒத்த நீதி. இந்த நீதி தவறுகின்ற இடத்தில் தான், ஐந்து பெரும் பழிச்செயல்கள் பிறக்கின்றன.

உலக வரலாற்றில் 19, 20 ஆம் நூற்றாண்டைப் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சரித்திர நிகழ்ச்சிகள் போன்று உலகம் அதற்கு முன் என்றும் கண்டு பெருமைப்பட்டதில்லை.

இந்தியா, காந்தியையும் இரவீந்தரையும் பாரதியையும். விவேகானந்தரையும் பிரசவித்தது.

இங்கிலாந்தில் ஜான் ஸ்டுவர்ட்மில்லையும், தாமஸ்கார்லைலையும், டென்னிசனையும், சார்லஸ் டிக்கன்சையும், எட்வின் ஆர்ஸிலையும், இத்தாலியில் கரிபால்டியையும், ரஷ்யா விலவ் கார்க்கியையும், லெர்மான்டோவையும் லெனினையும், ஸ்டாலினையும், அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கனையும், ரால்ப வால்டோ எமர்சனையும் பிரசவித்தது.

இவற்றிற்கு எல்லாம் உச்சக்கட்டமாக, இருபதாம் நூற்றாண்டில், பாமர மக்களின் தத்துவஞானியை வேதாத்திரியை பிரசவித்தது.

இந்த உலகச் சிந்தனையாளர்களை சமூகப் புரட்சியாளர்களாக, சமூகச் சிந்தனையாளர்களாக வணங்கும் மேதைகளாக மானுடம் இன்றளவும் போற்றிவருகிறது.



# ௯. சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரிசியும்

**ம**னிதன் எப்படி தோன்றினான் என்று நீங்கள் எப்போதாவது சிந்தித்தது உண்டா? ஏதாவது ஒரு காலகட்டத்தில் எல்லோருக்கும் உதிக்கும் ஒரு கேள்விதான் அது. கிட்டதட்ட எல்லா மதங்களும் கடவுள்தான் மனிதனை படைத்தார் என்கின்றன.

எனவே மத நம்பிக்கையற்ற சிறுபான்மையினரைத் தவிர்த்து உலகின் பெரும்பான்மையினர் தங்களை கடவுளின் படைப்பு என்று அன்றும் நம்பினர், இன்றும் நம்புகின்றனர்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நம்பப்பட்டு வந்த அந்த சித்தாந்தத்தை தூக்கி எறிந்தது இன்னொரு சித்தாந்தம் 1859 ஆம் ஆண்டு பிறந்தது.

ஆறு நாட்களில் கடவுள் மனிதனை படைத்தார். மனிதன் என்ற பைபிளின் கூற்றை நம்பியிருந்த காலகட்டம்.

அந்த நேரத்தில், மனிதன் குரங்கிலிருந்துதான் பரிணாம வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற புரட்சிகரமான சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டவர் சார்லஸ் டார்வின்.

‘பரிணாம வளர்ச்சியின் தந்தை’ எனப் போற்றப்படுகிறார் சார்லஸ் டார்வின்.

இயற்கைத் தேர்வு (Natural Selection) என்னும் முறையின் வாயிலாக உருமலர்ச்சி (Evolution) ஏற்படுகிறது என்னும் உயிரியல் கோட்பாட்டினை வகுத்த ஆங்கில விஞ்ஞானி சார்லஸ் டார்வின் ஆவார்.

## டார்வின் வாழ்க்கை வரலாறு [கி.பி. 1809–1882]

1809-ஆம் ஆண்டு பிப்ரவரி 12-ஆம் நாள் இங்கிலாந்தின் Shrewsbury என்ற நகரில் பிறந்தார் டார்வின். சிறு வயதிலேயே அன்னையை இழந்தார்.



**டார்வின்**

அவரது தாத்தாவும் தந்தையும் மருத்துவர்களாக இருந்தவர்கள். அதனால் டார்வினையும் மருத்துவம் படிக்க எடின்பர்க் (University of Edinburgh) பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தார் தந்தை.

சிறு வயதியிலிருந்தே டார்வினுக்கு புழு, பூச்சிகள், விலங்குகள் ஆகியவற்றின் மீது மிகுந்த ஆர்வம் இருந்தது.

எடின்பர்க் சென்ற பிறகும் அவர் கற்கள், செடிகள், புழு, பூச்சிகள் ஆகியவற்றை சேமிக்கத் தொடங்கினார்.

இயற்கையின்மீது அப்படி ஒரு ஈடுபாடு அவருக்கு. மருத்துவம் படித்துக்கொண்டிருந்தபோது ஒருமுறை ஒரு குழந்தைக்கு அறுவை சிகிச்சை நடப்பதை பார்க்க வேண்டிய கட்டாயம் டார்வினுக்கு ஏற்பட்டது.

அப்போதெல்லாம் மயக்க மருந்தின்றி அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டதால் அந்தக் குழந்தை பட்ட வேதனையைக் கண்டும், கேட்டும் மருத்துவத்தின்மீது இருந்த ஆர்வத்தை இழந்தார் அவர்.

தந்தைக்கு ஏமாற்றமாக இருந்தாலும் அடுத்து அவரை 'theology' அதாவது 'இறையியல்' பயிலுமாறு ஆலோசனை கூறினார்.

அதனை ஏற்று கேம்ப்ரிட்ஜ் (University of Cambridge) பல்கலைக்கழகத்தில் சமய குருவுக்கான படிப்பில் சேர்ந்தார் டார்வின்.

கேம்பிரிட்ஜில் படிப்பதைவிட குதிரைச் சவாரி, துப்பாக்கி சுடுதல் போன்ற விளையாட்டுகளிலேயே அவர் அதிக ஆர்வம் காட்டினார்.

தமது 22-ஆவது வயதில் இறையியலில் பட்டம் பெற்றார். அப்போது அதே பல்கலைக்கழகத்தில் தாவரவியல் துறையில் துறையில் பேராசிரியராக இருந்த John Stevens Henslow என்பவரிடம் நெருங்கிய நட்பு கொண்டார் டார்வின்.

அவர் மூலமாக கேப்டன் Robert FitzRoy என்பவரின் நட்பு கிட்டியது. தென் அமெரிக்க கடலோரப் பகுதிகளில் ஆய்வு செய்ய HMS Beagle என்ற கப்பல் புறப்படவிருந்தது.

கேப்டன் Robert FitzRoy யின் தலைமையில் செல்லவிருந்த அந்தப் பயணத்தில் கலந்துகொள்ளுமாறு டார்வினுக்கு அழைப்பு வந்தது.

அதனை ஏற்றுக்கொண்டு 1831-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் தேதி கேப்டன் பிட்ஸ்ராயும், டார்வினும் பயணத்தைத் தொடங்கினர்.

ஐந்து ஆண்டுகள் நீடித்த அந்த வரலாற்று சிறப்பு வாய்ந்த பயணம்தான் பரிணாம வளர்ச்சி சித்தாந்தம் உருவாவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. அந்தப் பயணத்தைத் தொடங்கியபோது டார்வினுக்கு வயது 22.

ஐந்து ஆண்டுகளில் அந்தக் கப்பல்Brazil, Rio de Janiro, Mondivideo, Falkland Island, Galapagos Island, Hobart, Newzealand என உலகையே ஒரு வலம் வந்தது. பல இடரும், இன்னல்களும் நிறைந்ததாக அந்தப் பயணம் அமைந்தது.

ஆனால் இயற்கையின் மீது இருந்த அளவிடமுடியாத ஈடுபாட்டால் டார்வினுக்கு அது பெரும் துன்பமாகப் படவில்லை.

சென்ற இடத்தையெல்லாம் கூர்ந்து ஆராய்ந்த டார்வின் அதுவரை அறியப்படாத பல விநோதமான விலங்குகளின் எலும்புகளைச் சேகரித்தார்.

ஊர்வன, நடப்பன, பறப்பன என எல்லாவித உயிரினங்களையும் ஆராய்ந்தார்.

அவை இடத்துக்கு இடம் மாறுபட்டிருப்பதையும், சில ஒற்றுமைகளைக் கொண்டிருப்பதைக் கண்டு வியந்தார் டார்வின்.

உயிரினங்கள் அனைத்துமே பொதுவான மூதாதையர்களின் வழிதோன்றல்களாக இருக்குமா என்பதும் அவை தொடர்ச்சியாக சிறு

சிறு மாற்றங்களைப் பெற்று தற்போதைய வளர்ச்சியை பெற்றிருக் கின்றனவா? என்பதுதான் டார்வினின் கேள்வியாக இருந்தது.

தான் சேகரித்த சில எலும்புகளுக்கு சொந்தமான விலங்குகள் முற்றாக அழிந்து போயிருக்கும் என்று முதலில் யூகித்தார். ஆனால் பின்னர் அந்த விலங்குகளிலிருந்துதான் தற்போதைய சிறிய அளவிலான விலங்குகள் தோன்றியிருக்க வேண்டும் என்று பகுத்தறிந்தார்.

கெலபகஸ்(Galapagos Island) தீவுகளில் புதிய வகையான பறவைகள், தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றைக் கண்டு அதிசயித்தார். இப்படி பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப் பிறகு 1836-ஆம் ஆண்டு இங்கிலாந்து திரும்பினார் டார்வின்.

ஐந்து ஆண்டுகளில் தான் சேகரித்த விபரங்களையும், ஆய்வுகளையும் வைத்து அவர் The voyage of the Beagle என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

தமது 30-ஆவது வயதில் Emma Wedgwood என்ற உறவுக்காரப் பெண்ணை மணந்து கொண்டு ஏழு பிள்ளைகளுக்கு தந்தையானார் டார்வின். திருமணத்திற்கு பின்பும் தனது ஆய்வுகளைத் தொடர்ந்தார்


புதிய உயிரினங்கள் உருவாகும் முறை, பின்னர் அவை தங்களின் மூலத்திலிருந்து முழுமையாக மாறி விடுவதன் காரணங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து 1859-ஆம் ஆண்டு உலகை வியப்பில் ஆழ்த்திய தனது புத்தகத்தை வெளியிட்டார் டார்வின்.

"The Origin of Species by Natural Selection" அதாவது 'இயற்கையில் உயிரினங்களின் தோற்றம்' என்ற அந்த புத்தகம் கூறிய சித்தாந்தம்தான் பரிணாம வளர்ச்சி சித்தாந்தம்.

அதன்படி உயிரினங்களின் வாழ்க்கைப் போராட்டத்தில் தகுதியும், வலிமையும் உள்ளவை நிலைத்து நிற்கும். மற்றவை அழிந்துபோகும் என்று கூறினார் டார்வின்.

அதை 'Natural Selection' என்றும் ''survival of the fittest" என்றும் அவர் விளக்கினார். ஆனால் அந்த சித்தாந்தத்தின் விளைவை உலகம் அப்போது உணரவில்லை.

செடிகொடிகளுக்கும், விலங்குகளுக்கும் மட்டுமே அது பொருந்தும் என்றுதான் நம்பியது. டார்வின்கூட மனிதனைப் பற்றி புத்தகத்தில் எதுவும் குறிப்பிடவில்லை.



பரிணாம வளர்ச்சி சித்தாந்தம் மனிதனுக்கும் பொருந்த வேண்டும் என்பதை உலகம் உணரத் தொடங்கியபோது நாம் குரங்கிலிருந்து பிறந்தோமா? என்ற கேள்வி எழுந்தது. டார்வின் அப்படி நேரடியாக சொன்னதில்லை நம்பியதுமில்லை.

ஆனால் அறிவுப்பூர்வமாக சிந்தித்துப் பார்த்தால் அப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதத் தொடங்கினர்.

எதிர்பார்க்கப்பட்டது போலவே தேவாலயங்களின் கண்டனத்துக்கு உள்ளானது டார்வினின் சித்தாந்தம்.

அவர் வாழ்ந்த போதே அவரது“The Origin of Species” என்ற நூல் உலகம் முழுவதும் பதிக்கப்பட்டது. கேம்ஃப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது.

டார்வின் பரிணாம கோட்பாடு மூன்று அம்சங்களைக் கொண்டது.

1. மாறுபாடு (எல்லா உயிரினங்களிலும் காணப்படுவது)
2. மரபு வழி (ஒத்த உயிர் வடிவத்தை ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் ஆற்றல்)
3. உயிர் வாழ்தலுக்கானப் போராட்டம் (எந்தெந்த மாறுதல்கள் ஒரு குறிப்பிட்ட சூழலுக்குச்சாதகமாக இருக்கும் என்று கணித்து அதற்கேற்ப இனப் பெருக்க முறைகளை தீர்மானித்து உயிரினங்களில் மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்வது)

இதைத்தான் இன்றைய நாகரீக, விஞ்ஞான உலகம் அதன் நீட்சியாக பரம்பரை மரபியல் குணங்களின் மகிமைப் பற்றி நமக்கு விளக்கம் தருகிறது. இதை ‘நவீன டார்வினியம்’ என்கிறார்கள்.

இதன் விளக்கம் என்பது ஜீவ போராட்டம் என்பது தனித்தனியான பொருளைப் பொறுத்தது மட்டுமல்ல; தன் இனத்தை உற்பத்தி செய்து

இனவிருத்தி செய்யும் (குணம்,உடல்வாகு, நிறம், திறமை, அறிவு இவையும் உள்ளடங்கும்) சக்தியைப் பொறுத்ததாகும் என்பது தான்.

''வலுவுள்ளது வாழ்கிறது, மெலிந்தது வீழ்கிறது'' என்கிற இவரின் பரிணாம தத்துவத்தை. சிலர் அவர் காலத்திலேயே கேலி செய்தார்கள்.

உண்மையை கண்டுபிடித்த சாதனையாளர்களை, எல்லாம் உலகம் கேலி செய்வது வாடிக்கைத்தானே?

''உலகை கூர்ந்து கவனிப்பதையும், ஆராய்ச்சிகள் செய்வதையும் நிறுத்துமாறு எப்போது நான் நிர்பந்திக்கப்படுகிறேனோ அன்றைய தினமே நான் இறந்து போவேன்''. என்று கேலி செய்தவர்களுக்குப் பதிலளித்தார் டார்வின்.

மனுகுல மூதாதையரின் முகவரியை உலகிற்குக் காட்டிய முன்னோடி, அறிவு ஒளி 1882-ஆம் ஆண்டு ஏப்ரல்19-ஆம் தேதி தனது சிந்தனையை நிறுத்தி அடங்கிப் போனார்.

இங்கிலாந்தில் 'விஞ்ஞானிகளின் கார்னர்' என்று சொல்லப்படும் வெஸ்ட்மின்ஸ்டர் எபியில் (Westminster Abbey) டார்வினின் நல்லுடல் அடக்கம் செய்யப்பட்டது.

காண்பனவற்றில் உண்மையைத் தேடும் ஆர்வம், புரியாத வற்றையும் அணுக்கமாக ஆராயும் பொறுமை, மத நம்பிக்கையின் ஆணி வேரையே அசைக்கும் என்றும் தெரிந்தும் தாம் உண்மை என்று நம்பியவற்றை அச்சமின்றியும், தயங்காமலும் உலகுக்கு சொன்ன துணிவு. இவைதான் டார்வின் என்ற மாமனிதனுக்கு வானம் வசப்பட்டதற்கான காரணங்கள்.

டார்வினின் கொள்கைகளின் விளைவாக, மாறுதல் ஒன்றைத் தவிர இந்த உலகில் நிலையானது எதுவுமே இல்லை என்று ஹிராக்ளிட்டஸ் கூறிய கருத்து இன்று எல்லோரும் ஏற்கத் தக்கதாகிவிட்டது.

வல்லனவற்றில் வாழ்வு வளம் (Survival of the Fittest) வாழ்க்கைப் போராட்டம் (Struggle for existence) என்பன போன்ற டார்வின் வகுத்தமைத்த சொற்றொடர்கள் எல்லா மொழிகளின் அகராதிகளிலும் இடம் பெற்றுவிட்டன.

உயிரியலையும், மானிடவியலையும் புரட்சிகரமாக மாற்றி யமைத்தது டார்வினுடைய கொள்கைகளேயாகும்.

இந்த உலகில் மனிதனுக்குரிய இடம் குறித்த மனிதரின் கருத்தினை மாற்றியதும் இந்தக் கொள்கைகளேயாகும். இதில் ஐயமேதுமில்லை.

## சார்லஸ் டார்வின் தந்த பரிணாமக் கொள்கையும் வேதாத்திரியின் தன்மாற்றக் கொள்கையும்

டார்வின் பரிணாமக் கொள்கை ஓரறிவிலிருந்து ஆரம்பிக்கிறது. ஆனால் வேதாத்திரியின் தன்மாற்றக் கொள்கை மூலமாகிய பெருவெளியில் (சுத்தவெளி) தொடங்குகிறது.

டார்வின் தனது ஆய்வின் ஒரறிவிலிருந்து ஆறறிவுவரை ஒவ்வொரு உயிரினமும் எவ்வாறு மாற்றம் அடைந்து, அடுத்த கட்ட உயிரினமாக உருவாகிறது என்பதை விளக்குகிறார்.

இவரது ஆய்விற்கு இயற்கைத் தேர்வு ( Natural selection) எனப் பெயரிட்டு அழைத்தார்.

இயற்கைத்தேர்வுக் கோட்பாடு,

இக்கோட்பாட்டின் கூறுகள். 1. மிதமிஞ்சிய இனப்பெருக்கம் 2. வாழ்க்கைப் போராட்டம் 3. பரவலான வேறுபாடுகள் 4. தகுதியானவைத் தப்பிப் பிழைத்தல் 5. இயற்கைத் தேர்வு.

1. மதிமிஞ்சிய இனப்பெருக்கம் தங்களைப் போன்ற பின் சந்ததியை உருவாக்கும் உள்ளுணர்வு அனைத்து விலங்குகளுக்கும் உண்டு. இதனால் அவை தங்களது சந்ததியினை ஜியோமிதி விகிதத்தில் பெருக்கமடையச் செய்யும் தன்மையும் கொண்டிருக்கும்.

2. வாழ்க்கைப் போராட்டம் உயிர் வாழ அனைத்து உயிர்களும் போராட்டச் சூழலைச் சந்திக்க வேண்டியுள்ளது. இத்தகைய போராட்டம் ஒரே இனம் சார்ந்த உயிர்களிடையிலோ அல்லது இரு மாறுபட்ட இனங்களிடையிலோ ஏற்படும்.

3. பரவலான வேறுபாடு தனிப்பட்ட உயிர் மற்றும் உயிரினங்கள் செழித்து தனது நன்மை பயக்கும் உயிரினப் பண்புகளை தனது அடுத்த தலைமுறைக்குச் செலுத்தும் உயிரினத் தொகையில் நிலைநிறுத்தப்படும் பாரம்பரிய வேறுபாடுகளே பரிணாமத்தின் அடிப்படைத் தேவைகளாகின்றன.

4. தகுதியானவைத் தப்பிப் பிழைத்தல் அனைத்து உயிரினங்களும் வாழ்க்கைப் போராட்டத்தைச் சந்திக்கின்றன. அவற்றில், உரிய மாறுபாடுகள் கொண்டவை மட்டுமே தப்பித்து வாழ இயலும். அத்தகைய உயிர்கள் சூழலிலே மிகத் தகுந்தனவாகக் கருதப்பட்டு அப்பண்புகள் சூழல் தன்மைகளுகேற்ப மேலும் மாறுதல்களைப் பெறும்.

5. இயற்கைத் தேர்வு டார்வினின் கருத்துப்படி மிகச் சிறந்தது எனக் கருதப்படும் உயிர்கள் இயற்கைத் தேர்வினால் தேர்ந்தெடுக்கப்பட்டு வாழும் தகுதியைப் பெறுகின்றன எனலாம்.

இயற்கைத் தேர்வு கருத்துருவைப் பயன்படுத்தி அனைத்து வகையான பரிணாம நிகழ்வுகளையும் விளக்கிவிட இயலும் என் டார்வின் நம்பினார்.

**வேதாத்திரி மகரிசியின் தன்மாற்ற–பரிணாமக் கொள்கை**

இறைநிலை என்ற முழு முதற்பொருளானது 1. வற்றாயிருப்பு 2. பேராற்றல் 3. பேரறிவு 4. காலம் என்ற நான்கு வளங்களைக் கொண்டு பெருவெளியாக, சுத்தவெளியாக நிறைந்து விரிந்து நிற்கிறது.

இதன் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் தானே நுண்துகளானது. இதுவே இறைத்துகள் எனப்படுகிறது. இறைத்துகள்களின் தொகுப்பே விண்.

விண் எனும் நுண்ணணுக்கள் ஒன்றை மற்றொன்று தள்ளுகிற ஆற்றல் குறையும் போது அவைகள் நெருங்குகின்றன.

நெருக்கத்தின் அழுத்தத்திற்கு ஏற்ப காற்று, அழுத்தக் காற்று (நெருப்பு), நீர், நிலம் என்று விண்கள் கூட்ட இயக்கத்தின் வேறுபாடுகள் உண்டாகின்றன. இந்த நான்கோடு விண்ணையும் சேர்த்து பஞ்ச பூதங்கள் எனப்படுகின்றன.

பஞ்ச பூதங்களின் சரிவிகிதக் கலவையால் சீவ இனங்கள் தோன்றியன. தாவரங்கள் தோல் மூலம் அழுத்தம் என்ற உணர்வைப் பெறுகின்றன. அதனால் அவை ஓரறிவு இனம் எனப்படுகிறது.

புழு அழுத்த உணர்வும் சுவையுணர்வும் உடையது. அதனை ஈரறிவு என்று மதிக்கிறோம்.

எறும்பு, வண்டுகள் அழுத்தம், சுவை, மணம் என்ற மூன்று உணர்வுகளைப் பெற்றிருக்கின்றன. எனவே இவை மூவறிவு இனமாக பேசப்படுகின்றன.

ஊர்வனவற்றில் கண்களிலிருந்து, காதுகள் இல்லாதவற்றை (பாம்பு முதலியன) நான்கு அறிவு உயிரினம் என்று அழைக்கிறோம்.

இத்துடன் காதும் உள்ள உயிர் வகையை ஐயறிவு என்றும் கருதுகிறோம்.

ஆகவே நிற்பன. நடப்பன, ஊர்வன, நீந்துவன அனைத்தும் ஐயறிவு உயிர்களாகும்.

புலன்களுக்கு எட்டாத காலம், தொலைவு, விரைவு, பருமன் எனும் நான்கு கணக்குகளுக்கு அகப்படாத மறைபொருட்கள் மூன்று. அவை பேரியக்க மண்டலம் முழுவதும் நிரம்பியுள்ளன.

அவை 1. இறைவெளி 2. விண்துகள் 3. காந்த ஆற்றல். இந்த மூன்றையும் உணர்ந்து கொள்ளும் கருவி மனித மூளைதான்.

இந்த அற்புத ஆற்றல்தான் ஆறாவது அறிவு ஆகும். ஆறாவது அறிவு போதிய வளர்ச்சி பெற்றால்தான் மனிதனுக்குப் பிறரை மதித்து ஒத்தும் உதவியும், இட்டுண்டு வாழும் ஏற்றமுள்ள அறிவாட்சித்தரம் பண்பாடாக அமையும்.

**எனவே, ஏதோ ஒரு ஆற்றல் உலகைப் படைத்து பாதுகாத்து பராமரித்து வருகிறது என்ற கருத்தைவிட, இறைநிலையே தன்மாற்றம் பெற்று, பிரபஞ்சத்தில் காணும் பொருட்களாகவும், அண்டங்களாகவும் கோடிக்கணக்கான உருவங்களாகவும் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்ற பேருண்மையை உணர்த்துவதே வேதாத்திரி மகரிசி தரும் தன்மாற்றச் சரித்திரம்.**

ஓரறிவு ஜீவனில் இயல்பூக்கமாக ஏற்படும் மாற்றம் தொடர்ந்து நடைபெற்று ஆறறிவு படைத்த மனிதனை உருவாக்கியிருக்கிறதென்பது டார்வின் தந்த தத்துவமாகும்.

இந்தத் தொடர் மாற்றங்களின் ஊடாக ஒன்றே ஒன்று ஒவ்வொரு ஜீவனிலும் வாசம் செய்து அடுத்தடுத்து ஜீவன்களுக்குத் தாவி அனைத்து ஜீவன்களையும் இணைக்கிறது.

அந்த ஒன்றான கருமையம் அல்லது ஜீவாத்மாவைப் பற்றி டார்வின் தத்துவம் பேசவில்லை.

ஆனால் வேதாத்திரியின் பரிணாமம் அல்லது தன்மாற்றச் சரித்திரம் அந்த ஒன்றைப் பற்றி தெளிவாக வெகுவாகப் பேசுகிறது

**முன்னம் ஒரு துளியான மூலவிந்து நாதத்தால்**
**முற்றறிவன் திருவருளால் முழுமையாய் எனது உடல்**
**சூக்குமமாய் குறுகிநின்று தொடங்கியது தன் வளர்ச்சி**
**சொல்லறிய மறை பொருளாய் தொடர்ந்து வரும் வினைக்கேற்ப...**

(ஞா.க.)

என்பார் வேதாத்திரி மகரிசி. ஒன்றிலிருந்து ஒன்று வருவதை அந்த ஒன்று பரிணாமம் அடைகிறதென்று சொல்கிறோம்.

விலங்கினத்திலிருந்து (குரங்கிலிருந்து) மனிதன் வருகிறான் என்று சொல்வதில் மனிதனின் பெருமை அவ்வளவாக வெளிப்படவில்லை.

மனிதன் விலங்கினத்திலிருந்து வந்தான் என்று சொல்வதைவிட இறைநிலையே தானே மாற்றம் அடைந்து மாற்றம் அடைந்து விலங்கினம் மூலமாக மனிதனாக வருகிறதென்று சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பார்.

**சார்லஸ் டார்வின் விஞ்ஞானத் தத்துவம் வேதாத்திரிய மகரிசியின் விஞ்ஞான மெய்ஞ்ஞானத் தத்துவமாக மாறியிருப்பது அறிவின் பயணத்தில் உச்சக் கட்டமாகும்.**



# 10. வேதாத்திரியத்தில் காரல்மார்க்ஸ்

ஜெர்மனியில் தோன்றிய காரல் மார்க்ஸ் மெய்யியலாளர்களுள் ஒருவராவார். அறிவியல் சார்ந்த பொதுவுடைமையை வகுத்தவருள் முதன்மையானவர்.


மெய்யியலாளராக மட்டுமல்லாது அரசியல் பொருளாதார வரலாற்றியல் வல்லுனராக, தலைசிறந்த ஆய்வறிஞராக, எழுத்தாளராக, சிந்தனையாளராக, புரட்சியாளராக காரல் மார்க்ஸ் அறியப்படுகிறார்.

பல்வேறு துறைகளிலும் ஏராளமான விவகாரங்கள் பற்றிய ஆய்வுகளையும் கருத்துக்களையும் இவர் வெளியிட்டுள்ளார் என்றாலும் இவரது ஆய்வுகளும், கருத்துக்களும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் வரலாற்றை ஆய்வதாகவே அமைந்தது.

பொதுவுடைமைக் கொள்கைகளின் மூலவர்களுள் ஒருவராக காரல் மார்க்ஸ் கருதப்படுகிறார். மற்றையவர் பிரெட்ரிக் ஏங்கல்சு ஆவார்.

பொருளாதார விடுதலையே மனிதகுலம் மலர்ச்சியடைய வழி என சிந்தித்தவர் காரல்மார்க்ஸ்.

## காரல் மார்க்ஸ் வாழ்க்கைக்குறிப்பு (கி.பி.1818–1883)



கார்ல் மார்க்சு

கார்ல் மார்க்சு, தற்போது ஜெர்மனியின் ஒரு பகுதியாக இருக்கும் புருசியாவில் ட்ரையர் நகரில் 1818 மே 5-ஆம் நாள் பிறந்தார்.

இவரின் தந்தை வசதி படைத்த வழக்குரைஞர், கார்ல் மார்க்சு அவருக்கு மூன்றாவது மகனாவார். கார்லின் இளவயது பற்றி அதிகம் வெளியே தெரியவில்லை.

1830 வரை தனிப்பட்ட முறையில் இவருக்கு கல்வி கற்பிக்கப்பட்டது. கார்ல் தமது பதினேழாம் வயதில் சட்டம் பயில பான் பல்கலைக் கழகம் சென்றார்.

பெர்லின் பல்கலைக்கழகத்தில் வரலாறு, மெய்யியல் ஆகிய துறைகளில் பயின்ற கார்ல் மார்க்சு யெனா பல்கலைக்கழகத்தில் மெய்யியலுக்கான முனைவர் பட்டத்தினைப் பெற்றார்.

1841இல் பட்டம் பெற்ற மார்க்சு சில காலம் இதழியல் துறையில் இருந்தார். கொலோன் நகரில் ரைனிஷ் ஸைத்துங் எனும் இதழின் ஆசிரியராக இருந்தார். ஆனால் அவருடைய தீவிர அரசியல் கருத்துகளின் விளைவாக இடர் ஏற்படவே பாரிசு சென்றார்.

அங்கு 1844-ல் பிரெடரிக் ஏங்கல்சைச் சந்தித்தார். ஒருமித்த கருத்தும் மிகுந்த திறமையும் கொண்ட இருவருக்கும் இடையே நட்பு மலர்ந்தது. அவர்களிடையே தோன்றிய தனிப்பட்ட உறவும் அரசியல் நட்பும் இறுதிவரை நிலைத்திருந்தது.

பாரிசில் இருந்தபோது லுட்விக் பொன் வெஸ்ற்ஃபாலென் பிரபுவின் மகளான 21 வயது நிறைந்த ஜெனியுடன் மார்க்சுக்கு காதல் மலர்ந்தது. அப்போது மார்க்சுக்கு வயது 17.

பிரபுத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த ஜெனியின் சகோதரர் ஒருவர் பின்னாளில் புருசியாவின் அமைச்சரவையில் பொறுப்பு வகித்தவர்.

கடுமையான குடும்ப எதிர்ப்பின் காரணமாக எட்டு ஆண்டுகள் தமது காதலை கமுக்கமாக வைத்திருந்த மார்க்சு, ஜெனிக்கு 29 வயதான போது அவரைத் திருமணம் செய்துகொண்டார்.

மார்க்சுக்கும் ஜெனிக்கும் ஏழு குழந்தைகள் பிறந்தனர். எனினும் மூவர் தவிர ஏனையோர் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர்.

நியூயார்க் டெய்லி டிரிபியூன் என்னும் முற்போக்கு இதழுக்கு ஆக்கங்கள் எழுதிய போதும் மார்க்சுக்கு உறுதியான வருமானம் என்று எதுவும் இருக்கவில்லை. அவர் அந்த இதழின் ஐரோப்பிய அரசியல் நிருபராக இருந்தார். ஒவ்வொரு கட்டுரைக்கும் ஒரு பவுண்டு பணம் வழங்கினர் .

ஆயினும் அவர் எழுதிய கட்டுரைகள் முழுவதும் பதிப்பாகவில்லை. 1862 வரை டிரிபியூனுக்கு எழுதி வந்தார். ஜெனியின் உறவினர் ஒருவர் இறந்தபோதும், ஜெனியின் தாய் இறந்தபோதும் ஜெனிக்கு மரபுரிமையாக ஓரளவு பணம் கிடைத்தது.

இதனால் அவர்கள் இலண்டனின் புறநகர்ப் பகுதியான கெண்டிஷ் நகரில் இன்னொரு வீட்டுக்குக் குடிபெயர முடிந்தது. வருமானம் குறைவாக இருந்ததால் மார்க்சு பொதுவாக அடிப்படை வசதிகளுடனேயே வாழ்ந்து வந்தார்.

எனினும், தனது மனைவி, குழந்தைகளின் சமூகத் தகுதியைக் கருதி ஓரளவு நடுத்தர வகுப்பு ஆடம்பரங்களுக்கும் செலவு செய்ய வேண்டியிருந்தது.

**பணியும் இடர்களும்**

ஜார்ஜ் வில்லியம் பிரெடரிக் ஹெகல் என்பவரின் தருக்கமுறை மற்றும் வரலாற்றுப் பார்வை, பொருளாதார அறிஞரான ஆடம் சிமித், டேவிட் ரிக்கார்டோ போன்றவர்களின் செவ்வியல் பொருளியல் கருத்துக்கள், பிரான்சு தத்துவவியலாளர் ஜான் ஜாக் ரூசோவின் குடியரசு பற்றிய கருத்துக்கள் ஆகியவற்றால் மார்க்சு மிகவும் கவரப்பட்டார்.

கார்ல் மார்க்சு பிரான்சிலிருந்து வெளியேற்றப்பட்டு பிரசல்ஸ் சென்றார். அங்குதான் 1847-ல் ''தத்துவத்தின் வறுமை'' (The Poverty of Philosophy) என்னும் தமது முதல் நூலை வெளியிட்டார்.

அடுத்த ஆண்டில் ஏங்கல்சுடன் சேர்ந்து ''பொதுவுடைமை அறிக்கை'' (The Communist Manifesto) எனும் நூலையும் வெளியிட்டார். அது மிகப் பலர் வாசிக்கும் நூலாகும்.

இறுதியில் மார்க்சு கொலோன் நகருக்குத் திரும்பினார். ஆனால் சில மாதங்களுள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

பிரான்சு, பெல்சியம், செருமனி ஆகிய நாடுகளின் புரட்சிகர இயக்கங்களில் பங்காற்றி ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு நாடு கடத்தப்பட்ட மார்க்ஸ், இலண்டன் சென்று அங்கேயே இறுதிவரை வாழ்ந்தார்.

## நிதி உதவிகள்

மார்க்சு இதழியல் தொழிலில் சிறிது பணம் ஈட்டிய போதும் தம் வாழ்வின் பெரும் பகுதியை இலண்டனில் ஆராய்ச்சியிலும் அரசியல், பொருளியல் பற்றிய நூல்களை எழுதுவதிலும் கழித்தார்.

இவருக்கு பிரெட்ரிக் ஏங்கல்சு வழங்கிய கொடை அந்நாட்களில் குடும்பம் வாழ்வதற்கு உதவியாக இருந்தது.

மார்க்சின் பெற்றோர் இறந்த போது அவருக்கு மரபுரிமையாக சிறிது பணம் கிடைத்தது.

1845 இல் மார்க்சு தோற்றுவித்த முதலாவது பொதுவுடைமை கழகத்தின் பதினான்கு உறுப்பினர்களுள் ஒருவரான வில்ஹெம் வோல்ஃப் அறுநூறு பவுண்டு அளவில் விருப்புரிமைக் கொடை அளித்தார்.

1850இல் நாடு கடந்து இலண்டனில் வாழ்ந்த காலத்தில் மார்க்சு கடும் வறுமைக்குள்ளானார். அக்காலத்தில் கடன் கொடுத்தவர்களுக்குப் பயந்துகொண்டே வாழும் நிலை ஏற்பட்டது.

தன்னுடைய ஆடைகள் எல்லாம் அடமானத்தில் இருந்ததால் அவர் வீட்டைவிட்டே வெளியே செல்ல முடியாமல் போன ஒரு காலமும் இருந்தது. ஒருமுறை தனது வீட்டைவிட்டு விரட்டப்பட்டார்.

தன் தந்தையின் இறப்புக்கு பின் ஏங்கல்சு தனது குடும்ப வணிகத்தில் கிடைத்த வருமானத்தில் மார்க்சுக்கு 350 பவுண்டு ஓய்வூதியத்துக்கு ஏற்பாடு செய்தார். இதுவே மார்க்சின் குறிப்பிடத்தக்க வருமானமாக இருந்தது.

## மூலதனம் நூல்

அக்காலத்தில் இங்கிலாந்து, ஐரோப்பாவிலிருந்து வெளியேறிய அரசியல் ஏதிலிகளுக்குரிய புகலிடமாக இருந்தது.

அக்காலகட்டத்தில் பெரும் முயற்சியில் கட்டிய பிரமாண்டமான பிரித்தானிய அருங்காட்சியகத்தின் கட்டுமான வேலைகள் நிறைவுற்றிருந்தது.

மார்க்சு நாள் தவறாது அங்குச் சென்று ஒவ்வொரு வேலை நாளிலும் 12 மணி நேரத்தை அங்குச் செலவிட்டு வந்தார். அங்கே தான் மூலதனம் எனும் நூல் தோன்றியது.

கார்ல் மார்க்சின் சிறப்பு வாய்ந்த மூலதனம் நூலின் முதல் தொகுதி 1867இல் வெளிவந்தது.

1883இல் மார்க்சு இறந்த பிறகு அவர் விட்டுச் சென்ற குறிப்புகளையும் கையெழுத்துப் படிகளையும் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் பதிப்பித்து வெளியிட்டார்.

### மார்க்சின் சிந்தனைகள்

மார்க்சு மறைந்து ஒரு நூற்றாண்டுக்குப் பின் இன்று மார்க்சியக் கொள்கையைப் பின்பற்றுவோரின் தொகை 130 கோடியாகும்.

மானுட வரலாற்றில் ஒட்டு மொத்த எண்ணிக்கையிலும், உலக மக்கள் தொகையின் விழுக்காட்டிலும் இத்தனை பேர் வேறு எந்த கொள்கையையும் பின்பற்றவில்லை.

மார்க்சைப் போல மார்க்சியவாதிகளாலும் எதிர்ப்பாளர்களாலும் ஒன்று போலவே பிழையாக புரிந்து கொள்ளப்பட்டவர்கள் தற்கால வரலாற்றில் மிகவும் குறைவு என மார்க்சு பற்றி ஆய்வு செய்தவரான அமெரிக்காவின் ஹால் டிராப்பர் ஒருமுறை குறிப்பிட்டார்.

மார்க்சின் சிந்தனைகளைப் பல்வேறு குழுக்கள் பல்வேறு வகையாக விளக்கியுள்ளன. இவர்களுள், மார்க்சிய-லெனினியவாதிகள், டிரொஸ்கியிசவாதிகள், மாவோயிசவாதிகள், தாராண்மை மார்க்சியவாதிகள் என்போர் அடங்குவர்.

### மார்க்சு சிந்தனைகளில் செல்வாக்குச் செலுத்தியவை

மார்க்சின் சிந்தனைகளில் பல முந்திய, சமகாலச் சிந்தனைகளின் செல்வாக்கு உள்ளது. அவற்றுள் சில:

- ✰ ஹெகலின் முறைகளும், வரலாற்று ஆய்வுப்போக்கும்.
- ✰ ஆடம் சிமித், டேவிட் ரிக்காடோ போன்றோரின் செந்நெறி அரசியல் பொருளாதாரம்.
- ✰ பிரெஞ்சு சோசலிச, சமூகவியல் சிந்தனைகள். குறிப்பாக ஜான் ஜாக் ரூசோ, ஹென்றி டி செயின்ட்-சிமோன், சார்லஸ் ஃபூரியர் போன்றோரின் சிந்தனைகள்.

- ✰ முந்திய செருமானிய மெய்யியல் பொருள்முதல்வாதம், குறிப்பாக லுட்விக் ஃபியுவெர்பக்.
- ✰ பிரடெரிக் ஏங்கெல்சின் தொழிலாளர் வர்க்கத்தினருடனான ஒருமைப்பாடு.

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் எனப்படும் மார்க்சின் வரலாறு பற்றிய நோக்கு ஹெகெலின் சிந்தனைகளின் தாக்கத்தைக் கொண்டது ஆகும். மனித வரலாறு துண்டு துண்டாக இருந்து முழுமையையும் உண்மையையும் நோக்கிச் செல்லும் இயல்பு கொண்டது என ஹெகல் நம்பினார்.

இந்த உண்மைநிலை நோக்கிச் செல்லும் வழிமுறை படிமுறையானது என்றும், சில வேளைகளில் இருக்கும் நிலைக்கு எதிராக தொடர்ச்சியற்ற புரட்சிகரமான பாய்ச்சலும், எழுச்சிகளும் தேவை என்றும் ஹேகல் விளக்கியிருந்தார்.

எடுத்துக்காட்டாக, ஹெகல் ஐக்கிய அமெரிக்காவில் நடைமுறையில் இருந்த அடிமை முறையைத் தீவிரமாக எதிர்த்து வந்ததுடன், கிறித்தவ நாடுகள் இதனை ஒழித்துவிடுவார்கள் என்றும் கணித்தார்.

### மார்க்சின் மெய்யியல் கொள்கைகள்

மார்க்சின் மெய்யியல் அவரது மனித இயல்பு பற்றிய நோக்கில் தங்கியுள்ளது. அடிப்படையில், மனிதனுடைய இயல்பு இயற்கையை மாற்றுவது என்று மார்க்சு கருதினார்.

அவ்வாறு இயற்கையை மாற்றும் செயல்முறையை ''உழைப்பு'' என்றும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வல்லமையை உழைக்கும் திறன் என்றும் அவர் அழைத்தார். மார்க்சைப் பொறுத்தவரை, இது ஒரே நேரத்தில் உடல் சார்ந்ததும் மனம் சார்ந்ததுமான செயற்பாடு ஆகும்.

- ✰ ஒரு சிலந்தி ஒரு நெசவாளியை ஒத்த செயல்பாடுகளில் ஈடுபடுகிறது, தனது கூட்டைக் கட்டும் தேனீ பல கட்டிடக்கலைஞர்களை வெட்கப் படும்படி செய்கிறது. ஆனால், மிகத்திறமையற்ற கட்டிடக் கலைஞனுக்கும், மிகச் சிறந்த தேனீக்கும் இடையிலுள்ள வேறுபாடு, கட்டிடக்கலைஞன் கட்டிடத்தை உண்மையாகக் கட்டுமுன்னரே கற்பனையில் கட்டிவிடுகிறான் என்பதாகும்.

## கார்ல் மார்க்சின் கடிதம்

கார்ல் மார்க்சு - மார்ச் 5, 1852-ல் Weydemeyerக்கு எழுதிய கடிதமொன்றிலிருந்து பெறப்பட்ட பின்வரும் பகுதி அவரின் ஆய்வுகள், கண்டுபிடிப்புகளின் சாராம்சத்தைத் தருகிறது.

''நவீன சமூகத்தில் வர்க்கங்களின் இருப்பையோ அவற்றுகிடையான முரண்பாட்டினையோ கண்டறிந்ததற்கான பெருமை எனக்குரியதன்று. எனக்கு நீண்ட காலத்துக்கு முன்னரே வர்க்க முரண்பாட்டின் வரலாற்று வளர்ச்சியை பூர்ஷ்வா வரலாற்றறிஞர்களும், வர்க்கங்களின் பொருளியல் சட்டகத்தைப்பற்றி பூர்ஷ்வா பொருளியலாளர்களும் விவரித்து விட்டார்கள். நான் புதிதாக செய்ததெல்லாம், பின்வருவனவற்றை நிறுவியதுதான்.

1. உற்பத்தி வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டங்களில் மட்டுமே வர்க்கங்களின் இருப்பு கட்டுண்டிருக்கிறது.
2. வர்க்க முரண்பாடானது பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்துக்கு இட்டுச்செல்லும்.
3. இந்தப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது வர்க்கங்களினதும் வர்க்க சமுதாயத்தினதும் அழிவுக்கான இடைமாறு நிலையை மட்டுமே அமைத்துக்கொடுக்கும்''.

## இறுதிக் காலம்

1881 ஆம் ஆண்டு திசம்பரில் மார்க்சின் மனைவி ஜெனி காலமானார். இதன்பின் மார்க்சு 15 மாதங்கள் மூக்கடைப்பு நோயினால் அவதியுற்றார்.

இறுதியில் இது மூச்சுக்குழாய் அழற்சி (bronchitis), நுரையீரலுறை அழற்சி (pleurisy) போன்ற நோய்களாகி அவரது உயிரைப் பறித்தது. 1883 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆம் தேதி மார்க்சு இலண்டனில் காலமானார்.

இறக்கும்போது நாடற்றவராக இருந்த மார்க்சை இலண்டனிலுள்ள ஹைகேட் இடுகாட்டில் அடக்கம் செய்தனர். மார்க்சின் நெருங்கிய தோழர்கள் பலர் இவரது இறப்பின்போது கலந்துகொண்டு பேசினர். இவர்களுள் வில்ஹெல்ம் லீப்னெக்ட், பிரெட்ரிக் ஏங்கல்ஸ் முதலியோர் அடங்குவர். ஏங்கெல்சு பேசும்போது,

''மார்ச்சு 14 ஆம் தேதி மூன்று மணிக்கு கால் மணிநேரம் இருந்த போது வாழ்ந்து கொண்டிருந்த மிகப்பெரிய சிந்தனையாளர் சிந்திப்பதை

நிறுத்திவிட்டார். இவர் இரண்டு நிமிடங்கள் மட்டுமே தனிமையில் விடப்பட்டிருந்தார். திரும்பி வந்து பார்த்தபோது அவர் தனது நாற்காலியில் மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டதைக் கண்டோம்'' என்றார்

**கார்ல் மார்க்சின் கல்லறை**

இவரது கல்லறையில், பொதுவுடமை அறிக்கையின் இறுதி வரியான (உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்) Workers of All Land Unite என்பதும், The philosophers have only interpreted the world in various ways—the point however is to change it (மெய்யியலாளர்கள் உலகை விளக்குவதற்கு மட்டுமே பல வழிகளைக் கையாண்டுள்ளனர் - நோக்கம் அதனை மாற்றுவதே) என்ற வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

1954 ஆம் ஆண்டில் பெரிய பிரித்தானியப் பொதுவுடமைக் கட்சி மார்க்சின் கல்லறையை அமைத்தனர். இதில் லாரன்ஸ் பிராட்ஷாவினால் உருவாக்கப்பட்ட மார்க்சின் மார்பளவுச் சிலையும் உள்ளது.

மார்க்சின் முந்தைய கல்லறை மிகவும் எளிமையானதாகவே இருந்தது. 1970 ஆம் ஆண்டில் இக் கல்லறையை கையால் செய்த வெடிகுண்டு மூலம் தகர்க்க முயற்சி செய்யப்பட்டது. ஆயினும் இது வெற்றியளிக்கவில்லை.

**மார்க்சுசின் ஆக்கங்கள்**

- ❖ சரியானது பற்றிய ஹெகலின் தத்துவத்தின் திறனாய்விற்கு அறிமுகம் (Introduction to a Critique of Hegel's philosophy of Right)- 1843.
- ❖ தத்துவத்தின் வறுமை (The Poverty of Philosophy) - 1847.
- ❖ சுதந்திரமான நாணயமாற்றுக் கேள்வி பற்றிய சொற்பொழிவு (Discourse upon The Question of Free Exchange) -1848.
- ❖ கம்யூனிஸ்ட் அறிக்கை (The communist Manifesto) - 1848.
- ❖ மூலதனம் (Das kapital) - 1867
- ❖ அரசியல் பொருளாதார திறனாய்விற்கு அறிமுகம்(Introduction to the Critique of Political Economy) -1859.

இன்றைய மானுட சமூகத்தின் பல்வேறுகொடுமைகளுக்கும், அழிவுகளுக்கும் காரணமாக இருப்பது நமது பொருளாதார அமைப்பு.

பொருளுடைமையும், சொத்துடைமையும் மனிதரால் உருவாக்கப்பட்டவை.

- ‘‘உலகத்தின் உடைமைகள் அனைத்தும் மக்கள் அனைவருக்கும் பொதுவானவை. அவற்றை காலப்போக்கில் சில வசதி படைத்த மனிதர்கள்தங்கள்தனியுடைமையாக்கிக் கொண்டனர். தொழிலாளிகளின் உழைப்பை சுரண்டி முதலாளிகள் வளர்கின்றனர். அதனால்தான் இருப்பவர்கள் சிலரும், இல்லாதவர்கள் பலருமாக சமுதாயம் மாறி வருகிறது. இந்த நிலை மாற வேண்டும். அதற்கு முதலாளிகள் இணங்க மாட்டார்கள். ஆகவே தொழிலாளிகள் ஒன்று திரண்டு போராடி புரட்சி செய்து தங்கள் உரிமைகளைப் பெற வேண்டும்’’.

**இதுதான் காரல்மார்க்சு பொதுவுடைமைக் கொள்கை**

**வேதாத்திரி மகரிசியோ** பொதுவுடைமைப் பற்றி காரல் மார்க்சை விட அதிகமாகச் சிந்திக்கிறார்.

எல்லைகள் கடந்த எல்லையில்லா அன்பு நோக்கு உருவாக உலகமே ஓர் குடும்பம் என்ற உயர்வான உணர்வு ஊற வேண்டும்.

அனைத்து நாடுகளின் சாதி சமய நிற இனத்தாம் ஊறில்லா உள்ளத்ததுடன் ஒரே வண்ண எண்ணம் பெற்றால் தான் உலகப் பொதுமை நல்லதிட்டங்களை நல்லபடி நிறைவேற்ற இயலும்.

பொது இணைப்பில், உறவின் தொடர்பில் உருவாகும் ஒட்டுறவின் இறுக்கத்தால் நெருக்கத்தால் மட்டுமே சுயநலம் கழன்று பொதுநலம் தழைக்கும் என்பது உறுதி. அதனால் தான் வேதாத்திரி மகரிசி

**உலகத் திருந்தி உலக மக்கள் ஒன்றாய் வாழ**
**அனைத்துலக மக்களும் ஓர் குடும்பமாக**
**மண்ணுகில் புதிய சமுதாயம் தோன்றும்**

போன்ற குவலயக் குலப் பொதுமைக் கருத்துக்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்.

இன்னும் ஒருபடி மேலே சென்று சாதி , சமய, இன,நிற, கட்சி. நாடு வேறுபாடற்ற ஓருலகக் குடியாட்சியே வேண்டும் என்கிறார்.

**எங்கள் நாடென்றெவரும் பிரித்துச் சொல்ல**
**இடமில்லா உலகப் பொது ஆட்சி காண்போம்!**

**நாடனைத்தும் இணைந்துலகில் நல்லாட்சி காண்போம்**
**உலக ஆட்சியின் கீழ் சுதந்திரமாய் வாழ்வோம்**

என்பது வேதாத்திரியாரின் பரந்து விரிந்த பாருலகக் கண்ணோட்டத்தில் மலர்ந்த புத்தாக்க ஆட்சிக் கருத்தாகும்.

பாருலகப் பேராட்சியில் பொருளாதாரச் சுபிட்சமும் சமத்துவமும் இன்றியமையாதவை ஆகும்.

ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வு குறைந்து சரிநிகர் சமச் சமுதாயம் நிறைவாக நிறைய பொதுப் பொருளாதார முறையே சிறந்தது என்பது வேதாத்திரியாரின் கருத்து.

எல்லாரும் எல்லாமும் பெற்று வல்லோராக நல்லோராக வலம் வருகின்ற பொதுமைப் பொருளியலே சிறந்தது என்று பல இடங்களில் பதிவு செய்துள்ளார்கள்.

**பார் முழுதும் பொருள் துறையில் சமநீதி காண்**
**பொருட்களெல்லாம் பொதுவுடமை நாட்டில்**

எனப் பலப்பல கருத்துக்களை வேதாத்திரியத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

**எங்கெங்கும் உலகினிலே பிறப்போர்க்கெல்லாம்**
**இவ்வுலகம் சொந்தமென்ற உண்மை ஏற்று**

என்று ஒருலகச் சொத்துரிமைப் பற்றி நானில மக்களுக்கு நல்லுரை நல்குகிறார் வேதாத்திரியார்.

பொருளியல் வேறுபாடுகளுக்கும் சமூகச் சீரழிவிற்கும் காரணமான தனியார் சொத்துரிமை தடை செய்யப்பட வேண்டுமென்பதே வேதாத்திரியாரின முடிவு.

தலை சிறந்த கல்வியறிவால் மட்டுமே ஞானம் தலை நிமிர முடியும் என்பது வேதாத்திரியாரின வேதவாக்காகும்.

அந்த அறிவைப் போதிக்கும் மொழியும், ஆசிரியர்களும் அவனிக்கே பொதுமையாக அமைய வேண்டும் என்பது வேதாத்திரியாரின் புதுமையான கருத்தாகும்.

எல்லாத் துறைகளிலும் கைதேர்ந்த அறிஞர்களின் கைவண்ணம் பதிவுபெற அறிஞர் பொதுமைத் திட்டம் உதவி செய்யும்.

**பொது மொழியால் உலகம் ஒன்றாம்**
**ஞானப் பேறு உலகெங்கும் ஓங்க வேண்டும்**
**அறிவு நலமுடையோர் மேன்மேலும் பெருக!**

போன்ற வேதாத்திரிய வரிகள் மகரிசியின் மொழி, கல்வி, அறிவு பற்றிய பொதுமைக் கருத்தாக்கத்தினை துலக்குவனவாகும்.

ஒரு சமூகத்தின் நல வாழ்வை நிர்ணயிப்பதில் மிகக் குறிப்பிடத் தக்க பங்கை வகிப்பது பொருளாதார அமைப்பாகும்.

ஓரிடத்தில் பணக்குவிப்பும், மற்றோரிடத்தில் வறுமையும் நிலவும் சமூகத்தின் சீர்நலம் அழிவுறுகிறது.

பணக்காரர், ஏழை என்ற இரண்டு வர்க்கங்களாக மானுடம் பிளவுபடுகிறது. பொருளாதார ஏற்றதாழ்வின் விளைவாக வருவதைப் பற்றி வேதாத்திரி மகரிசி குறிப்பிடுகின்றார்.

''1. பட்டினி 2. நோய் 3. பகை 4. வஞ்சம் 5. பஞ்சமா பாதகம் 6. ஏமாற்றுதல் 7. கடன் 8. இல்வாழ்வில் மனமுறிவு 9. கல்லாமை 10 பிச்சை 11. தேவையற்ற பொருள் தோற்றம் 12. நல்வாழ்விற்கான பொருள் உற்பத்திக் குறைவு. ஆகியவற்றை குறிப்பிடுகின்றார்.

சமூக இயங்கியலின் அடிப்படை, உழைப்பும் உழைப்பாளர்களும் தான். உழைப்புதான் பொருளாதார அமைப்பை நிர்ணயம் செய்யும் ஆற்றலாக இருக்க வேண்டும். உழைப்பு சாராத உற்பத்தி சாராத வணிகம் என்பது சமூகத்தில் மேலாதிக்கம் பெறுகிறது.

**'' சொத்துரிமையும், வணிகமும் சமூகத்தின் பதர்கள்''**

என்பார் வேதாத்திரி.

**பொருட்களெல்லாம் பொது உடைமையான நாட்டில்**
**பொது நலத்தில் தன் நலத்தைப் பொருத்தி மக்கள்**
**பொருள் ஈட்ட ஒற்றுமையாய் உழைப்போர், நல்லோர்**
**போதனைகள் எளிதாகச் செயலாய் மாறும்**
**பொருள் ஈட்டத் தெரியாதோர் இயலாதோர்க்கும்**
**போதுமென்ற அளவினிலே வசதி கிட்டும்**
**பொருள் துறையில் பொது முறையைக் கண்டுவிட்டால்**
**பொதுத் தொண்டே வாழ்வாகும் அறம் தழைக்கும்** (ஞா.க.)

பொதுவுடைமையால்தான் உலகம் தழைக்கும் என்று ஆணித்தரமாக பதிவு செய்கிறார் வேதாத்திரி மகரிசி.

❀ ''சமுதாயத்தின் இறந்தகால வரலாறு வர்க்கப் போராட்டத்தின் வரலாறு, முதலாளிகளின் பொருளாதார பலம் பெருகப் பெருக தொழிலாளிகள் நசுக்கப்படுகிறார்கள். பொறுத்தது போதும் என்று பொங்கியெழுந்து தொழிலாளிகள் ஒன்றுபட்டு முதலாளித்துவ போக்கை மாற்ற வேண்டும். தொழிலாளிகள் தங்கள் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள தொழிற்சங்க அமைப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்''.

இதுதான் மூலதனம் என்ற அந்த நூலில் கார்ல் மார்க்ஸ் வாதிட்ட அடிப்படைக் கருத்து.

நம்முடைய பொருளாதார அமைப்பை மூலதனம் என்ற தவறான கருத்தாக்கத்தால் நிர்ணயிக்கப்படும் போக்கு உருவாகிவிட்டது. மூலதனம் என்பது தனியார் உரிமையாக அமையும் போது கீழ்கண்ட வகையில் சீரழிவுகள் ஏற்படும் என்கிறார் வேதாத்திரி மகரிசி.

1. சுயமுயற்சி சுயஉழைப்பு இல்லாமல் போகும்.
2. பிறருடைய உழைப்பைச் சுரண்டும் நிலை உருவாகும்.
3. பணம் என்பதே வாழ்வை இயக்கும் ஆற்றலாக மாறிவிடும்.

**மூலதனப் போராட்டம்**

மூலதனம் இட்டுத் தொடங்கப்படும் எவ்வகைத் தொழிலும் அத்தொழிலிருந்து கிடைக்கும் வருவாயும், மூலதனத்தின் விளைவுப் படைப்பாகக் கருத்து வடிவம் பெறுகிறது.

1. மனிதருக்கிடையே போட்டி, பகை
2. ஒழுக்கமில்லாத பொருள் குவிப்பு நெறி
3. ஆடம்பரம் வறுமை என்ற சமூகப் பிளவு நிலை
4. பிறர் உழைப்பைச் சுரண்டும் செயல் தன்மை

**மூலதனமே அரசை, மதங்கள் தம்மை முறை மாற்றி**

**விட்டுள்ளது சிந்திப்பீரே** என்கிறார் வேதாத்திரியார்.

**மூலதனம் தனிமனிதன் உரிமை யாரும்**
**முறையின்கீழ் கருத்து செயல் முரணாயிற்று**
**மூலதன உரிமைக்கே மனிதர் இன்று**
**முயற்சித்துப் போட்டியினால் நலிகின்றார்கள்**
**மூலதனம் பெரும்பாலோர் ஒழுக்கம் போக்க**
**முறை தவறி குற்றமிழைக்கின்றார் மக்கள்**
**மூலதனமே அரசை மதங்கள் தம்மை**
**முறை மாற்றி விட்டுளது சிந்திப்பீரே** (ஞா.க.)

என்று மூலதனப் போராட்டம் பற்றி வேதாத்திரியார் குறிப்பிடுகின்றார்.

உலகம் முழுவதும் தொழிற்சங்கங்கள் இருப்பதற்கு காரணம் கார்ல் மார்க்ஸ்தான். மார்க்ஸின் பொதுவுடைமை கருத்துகள் உலகம் முழுவதும் பரவி வலுப்பெறத் தொடங்கின.

மார்க்ஸ் முன்னுரைத்தது போலவே புரட்சிகள் வெடிக்கத் தொடங்கின. 1917-ஆம் ஆண்டு ரஷ்யாவில் நவம்பர் புரட்சி நடந்து லெனின் தலைமையில் பொதுவுடைமை ஆட்சி (கம்யூனிஸ்ட் ஆட்சி) மலர்ந்தது.

அதன் பின்னர் ஒன்றன்பின் ஒன்றாக ச்செக்கோஸ்லோவாகியா, யூகோஸ்லாவியா, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, போலந்து, பல்கேரியா, ருமேனியா, அல்பீரியா, சீனா, வடகொரியா, வியட்நாம், கியூபா போன்ற நாடுகளுக்கு கம்யூனிசம் பரவியது.

இன்றைய உலகில் ஒரு தொழிலாளியின் நலன் காக்கப்படும் ஒவ்வொரு கணமும் மார்க்ஸுக்குதான் நன்றி சொல்கிறது வரலாறு

பாட்டாளிகளை அவர் அன்புடன் 'காம்ரேட்ஸ்' அதாவது 'தோழர்களே' என்றுதான் அழைத்தார். இன்றும்கூட தொழிற்சங்கங்களில் அந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது. பொதுவுடைமைக் கொள்கையில் அடிப்படையில் எந்த பிரச்சினையும் கிடையாது.

கம்யூனிசத்தின் இன்றைய அழிவிற்கு அது நடைமுறைப் படுத்தப்பட்ட விதம்தான் காரணமே தவிர, அதன் அடிப்படை நோக்கங்கள் அல்ல.

அந்த நோக்கங்கள் உயரியவை. மார்க்ஸ் நினைத்தது போலவே அது செயல்படுத்தப் பட்டிருந்தால் அதைவிட ஒரு நியாயமான பொருளியல் சித்தாந்தம் இருக்குமா என்பது சந்தேகமே.

பொதுவுடைமைப் பொருளாதாரம் அமைப்பு, உலகமெல்லாம் தழைக்க வேண்டும் என்று கனவு காண்கிறார் வேதாத்திரி மகரிசி.

பொதுவுடைமைத் தத்துவம் என்பது ஒரு பொருளாதாரச் சமன்பாட்டு நெறி மட்டுமல்ல. அது ஒரு சமூக நல் வாழ்வுத் தத்துவம் என்பதை வேதாத்திரி மகரிசி அவர்கள் மிக அழுத்தமாக கொள்கையாக கொண்டிருக்கிறார்கள்.

அறநெறி சார்ந்த வாழ்வியல் ஒற்றுமையும். பொது நலமும் சிறக்கும் வாழ்வியல் அமைய வேண்டும் என்பது தான் அது என்பதை வேதாத்திரி மகரிசி அவர்கள் மிக அழுத்தமாக உணர்ந்துரைக்கிறார்கள்.

## பொதுவுடைமை அமையும் முறை.

மக்கள் நலம் சார்ந்த பொருளாதார அமைப்பு, பொதுவுடைமை வழியாகத்தான் அமைய முடியும் என்பதை அழுத்தமாக உணர்ந்து உரைத்துள்ள வேதாத்திரி மகரிசி, அதை உருவாக்குவதற்கான வழிமுறைகளையும் மிகத் தெளிவாகக் காட்டுகிறார்கள்.

பணம் என்ற குறியீட்டின் ஆளுமை அகற்றப்பட்டு, ஆன்மீகமும் அறநெறியும் தழுவிய பொதுவுடைமைக் கோட்பாட்டை, கூட்டுறவு முறையில் பொருளாக்கமும் பங்கீடும் நடைபெறும் தத்துவத்தை மிக அழுத்தமாக வேதாத்திரி மகரிசி அவர்கள் மானுடத்திற்கு வழங்கி உள்ளார்கள். அது மானுடப் பண்பாக மலரும் காலம் வரும்.

பாருலகின் பரந்துபட்ட பல்வேறு துறைகளைப் பற்றிய பொதுவுடைமைக் பயன்பாட்டுச் சிந்தனை முடிவுகளை முத்தாய்ப்பாக விதைத்துள்ளார் வேதாத்திரியார்.

வேதாத்திரியத்தில், அரசியல், ஆன்மீகம், அறிவியல், பொருளியல், கலை, இலக்கியம், கல்வி, மொழியியல், வேளாண்மை, இல்லறம், குழந்தையியல், உடலியல், பாலியல், இசை, ஒழுக்கவியல் போன்றவை பற்றிய தெளிவான தீர்க்க தரிசனமாகத் தீர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது வியப்பிற்குரியதாகும்.

எல்லாத் துறைகளிலும் எல்லையில்லா உலகப் பொதுமை நல வளர்ச்சிக் கண்ணோட்டமே உயிர்நாதமாக இழையோடியுள்ளதும் மார்க்சையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

ஒரு கருத்தைச் சொல்வது பெரிதல்ல. அதற்கான வழிமுறைகளையும், சிக்கலுக்கான தீர்வையும் எடுத்துச் சொல்வதில்தான் அக்கருத்திற்கான உரத்த சிந்தனை புலப்படும்.

அந்த வகையில் வேதாத்திரி மகரிசி உலகப் பொதுமை வேண்டும் என்று மட்டும் கூறாது அடிப்படை அரசமைப்பின் கட்டமைப்பு எப்படி இருக்க வேண்டும்? எப்படி இயங்க வேண்டும்? கொள்ளப்பட வேண்டியதும், தள்ளப்பட வேண்டியதுமான கொள்கைகள் என்னென்ன? என்பன வற்றையும் வரையறுத்து உரைக்கின்றார்..

வள்ளுவத்தைப் போல், மார்க்சியத்தைப் போல் வேதாத்திரியம் இந்த உலகுக்கு நின்று நன்மை செய்யும் எனபது திண்ணம்.



# 11. இராபர்ட் கிரீன் இங்கர்சாலும் வேதாத்திரியும்

இந்த உலகம் கண்ட பகுத்தறிவு மேதைகள் மேற்கிலும், கிழக்கிலும் பலராவர்.

கிழக்கு வானில், இந்திய மண்ணில்தோன்றிய வெளிச்சம் வேதாத்திரி மகரிசியைப் போல், மேற்கில் தோன்றிய மேதை இங்கர்சால்.

ஆனால் ஒரு வேறுபாடு வேதாத்திரியார் தேர்தல், போட்டி என்று தேர்தல் களத்தில் இறங்காமல் தொண்டாற்றி மறைந்தார். இங்கர்சால் வாழ்க்கை தேர்தல் களத்தில் தொடங்கி விரிகிறது.

அறியாமையில் முழுகி அவதிப்படும் உலகத்திற்கு அறிவியல் வாதத்தை உருவாக்கித்தர. மூட நம்பிக்கைகளில் இருந்து மனித இனம் விடுதலை பெற்று முன்னேற பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றியவர் இராபர்ட் கிரீன் இங்கர்சால்.

அமெரிக்காவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறித்துவ மதத்தின் மூடநம்பிக்கைகளை எதிர்த்து நாற்பது ஆண்டு காலம் தீவிர எதிர்ப்புக் கிடையே பிரச்சாரம் செய்து வந்தார்

இராபர்ட் கிரீன் இங்கர்சால் பகுத்தறிவு ஏன் எனச் சிந்தித்தவர். பகுத்தறிவின் பிதா என்றறைழைக்கப்படுகிறார்.

## இராபர்ட் கிரீன் இங்கர்சால் வாழ்க்கை வரலாறு (1833)

இராபர்ட் கிரீன் இங்கர்சால்(Robert G. Ingersoll) 1833 ம் ஆண்டு, ஆகத்து 11ம் தேதி அமெரிக்காவின் நியூயார்க் மாகாணத்திலுள்ள டிரத்தன் என்ற சிறிய நகரத்தில் பிறந்தார்.



**இராபர்ட் கிரீன் இங்கர்சால்**

இவரது தந்தை ஜான் ஒரு கிறித்தவ சபை போதகராவார். தமது தந்தையின் ஐந்து குழந்தைகளில் இவர் இளையவர்.

சிறுவயதிலிருந்தே கூரிய சிந்தனைத்திறன் பெற்றவராக திகழ்ந்தார். உயர்கல்விக்குப் பின் சட்டப்படிப்பை பயின்றார். அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது படைத் தளபதியாகப் பணியாற்றினார். போர் முடிந்ததும் அரசியலில் நுழைந்தார்.

தந்தையாரின் வேத நூலான பைபிள் மகனின் பாடப்புத்தகமாக சிறு வயதில் விளங்கியது!

ஆனால் மத நூல்களைப் படித்ததனால் இளமையிலேயே இங்கர்சால் பிஞ்சு உள்ளத்தில் கிறித்தவ மதக் கொள்கைகளில் அவநம்பிக்கை ஏற்படத் தொடங்கியது!

இங்கர்சால் மத நம்பிக்கை அற்ற முறையில் பேசி வருவதைக் கேட்டு அவர் தந்தையார் ஜான் கவலை அடைந்தார்.

மகனை அறியாமை இருள் கவ்விக் கொண்டிருப்பதாக எண்ணி இருந்த ஜான் நாளடைவில் இங்கர் சாலின் பகுத்தறிவுக் கருத்துக்களைக் கேட்கக் கேட்க தான், தான் மூட நம்பிக்கை எனும் இருளில் தத்தளிப்பதாக உணரத் தொடங்கினார்.

வாழ்க்கையின் இறுதி நாட்களில் ஜான் ஒரு புது மனிதராகத் தன் மகனால் மாற்றப் பட்டுவிட்டார்! ஆம். மரணப் படுக்கையிலிருந்த ஜான் கண்ணீர் வழிய நின்றிருந்த தம் மகனை அருகே வரும்படி அழைத்தார். கணகளைத் துடைத்துக் கொண்ட இங்கர்சால் பக்கத்தில் வந்து நின்றார்.

காலம் முழுவதும் மதத்திற்காகவே உழைத்த உத்தமர். தம் உயிர் கேட்டுக் கொண்டே பிரிய, படிக்கச் சொன்னார். புனித வேத நூலை அல்ல. சாக்ரடீசின் மரணத்தைக் குறித்து பிளேட்டோ எழுதிய உணர்ச்சி ஓவியத்தை.!

இங்கர்சால் தன் இளமைக் காலத்தில் இலினாய்ஸ் மாநிலத்தில் மவுண்ட் வெர்னான் என்ற ஊரிலும் பின்னர் மெட்ரோபோலிஸ் என்ற ஊரிலும் ஆசிரியராக வேலை பார்த்தார்.

அவர் தங்கியிருந்த வீட்டில் சில மத போதகர்களும் தங்கியிருந்தனர். ஒரு நாள் மத போதகர்கள் ஞானஸ்நானம் பற்றி உங்கள் கருத்து என்ன? என்று கேட்டார்கள்.

ஞான ஸ்நானத்தை விட சோப்புக் குளியல் நல்லதென்பதே என் கருத்து என்று இங்கர்சால் கூறினார்.

மதவெறியர்கள் இங்கர்சாலை ஒரு நாத்திகர் என்று ஊர் முழுதும் பிரச்சாரம் செய்தனர். பாடசாலை அதிகாரிகள் இங்கர்சாலை உடனே ஆசிரியர் வேலையில் இருந்து நீக்கிவிட்டனர்.

ஆசிரியர் வேலையிலிருந்து நீக்கப்பட்டதும் இங்கர்சால் சட்டப் படிப்பு படித்து வழக்குரைஞர் ஆனார். வழக்குரைஞர் ஆன சில ஆண்டு களிலேயே தன் அறிவாற்றலாலும், உழைப்பாலும் இலினாய்ஸ் மாநில அரசின் தலைமை வழக்கறிஞராக (அட்வகேட் ஜெனரல்) நியமிக்கப் பட்டார்.

1878 இல் அவர் தன் குடும்பத்தை தலைநகர் வாஷிங்டனுக்கு மாற்றிவிட்டார். வாஷிங்டனில் ஏழு ஆண்டுகள் வாழ்ந்த பிறகு 1885 இல் தன் குடும்பத்தை நியூயார்க்குக்கு மாற்றிவிட்டார்.

சிறந்த சொற்பொழிவாளரான இங்கர்சால், அமெரிக்காவில் கிறித்தவ மதவெறியர்களிடம் இருந்து தீவிர எதிர்ப்பைச் சந்திக்க வேண்டி இருந்தது.

முட்டாளே! நாளை முதல் நீ மேடை ஏறினால், உன் தலை அட்லாண்டிக் பெருங்கடலில் மிதக்கும்.

மதத்தை நீ கண்டித்துப் பேசினால் உன் வீட்டிற்குத் தீ வைத்து உன்னையும் உன் குடும்பத்தையும் சாம்பலாக்கி விடுவோம்.

கிறித்துவ மதவெறியர்களின் எதிர்ப்பைத் துச்சமாக மதித்து அமெரிக்காவில் சிறிய பெரிய நகரங்களில், பட்டி தொட்டிகளில் அவரது பகுத்தறிவுப் பிரச்சாரம் தங்கு தடையின்றி நடந்தது

இங்கர்சால் மத உலகை ஆட்டிப் படைத்த பெயர். கிறித்துவ உலகம் இவர் பெயரைக் கேட்டால் நடு நடுங்கும். இவ்வளவுக்கும் இவர் தந்தையார் ஒரு பாதிரியார்தான். தன் மகனையும் பாதிரியாராக ஆக்கத்தான் விரும்பினார் - அதுதான் ஆபத்தாக முடிந்தது.

பாதிரியார் என்றால் தந்தையார் பாதிரி - மகனும் பாதிரி என்ற பாரம்பரியப் பயணத்தில் கண்மூடித்தனமாகப் பாதிரியாக விரும்பவில்லை! பைபிளை அக்குவேர் ஆணிவேராகப் படித்தார். சுவிசேஷங்களைச் சுத்தமாகக் கற்றறிந்தார்.

வெறும் நம்பிக்கை என்னும் முரட்டுக் குதிரை சவாரியில் அவர் பயணிக்க வில்லை; படித்தவற்றை தமது நியாயமான பகுத்தறிவுத் தராசில் எடை போட்டுப் பார்த்தபோது, அவை தாக்குப் பிடித்து நிற்க முடியவில்லை!

பைபிள் பற்றி விமர்சித்தார். சுவிசேசங்களைப் பற்றி வினாக்களை எழுப்பினார்.

சம்பாதித்தவற்றை ஏழை - எளிய மக்களுக்குச் செலவிட்டார்.

அவர் மேடைப் பேச்சு அமெரிக்க மக்களைச் சுண்டி இழுத்தது.

ஏழையாக இருப்பவன் இன்பம் அடைவான். உன்னிடம் உள்ளதைப் பிறர் எடுத்துக் கொள்ள இன்பமாக அனுமதி கொடு! ஆனால் பிறரிடமிருந்து எதையும் பெற்றுக் கொள்ளாதே! உணவில்லை யென்று வருந்தாதே! ஏனெனில் மேல் உலகில் உனக்கு உணவு கிடைக்கும்! எனும் பாதிரிகளின் வார்த்தைகளில் ஏமாறாதீர்- மயங்காதீர்- என்று எடுப்பான குரலில் எழுச்சிமிகு சொற்பொழிவுகளை நாடெங்கும் நிகழ்த்திய நாத்திகப் பேரறிஞர் இங்கர்சால்! அவர் உரையைப் பணம் கொடுத்துக் கேட்க மக்கள் மொய்த்தனர்.

60 ஆண்டுகளே வாழ்ந்தார் எனினும் அவரின் அறிவு அலைகள் கால வெள்ளத்தைத் தாண்டி எதிரொலித்துக் கொண்டுள்ளன.

**கடவுள் மறுப்பு**

கடவுளே இவ்வுலகைப் படைத்தார், சில விதிகளை வகுத்தார், மனிதர்களைப் பலகீனமானவர்களாகவும், அறியாமையில் உழல்பவராகவும் விட்டுவிட்டார் என்பன போன்ற சிந்தனைகளை மறுத்தார்.

மனிதர்கள் இவ்வுலகில் துன்பப்பட்டாலும், மறுஉலகில் இன்பம் பெறுவர் எனும் நம்பிக்கையையும், துன்பம் மனிதனை தூய்மையாக்கும் போன்ற கோட்பாடுகளை கடுமையாக எதிர்த்தார். அவரது கொள்கைப் பிடிப்பின் காரணமாகவும், நேர்மையினாலும், திறமையினாலும் இல்லியான்சு மாகாணத்தின் ஆளுனராகும் வாய்ப்பினைப் பெற்றார்.

அப்போது அரசியல் தலைவர்களின் பிரதிநிதிகள் இங்கர்சாலை சந்தித்து தங்கள் சமயம் சார்ந்த விமர்சனங்களைத் திரும்பப் பெற்றால்

மட்டுமே தங்கள் பெயரை ஆளுநர் பதவிக்கு பரிந்துரைப்போம் என்றனர். அதற்கு அவர் மறுத்துவிட்டதால் ஆளுநர் பதவி அவரை விட்டு சென்றது.

1864 ஆம் ஆண்டு ஆப்ரகாம் லிங்கனின் குடியரசுக் கட்சி சார்பில் இலினாய்ஸ் மாநில ஆளுநர் பதவிக்குப் போட்டியிட்டார். ஜனநாயகக் கட்சியில் இருந்த மத வெறியர்கள் இங்கர்சால் ஒரு தீவிர நாத்திகர்; அவருக்கு வாக்களிக்காதீர் என்று மாநிலம் முழுதும் பிரச்சாரம் செய்து அவரைத் தோர்தலில் தோற்கடித்தனர்.

பிறகு அவர் அரசியலில் இருந்து விலகி தன் கடைசி முப்பது ஆண்டுகளில் பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

**கிரேக்க மொழிக்கு சாக்ரடீஸ் என்ன செய்தாரோ, தமிழ் மொழிக்கு வேதாத்திரி என்ன செய்தாரோ, அதையே ஆங்கிலத்திற்கு இங்கர்சால் செய்தார்.**

இங்கர்சால் தான் இயற்கை எய்திய 1899 ஜூலை 20 வரை சுமார் நாற்பது ஆண்டு காலம் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார்.

வேதாந்தச்சிங்கமான சுவாமி விவேகானந்தர் அமெரிக்கப் பயணத்தில் இருந்தபோது, இங்கர்சால் அவரைச் சந்தித்து ஆதரவு தெரிவித்தார்.

**பங்களிப்புக்கள்**

மானுட அன்பே உலகிலேயே தலைசிறந்த நெறி என்றார். இறைநம்பிக்கை, போதனை, செபம் இவற்றைவிட மனிதர்களை அன்பு செய்வதே உயர்ந்தது என வாதிட்டார்.

கடவுளை அன்பு செய்வதைவிட மனிதனை அன்பு செய்வதே முக்கியம் என்றார். மனித குலத்தின் மகிழ்ச்சியே நமது நோக்கம்.

அதனை நாம் வாழும் இக்காலத்திலேயே முழுமையாக அடைந்துவிட முடியாது, ஆனால் நமது உழைப்பினால் அம்மகிழ்ச்சியை ஓரளவிற்கேனும் மனிதகுலத்திற்கு தரமுடியும் என்று வாதிட்ட இங்கர்சால் அதற்காக தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தார்.

தள்ளாடும் முதுமை வயது என்றாலும் இவர் தமது பொது நலப் பணியை அறிவியல் பிரச்சாரப் பணியைக் கைவிடவில்லை..

அதிக அயர்வு ஏற்பட்டால் ஓய்வு கொள்ளவும், தனது குடும்பத்தினரைக் காணவும் மட்டும் அவ்வப்போது வால்ஸ்டன் மாளிகைக்கு வருவாராம்.

பகுத்தறிவுப் பிரச்சாரத்தை ஓய்வு ஒழிச்சலின்றித்தான் நடத்தினார். இடைவிடாது ஒலி பெருக்கி முன் நின்றதால் இருதய நோய், இருதய ரத்த நாளங்கள் நலிவுற்றன. ஆகவே, இனி அதிகம் பேசினால் ஆபத்து என்று மருத்துவர்கள் எச்சரிக்கை மணி அடித்தனர்.

ஆனால், பொதுநலனே தன் வாழ்க்கை லட்சியமாகக் கொண்ட இந்த அமெரிக்கப் பெரியார், என் உடல் இந்த மண்ணுலகில் இருக்கும் வரை நல்லறிவினை மக்கள் பெறச் செய்வதே, நாட்டு மக்கள் நல்லறிவும், பகுத்தறிவும் பெற்று மடமையை ஒழித்து, நல்வாழ்வு வாழச் செய்ய உழைப்பதே என்று உறுதிபூண்டார்.

என் வாழ்நாள் சொற்ப நாள்களே யாயினும் சரியே, அந்தச் சொற்ப நாள்களையும் பொது நலப் பணிக்கே செயல்படுத்துவேன் என்று இறங்கினார்.

தனக்கு மருத்துவம் செய்த மருத்துவரிடம் ஒரு விசித்திர உறுதி மொழி பெற்றார். தனது உடல்நிலை பற்றி வெளியில் குறிப்பாகத் தன் குடும்பத்தாரிடம் கூறவேண்டாம் என்று மருத்துவரிடம் உறுதிமொழி பெற்றார்.

எனவே, மருத்துவரும் இந்தப் பகுத்தறிவு மேதையின் விருப்பத்திற்கு இணங்கி அவருடைய நோயைப்பற்றி வெளியில் சொல்வதில்லை என்று உறுதி அளித்தார்.

1899 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் காலை 10.30 மணிக்கு நான் கொஞ்ச நேரம் தூங்க வேண்டும்; தூங்கி எழுந்தவுடன் வால்ஸ்டனுடன் விளையாட வருவதாகத் தெரிவியுங்கள்! என்று சொல்லிவிட்டுப் படுக்கச் சென்றவருடன் மனைவியாரும் உடன் சென்று அவர் தூங்கும் வேளையில் படுக்கை அருகிலேயே அமர்ந்திருந்தார்.

பன்னிரண்டேகால் மணிக்குப் படுக்கையிலிருந்து எழுந்து நாற்காலியில் சென்று அமர்ந்தார். மனைவியுடன் பேசிக்கொண்டே நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிய அவர் கண்களை ஒரேயடியாக மூடி விட்டார்.

ஒருவர் இறந்ததும் வழக்கமாகக் கிறித்துவக் குடும்பங்களில் அழைக்கப்படும் மதத் தரகர்கள் யாரும் அழைக்கப்படவில்லை. மோட்சம் கேட்க கொடுப்பதாகக் கடவுளுக்கு அறிமுகம் செய்து வைப்பதாகப் புளுகிடும் எந்த வேத பாராயணமும் நடத்தப்படவில்லை. அவருடைய உடலை அறையில் கிடத்தி, கட வுள் கண்ணுக்கு அறிமுகம் செய்ய வில்லை.

வால்ஸ்டன் மாளிகையிலேயே அவர் உயிர் துறந்த அதே மேல் மாடி அறையிலேயே அவருடைய உடல் தூய உடையுடுத்திக் கிடத்தப்பட்டிருந்தது.

1899 ஜூலை 25 ஆம் நாள் அவருடைய நண்பர்களும், அவருடைய பகுத்தறிவுத் தோழர்களுமான 34 பேர்களும், குடும்பத்தினரும் கூடியிருந்தனர்.

பேராசிரியர் ஜான் கிளார்க் ரிவாத் என்பவர் சுதந்திரவாதியின் அறிக்கை என்பதையும், மேஜர் ஆர்லண்டோ ஜேஸ் மித் என்பவர் எனது மதம் அல்லது அறிவியலின் சிறப்பு லங்ஜாய் என்பவர் பென்சி இங்கர்சாலுக்குப் பாராட்டு என்ற உரையையும் படித்தனர். இவை அனைத்தும் இங்கர்சாலின் எழுத்தோவியங்கள்.

1899 ஜூலை 27 ஆம் நாள் வியாழனன்று இங்கர்சாலின் உடல் புதைக்கப்படாமல் சுடுகாட்டில் எரியூட்டப்பெற்றது. அவருடைய அஸ்தியை குடும்பத்தினர் திரட்டிக்கொண்டு அவர் வாழ்ந்த வால்ஸ்டன் மாளிகைக்குத் திரும்பினர்.

சித்திரப் பூ வேலைகள் செய்யப் பட்ட வெண்கலக் குடத்தில் அந்த அஸ்தி அடக்கம் செய்யப்பட்டது. இந்தக் குடத்தின் மீது இந்தக் குடத்தில் அவரது அஸ்தி எங்கள் உள்ளத்தில் அவரது நினைவு என்றும், ராபர்ட் இங்கர்சால் என்றும் பொறிக்கப்பட்டிருந்தது.

அவருடைய துணைவி அமீலியா இங்கர்சால் இயற்கை எய்திய பின்னரும் இதே போல் அவருடைய அஸ்தியும் வெண்கலக் குடத்தில் வைக்கப்பட்டது.

இந்த இருவரின் அஸ்திகளும் இன்றும் அமெரிக்காவில் முதுபெரும் நகரான ஆர்லிங்டன் கல்லறை விடுதி யில் பளிங்குக் கற்களால் அமைக்கப் பட்ட நினைவுக் கூடத்தில் இருந்து வருகின்றன. இங்கர்சாலின் அறிவொளி நூல்கள் உலகு எங்கும் பரவியுள்ளன

**இவர் எழுதிய புத்தகங்கள்**

1. நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்
2. பேய் பூதம் பிசாசு அல்லது ஆவிகள்
3. நான் நாத்திகவாதி ஆனதேன்
4. கடவுள்

5. இரண்டு வழிகள்

6. மதம் என்றால் என்ன

7. வால்டையரின் வாழ்க்கை சரிதம்

**பகுத்தறிவு ஏன் எனச் சிந்தித்தவர் இங்கர்சால். மானுடத்தை பகுத்தறிவுப் பாதையில் அழைத்துச் சென்றவர் வேதாத்திரி.**

**அறிவுக்கு கோயில் அமைத்த முதல் ஆன்மீகவாதி வேதாத்திரி மகரிசியே.**


பகுத்தறிவு எனப்படுவது பொருட்களின் நிகழ்வுகளின் கருத்துக்களின் கூறுகளை அவதானித்து, ஆய்ந்து அவற்றின் இயல்புகளில் இருந்து ஆதாரபூர்வமாக புறவய நோக்கில் நிரூபிக்கப் படக்கூடிய முடிவுகளை முன்வைக்கும் வழிமுறையையும் அதை ஏதுவாக்கும் மனித அறிவு ஆற்றலையும் குறிக்கின்றது.

பகுத்தறிவின் நோக்கம் மெய்ப்பொருளை அல்லது உண்மையைக் கண்டறிவதே.

**பகுத்தறிவின் உயர்வினிலே பலப்பலவும் பேசுகினறீர்!**
**வகுப்புவெறி நெஞ்சத்தில் வைத்திருத்தல் முரணன்றோ?**
**சிந்தனையாளர் என்று சீர்திருத்தம் பேசுகின்றீர்!**
**எந்தவிதக் கலாச்சாரம் எவருக்குத் தனிஉடைமை?** (மா.ம.)

என்று போலி பகுத்தறிவாதிகளின் முகத்திரையை கிழிக்கின்றார் வேதாத்திரி மகரிசி.

**இந்தப் புத்தகத்தில்........**




கடவுள்களையும்,தேவதைகளையும்,பேய் பிசாசு,பூதங்கள் இவைகளையும் அழித்து விடுவது மாத்திரம் எங்கள் எண்ணமல்ல; முடிவுமல்ல. அவை ஒரு சாதாரணமான காரியமாகும்.

ஆனால் மனிதன் சுகமாக வாழ வேண்டும், அவன் இன்ப வாழ்வு வாழ வழிகோல வேண்டும் என்பதுதான் எங்களின் மிக மிக உயர்ந்த உன்னதமான கொள்கை யாகும்.

அதற்காகத்தான் துணிவுடன் நாங்கள் தொண்டு செய்ய முற்பட்டோம். எங்கள் கருத்தும் அதுதான். எங்கள் செயல்களும் அதற்கே பயன்படும்! என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

இன்றுள்ள மக்கள் சமுதாயம் எப்படி இருக்கிறது. ஒரு பக்கத்தில் கோடிசுவரர்களுக்கு பிரபுக்கள் என்ற பட்டம் சூட்டி வைத்துக் கொண்டிருக்கிறது. மற்றொரு பக்கத்தில் உடல் மெலிந்து, கண் குழிவிழுந்து, ஓடு தாங்கி நிற்கும் மக்களுக்கு பிச்சைக்காரர்கள் என்ற பட்டம் சூட்டி வைத்துகொண்டிருகிறது.

ஒரு பக்கம் பண பலம் கொண்ட சோம்பலையும், மற்றொரு பக்கம், பண பலம் இல்லாத பஞ்சமுற்ற தொழிலையும் வைத்துக்கொண்டிருக்கிறது.

ஒரு பக்கம் உண்மைக்கு கிழிந்து போன கந்தை தந்தும், மற்றொரு பக்கம் மூடநம்பிக்கைக்கு பட்டும், அணிகலன்களும், பொன்முடியும் அணிவித்து அதை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டு வருகிறது.

இவைகள் ஒழியும் காலத்தை நாங்கள் மிக விரைவில் மிக மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். அந்தக் காலத்தை காண எங்களால் முடிந்த முயற்சிகளை எடுத்துக் கொள்கிறோம்.

இப்படியாக சொல்லும் இங்கர்சால் அவர்கள் கடைசியாக கீழ்க்கண்ட ஒரு வேண்டுகோளையும் நமக்கு வைக்கிறார்.

கடைசியாக ஒரு வேண்டுகோள். அறிவு ஆட்சி செலுத்தும் அந்த நல்ல காலம் சீக்கிரமே உண்டாக நீங்கள் உங்களால் முடிந்ததை செய்ய முற்படவேண்டும்.

உங்களின் குழந்தைகளுக்கு மூட நம்பிக்கை என்ற நஞ்சு கலக்காதீர்கள். அறிவு அமுதை ஊட்டுங்கள். வாலிபர்கள் இந்த அறிவு அமுதை கண்மூடி வழக்கங்களை பின்பற்றும் பழமை விரும்பிகளுக்கு அளியுங்கள்.

இவ்விதம் ஒவ்வொரு தனி மனிதனும், செய்யவேண்டும். இதை விட நாம் இந்த காலத்தில் செய்ய வேண்டிய முக்கிய வேலை கிடையாது.

ஆகவே அறிவாளியை உலகெல்லாம்,மூலை முடுக்குகளிலெல்லாம் பரப்புங்கள்! இதை உங்கள் உயர்ந்த கடமை என்ற கருத்துடன் பணியாற்று வதன் மூலம் அறியாமை நிரம்பிய, அர்த்தமற்ற கட்டுப்பாடுகள் நிரம்பிய,

மூடத்தனம் நிரம்பிய, கண்மூடித்தனங்கள் நிரம்பிய உலகை சீர்திருத்துங்கள். அறிவு, ஆராய்ச்சி,அனுபவம் என்னும் இம்மூன்றையும் மறவாதீர்கள். உரிமையுடன் வாழுங்கள்!.

மேல் கண்டவாறு கூறி முடிக்கிறார் இங்கர்சால் அவர்கள்.

இது போல கடவுள் மற்றும் கோவில்கள் தோற்றம் பற்றியும் அதனால் பிழைப்பு நடத்தும் கூட்டம் பற்றியும் பல நல்ல அறிவுப்பூர்வமான கேள்விகளையும் அதன் மூலமாக நல்ல சிந்தனைகளையும் நம்மிடம் தூண்டுகிறார். அனைவரும் இந்த நூலினை வாங்கி பயனடையுங்கள்.

இதுபோன்ற நல்ல நூலின் மூலமாக மழுங்கி இருக்கும் பகுத்தறிவை சாணைபிடித்து சாஸ்திரம்,சாதி,மதம், மூடநம்பிக்கைகள் மற்றும் இவை அனைத்துக்கும் ஆணிவேராக இருக்கும் கடவுள் ஆகியவைகளை ஒழிப்போம். சமத்துவத்தை நிலைநாட்டுவோம்.

கருத்து எனும் ஆயுதம் ஏந்தி கடவுள் மற்றும் மதம் என்னும் மரபினை உடைத்தெறிந்து கேள்விக்கணைகளால் மதவாதிகளின் அரிதாரங்களை அம்பலமாக்கியவர் இங்கர்சால்.

தான் சார்ந்த கிறித்துவ மதத்தின் மீது கடும் தாக்குதல் தொடுத்த ராபர்ட் கீரின் இங்கர்சால் என்றழைக்கப்பட்ட இங்கர்சால் உலக பகுத்தறிவு இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராவர்.

இந்த நூலின் மூலமாக, அருமையான செய்திகள் மற்றும் தர்க்க ரீதியான விளக்கங்களை இங்கர்சால் அவர்கள் நம்மிடம் தந்துள்ளார். 159 பக்கங்களை கொண்ட இந்த நூலிலிருந்து இதோ சில பகுதிகளை இங்கே பார்ப்போம்.

''கடவுள் எப்படிப்பட்டவர் தெரியுமா?'' என்று ஆரம்பிக்கும் முதல் பக்கத்தில், கடவுள் மனிதனுடைய கற்பனை. அவனால் கற்பனை செய்யப்பட்டவர் தான் கடவுள்.

ஆனால் அந்தக் கடவுள்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது தெரியுமா? அவரிடம் அன்பு காட்டினால் ஆதரவு காட்டுவார். துவேசித்தால் விரோதிகள் என்று கருதுகிறார்

இது மட்டுமா! அந்தக் கடவுள்கள் அதிகாரம் உள்ளவர்களின் பக்கபலமாயும், வலிமையுள்ளவர்களை ஆதரித்துக்கொண்டும் தான் இருந்திருக்கிறார்கள்.

இதோடு மட்டுமல்லாமல் அந்தக் கடவுள்கள் தங்களுக்கென்று ஒரு கூட்டத்தை சேர்த்துக்கொண்டன.

அவர்களுக்கு அர்ச்சகர்கள், ஆச்சாரியர்கள், குருக்கள் என்றும் பெயரிட்டன. இந்தப் பெரிய கூட்டத்தினரையும், தன்னையும் ஏழை மக்கள் தான் காப்பாற்ற வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளன. ஏன்? வற்புறுத்தியும் வந்திருக்கின்றன.

இந்தக் கடவுள்களால் தாங்கள் உண்டாக்கிய உலகம் உருண்டையா? அல்லது தட்டையா என்பதும் புரிந்து கொள்ள முடியவில்லை. கண்ணை மூடிக்கொண்டு இந்த உலகம் தட்டை என்று தவறாக கருதி வந்தன.

எனவேதான் கலிலியோ என்ற சாதாரண மனிதன் 1632 - ஆம் ஆண்டு அவனின் ஆராய்ச்சி நூலாகிய "உலக அமைப்பு" என்ற புத்தகத்திற்காக ஆலயவாசிகளால் கைது செய்யப்பட்டான்.

கொடும் சிறையில் அடைக்கப்பட்டான். முழங்கால் மண்டியிட்டு, பைபிளைக் கையிலேந்தி தான் செய்த குற்றத்திற்காக மன்னிப்பு கேட்குமாறு பலவந்தப்படுத்தப் பட்டான்.

ஒரு நாளல்ல; இரு நாட்களல்ல; பத்து பெரிய வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை அனுபவித்தான்; இறந்தான்.

அவனுக்கு விடுதலை வாங்கித்தர மரணம்தான் மனமிரங்கியது. அவன் இறந்த பிறகும் கூட ஆலய வேந்தர்கள், புனித மானவர்கள் கலிலியோவின் உயிரற்ற உடம்பை எல்லோரையும் புதைக்கும் மயானத்தில் புதைக்கக் கூட அனுமதிக்கவில்லை.

மதத்தின் பெயரால் எவ்வளவு துன்பங்கள் இழைக்கப்பட்டன. எவ்வளவு கொடுமைகள் செய்தனர். ஆனால் அவர்கள் முயற்சி பலன் தந்ததா?

பயத்தைக் காட்டி, பலவந்தத்தை பிரயோகித்து, மிரட்டி மனத்தின் எண்ணங்களைக், கட்டிப்போட்டுவிடலாம் என்று நினைத்தார்களே, அது என்னவாயிற்று? பயம் காட்டி மனதை அடக்க முடியாது என்பதை நிரூபித்து விட்டதல்லவா?.

இப்படி பட்ட ஒரு வக்கிரமான, மடமை நிறைந்தவர்கள் தான் கடவுள் களையும் கோவில்களையும் உருவாக்கியவர்கள் என்கிறார் இங்கர்சால்.

இங்கர்சால் அவர்களைக் கண்டிப்பதோடு நின்று விடாமல், மேலும் இவ்வாறு சொல்லுகிறார்

நாங்கள் எல்லாத் துறைகளிலும் முயன்று எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்துவிட்டோம் என்றோ, எங்கள் முடிவுதான் சரி என்றோ சொல்ல மாட்டோம், சொன்னதில்லை. பின்னர் என்ன சொல்லுகிறோம் என்றால் கடவுள்களைக் கண்டு பயப்படுவதை விட நம்மை போன்ற மக்களிடம் அன்பு காட்டுவது மிக மிக சிறந்தது என்கிறோம்

வேதாத்திரி மகரிசி அவர்கள் கடவுள் 'நிலையை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

**எல்லாம் வல்ல தெய்வம் அது எங்கும் உள்ளது நீக்கமற**
**சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய் சிந்தித்தே தெளிவாய்**
**வல்லாய் உடலில் இயக்கமவன் வாழ்வில் உயிரில் அறிவும் அவன்**
**கல்லார் கற்றார் செயல் விளைவாய்க் காணும் இன்பத் துன்பம் அவன்**
**அவனின் இயக்கம் அணு ஆற்றல் அணுவின் சுட்டுப் பக்குவம் நீ**
**அவனில் தான் நீ, உன்னில் அவன் அவன் யார், நீ யார் பிரிவேது**
**அவனை மறந்தால் நீ சிறியோன் அவனை அறிந்தால் நீ பெரியோன்**
**அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம் அறிவு முழுமை அது முக்தி**

இதைவிட கடவுள் தன்மையை விளக்க வேண்டியதில்லை.

கடவுளை வணங்கும்போது கருத்தினை உற்றுப்பார் கடவுளாக நீயே காட்சி தருவாய் என்றும் கூறுகிறார் வேதாத்திரியார்.

**கடவுளை வணங்கும் போது,**
**கருத்தினை உற்றுப் பார் நீ!**
**கடவுளாய்க் கருத்தே நிற்கும்**
**காட்சியைக் காண்பாய் ஆங்கே.**

என்று கூறும் வேதாத்திரியார், கட-உள், அதாவது உள் கட, உள்ளே கடந்து செல், என்று கடவுளுக்கு விளக்கம் தருகிறார்.

**பணத்தைக் கொடுப்பவன்**
**கடவுள் என்கிறீர்,**
**படைத்தவன் மனிதனே,**
**கொடுப்பவன் கடவுளோ?**

என்று தற்கால மனிதரின் நிலையை எண்ணி வருந்துகிறார் வேதாத்திரியார்.

சமூக மேம்பாடு குறித்த வேதாத்திரியின் நன்னோக்கம் தேவையற்ற சடங்குகள், போட்டி விளையாட்டுக்கள், சமய திருவிழாக்கள் ஆகியவற்றின் அவசியம் குறித்து அறிவுப் பூர்வமாகச சிந்திக்கிறது.

இதனால், பலவற்றில் கட்டுப்பாடும் மாற்றங்களின் தேவைப் பற்றியும் வலியுறுத்துகின்றார்.

**மாற்றம் என்பது மானுட தத்துவம்** என்ற சான்றோர்களின்

கூற்று இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

பெரும் திருவிழாக்களில் ஏற்படும் பொருளாதார நெருக்கடியை இனம்காட்டி, அவற்றைத் தவிர்த்து, ஆக்கப்பூர்வமான செலவுகளை வழிகாட்டுவதோடு நிதிவளத்தைச் சேமிக்குமாறு அறிவுறுத்துகிறார்

கடவுளின் பெயரைச் சொல்லி சமயத் திருவிழாக்களையும் நடைமுறைச்சடங்குகளையும் நடத்தி அதிகளவு பணத்தை வீணாக்குகிறார்கள். இதெல்லாம் தவிர்க்கப்பட்டால் பெருமளவு மனித ஆற்றலையும் நாட்டின் நிதி வளத்தையும் சேமிக்கலாம். .

இறைவனுக்காக நடத்தப்படும் பெரிய படையல்கள் தேவையில்லை. இறைவனுக்கு உடலுமில்லை. குடலுமில்லை.

எனவே கடவுளுக்கு மனிதன் உணவு கொடுக்க வேண்டியதில்லை. கடவுளுக்கு அலங்காரங்கள், விலையுயர்ந்த நகைகள் அணிவிப்பதும் தேவையில்லை.

கடவுளுக்குத் திருமணம் செய்து வைப்பது போன்ற விழாக்கள் பணத்தை வீணாக்கும் கேலிக்கூத்தை நிறுத்தி அனைத்துச் சமயத் தலைவர்களும் ஒன்று கூடி மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் எல்லாம் வல்ல இறைவனின் இறைநிலை பற்றிய ஒரு தெளிவான பொதுக் கருத்தை உருவாக்க வேண்டும்.

வேதாத்திரியத்தில் கடவுளுக்கு ரூபமும் கிடையாது. ஆண் பெண் நாமமும் கிடையாது. அறிவு என்பது கடவுளின் பெயரல்ல, அறிவு, ஆற்றல் என்பதும் கடவுளின் தன்மைகளாகும்.

வெளி என்பது கடவுளின் பெயரல்ல. வெளியெங்கும் வற்றாயிருப்பாக இருப்பது அதன் தன்மை.

மதங்களும் சமயங்களும் பலப்பல ரூபங்களாலும், நாமங்களாலும் பலப்பல தெய்வங்களை உருவாக்கின.

ஆனால் வேதாத்திரியோ ஒரே கடவுளின் பலப்பல தன்மைகளை எடுத்துரைக்கிறார். கடவுள் அறிவாக அனைத்திலும் இயங்கிக் கொண்டு இருக்கிறது. நாம் எந்த உருவத்தை கடவுள் என்று வழிபட்டாலும் நம்முடைய அறிவைக் கொண்டு அந்த உருவம் இருக்கும் நம் கருமையத்தையே நாம் வழிபடுகிறோம்.

எனவே நம்முடைய அறிவைத்தான் வணங்குகிறோம். அதுவே தான் கடவுள். இதனை வேதாத்திரியார்,

**இறைநிலையே அறிவாக இருக்கும்போது,**
**இவ்வறிவைச் சிலை வடிவத் தெல்லை கட்டி**
**குறைபோக்கும் பொருள்,புகழ், செல்வாக்கு வேண்டியும்**
**கும்பிட்டுப் பலன்கண்ட வரையில் போதும்,**
**நிறைநிலைக்கு அறிவு விரிந்துள்ளமை காண**
**நேர்வழியாம் அகத்தவத்தைக் குருவால் பெற்று**
**முறையாகப் பயின்றுன்னில் இறையைத் தேற,**
**முனைந்திடுவீர் காலம் வீணாக்க வேண்டாம்.** (ஞா.க.)

என்று குறிப்பிடுகிறார்.

வேதாத்திரியார் வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு , காலம் எனம் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம் என்று தெய்வத்தின் நான்கு வளங்களைச் சுட்டிக் காட்டுகிறார்.

கிறிஸ்துவ சமயத்தில் கடவுளின் ஆட்சி உனதுள்ளேயே இருக்கிறது என்று இயேசுநாதர் சொன்னார்.

இதே கருத்தை,

**வானுக்குள் ஈசனைத் தேடும் மருளர் காள்**
**உனக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே**

என்று திருமூலரும் கூறுகிறார்.

உலகில் இன்றைய பல்வேறு பிரச்சனைகளுக்கு அடிப்படைக் காரணமாக விளங்குவது மதம். உலக அளவில்பல்வேறு வன்முறைகள் இன்று மதங்களை மையமாகக் கொண்டே நடைபெறுகின்றன்

மனிதன் வாழவேண்டுமானால், மனிதன் முன்னேற வேண்டுமானால் மதத்தை அழித்தாக வேண்டும் என்ற இங்கர்சாலின் அறிவுரைகளும், மனுசன் நன்னாயிருந்தால் மதி என்று நாராயண குருவின் வார்த்தைகளும். இன்று வலுவிழந்து விட்டன.

மதம், குறித்துப் பல்வேறு புதிய கருத்தாக்கங்களை முன் வைக்கும் வேதாத்திரி, மதம் என்பது சிந்தனையாளர்களின் அனுபவத் தொகுப்பு என்றும், மதத்திற்கும் எந்தவொரு கடவுள் பெயரும் கிடையாது என்று சொல்கிறார்.

இங்கர்சால், வேதாத்திரியார் பகுத்தறிவுக் கொள்கைகள் ஒரே தடத்தில்தான் பயணிக்கின்றன.

**இங்கர்சால்** மூடநம்பிக்கை மனித ரத்தத்தைச் சிந்தச் செய்கிறது; விஞ்ஞானம் அறிவு வெளிச்சம் தருகிறது.

**வேதாத்திரி** காரணத்தையும், விளைவுகளையும் அறியாமல் பின்பற்றப்படுகின்ற ஒரு சடங்கு அல்லது பழக்கம் மூடப்பழக்கம்.

**இங்கர்சால்** எந்த நூலும் தெய்வீகமானது என்று நான் நம்புவதில்லை. அநேக நூல்களிலுள்ள அநேக செய்திகள் உண்மை. பெரும்பாலான கருத்துக்கள் பொய்யானவை! இந்த பொது விதிக்கு வேதம் மட்டும் விதிவிலக்கல்ல.

**வேதாத்திரி** ஓதிக்கொண்டிருப்பதற்காக வேதம் தோற்றுவிக்கப் படவில்லை. அதன் உட்கருத்தை உணர்ந்து ஒழுகுவதற்காகவே வகுக்கப் பட்டது.

**இங்கர்சால்** பல நல்ல குடும்பங்கள் ஒன்று சேர்ந்ததுதான் ஒரு நல்ல அரசாங்கம். ஆண்கள் மரங்கள்,பெண்கள் அம்மரத்தை ஆதாரமாகக் கொண்டு சுற்றிப் படரும் கொடிகள். குழந்தைகள் அக்கொடிகளில் குலுங்கியாடும் நறுமண மலர்கள்.

**வேதாத்திரி** இந்தப் பேருலகம் சத்திரம் போன்றது. பிறக்கும் ஒவ்வொருவரும் உலகம் என்ற சத்திரத்தில் தங்குகிறோம். நாம் குடிபுகும் அறையில் முன்னமே சிலர் இருந்தார்கள். பிறகும் சிலர் வந்து சேர்கிறார்கள். இதுவே குடும்பம். அவரவர்கள் தங்க வேண்டிய காலம் முடிந்தவுடன் புறப்பட்டு இயற்கையோடு கலந்து விடுகிறார்கள்.

**இங்கர்சால்** வளமான காலத்தில் நண்பர்கள் நம்மைத் தெரிந்து கொள்வர்; வறுமைக் காலத்தில் நாம் நண்பர்களைத் தெரிந்து கொள்கின்றோம்.

**வேதாத்திரி** வஞ்சகர் எதிரிகளாய் வந்துவிட்டால் வியப்பில்லை. நண்பர்கள் வஞ்சகராய் வளர்ந்தால்தான் பெருந்தொல்லை.

**இங்கர்சால்** கண்ணியமும் நேர்மையும் நம் இரு கண்கள்.

**வேதாத்திரி** வாழ்நாள் முழுதும் மகிழ்ச்சியாக இருக்க நேர்மையை மட்டும் பின்பற்று.

**இங்கர்சால்** அநேக தலை முறைகளாக ஆண்கள் அடிமைகளாகவும் அந்த அடிமைகளின் அடிமைகளாகப் பெண்களும் இருந்து வந்தார்கள் என்பது நமக்குத் தெரியும். பெண்களுக்குத் தாய்மார்களுக்குச் சுதந்திரம் தர வேண்டுமென்பது மனித சமுதாயத்தின் அதி முக்கியமான லட்சியமாகும்.

**வேதாத்திரி** ஆண்களுக்கு பெண்கள் அடிமையும் அல்லர். உயர்ந்தவர்களும் அல்லர். ஆனால் இயற்கையமைப்பாலும் சமுதாய அமைப்பிலும் பெண்கள்ஒரு சிறப்புநிலையுடையவர்கள் என்பதை அனைவரும் உணர்ந்து ஆண்களும் பெண்களும் ஒருங்கிணைந்த உயர்கருத்தில் வாழ வேண்டும்.

**இங்கர்சால்** உண்மைதான் இந்த உலகின் அறிவுச் செல்வம். உண்மை முன்னேற்றத்தின் அடித்தளம்; சுவர்கள்; அழகிய கட்டடம். உண்மை இன்பத்தின் தாய். உண்மை மனிதனை நாகரிகமாக்குகிறது; தூய்மை யாக்குகிறது. மனிதனுக்கு தைரியம் அளிக்கிறது. உண்மைதான் பகுத்தறிவு வாதியின் வாளும், கேடயமும்.

**வேதாத்திரி** உண்மை என்பது ஒப்புமை இல்லாதது. அது முழுமையானது.

சமூகத்தின் மூலக்கூறுகளான தனிமனிதன், பெண், தொழிலாளி, ஆட்சி, மதம், கடவுள், சடங்கு. பொருளாதாரம், ஆன்மீகம் என எல்லா நிலைகளிலும் புகுந்து, அங்குக் குவிந்து கிடக்கின்ற குப்பைகளை அகற்றி, தங்கள் புதிய புரட்சிக் கருத்துக்களால் சமூக நறுமணம் கமழ இங்கர்சாலும் வேதாத்திரியும் விழைகின்றார்கள்.

பகுத்தறிவாளர்களாகிய நாம் வேதாத்திரி மகரிசி, அறிஞர் இங்கர்சால் ஆகியோரின் பொன்மொழிகளை உள்ளத்தில் பதிய வைத்து வாழ்க்கைப் பாதையில் பயணம் செய்வோமாக!



# 12. சிக்மண்ட் பிராய்டும் வேதாத்திரி மகரிசியும்

சிக்மண்ட் பிராய்ட் கனவுகள், காதலுறவு, உள்ளுணர்வு, இன இயக்க ஆய்வு முதலானவற்றை பற்றி சிந்தித்தவர்.

நவீன உளவியல் கோட்பாடுகளின் வளர்ச்சியில் பிராய்டு மிகுந்த செல்வாக்குப் பெற்றவராகவும், முக்கியத்துவம் வாய்ந்தவராகவும் விளங்குகிறார்.

**பிராய்டின் வாழ்க்கை வரலாறு** (1856–1939)

சிக்மண்ட் பிராய்ட், 1856 ஆம் ஆண்டில், தற்போது செக் குடியரசில் உள்ளதும், முன்னர் ஆஸ்திரியப் பேரரசில் அடங்கியிருந்ததுமான, மொரேவியாவில் இருந்த பிரிபார் என்னும் இடத்தில் பிறந்தார்.

சிகிமண்ட் ஸ்லோமோ பிராய்ட் (Sigismund Shlomo Freud) என்னும் இயற்பெயர் கொண்ட இவர் உளவியலின் உளப்பகுப்பாய்வுச் சிந்தனை முறையை நிறுவியவர்.

இவரது பெற்றோர் கலீசிய யூத இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர் பிறக்கும்போது இவரது தந்தையாருக்கு 41 வயது.

அவரது முதல் மனைவி மூலம் ஏற்கெனவே இரண்டு பிள்ளைகள் இருந்தனர். இரண்டாம் மனைவிக்குப் பிறந்த 8 பிள்ளைகளுள் இவரே மூத்தவர்.

இவரது சுட்டித்தனமான அறிவினால் இவரது பெற்றோரிடம் ஏனைய பிள்ளைகளைக் காட்டிலும் இவர்க்குக் கூடுதல் சலுகைகள் இருந்தன. குடும்பம் வறுமையில் இருந்தபோதும், சிக்மண்ட் பிராய்டின் கல்விக்காக அனைத்தும் செய்தனர்.

1857 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடியின் போது, பிராய்டின் தந்தையாரின் வணிகத்தில் இழப்பு ஏற்பட்டது.


இதனால், அவர் குடும்பத்துடன் லீப்சிக்குக்குச் சென்று பின்னர் அங்கிருந்து வியன்னாவுக்குச் சென்று குடியேறினார்.

சிக்மண்ட் பிராய்ட் அங்கிருந்த முன்னணிப் பள்ளியொன்றில் சேர்ந்து கல்வி கற்றார்.

ஒரு சிறந்த மாணவனாக விளங்கிய அவர் 1873 ஆம் ஆண்டில் சிறப்புத் தகைமைகளுடன் இரண்டாம் நிலைக் கல்வியில் சித்தியடைந்து வெளியேறினார்.

சட்டத்துறையில் உயர்கல்வியைத் தொடர முதலில் விரும்பினாலும், பின்னர் வியன்னாப் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் படிப்பதற்காகச் சேர்ந்தார்.

இவர் டார்வினியப் பேராசிரியராகிய கார்ல் கிளாஸ் (Karl Claus) என்பவரின் கீழ் மருத்துவத்தைக் கற்றார்.



**சிக்மண்ட் பிராய்ட்**

உளவியல் பற்றிய தமது கொள்கைகளை பிராய்டு படிப்படியாக வகுத்துக் கொண்டு வந்தார்.

இசிவு நோய் பற்றிய ஆராய்ச்சி என்ற தமது முதலாவது நூலை பிராயருடன் (வியன்னா மருத்துவ வல்லுநர்) கூட்டாகச் சேர்ந்து எழுதி 1895ல் வெளியிட்டார்.

நரம்புக் கோளாறு காரணமாகப் பெண்டிரின் உடல் உளப் பண்பையும் உரத்தையும் பாதிக்கும் இசிப்பு நோய் பற்றி இந்நூல் ஆராய்கிறது.

கனவுகளின் பொருள்கோள் (Interpretation of Dreems) என்ற இவரது அடுத்த நூல் 1900 ஆம் ஆண்டில் வெளியாகியது. இது இவருடைய நூல் களிலேயே மிக முக்கியமான நற்சிந்தனை வாய்ந்த நூலாகக் கருதப்படுகிறது.

இந்நூல் முதலில் மெதுவாகவே விற்பனையாகிய போதிலும், இது இவருடைய புகழைப் பெருமளவுக்கு உயர்த்தியது. தொடர்ந்து வேறு பல முக்கிய நூல்கள் வெளிவந்தன.

பிராய்டு திருமணம் புரிந்து கொண்டார். இவருக்கு ஆறு குழந்தைகள் பிறந்தன.

இவருடைய வாழ்நாளின் பிற்பகுதியில் இவரது தாடை எலும்பில் புற்று நோய் கண்டது. அதைக் குணப்படுத்துவதற்கு இவருக்கு 1923 முதற்கொண்டு 30 முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இந்த நோயின் வேதனைக்கு இடையிலும் இவர் தொடர்ந்து கடுமையாக உழைத்தார். இவர் நோயுற்றிருந்த இந்தப் பிந்திய ஆண்டுகளில் தான் நாஜிகள் ஆஸ்திரியாவுக்குள் நுழைந்தனர்.

அப்போது 82 வயதை எட்டியிருந்த ஒரு யூதரான பிராய்டு லண்டனுக்குத் தப்பியோட நேர்ந்தது. அடுத்த ஆண்டிலேயே அங்கு அவர் காலமானார்.

உள்மனம் (unconscious mind) பற்றிய இவரது கோட்பாடுகள், அடக்குதலுக்கு எதிரான பாதுகாப்புப் பொறிமுறை, உளப்பிணிகளை, பிணியாளருடன், உளப்பகுப்பாய்வாளர் பேசிக் குணப்படுத்துவதற்காக உளப்பகுப்பாய்வுச் சிகிச்சைச் செயல்முறைகளை உருவாக்கியமை என்பவற்றின் மூலம் பிராய்ட் பெரும் பெயர் பெற்றார்.

பாலுணர்வு விருப்பு என்பதை மனித வாழ்வின் முதன்மையான உந்து சக்தி என வரையறுத்தமை, இவரது சிகிச்சை நுட்பங்கள், உணர்வு மாற்றீட்டுக் கோட்பாடு(theory of transference), உள்மன ஆசைகளின் வெளிப்பாடாகக் கனவுகளை விளக்குதல் போன்றவை தொடர்பிலும் பிராய்ட் பெரிதும் அறியப்பட்டவர்.

1874 ஆம் ஆண்டில் உள இயக்கவியல் என்னும் கருத்துருவை, ஜெர்மானிய உடற்கூற்றியலாளரான ஏர்ண்ஸ்ட் வில்ஹெல்ம் வொன் புரூக் (Ernst Wilhelm von Brücke) என்பவர் தனது உடற்கூற்றியல் விரிவுரைகள் என்னும் வெளியீட்டில் அறிமுகப்படுத்தினார்.

இவர் வெப்ப இயக்கவியலின் முதலாவது விதியை உருவாக்கியவர் களுள் ஒருவரான ஹேர்மன் வொன் ஹெல்ம்ஹோல்ட்ஸ் என்பவருடன் இணைந்து எல்லா உயிரினங்களுமே ஆற்றல் முறைமைகளே என்றும் அவையும் அதே விதிக்கு உட்பட்டவையே என்றும் கருத்து வெளியிட்டனர்.

பிரெஞ்சு தத்துவம் மற்றும் உளப்பகுப்பாய்வு துறையில் முக்கிய பங்காற்றிய யூங் மற்றும் லக்கான் ஆகிய இருவரும் தமக்கான அணுகுமுறைகளை சிக்மண்ட் பிராய்ட் இடமிருந்தே பெற்றுக் கொண்டார்கள்.

உளவியலில் பிராய்ட் இன் பாலியல் மட்டுமேயான மைய அணுகுமுறையை இருவருமே மறுத்தாலும் அவர்களது ஆய்வுச்செயற்பாடு களுக்கு பிராய்டின் பிரதிகளே அடிப்படையாகும்.

**சிக்மண்ட் பிராய்டும் வேதாத்திரி மகரிசியும்**

மனிதரைப் பல வழிகளிலும் ஆட்டிப்படைக்கும் மனித மனதினை மனோவியல் அறிஞரான சிக்மண்ட் பிராய்ட் இரு பகுதிகளாகப் பிரிக்கின்றார்.

1. உணர்வு மனம் (அல்லது புற மனம்)

2. உணர்விற்கப்பாற்பட்ட மனம் (அல்லது அக மனம்)

மனிதரின் மனதின் முக்காற் பங்கினை உள்ளடக்கியிருப்பது இந்த உணர்ச்சிக்கப்பாற்பட்ட ஆழ் மனமே.

சகல விதமான அபிலாஷைகள், எதிர்பார்ப்புகளைப் புதைத்து வைத்துள்ளது. இந்த ஆழ்மனம்தான் மனிதரது சகல விதமான பிரச்னை களுக்கும் காரணம். பகுத்தறிவு பேசுவது மனிதரின் உணர்வு மனம்.

ஆனால் அவரது உணர்விற்கப்பாற்பட்ட மனமான ஆழ்மனதினிலே அவர் பேசும் பகுத்தறிவிற்கேற்ற கொள்கைகள், எண்ணங்கள் பதிந்திரா விட்டால். அவர் எவ்வளவு பகுத்தறிவு வாதம் புரிந்தும் பயனில்லை.

இன்றைய பெரும்பான்மையான சமய, அரசியல் தலைவர்களுட்பட சாதாரண மக்களது நிலை இதுதான்.

உணர்ச்சிகரமாகப் பேசுவதொன்று, செய்வதொன்றாக இருப்பதைப் பார்த்துப் பார்த்து அலுத்துக் கிடக்கின்றோமே.

இந்நிலைக்குக் காரணம் இந்தப் புற, அக (ஆழ்) மனங்களிற் கிடையிலான போராட்டம்தான்.

புறச்சூழல், அகச்சூழலின் விளைவுகள் மனிதரில் புறமனதினில் ஏற்படுத்தும் பாதிப்பு செயலுருப் பெற வேண்டுமானால் அவரது ஆழ்மனமும் புறமனமும் ஒன்றாக இயங்க வேண்டியது அவசியம்.

வேதாத்திரி மகரிசியோ மனதின் மூன்று நிலையை குறிப்பிடுகின்றார்.

உயிரின் படர்க்கை நிலையில் மனம் இயங்கும் நிலைகளை மூன்றாக பிரித்துக் காணலாம் என்கிறார்.

அதாவது மேல்மனம் அல்லது புறமனம், நடுமனம், அடிமனம் என்று மூன்று நிலைகளாகும்.

இதில் அடிமனத்திற்கும் புறமனத்திற்கும் தொடர்புபடுத்தி இருப்பது நடுமனமாகும். இதில் நடுமனம் தான் மிகவும் முக்கியமானது.

உணர்தல், துய்த்தல், கணித்தல், சிந்தித்தல், பதிவு கொள்ளல் என்ற ஐவகைச் செயல்களைக் கொண்ட மனமானது தேவை, பழக்கம், சூழ்நிலை, சந்தர்ப்பம் இவற்றால் புலன்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டு செயல் புரியும் போது அச்செயல் பதிவுகள் அதனதன் அழுத்தத்திற்கேற்ப மேல் மனம் அல்லது புறமனம் (Conscious mind) நடுமனம் (Sub-conscious Mind) அடிமனம் (Super-Conscious Mind) என்ற மூன்றிலும் பதிவுகள் ஏற்படுகின்றன.

தொழில் செய்வதால் உடல் கருவிகளுக்கு ஏற்படும் திறனே இந்திரியப் பதிவு (ஞானகர்மேந்திரியபதிவுகள்). இப்பதிவுகளை ஒட்டிய மன இயக்கம் மேல் மனம் அல்லது புற மனமாகும்.

தொழில் செய்வதால் ஏற்பட்ட அறிவின் அனுபவம் மூளையில் பதிவாகிறது. இதுதான் நடுமனம்.

இவைகள் அனைத்தும் சூக்குமமாக வித்து அணுத் திரளில் பதிவாகி விடுகின்றன. இதுவே அடிமனம்.

மேலும், மனம் பற்றி புதிய விஞ்ஞான மெய்ஞ்ஞானப் பார்வையுடன் விளக்கம் தருகிறார் வேதாத்திரியார்.

❊ மனம்தான் மனித வாழ்க்கையின் விளைநிலம்

❊ மனம் ஒரு நிரந்தரமான பொருள் இல்லை. உயிரிலிருந்து தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் அலை இயக்கம்தான் மனம்.

❊ சீவகாந்தமே உயிரினங்களில் மனமாகவும் இயங்குகிறது. ஐம்புலன்களின் வழியாக சீவகாந்தம் இயங்கும்போது ஐந்து உணர்வுகளாகவும் மூளையின் வழியாக இயங்கும்போது இவ்வைந்து உணர்வுகளையும் உணரக்கூடிய மனமாகவும் செயல்படுகிறது.

* உயிரின் படர்க்கை நிலையே மனமாகும்.
* மனமெனும் ஆற்றலுக்குள் உயிர், அறிவு, தெய்வம் மூன்றும் இருளில் நிழல் போன்று அடங்கியுள்ளன.
* மனித மனம் என்பது இறைநிலையும், அதில் தோன்றும் காந்த அலையுமேயாகும்.
* மனதைவிடப் பெரிய பொருள் இந்த பிரபஞ்சத்திலேயே இல்லை. ஏனெனில் மனதைக் கொண்டுதான் மனதையும் அறியமுடியும். விஞ்ஞானத்தால் எவ்வளவோ கருவிகளைக் கொண்டும் அறிய முடியாத பிரபஞ்ச ஆற்றலாகிய இறைவெளியைக் கூட மனம்தான் ஊகித்து உணருகிறது.
* தூங்குகின்றபோது மனம் ஒடுங்குகிறது என்பார்கள். அப்போதும் அது இயங்கிக் கொண்டுதான் இருக்கும். ஆனால் அது புலன்களைக் கடந்து சூக்குமத்தில் இயங்குகிறது.
* மனம் ஐந்து நிலைகளில் இயங்குகிறது. 1. அன்னமய கோசம் 2. மனோமயசோகம் 3. பிராணமய கோசம் 4. விஞ்ஞானமய கோசம் 5. ஆனந்த மயகோசம்.
* மன இதன் என்ற இரண்டு வார்த்தை சேர்ந்ததுதான் மனிதன். மனதை இதமாக வைத்துக் கொள்ள வேண்டும். முரண்பாடாக இல்லாமல் (இதம் இணக்கம்)
* மனம் இரண்டு செயல்களைச் செய்கின்றது. 1. பதிவுகளைச் சுருக்கி வைக்கிறது. 2. விரித்துக் காட்டுகிறது.
* மன அலைச்சுழலின் வேகம் 1 முதல் 40 வரை ஓடும். இதனை டெல்டாவேவ், தீட்டாவேவ், ஆல்பாவேவ், பீட்டாவேவ் என்பார்கள்.
* உயிர் என்பதின் படர்க்கை ஆற்றலாகிய மனம் பத்து படிநிலைகளில் இயங்குகிறது. 1. உணர்ச்சி 2. தேவை 3. முயற்சி 4. செயல் 5. விளைவு 6. அனுபோகம் 7. அனுபவம் 8. ஆராய்ச்சி 9. தெளிவு 10. முடிவு.
* மனம் என்ற நிலத்தில் எது போட்டாலும் விளையும். ஆனால் எது போட வேண்டும் என்று சிந்தித்துப் போட வேண்டும்.
* மனதின் தன்மை எதுவோ அதுதான் மனிதனுடைய தன்மை.

❊ மனத்தின் உயர்வு எதுவோ அதுவே மனிதனின் உயர்வு.

❊ அன்றாடம் மனதைக் கழுவிக் கொண்டே இருங்கள்.

❊ மனமது இயற்கையின் மாபெரும் நிதி.

மனிதரின் மனம் பற்றிய ஆய்வுகளில் பல புரட்சிகரமான கோட்பாடுகளைக் கண்டு பிடித்தவர் சிக்மண்ட் பிராய்ட்.

வியன்னாவில் மருத்துவப் பட்டப்படிப்பை முடித்து மருத்துவராகக் கடமையாற்றிய பிராய்ட்டினைப் பாதித்த முக்கிய விடயங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

இவையே இவரது மனம் பற்றிய பல்வேறு கோட்பாடுகள் தோன்றுவதற்குக் காரணங்களாகவிருந்தன என்று துணிந்து கூறலாம்.

1. டார்வினின் **கூர்ப்புக்** கொள்கை. (இக்கொள்கையின் முன்னர் ஏனைய மிருகங்களிருந்து பிரித்துப் பார்க்கப்பட்ட மனிதர் இதன் அறிமுகத்தின் பின்னரோ மிருகங்களில் ஒன்றாகக் கருதப்பட்டனர். அதே சமயம் மனிதர் பற்றிய ஆய்வுகளை இயற்கை விஞ்ஞான முறைகளிற்கேற்ப மேற்கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகளை இக்கோட்பாடு உருவாக்கியது).

2. கஷ்டாவ் பெச்னோவின் (Gustav Fechneo - பிரபல்யமான ஜேர்மானிய தத்துவஞானி) கண்டுபிடிப்பான உளவியல் விஞ்ஞானம் (Science of Psychology). இது மனமும் விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்யப்பட முடியுமென்பதை நிலை நாட்டியது.

3. நவீன பௌதிகத்தின் புதிய கண்டுபிடிப்புகளான சக்தி பற்றிய குவாண்டம் கொள்கைகளும் பிராய்டின் மனம் பற்றிய ஆய்வுகளிற்குப் பெரிதும் உதவின. இக்குவாண்டம் கொள்கையின் படி சக்தியும் பொருளைப் போல் அளக்கப்படக் கூடியதெனவும் அதே சமயம் சக்தி அழிக்கப்பட முடியாதெனவும் அறியப்பட்டது. மேலும் இப்புதிய கண்டுபிடிப்புகளின் வாயிலாக மனிதரும் சக்தியின் வடிவம்(Energy System) என்பதும், எந்த விதிகள் பௌதீகத்தில் உள்ளனவோ அதே விதிகளிற்கமையவே மனிதரும் இயங்குகின்றாரெனவும் நிரூபணமாயிற்று.

இதுதவிர பிராய்டின் வளர்ச்சிக்கு அவரது மருத்துவத் தொழிலும், அவரது ஆழ்ந்த அறிவும் பெரிதும் காரணங்களாகவிருந்தன.

பிராய்டின் முக்கிய கண்டுபிடிப்பு ‘இயக்கவியல் மனோவியல்’ அல்லது ‘இயக்க உளவியல்’ (Dynamic Psychology) ஆகும்.

இயக்கவியல் விதிகளை மனிதரின் ஆளுமைக்கும் (Personality) அவரது உடலிற்கும் பாவிக்க முடியுமென்பதைக் கண்டுபிடித்ததே இவரது மிகப் பெரிய சாதனையாகும். நவீன விஞ்ஞான வளர்ச்சியிலும் இது ஒரு மைல்கல்லே.

இயக்கவியல் உளவியல் மனிதரில் ஆளுமையிலேற்படுத்தும் மாற்றங்களை விளக்குவதாகும். இங்கு மனிதரின் ஆளுமையென நான் கூறுவது ஒரு மனிதரின் குணவியல்புகளையே குறிக்கின்றது.

பிராய்டின் கருத்துப்படி ஒரு மனிதரின் மன இயல்புகள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன அல்லது அவரது மனயில்புகள் மூன்று வடிவங்களில் செயற்படுவதாகக் கூறலாம்.

1. உணர்வு உந்தும் இயல்பு (id)

2. நான் என்னும் முனைப்பு (Ego)

3. அதியுயர் மனக் கூறு (Super Ego)

பிராய்டு விளக்கம் பாமரனுக்கும் புரிய வேண்டும் அல்லவா? வேதாத்திரியார் எளிமையாக தெளிவாக பயிற்சித் தருகிறார். அழைக்கிறார் வாருங்கள்.

மனத்திற்கு இரண்டடுக்குப் பதிவுகள் உள்ளன. ஒன்று கருவமைப்பினால் பெற்றோர்களை அடிப்படையாகக் கொண்டு வந்தது. மற்றது பிறந்தது முதல் என்னென்ன நினைத்தோமோ, என்னென்ன செய்தோமோ அவை அனைத்தும் பதிவாகியுள்ளது.

இந்த இரண்டும் சேர்ந்து தான் ஒரு மனிதனுடைய தன்மையாக உருவாகிறது. முன்பு மனதை இயக்கிப் பதிவுகளைப் பெற்று ஒரு தன்மையை நாம் கொண்டுள்ளோம். அதை மாற்றி மனத்தை நம்முடைய விருப்பப்படி நடத்தி நாம் அடைய வேண்டிய எல்லா இலட்சியங்களையும் அடைய அதற்கென ஒரு பயிற்சி வேண்டும்.

பழக்கத்திற்கும், விளக்கத்திற்கும் இடையே போராடிக் கொண்டிருக்கக்கூடிய மனதின் பழக்கத்தை முறையாக மாற்றிக் கொண்டு விளக்கத்தை நல் விளக்கமாக பெற்று அதன் வழியே வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உள்ள முறையான பயிற்சியே ’உலக சமுதாய சேவா’ சங்கத்தின் ‘‘மனவளக்கலை’’ பயிற்சியாகும்.

**சிக்மண்ட் பிராய்டு பார்வையில் கனவுகள்**

ஏன் இந்த கனவு?

சிக்மண்ட் பிராய்டு கண்டுபிடிப்பு, தூக்கத்தில் தோன்றும் கனவுகள் பற்றி மனிதனுக்கு இருந்த பல சந்தேகங்களுக்கு விடை சொன்னது!

மூட நம்பிக்கைகளுக்கும் தேவையில்லாத பயத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. 'மனிதனின் ஆசை அல்லது பயம் - இவைதான் அவன் தூங்கும்போது கனவாக வெளிப்படுகிறது' என்பது இவரின் கண்டுபிடிப்பு. இதுதான் மனோதத்துவ இயல் பற்றி பிறகு எழுதபடவிருந்த அத்தனை உண்மைகளுக்கும் முன்னுரை... அடிப்படை.. ஆணிவேர்.. எல்லாம்!

சிக்மண்ட் ப்ராய்டு உள்ளப் பகுப்பாய்வின் தந்தையாக கருதப்படுகிறார். அவர் தி இன்டர்பிரடேசன் ஆப் டிரீம்ஸ் (Interpretation of Dreams) என்ற புத்தகத்தின் மூலம் இத்துறையில் புரட்சியை ஏற்படுத்தினார்.

உளவியல் கோட்பாடு வளர்ச்சிக்கு பிராய்டு ஆற்றிய தொண்டு அளப்பரியதாகும். மனித நடத்தையில் நனவில் மனச் செயற்பாங்குகளுக்கு (Unconcsious Mental Processes) இவர் மிகுந்த முக்கியத்துவம் அளித்தார்.

இந்தச் செயற்பாங்குகள் எவ்வாறு கனவுகளில் உள்ளடக்கத்தைப் பாதிக்கின்றன என்பதையும், நாத்தவறுகள், பெயர்களை மறந்து போதல், தானே விபத்துக்குள்ளாதல், நோயுறுதல் போன்றவற்றுக்கான காரணங்களை விளக்கினார்.

நாம் செய்யும் எந்த ஒரு செயலும் தன்னிச்சையாக நடப்பதில்லை. நமது அனைத்து எண்ணங்களையும் செயல்களையும் ஆழ்மனது கட்டுப்படுத்துகிறது.

இந்த நாகரீக உலகில் அனைவருடனும் ஒத்து வாழ நாம் பல உணர்ச்சிகளை கட்டுப்படுத்தியும், அடக்கியும் செயல்பட வேண்டியிருக்கிறது.

ஆதலால் இவ்வகை உணர்ச்சிகள் வேறு சில வழிகளில் வெளிப்படுகின்றன. இவ்வாறு உணர்ச்சிகளை வெளிக் கொணரும் ஒரு வழியே கனவுகள் என்று ப்ராய்டு கூறுகிறார்.

நமது ஆழ்மனம் உணர்வுகளை குறியீட்டு மொழியில் (உருவக வடிவில்) வெளிப்படுத்துகிறது.

பிராய்டு மனதின் தன்மைகளை மூன்று வகைகளாக பிரிக்கிறார்.

1. இட் (id) : இன்பம், விருப்புகள், உணர்ச்சிகள் மற்றும் விருப்பத்தீர்வு

2. ஈகோ (Ego): விழிப்பு நிலை, பகுத்தறிதல், தன்னிலை அறிதல், போன்றவை.

3. சூப்பர் ஈகோ (Super Ego): இது இட் டினை தணிக்கை செய்து பகுத்தறிந்து ஈகோவினை வெளிக் கொணர்கிறது.

நாம் விழிப்பு நிலையில் இருக்கின்ற போது இட்- டின் உணர்வுகள் மற்றும் விருப்புகள் சூப்பர் ஈகோவினால் கட்டுப்படுத்தப் படுகின்றன. ஆனால் தூக்கத்தின் போது இது செயல்படுவதில்லை என்பதால் இந்த உணர்வுகள் கனவுகளாக வெளி வருகின்றன.

இட்- டின் உணர்வுகள் தூக்கத்திற்கு இடையூறு விளைவிப்பனவாக இருந்தால் அது தணிக்கை செய்யப்பட்டு, குறியீட்டு மொழிகளாக மாற்றி கனவுகளில் ஓட விடுகிறது. இதனால் இட் டின்உணர்வுகளும் வெளிப் படுகின்றன. தூக்கமும் கலைவதில்லை. சில சமயம் வரும், குழப்பக் கூடிய மற்றும் முழுமை பெறாத கனவுகளுக்கும் இந்த செயல் முறையே காரணம்.

எனவே கனவுகளை சரியாக புரிந்து கொள்வதன் மூலம் ஒரு மனிதனின் மனதை எளிதாக புரிந்து கொள்ளலாம்.

இதன் காரணமாகவே ப்ராய்டு கனவுகளை ஆழ்மனதின் செயல்பாடுகளை புரிந்து கொள்ள இட்டுச் செல்லும் இராஜ பாட்டைகள் என்று குறிப்பிடுகிறார்.

ப்ராய்டு கனவுகளில் வரும் உருவகங்களை 5 வகைகளாகப் பிரிக்கின்றார்.

**1. மாற்றி அமைத்தல்** (Displacem என்ட்):

கனவில் வரும் ஒரு பொருளின் கருத்தை வேறொரு பொருளில் திணித்து விடுவது.

**2. வெளிப்படை** (Projection):

கனவில் தன்னுடைய ஆசைகள், உணர்வுகள் மாற்றமின்றி அப்படியே வருவது ஆகும்.

**3. குறியீடு**(Symbolisation):

அடக்கப்பட்ட உணர்ச்சிகளும் ஆசைகளும் உருவக வடிவில் கனவாக வரும். இதில் ஒரு செயல் அல்லது எண்ணம் அப்படியே வரும்.

4. **சுருக்குதல்** (Condensation):

இச்செயல் கனவில் நமது உணர்வுகளையும், விருப்புகளையும், சுருக்கித் தொகுத்து வழங்குகிறது. அதனால் கனவின் பொருளை நம்மால் எளிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை. கனவில் வரும் ஒரு பொருளானது பல உணர்வுகள், எண்ணங்களை பிரதிபலிப்பதாக இருக்கும்.

5. **கோர்வை** (Rationalisation):

இச்செயல் கனவுகளை வரிசைப்படுத்தி இறுதியாக ஒரு பொருள் பொதிந்த கனவுகளை கோர்வையாகத் தருகிறது.

**வேதாத்திரி பார்வையில் கனவுகள்**

மனிதன் தூங்கும்போது மன இயக்கச் செயல் முழுமையாக நின்று போகாமல், சிறிய அளவில் ஏற்படுகின்ற காந்தக்கசிவு, மின்கசிவாகி மூளையில் செயல்படும்போது கனவுகள் தோன்றுகின்றன.

இவற்றையே சீவகாந்தக் கசிவு என்று சொல்லுகிறோம். மூளையில் விழிப்பில் ஏற்படும் சீவகாந்தக் கசிவு எண்ணமாகிறதென்றால், அதே சீவகாந்தக் கசிவு தூக்கத்தில் ஏற்படும் போது . கனவு எனப் பெயர் பெறுகிறது.

இத்தகைய கனவு நிலை தூக்கத்தில்தான் ஏற்படுகிறது என்று கொள்வதற்கும் இல்லை.

விழிப்பு நிலையிலேயே கூட. நாம் ஒன்றும் செய்யாமலிருக்கும்போது கூட, கருமையப் பதிவுகள் எண்ணங்களாக மலர்ச்சி பெற்றுக் கொண்டே இருப்பதை உணரலாம்.

இதனைப் பகற்கனவு என்று கொள்ளலாம். சூழ்நிலைகளுக்கு ஏற்ப, உணவின் தரம் மாறும் குணங்களுக்கு ஏற்ப, அன்றாடம் அல்லது அவ்வப்போது மனம் ஈடுபடும் செயல்படும் நிலைகளுக்கு ஏற்ப, எண்ணங்களின் நன்மைகள் கனவின் தன்மைகளாக மாறும்.

**தூக்கம் பற்றி வேதாத்திரியார்**

சீவகாந்த இருப்பு உடலில் குறையும்போது பருவுடல் இயக்கத்திற்கு மட்டும் சீவகாந்தம் எடுத்துக் கொள்ளப்படுகிறது மன இயக்கத்திற்கு ஆற்றல் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இதனால் சோர்வு ஏற்படும். அந்த நேரத்தில்தான் புலன் இயக்கம் நடைபெறுவதோ உடல் உறுப்புகளை இயக்குவதோ சாத்தியமில்லை. அந்த நேரத்தில் ஏற்படும் சோர்வுதான் தூக்கமாகிறது.

குறிப்பிட்ட நேரம் தூங்கிவிட்டால் மன இயக்கத்தின் செலவு நின்று போகவே தானாகவே சீவகாந்த ஆற்றல் சேமிக்கப்பட்டுவிடும்.

**வருங்காலம் உணர்தல் பற்றி வேதாத்திரியார்**

மனித மனம் சீவகாந்த ஆற்றலின் அலை இயக்கமென்று உணர்ந்தோம். அதற்கு இறைநிலை உட்பொருளாக இருக்கிறது

உலகத் தொடர் புறத்தே இருந்து வருகின்ற உந்து ஆற்றல்களால் அமைகிறது. சில சமயம் முறையாக உளப்பயிற்சி செய்து இறைநிலைக்கு நெருக்கமாக மன இயக்கத்தைக் கொண்டு வந்து இறையாற்றலின் நுண்மாண் நுழை புலன் இயக்கத்தினால், அது ஏற்படுத்திக் கொண்டே இருக்கும் நிகழ்ச்சிகள் அறிவுக்குப் புலனாகும்.

மற்றொரு வகை இயக்கமும் மனத்திற்கு, ஏற்படும். உறவினர்களோ மற்றவர்களோ ஒரு மனிதனை நினைத்து, ஏதோ அவனுக்கு நன்மையோ தீமையோ செய்ய வேண்டும் என்று திட்டமிட்டால், அவர்களுடைய எண்ணங்கள் செயலுக்கு வருமுன்பே இவனிடத்தில் பிரதிபலித்து அகக்காட்சியாகும்.

பின்னர் அந்த எண்ணங்கள் செயலாக மாறி நிகழ்ச்சி நடைபெறும்போது, இது முன்னமே எனக்கு எப்படித் தெரிந்துள்ளது?என்று அவனுக்கு வியப்பாகத் தோன்றும்.

இவ்வாறு தூக்கம். கனவு, வருங்காலம் உணர்தல் என்ற வகைகளிலெல்லாம் இயங்கி வருகின்ற மனத்தினைப் புலனுணர்வு நிலையான மயக்க நிலையிலேயே செலுத்தித் துன்பங்களைச் சந்தித்துக் கொண்டிருப்பதை தவிர்க்க வேண்டும்.

அதற்கு நல்ல முறையில் பயிற்சிகள் கொடுத்தால் துன்பத்தைத் தோன்றுவித்துக் கொள்ளாத, உணர்ச்சி வயப்படாத விழிப்பு நிலையிலேயே நின்று, இறைநிலையிலே நின்று இறைநிலை உணர்வுபெறும் வரையில் உயரும்.

மனம் என்ற ஒன்றை நாம் வைத்திருப்பதால்தான் நம்மை மனிதன் என்று அழைக்கிறோம்.

**மனநலம் மண்ணுயிர்க்கு ஆக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்**

என்பது திருவள்ளுவர் வாக்கு.

சுவாமி விவேகானந்தர் மைண்டு யுவர் மைன்டு என்று சுருக்கமாக சொல்வார். மனதைக் கட்டுப்படுத்தி உறுதியான மன ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மனம் பற்றி முதன் முதலில் ஆராய்ந்து அதன் சக்தியை உலகிற்கு அளித்தவர்கள், கிழக்கில் தோன்றிய ரிஷிகளே. பின்னர் மேற்கில் தோன்றிய சிக்மண்ட் பிராய்டு ஆழ் மனதின் அற்புதத்தை விஞ்ஞானப் பூர்வமாக விளக்கினார்.

ஆனால் கிழக்கில் உதித்த சூரியன் வேதாத்திரியோ மனதின் நிலைகளை விஞ்ஞான மெய்ஞ்ஞான விளக்கங்களுடன் மானுடத்திற்கு தந்துள்ளார்கள்.



# 13. ஜேம்ஸ் ஆலனும் வேதாத்திரியும்

ஒரு மனிதன் நினைப்பதாகவே மாறுகிறான். ஒரு மனிதனின் நடத்தை என்பது அவனது உள்மன எண்ணங்களின் வெளிப்புற வெளிப்பாடே என்ற பழங்கால தத்துவத்தால் மஸ் லேன் ஆலன் கவர்ந்திழுக்கப்பட்டார்.

**ஜேம்ஸ்ஆலன் வாழ்க்கை வரலாறு. [கி.பி.1864–1912]**

இங்கிலாந்து நாட்டிலுள்ள லீசெஸ்டர் என்ற ஊரில் 1864-நவம்பர் 28 ஆம் நாள் ஜேம்ஸ் ஆலன் பிறந்தார்.

சிறு வயதிலேயே படிப்பில் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்தார். தனிமையை நாடும் குணமுடையவர். புத்தகங்களைப் படித்து சிந்தனைகளில் மூழ்கிடும் பழக்கமுடையவராக இருந்தார்.

ஆத்மா தொடர்பாக, வாழ்க்கைத் தத்துவம் தொடர்பாக, தன் தந்தையைக் கேள்விகள் கேட்டுத் துளைப்பார். பின் தானே அவற்றிற்கு விடை சொல்ல முன் வருவார்.

மாணவன் ஆலனுக்கு பலகீனமான உடம்பு. இருந்தும் வாழ்வின் பிரச்சினைகளையும், ஆத்மாவையும் பற்றியும் ஆழமாக சிந்தித்தார். ஆராய்ந்து கொண்டிருந்தார்.

பல உயர்நிலைகளை அவர் எய்தியதன் அடிப்படை, மனத்தை ஒருமுகப்படுத்தும் திறனும் அதை நடைமுறைக்கு உபயோகித்து பலன் காணும் பக்குவமும் அவர் பெற்றிருந்ததுதான்.

அவருக்கு பதினைந்து வயதாகும் போது அவரது தந்தை தனது சொத்தை எல்லாம் இழந்தார். தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேலை தேடி அமெரிக்கா சென்றார்.



**ஜேம்ஸ்ஆலன்**

துரதிர்ஷ்டவசமாக வந்த இரண்டு நாளில் கொலை செய்யப் பட்டு, அமெரிக்க மருத்ததுவமனை ஒன்றில் இறந்து போனார்.

அவர் விட்டுச் சென்ற சொத்து, ஆலனின்தந்தை நெடுநாள் உபயோகித்த வெள்ளி கைக்கடிகாரம் தான்.

தந்தையின் மறைவுக்குப் பின், ஜேம்ஸ் ஆலன் ஒரு நாளைக்கு 15 மணி நேரம் உழைத்து தன் குடும்பத்தைக் காப்பாற்றினார்.

விதவையான தாய், இரண்டு இளைய சகோதரர்கள்,

குடும்பத்தில் மொத்தம் நான்கு பேர். அப்போதும் கூட மூன்று நான்கு மணி நேரம் படிப்பிற்காகச் செலவிடுவார்.

கடுமையாக உழைப்பது பல மொழிகளைக் கற்றுக் கொள்வதற்குச் சமமானது என்று ஆலன் கூறுவார். 1902 வரை பல அலுவலகங்களில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றினார்.

தனது 17 வயதில் ஷேக்ஸ்பியரது நாடகங்களைப் படித்தார். பல பகுதிகளை மனப்பாடம் செய்திருந்தார்.

படித்த காலத்திலும், பின்னாலும் வாழ்க்கையில் அவருக்கிருந்த ஒரே ஒரு குறிக்கோள், ஆத்ம ஞானம் பெறவேண்டுமென்ற அவாதான். அதைப் பெறப் பல நூல்களைப் படித்தார்.

மனிதன் இவ்வுலகில் அன்றாட வாழ்வில் அனுபவிக்கும் துன்பங்களும் சங்கடங்களும் தான் நரகம் என்பதும் அவன் இப்பூமியில்

அனுபவிக்கும் இன்பங்கள் தான் சொர்க்கம் என்பதும், இதற்கு மேலே சொர்க்கம் நரகம் என்று ஏதும் இல்லை என்பதும் அவரது முடிந்த முடிவு.

ஆலனின் 24 வயதில் எட்வின் ஆர்னால்டு எழுதிய ஆசிய சோதி என்ற புத்தருடைய வாழ்க்கை வரலாற்று நூலைப் படித்து இன்பமுற்றார். அந்தப் புத்தகம் அவருக்கு ஆத்ம அறிவைத் தந்தது.

அதிலிருந்து அதிகமாக, கிழக்கத்திய இலக்கியங்களைப் படிக்கத் தொடங்கினார். நமது நாட்டு நூல்களைப் படிப்பதில் அவருக்குத் தனி ஆர்வம் உண்டு.

ஆத்ம ஞானத்தின் மிகப்பெரிய பொக்கிஷம் கிழக்கத்திய நாடுகள்தான் என்று அடிக்கடி கூறுவதுண்டு. நம் நாட்டின் மதக் கொள்கை களும், வாழ்க்கைப் பண்புகளும் அவரது ஒவ்வொரு வார்த்தையிலும் மிளிர்ந்தன.

ஆத்ம ஞானத்திற்கும் வாழ்வின் உயர்நிலைகளுக்கும் திறந்த மனமும், தவறைத் திருத்திக் கொள்ளும் மனோபாவமும் மிக முக்கியம் என்பது அவரது கொள்கை.

எனவே வாழ்வைவிட, நல்லொழுக்கம்தான் மிக முக்கியம் என்பதை லட்சியமாகக் கொண்டிருந்தார்.

ஆலன் தனது 30 வயதில் லில்லி என்ற ஆங்கிலப் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டார். அவரது 32 வது வயதில் பெண் குழந்தை பிறந்தது.

அவருடைய ஆத்மா, மனம், உடல் என்ற மூன்றுக்கும் ஈடற்ற ஊறுதுணையாக இருந்தார் அவரது மனைவி.

அவருக்கு குழந்தை பிறந்ததிலிருந்து அனைத்து உடலுறவு இன்பங்களையும் துறந்தார். அந்த எண்ணங்களையே துறந்தார்.

அதிகாலை மூன்று மணிக்கு எழுவார். உடன் தியானத்தில் அமர்வார். பின் மலைப்பக்கம் தனியாக நடந்து செல்வார். ஆத்ம விசாரணை தொடர்பாக எண்ணங்களிலே ஆழ்ந்து போவார்.

அவரை நாடி வந்தவர்களுக்கு ஆத்ம ஞானத்திற்கு வழிகாட்டினார். உபதேசித்தார்.

உள் மனத்தில் எழும் எண்ணங்கள் தான் வெளி உலகின் சூழ் நிலைகளாக அமைகின்றன. புறவாழ்வில் தனக்கு நேரும் கெட்ட சம்பவங்களைத் தவிர்க்க வேண்டுமானாலும் தனது உள்மன சிந்தனைகளைச் சீர் செய்ய வேண்டும். இந்த இரண்டு விஷயங்களும் தான் அவரது முக்கிய போதனைகளாகும்.

**ஆலனின் படைப்புகள்**

அவர் தம் வாழ்நாளில் பத்தொன்பது நூல்களை எழுதினார். கடைசி ஒன்பது ஆண்டுகளில்தான் அவர் இதை எழுதினார்.

அவர் எழுதிய பல நூல்களும் அவருக்கு நிரந்தரப் பேரையும் புகழையும் தேடித்தந்தன. அவரது அறிவின் ஆழத்தையும், அவர் சொல்லின் வலிமையையும் கண்டு, படிப்போர் வியக்கின்றனர். பாராட்டுகின்றனர்.

**மறைவு**

ஆலன் தமது உடல் நலம் குறைந்த போதும், அவரது அந்திமக் காலத்திலும், அவர் தனது தியானத்தை, கடவுள் பக்தியை, தர்ம சிந்தனைகளை ஒரு நாளும் கைவிட்டதில்லை.

அவரது உடல் நலத்தைப் பேண அவர் மனைவியும் நண்பர்களும், அவரது பல்வேறு அலுவல்களையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறுவார்கள்.

ஆலனோ, எனது பணிகளைச் செய்யத்தான் இந்த உடலில் நான் வசிக்கிறேன். அது முடிந்ததும் இவ்வுடலை விடடு விடுவேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று சொல்வார்.

ஆலன் 1912 சனவரி 12 ஆம் நாளிலிருந்து எல்லா வேலைகளிலிருந்தும் விடுபட்டு மனைவியிடமும் நண்பர்களிடமும், எல்லா வேலைகளையும் முடித்துவிட்டதாகவும், தான் தந்தையிடமும் ஆண்டவனிடமும் செல்லத் தயார் செய்து கொண்டிருப்பதாகவும் கூறினார்.

1912 சனவரி 24 ஆம் நாள் ஆலனின் உயிர் இறைவனிடம் சென்றது. அவரது உடல் இந்து முறைப்படி தகனம் செய்யப்பட்டது. ஆத்ம ஞானம் என்று அவரது ஒளியைப் போர்த்திய அவரது ஆத்மா இப்பிரபஞ்சம் முழுவதும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

**ஜேம்ஸ் ஆலன் பார்வையில் எண்ணங்கள்**

- ✯ மனித ஜீவன் எண்ணங்களால் உருவாக்கப்பட்டது.
- ✯ நல்லெண்ணங்கள் சரியாக கண்காணிக்கப்பட்டால் தான் நிலைத்து நிற்கும்.
- ✯ மகிழ்ச்சியான எண்ணங்களைப் போல் நல்ல மருத்துவன் யாரும் இல்லை.
- ✯ ஒரு காரணத்திற்காக வளர்ச்சிபெற வேண்டித் தான், ஒரு மனிதன் ஒரு இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறான்.
- ✯ எதை மனம் ரகசியமாக அவாவுகிறதோ அதை அது ஈர்க்கிறது.
- ✯ மகத்தான லட்சியத்தை மனத்தில் கொண்டு தம் சக்தியை ஒருமுகப்படுத்தும்போது அது சாதனையாக மாறுகிறது.
- ✯ நல்ல எண்ணங்களோ, தீய எண்ணங்களோ ஒரு குறிப்பிட்ட எண்ணம் தொடர்ந்து நீடிக்கும் போது, அந்த எண்ணங்கள் அம்மனிதனின் குணநலன்களை பாதிக்காமல், ஒரு விளைவை ஏற்படுத்தாமல் விடாது என்று ஜேம்ஸ் ஆலன் சொல்கிறார்.
- ✯ ஒரு மனிதன் தான் விரும்பும் சூழ்நிலையைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியாவிட்டாலும், நம் மனதில் தோன்றும் எண்ணங்களை தேர்ந்தெடுக்கும் சூழலும் நம் கையில் தான் இருக்கிறது என்கிறார்.
- ✯ எண்ணங்களை ரகசியமாக வைத்துக் கொள்ளலாம் என்று மனிதர்கள் நினைக்கிறார்கள், கற்பனை செய்து கொள்கிறார்கள், ஆனால் எண்ணங்களை மறைக்க முடியாது. ஏனெனில், எண்ணம் முதலில் பழக்கமாக மாறுகிறது. பின் பழக்கம் சூழ்நிலையாக உருவாகிறது என்கிறார். இவ்வுண்மையை ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் சோதித்துப் பார்க்க முடியும். நம்மைப்பற்றி நாமே ஆழ்ந்து சிந்தித்து சுய சோதனை செய்து கொள்வதன் மூலம் இந்த உண்மையைக் கண்டு பிடிக்கலாம். அதற்கான உதாரணங்களையும் ஜேம்ஸ்ஆலன் தருகிறார்.
- ✯ தாழ்ந்த எண்ணங்கள் இச்சைகளாகவும், காம உணர்வுகளாகவும், குடிபோதை போன்ற பழக்கங்களாகவும் மாறுகின்றன. பின் அந்தப் பழக்கங்கள் அழிவு, நோய் என்ற சூழ்நிலைகளாக மாறுகின்றன.
- ✯ தூய்மையற்ற ஒவ்வொரு எண்ணமும், குழப்பம் தளர்ச்சி என்ற பழக்கங்களாக மாறுகின்றன. பின் திசை திரும்பிய சூழ்நிலைகளாக மாறுகின்றன. பின் திசை திரும்பிய சூழ்நிலையாக மாறி நேர் எதிர் விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

- ☆ பயம், சந்தேகம், முடிவெடுப்பதில் தயக்கம் என்ற எண்ணங்கள் பலகீனமான ஆண்மையற்ற உறுதி குலைந்த பழக்கங்களை உண்டாக்குகின்றன. பின் அதுவே தோல்வி, வறுமை, அடிமையாக பிறரைச் சார்ந்திருத்தல் என்ற சூழ்நிலைக்கு கொண்டு செல்கிறது.
- ☆ சோம்பேறித்தனமான எண்ணங்கள், அசுத்தமான பழக்க வழக்கங்களையும், நாணயமற்ற குணங்களையும் உண்டு பண்ணுகின்றன. பின் அதுவே பிச்சை எடுக்கும் நிலையையும், எதிலும் தோற்றுப் போகின்ற சூழ்நிலையையும் உருவாக்குகின்றது.
- ☆ பிறரைப் பழிக்கும் எண்ணங்களும், வெறுப்பும் பிறரைக் குறை சொல்லும் பழக்கத்தை உண்டாக்குகிறது. வன்முறையில் ஈடுபடும் குணத்தை உருவாக்குகிறது. மேற்கூறிய இரண்டு பழக்கங்களும், நமக்கு ஊறு விளைவிக்கிற, காயப்படுத்துகிற சூழ்நிலைதாம்.
- ☆ சுயநலமிக்க எண்ணங்கள் தன்னை முன் நிறுத்துகின்ற பழக்கத்தையும், சுயலாபம் தேடும் குணத்தையும் ஏற்படுத்துகிறது. பின்னால் அதுவே சங்கடம் நிறைந்த சூழ்நிலையை உருவாக்குகிறது. இதற்கு மாறாக அழகான எண்ணங்கள் அன்பு, கருணை என்ற பழக்கங்களாக மாறுகின்றன. பின்னால் அது சுமுகமான சூழ்நிலையையும், புத்துணர்ச்சியூட்டும் சூழ்நிலையையும் உருவாக்குகிறது.
- ☆ தூய்மை மிக்க எண்ணங்கள் சுயகட்டுப்பாடு, அடக்கம் என்ற பழக்கங்களை ஏற்படுத்துகின்றன. பின் அதுவே அமைதியும், சாந்தமும் நிறைந்த சூழ்நிலையை உண்டாக்குகின்றன.
- ☆ தன் காலிலே நிற்க விரும்பும் எண்ணம், துணிவு, முடிவெடுக்கும் உறுதி போன்ற எண்ணங்கள் ஆண்மை நிறைந்த பழக்க வழக்கங்களை உண்டு பண்ணுகிறது. பின்னால் வளமான வாழ்வு, வெற்றி, சுதந்திரம் என்ற சூழ்நிலைகளை அமைக்கிறது.
- ☆ துடிப்பு நிறைந்த எண்ணங்கள், தூய்மையான பழக்கங்களையும், உழைக்கும் மனோபாவத்தையும் உண்டு பண்ணுகின்றன. பின் அதுவே இனிமையான சூழ்நிலையாக மாறுகின்றது.
- ☆ சாந்தமான எண்ணங்கள், மன்னிக்கும் எண்ணங்கள் அமைதியான பழக்க வழக்கங்களை ஏற்படுத்துகின்றன. பின்னால் அதுவே ஒரு பாதுகாப்புத் தரும் சூழ்நிலையை உண்டாக்குகிறது.

- ★ அன்பான எண்ணங்கள், சுயநலமற்ற எண்ணங்கள், மற்றவருக்காகத் தன்னைத் தியாகம் செய்யும் குணத்தை பழக்கத்தை உண்டாக்குகிறது. இதன் விளைவாக நிரந்தரமான வளம் நிறைந்த வாழ்வும் உண்மையான செல்வமும் ஏற்படுகிறது.

- ★ மனதில் நாம் கொண்டிருக்கும் எண்ணங்களுக்கேற்ப நம் சூழ்நிலை அமைகிறது. நாம் எந்த சூழ்நிலையை விரும்புகிறோமோ அதற்கேற்ப மன எண்ணங்களை அமைத்துக் கொண்டால் வாழ்வு நாம் விரும்புகிறபடி அமையும்.

ஆலன் எண்ணங்கள் குறித்து மேற்கோள் காட்டப்பட்ட குணநலன்கள் குறித்து, மனவியல் ஆய்வாளர்கள் அதிசயிக்கிறார்கள். ஜேம்ஸ் ஆலனின் தத்துவங்கள் அறிவியல்படி 100/100 உண்மை என்கிறார்கள்.

ஆம், இப்பிரபஞ்சம் இயங்குவது சில விதி முறைகளினால் தான். ஏனோ தானோ என்றல்ல. வாழ்வின் அடிப்படை நீதிதான் அநீதி அல்ல. ஆத்மீக உலகை ஆளும் சக்தி நேர்மைதான் ஊழலல்ல.

செயலை விதையுங்கள்; பழக்கம் உருவாகும். பழக்கத்தை விதையுங்கள்; பண்பு உருவாகும். பண்பை விதையுங்கள்; எதிர்காலம் உருவாகும்.

**வேதாத்திரி மகரிசியின் பார்வையில் எண்ணங்கள்**

மனவள மேம்பாடும் அதன் வழிச் சமூக உறவு மேம்பாடும் பற்றி வேதாத்திரி மகரிசி அவர்கள் அறிவியல் அறத்தோடு வாழ்வியல் விழுமியங்களைக் கூறிச் செல்கிறார்.

வாழ்க்கையின் விளைநிலமாகிய மனத்தில் எண்ணம், சொல், செயல் ஆகிய முத்தொழிலும் பிறக்கின்றன. எங்கும் செல்லும் வல்லமையுடைய எண்ணத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் அவசியம் என்கிறார்.

எண்ணத்தின் அளவை ஒட்டியே மனத்தின் தரமும் உணர்வும் அமைய அவ்வடிப்படையில் மனிதனின் தரமும் உயர்வும் அமைகின்றன.

- ✪ உயிராற்றல் சுழற்சியால் ஏற்படும் அலைகள் சீவகாந்தம். இது புலன்கள் மூலம் செலவாகும்போது உணர்தல், கணித்தல் ஆகிய பதிவுகள் புலன்கள் மூளை, உயிர்த்துகள்கள், ஜீவகாந்தம், கருமையம் ஆகியவற்றில் பதிவாகிப் பிரதிபலித்தலும் ஆகிறது. ஒவ்வொரு அனுபோகமும் ஒவ்வொரு அனுபவமாகிறது. இதுவே கால, தூர, பருமன், வேகம் என்ற கணித்தல், எண்ணுதல் என்று ஆகி எண்ணம் எனப்படுகிறது.

- நமது எண்ணமே நாமாகிறோம்.
- எண்ண இயக்கம்தான் வாழ்வு. அது உடலில் இரத்த ஓட்டம் இருக்குமட்டும் நித்திரை காலம் தவிர மீதி நேரத்தில் இயங்கிக் கொண்டே இருக்கும்.
- எண்ணம் எழும் இடமோ ஒரு புள்ளியாகும். இயங்கி முடியும் அளவோ அகண்டாகாரம்.
- எண்ணம் தானாக எழுந்து அலையாமல் எண்ணத்தின் எண்ணமாய் இருப்பதே யோகம்.
- தீய எண்ணங்கள் உள்ளத்தைக் கெடுப்பது போலவே உடலையும் கெடுக்கின்றன.
- உண்மையில் எதிரி உனக்கு உண்டு எனில் உள்ளத்திலெழும் ஒழுங்கற்ற எண்ணமே.
- மண்ணே பானையாய் இருப்பது போலவே, எண்ணமாய் இருப்பது இயற்கையே ஆகும்.
- எண்ணம் எழும் போதே அது ஏன் என்று எண்ணத்தில் ஆராய்ந்தால் சுலபமாக எண்ணத்தின் காரணமும் விளைவும் காண எழும் எண்ணம் யாவும் நற்பயனாய் மாறும்.
- தனக்கும் மற்றவர்களுக்கும் எந்த எண்ணம் நன்மை தருமோ அந்த எண்ணத்தைத்தான் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- எண்ணத்திற்கு காவலாக எண்ணத்தையே வைக்க வேண்டும். எண்ணத்தை ஆராய எண்ணத்தால்தான் முடியும்.
- எண்ணமே எக்காலத்திற்கும் வாழ்க்கையின் சிற்பி. எண்ணி எண்ணி இனிதே பயக்கும்.
- எண்ணத்தை ஆராய்ச்சியிலும் தூய்மையிலும் வைத்திருப்பதுவே அறிஞன், மகான், ஞானி.
- எண்ணத்தை நிறுத்த முயலாதே. அது அதிகமாக அலையும். அதை அறிய முயன்றால் அப்போதுதான் அது தானே சிறுகச் சிறுக அமைதி பெறும்.
- எண்ணத்தின் அளவையொட்டியே மனதின் தரமும் உயர்வும் அமைகின்றன. மனதின் அளவில்தான் மனிதனின் தரமும் உயர்வும் உருவாகின்றன.

- ✪ எண்ணத்திற்கு காவலாக எண்ணத்தைதான் வைக்க வேண்டும்.
- ✪ எண்ணத்தின் சக்தி இயல்பு அறிந்திடில் எண்ணம் மபிற்கும் இடமும் விளங்கும்.
- ✪ உண்ணும் உணவு உடல் மட்டும் பாயும். எண்ணும் எண்ணம் எங்கும் பாயும்.
- ✪ உயிர்ச்சக்தியின் இயக்க விளைவுதான் எண்ணம். அது அறியும் திறனுடையதால் அறிவென்றும் கூறப்படுகிறது.
- ✪ மழைநீர் இனிமையானதுதான். அது விழுகின்ற நிலத்தைப் பொறுத்தே அதன் தன்மை மாறுபடப் போகின்றது. அதுபோல நல் எண்ணம் உடையோர்க்கு எல்லாமே நல்லதாகவே மாறும் இயல்பு கிட்டும்.
- ✪ எண்ணியவெல்லாம் எண்ணியபடியே ஆகும். எண்ணத்தால், உறுதியும், ஒழுங்கும் அமைந்திடும்.
- ✪ எண்ணத்தில் உறுதியும் ஒழுங்கும் இருந்தால் எதையும் சாதிக்கலாம்.
- ✪ எண்ணத்தை எண்ணத்தால் ஆராய ஆராய இயற்கை ரகசியங்கள் எண்ணத்துள் காட்சியாம். எண்ணத்தின் இவ்வுயர்வை இயற்கையே பேசுதென்றும் இதுவே உள்ளுணர்வென்றும் இயம்புவோர் அனுபவத்தோர்.
- ✪ எண்ணு, சொல், செய், எல்லோர்க்கும் நன்மை தர, எண்ணும்படி செய், செய்யும்படி எண்ணு.
- ✪ எண்ணத்தின் வேகமும், இயல்பும் அறிந்தோர்க்கு எண்ணமே இன்பமயம். எண்ணம் அமைதி பெறும்.
- ✪ விண்ணிலும் மண்ணிலும் வியாபகமான நீ எண்ணத்தில் நிறைந்திடு. செய்கையில் சிறந்திடு.
- ✪ எண்ணத்தைப் பண்படுத்தவும், பயன்படுத்தும் வழி காண வேண்டும். அந்தப் பெருநிதியை அழிக்க்வேண்டுமென்று நீ வீணான முயற்சி கொள்ளாதே. அதுதான் மரணம் என்ற இடத்தில் தானாக நின்றுவிடப் போகின்றதே. எண்ணம் நின்றுவிட்டால் நீ என்பது தனித்தது ஏது?

- ✪ எண்ணுவதையே செய்யுங்கள். அதற்கும்மேல் இன்னொருபடி போங்கள். செய்ய முடிவதையே எண்ணுங்கள்.
- ✪ ஒவ்வொருவருடைய எண்ணம்தான் வாழ்வின் சிறப்பாக உள்ளது.

தனி மனித மேம்பாட்டிற்கு சமூக உறவிற்கும் ஜேம்ஸ்ஆலனும் வேதாத்திரி மகரிசியும் சில எளிய சிந்தனைகளை கருத்துகளைச் சுவைபட இனிமையாக மானுடத்திற்கு தந்துள்ளார்கள்.

ஒவ்வொரு மனிதனும் அவர்கள் கூறிய கருத்துகளை நெறிப்படுத்துவார்களேயானால் தனி மனித மேம்பாடும், சமூக உறவும் மேம்படும் என்பது திண்ணம்.



# 14. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

அணு முதல் அண்டம் வரை ஆராய்ந்து அற்புதக் கோட்பாடுகள் வகுத்தவர் ஐன்ஸ்டைன். இதற்கு மெய்ஞ்ஞான விஞ்ஞான விளக்கம் தந்தவர் வேதாத்திரி.

பெரியாரின் பகுத்தறிவும், காரல் மார்க்ஸின் பொது உடைமை, ஐன்ஸ்டீனின் சார்பு தத்துவமும் ஒருங்கே அமைந்ததே வேதாத்திரி மகரிசியின் மன வளக்கலையாகும்

**ஐன்ஸ்டைன் வாழ்க்கை வரலாறு (கி.பி. 1879 – 1955)**

ஐன்ஸ்டைன் ஜெர்மனியில், வுர்ட்டெம்பர்க் (Württemberg) இலுள்ள உல்ம் (Ulm) என்னுமிடத்தில், 1879 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையின் பெயர் ஹேர்மன் ஐன்ஸ்டீன் Hermann Einstein), தாயாரின் பெயர் போலின் கோச் (Pauline Koch).


இவர் ஒரு கத்தோலிக்க ஆரம்பப் பாடசாலையில் சேர்க்கப்பட்டார். அத்துடன் தாயாரின் வற்புறுத்தல் காரணமாக இளமையில் வயலினும் கற்றுவந்தார்.

இவர் ஐந்து வயதாக இருந்தபோது, இவரது தந்தையார் இவருக்கு ஒரு சட்டைப்பையில் வைக்கக்கூடிய திசையறி கருவியொன்றைக் காட்டினார்.

அந்த வயதிலேயே அவர் ஒன்றுமற்ற வெளியில் ஏதோ ஒன்று காந்த ஊசியில் தாக்கம் ஏற்படுத்துவதைப் புரிந்துகொண்டார்.

அவர் மாதிரியுருக்களையும், இயந்திரக் கருவிகளையும், பொழுதுபோக்காகச் செய்துவந்தார்.

எனினும், சிறுவயதில் இவருக்கு பேசும் போது பேச்சில் தடங்கல் இருந்தது (Einstein had early speech difficulties).



ஐன்ஸ்டைன்

இவர் தனது 12 ஆவது வயதிலேயே கணிதம் படிக்க ஆரம்பித்தார். இவருடைய உறவினரிருவர் அறிவியல், கணிதம் தொடர்பான நூல்களையும், ஆலோசனை களையும் கொடுத்து, அவரை ஊக்கு வித்தார்களாம்.

இவரது தந்தையாருடைய தொழிலில் நட்டம் ஏற்பட்டதனால், 1894ல், அவரது குடும்பம் மியூனிக்கிலிருந்து, முதலில் இத்தாலியிலுள்ள மிலான்(Milan) நகருக்கும் பின்பேவியா (Pavia) என்னுமிடத்துக்கு இடம் பெயர்ந்தது.

ஆனால் அவர் மியூனிக்கிலேயே பாடசாலைப் படிப்பை முடிப்பதற்காகத் தங்கியிருந்தார். பாடசாலையில் ஒரு தவணையை முடித்துக் கொண்டு குடும்பத்துடன் இணைந்துகொள்ளப் பேவியா(Pavia) சென்றார்.

பாடசாலைப் படிப்பை முடிப்பதற்காக ஐன்ஸ்டீன் சுவிட்சர்லாந்துக்கு அனுப்பப்பட்டார். 1896ல் பாடசாலைப் படிப்பை முடித்துக்கொண்டு, சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரிலுள்ள சுவிஸ் கூட்டமைப்புப் பல்தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தில் (Polytechnic) சேர்ந்தார்.

இந்தச் சமயத்தில் அவர் தனது ஜெர்மனி நாட்டு குடியுரிமையை விட்டு நாடற்றவரானார்.

1900 இல், சுவிஸ் கூட்டமைப்புப் பல்தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தில் கற்பித்தல் டிப்ளோமாவைப் பெற்றுக்கொண்டார். 21-02-1901இல் இவர் சுவிஸ்சர்லாந்தின் குடியுரிமையைப் பெற்றார்

படிப்பு முடிந்ததும் இவருக்கு கற்பித்தல் வேலையெதுவும் கிடைக்கவில்லை. இவருடன் படித்த ஒருவரின் தந்தையார் மூலம் 1902ல் சுவிஸ் காப்புரிமை அலுவலகத்தில் தொழில்நுட்ப உதவிப் பரிசோதகராக வேலை கிடைத்தது.

அங்கே கருவிகளைப் பற்றி விளங்கிக் கொள்வதற்கு இயற்பியல் அறிவுப் பணியாளர் ஒருவர் தேவைப்பட்டது, அங்கே கருவிகளுக்கான காப்புரிம விண்ணப்பங்களை மதிப்பீடு செய்வதே அவரது வேலையாக இருந்தது.

ஐன்ஸ்டைன் மாணவராக இருந்த போதே, அவரது அறிவாற்றலால் கவரப்பட்டு காதலியாக மாறிய மிலேவா (Mileva Maric) என்ற பெண்ணை 06-01- 1903 இல் அவர் மணந்தார் . அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. (Hans Albert Einstein, Eduard).

பிள்ளைகள் பெற்ற மிலேவா போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன. உலக மேதையான ஐன்ஸ்டைன் உள்ளத்தைப்புரிந்து கொள்ள விரும்பாத அவரது மனைவி ஐன்ஸ்டைனை விட்டுப் பிரிந்தார்.

தனக்கு ஒரு துணை வேண்டி, தம் தேவைகளை அறிந்து தாயுள்ளத்தோடு நடத்துகின்ற ஒரு பெண்ணை ஐன்ஸ்டைன் தேடினார். அவருடைய உறவுக்காரப் பெண்ணான எல்சா என்பவளை ஐன்ஸ்டின் மணந்தார். திருமணமான சிறிது காலத்திலேயே எல்சா மறைந்தார்.

தம் அறிவாற்றலைக் கண்டு காதலித்துத் திருமணம் செய்த மிலேவா பிரிவும், தம் உறவுக்காரப் பெண்ணான எல்சாவின் மறைவும் ஐன்ஸ்டினை யோசிக்க வைத்தது.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் தமது எதிர்கால வெற்றிகளுக்குத் தடைக் கற்களாக இருப்பதை நினைத்து ஒரு முடிவுக்கு வந்தார். இனி எஞ்சிய காலத்தைத் தனியாகவே வாழ்ந்து முடிப்பது என்று ஐன்ஸ்டின் உறுதி பூண்டார்.

இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாவதற்குரிய அறிகுறிகள் தெரிந்த நேரம். அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஐன்ஸ்டினை அழைத்து, அணுகுண்டு தயாரிக்க வேண்டும். அது உங்களால்தான் முடியும். நீங்கள் அணுகுண்டு தயாரித்துக் கொடுத்தால் அதற்குத் தேவையான உதவிகளும், பணமும் தரத் தயாராக இருக்கிறேன் என்றார்.

ரூஸ்வெல்ட் சொன்னதைக் கேட்ட ஐன்ஸ்டைன் சிரித்தார். அவருடைய சிரிப்பின் அர்த்தம் புரியாமல் ரூஸ்வெல்ட் விழித்தார்.

அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித குல மேம்பாட்டுக்குப் பயன்பட வேண்டுமே தவிர, மனித குலத்தின் அழிவுக்குப் பயன்படுத்தக்கூடாது என்று உறுதியாக அந்த விஞ்ஞானி ரூஸ்வெல்டுக்குப் பதில் கூறினார்.

ரூஸ்வெல்ட் வியப்போடு ஐன்ஸ்டினைப் பார்த்தார். மீண்டும், எனது அறிவாற்றலை ஒரு போதும் மனித குலத்தை அழிப்பதற்குப் பயன்படுத்த மாட்டேன்; பணத்திற்காக எனது மூளையை அடகு வைக்க மாட்டேன் என்று கூறிவிட்டு ஐன்ஸ்டின் வெளியேறினார்.

ரூஸ்வெல்ட் வேறொரு விஞ்ஞானியை வைத்து அணுகுண்டைத் தயாரித்தார். இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்தபோது அந்த அணுகுண்டை ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்களின் மீது அமெரிக்கா வீசியது.

இந்தக் கோரச் சம்பவம் 1945ஆம் ஆண்டு நடந்தது.

ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் தரைமட்டமாயின. எங்கு நோக்கினும் மரண ஓலங்கள், இந்தக் கொடுமையின் பாதிப்பிலிருந்து இன்றும் கூட அந்த நகரம் முழுதும் விடுபடவில்லை.

அன்று வீசிய அணுகுண்டு கதிர்கள் இன்று பிறக்கும் குழந்தைகளையும் பாதிப்பதாகப் பல விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அந்த அணுகுண்டு ஜப்பான் நகரங்களின் மீது வீசப்பட்டதையும், அதனால் மனித குலம் பாதிக்கப்பட்டதையும் அறிந்து தேம்பித் தேம்பி அழுதார் ஐன்ஸ்டின்.

இந்த சோகத்திலிருந்து விடுபட அவருக்குப் பலகாலம் ஆயிற்று.

அந்த மனிதாபிமானமிக்க விஞ்ஞானி ஐன்ஸ்டின் கண்டுபிடித்த பொருள் சக்தி மாற்றக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் அணுகுண்டு தயாரிக்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டின் ஆணைக்கு மறுப்பு தெரிவித்த ஐன்ஸ்டின், இன்று உலகப் புகழ்வாய்ந்த மேதைகளில் ஒருவராக உருவாகியுள்ளார்.

**ஐன்ஸ்டைன் தந்த எச்சரிக்கை**

ஒருமுறை, ஒரு நிருபர் விஞ்ஞானி ஐன்ஸ்டினைப் பேட்டி கண்டார்.

மூன்றாவது உலகப்போர் வந்தால் எத்தகைய பயங்கர ஆயுதங்களைப் பயன்படுத்துவார்கள்? என்றார்.

அதற்கு ஐன்ஸ்டின், சொன்னார். அது எனக்குத் தெரியாது. ஆனால் நான்காவது உலகப்போர் மூண்டால் எதைப் பயன்படுத்துவார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும் என்றார்.

உடனே அந்த நிருபர் மிக ஆவலுடன், சொல்லுங்கள் என்றார்.

கல், வேல் இந்த இரண்டைத் தவிர வேறெதுவும் அப்போது இருக்காது! அப்போது மனிதன் பழைய நிலைக்கு வந்துவிடுவான்! என்றார் ஐன்ஸ்டின்.

## நோபல் பரிசு தேடி வந்தது

விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் ஆகியோர் மத்தியில் ஐன்ஸ்டினின் தத்துவமும் புகழ்ந்து பேசப்பட்டது. 1921-ஆம் ஆண்டு ஐன்ஸ்டினை நோபல் பரிசு தேடி வந்தது.

உலகின் பல பகுதிகளுக்குச் சென்று வந்த ஐன்ஸ்டின், தமது சொந்த நாடான ஜெர்மனியிலேயே வாழ்வது என்று முடிவு செய்து, அங்கேயே தங்கினார்.

ஆனால் அப்போது ஜெர்மனியின் அதிபராக இருந்த ஹிட்லர், யூதர்களையும், யூத அறிவாளிகளையும் இழிவாக நடத்துவதைக் கண்டு வருந்தினார்.

இனி நாம் வாழ்வதற்கு ஜெர்மனி ஏற்ற இடமல்ல என்று ஐன்ஸ்டின் முடிவு செய்தார். அதன்பின் அவர் வாழ்க்கை அமெரிக்காவில் தொடர்ந்தது.

அங்குள்ள பிரின்ஸ்டன் என்ற பல்கலைக்கழகத்தில் ஐன்ஸ்டின் இயற்பியல்/ பௌதிகவியல் பேராசிரியராகப் பணியாற்றினார்.

சுமார் இருபது ஆண்டுகள் மனைவி துணைவியின்றி வாழ்ந்த ஐன்ஸ்டின், 1955 ஏப்ரல் 18-ம் நாள் அமெரிக்காவில் மறைந்தார்.

## ஐன்ஸ்டைன் சொன்ன கணித தத்துவம்

ஒருமுறை விஞ்ஞானி ஐன்ஸ்டைனிடம் ஒருவர், வாழக்கையில் வெற்றி பெறுவது எப்படி? என்று கேட்டார்.

அதற்கு ஐன்ஸ்டின், "$A = X + Y + Z$" பதிலளித்தார்.

இந்தப் பதிலைக் கேட்ட அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. பின் அதற்கான விளக்கத்தை விஞ்ஞானி ஐன்ஸ்டினே விளக்கினார்.

'A' என்பது தான் வாழ்க்கையில் வெற்றி. கடினமான உழைப்பே 'X'. ஆரோக்கியமான விளையாட்டு 'Y' என்றார்.

உடனே அவர், 'Z' என்னவென்று சொல்லவில்லையே?என்றார்.

அதற்கு ஐன்ஸ்டின், அதிகம் பேசாமல் வாய் மூடிக் கொண்டிருப்பது! என்றார்

**ஐன்ஸ்டைன் என்ற அரிய ஆசிரியர்**.

ஜெரோம் வீட்மென் என்ற புகழ்மிக்க அமெரிக்க நாவலாசிரியர் ஐன்ஸ்டீனுடன் தமக்கு ஏற்பட்ட உணர்ச்சியூட்டும் அனுபவத்தைக் கூறுகிறார்.

வீட்மென் இளைஞராக இருந்தபோது ஒரு நாள் ஒரு செல்வந்தரின் வீட்டுக்கு இரவு விருந்துக்குச் சென்றிருந்தார்.

விருந்து முடிந்ததும் ஓர் இசை நிகழ்ச்சி ஏற்பாடாகி இருந்தது. வீட்மெனுக்கு இசை என்றால், அதுவும் சாஸ்த்ரிய இசை என்றால் சிம்ம சொப்பனம்.

இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே என நொந்தபடி, ஏதோ இசைஞானம் உள்ளவர்போல் முகபாவத்தை மட்டும் வைத்துக் கொண்டு, தம் சொந்த நினைவுகளில் மூழ்கினார் வீட்மென்.

திடீரென்று எல்லோரும் கைதட்டும் சத்தம் கேட்டது. உடனே சுதாரித்துக் கொண்டு உற்சாகமாகத் தாமும் கைதட்டினார் வீட்மென்.

அப்போது அவரது வலது பக்கத்திலிருந்து உங்களுக்கு பாஹ் இசையென்றால் மிகவும் பிடிக்குமா? என்று தீர்க்கமான குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தால்...ஆல்பர்ட் ஐன்ஸ்டின்.

சம்பிரதாயமாகக் கேட்ட கேள்வி என்று சம்பிரதாயமான ஒரு பதிலைக் கூறியிருக்க வேண்டியது தானே வீட்மென்?

ஐன்ஸ்டினின் நேர்மைமிக்க பார்வையில், ஒரு சிறு பொய்யையும் சொல்ல முடியாதவரானார் அவர்.

பாஹ் இசைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. இதற்குமுன் அந்த இசையை நான் கேட்டதே இல்லை என்றார், ஐன்ஸ்டினின் முகத்தில் திகைப்பு.

பாக் மட்டுமல்ல, பொதுவாக எந்த இசையையும் தாம் அதிகம் கேட்டதில்லை என வீட்மென் மேலும் கூற, ஐன்ஸ்டினின் முகத்தில் கவலை படர்ந்தது.

நடந்து கொண்டிருந்த நிகழச்சியையும், சுற்றியிருந்த பிற விருந்தினர்களையும் பொருட்படுத்ததாதவராய், வீட்மெனின் கையைப் பிடித்து, தயவு செய்து என்னோடு வாருங்கள் என்று மாடியில் இருந்த ஓர் அறைக்கு அவரை அழைத்துச் சொன்றார்.

வீட்மென்னைப் பார்த்து, உங்களுக்கு எப்போதிலிருந்து இசை கடினமானது என்ற அபிப்பிராயம் தோன்றியது? என்று கேட்டார்.

இதற்குள் என்னடா இப்படி உளறி, கொஞ்சமும் எதிர்பாராத விதத்தில் இந்த மாமனிதரை அசௌகரியப்படுத்தி விட்டோமே என எண்ணினார் வீட்மென்.

டாக்டர் ஐன்ஸ்டின், நீங்கள் கீழே சென்று நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுங்கள். எனக்கு இசையை ரசிக்கத் தெரியாது என்பது ஒரு பொருட்டல்ல என்றார்.

அதைக் காதில் வாங்காதவராய் ஐன்ஸ்டின், முதலில் வீட்மெனுக்கு பழக்கமான, எளிதில் புரியக்கூடிய மெல்லிசைப் பாடல்களில் ஆரம்பித்து, இசையின் வெவ்வேறு வகைகளை ஒன்றன்பின் ஒன்றாக, வீட்மெனைக் கேட்கவும், பாடவும் வைத்தார்.

அவருக்கு மெல்ல மெல்ல இசையின் நுணுக்கங்களை எடுத்துக் காட்டினார்.

சாஸ்த்ரிய இசை என்றாலே புரிந்து கொள்வது கடினம் என்று எண்ணியிருந்த அவரிடம், கணக்குப் பாடம் கூடத்தான் கடினம். உங்கள் ஆசிரியர் முதல் பாடத்திலேயே உங்களுக்கு வகுத்தலும், பின்னங்களும் கற்றுக் கொடுத்திருந்தால்நீங்கள் கணக்கு என்று சொன்னாலே அலறியடித்துக் கொண்டு ஓடியிருப்பீர்கள்.

ஆனால் அவர் அப்படி செய்திருக்க மாட்டார். உங்களுக்கு முதலில் எண்களைக் கற்றுத் தந்த பின்னரே கணிதத்தின் பிற கோட்பாடுகளை கற்றுக் கொடுத்திருப்பார்.

இல்லை என்றால், கணிதம் என்னும் அருமையான சாஸ்திரத்தின் அழகை நீங்கள் வாழ்க்கை முழுவதும் உணராமல் போயிருப்பீர்கள்.

இசையும் அப்படித்தான். படிப்படியாகப் புரிந்து கொண்டால் கடினமே இல்லை என்று கூறி ஊக்கப்படுத்தினார்.

வீட்மெனுக்கு அங்கு நடப்பதை நம்பவே முடியவில்லை. தற்செயலாகச் சந்தித்த ஒருவனுக்குச் சங்கீத ரசனை ஏற்படுத்துவதுதான் தம் வாழ்க்கையின் முக்கிய பணி போல் அம்மனிதர் செயல்பட்டதைப் பார்த்து வீட்மென் ஸ்தம்பித்துப் போனார்.

வீட்மென் ஒவ்வொரு மெட்டாகப் பாடிக்காட்ட ஐன்ஸ்டினின் முகத்தில் பெருமிதம் பூத்தது.

திடீரென தாம் நினைத்ததைச் சாதித்து முடித்தவராய் எழுந்து, இப்போது நாம் பாஉறின் இசைக்குத் தயாராய் விட்டோம் என்றபடி இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த அறைக்கு வீட்மென்னை மீண்டும் அழைத்துச் சென்றார் ஐன்ஸ்டின்.

அமரும் போது, கவலைப்படாமல் இசையைக் கேளுங்கள். அவ்வளவுதான் என்றார்.

வீட்மென், அவ்வளவுதான் என்று அவர் சாதாரணமாகச் சொல்லிவிட்டார். ஆனால் முன்பின் அறிமுகமில்லாத எனக்காக அவர் எடுத்துக் கொண்ட சிரத்தையல்லாமல் அன்றிரவு வாழ்க்கையிலேயே முதல் முறையாக பாஉற் எனும் மாபெரும் இசைக்கலைஞனின் படைப்பை நான் ரசித்து உணர்ந்திருக்க முடியாது.

அன்று அந்த இசை நிகழச்சி முடிந்தபோது, அந்த இசையை உண்மையிலேயே ரசித்த சிலரோடு சேர்ந்து நானும் உண்மையாகவே கைதட்டினேன் என்று சொல்கிறார் வீட்மென்.

அன்று விருந்துக்கு அழைத்திருந்தவரின் மனைவி, டாக்டர் ஐன்ஸ்டின், நிகழ்ச்சியின் பெரும் பகுதியை நீங்கள் ரசிக்க முடியாமல் போனதே என்று வருந்திக் கூறினார்.

உடனே ஐன்ஸ்டின், வருந்தாதீர்கள். நானும் என் இளம் நண்பரும் மனிதனால் செய்யக் கூடியவற்றிலேயே மிகவும் மகத்தான ஒரு செயலில் மூழ்கியிருந்தோம் என்றார்.

அப்படி என்ன செய்தீர்கள்? என்றார் அப்பெண்மணி ஆச்சரியத்துடன்.

ஐன்ஸ்டின் சிரித்தவாறு கூறிய வார்த்தைகள் இன்றும் அவரது கல்லறை மீது ஒளிர்ந்து கொண்டிருக்கும் வார்த்தைகளாகும். அவர் சொன்னது.

அழகின் எல்லைக்குள் செல்ல மற்றும் ஒரு நுழைவாயில் திறக்கப்பட்டது.

படைப்பில் உள்ள அழகை உணரும் சக்தி, காலத்தையும் தூரத்தையும் கடந்து உயர்ந்த உண்மைகளைப் போதிக்க வல்லது. மனிதனின் தூய்மையான உள்ளுணர்வை எழுப்ப வல்லது.

அதை உணர்ந்துதான் ஐன்ஸ்டின் அன்று முன்பின் தெரியாத ஒருவருக்காகத் தம் பொன்னான நேரத்தைச் செலவிட்டார்.

நமக்குக் கல்வி புகட்டும் ஆசிரியர்கள் பலர் உள்ளனர். ஆனால், உண்மையைப் புகட்டும் ஆசிரியர்கள் சிலரே உள்ளனர்.

தன் அறிவை தன் முன்னேற்றத்திற்கு மட்டுமல்லாமல் சக மனிதர்களின் எழுச்சிக்குப் பயன்படுத்திய ஐன்ஸ்டினின் புகழ் அவர் போற்றிய பிரபஞ்சத்தின் அழகைப் போன்றே நிலைத்திருப்பதில் ஆச்சரியமென்ன!.

## வேதாத்திரியும் ஐன்ஸ்டைனும்

இந்த பிரபஞ்சம் நான்கு கூட்டுகளால் ஆனது என்றார் ஐசக் நியூட்டன். அவையாவன....வெளி, காலம், பருப்பொருள் மற்றும் ஆற்றல். (Space, Time, Matter and Energy).

நியூட்டனுக்குப் பின் வந்த மாமேதைகளில் குறிப்பிடத்தக்கவர் ஐன்ஸடைன்.

ஈர்ப்பு விசைக்கான காரணம் பொருள்கள் மட்டுமல்ல, அதனைச் சூழ்ந்துள்ள வெளியும் ஓரளவிற்குக் காரணம், என்று வெளியின் சிறப்பை முதன் முதலாக வெளிக் கொணர்ந்தார் ஐன்ஸ்டைன்.

நியூட்டனின் சித்தாந்தம் ஐன்ஸடைன் வரவால் நொறுங்கிப் போனது.

மூலங்கள் நான்கு என்ற நியூட்டன் கூறியதை, இரண்டாகக் குறைத்தார் ஐன்ஸ்டைன்.

இந்தக் குறைப்பினால் இந்திய ‘நாட்டின் தொன்மைமிக்க அத்வைதத் தத்துவத்தை நோக்கி நகர தொடங்கியது விஞ்ஞானம்.

மூலங்கள் நான்கு என்றிருந்ததை இரண்டாகக் குறைத்ததற்கே ஐன்ஸடைன் அகில உலகப் புகழ் பெற்றார்..

வெளியும், காலமும் தனித் தனி அநாதிகள் அல்ல. அவைகள் இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்-வெளி காலமாக மாறலாம், காலம் வெளியாக மாறலாம் என்பதை லாரெனட்ஸ் சமன்பாடுகளினால் நிறுவப்படுகின்றன.

பருப்பொருளும், ஆற்றலும் வெவ்வேறு அல்ல. அவைகள் இரண்டும் இன்னொரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதை = 2 என்ற சமன்பாட்டின் மூலம் நிறுவினார் ஐன்ஸடைன்.

மெய்ஞ்ஞானத்தில் அவ்வளவாக ஈடுபாடில்லாத அன்றைய மேலை நாட்டு விஞ்ஞானிகள் ஐன்ஸ்டைனைப் புரிந்து கொள்ள முடியாமல் தத்தளித்தனர்.

நாளடைவில் ஐன்ஸ்டைன் தந்த விஞ்ஞானத்திலும் சிக்கல்கள் தோன்றின.

பிரபஞ்சம் எல்லையுடையதா? எல்லையற்றதா? எல்லை யுடையதென்றால், எல்லைக்கப்பால் என்ன இருக்கிறது? அணுவைப் பற்றியும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அண்டத்தைப் பற்றியும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. என்ன நமது விஞ்ஞானம்! என்று சலித்துக் கொண்ட ஐன்ஸ்டைன் ஒருமுறை கூறினார்.

"when I compare to the ;mighty Reality, all our theories are trash, however they are the ;most precious ones we have today" நமது விஞ்ஞானக் கொள்கைகள் அனைத்தும் வெறும் குப்பைகள் என்று கூறாமல் கூறினார் ஐன்ஸ்டைன்.

நீண்ட சிந்தனைக்குப் பிறகு, ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருகிறார் ஐன்ஸடைன்.

அணுவிற்குள் ஒரு விசையென்றும். அண்டத்தில் வேறு விசையென்றும் இருக்க முடியாது. அத்தனைக்கும் பொதுவான ஒரே மூலவிசைதான் இருக்க வேண்டும். அந்த ஒருங்கிணைப்பு விசையை "Unified Field" ஐக் கண்டறிவது தான் எனது எஞ்சிய வாழ்நாளின் லட்சியம் என்று தனக்குத் தானே ஒரு பாதையை அமைத்துக் கொண்டார் ஐன்ஸ்டைன்.

ஆனால் அவரது லட்சியத்தை முடிக்க இறையாற்றல் வேதாத்திரியைத் தேர்ந்தெடுத்தது. ஆம்!

**1954ல் ஐன்ஸடைன் மறைந்தார்.**

துகளோடு நின்று விட்ட விஞ்ஞானம் தூய வெளியை முழுமையாகத் தொடமுடியவில்லை.

அந்த வெளிதான் இப்பிரபஞ்சத்தின் ஆதியாகிய, ஆதி மூலமாகிய இறைநிலை சர்வ வல்லமை பெற்றது பிரம்மம் என்பதை அந்த விஞ்ஞான மேதை ஐன்ஸ்டைன் உணரவில்லை.

அப்படி அவர் உணர்ந்து, அதை இந்த உலகத்திற்கு எடுத்துச் சொல்லியிருப்பாரேயானால் இன்று வேதாத்திரிக்கு வேலையிருந்திருக்காது.

மெய்ஞ்ஞான, விஞ்ஞான இணைப்பு அவரது காலத்திலேயே நிகழ்ந்திருக்கும். ஒரு விஞ்ஞானியாக மட்டுமல்ல, ஒரு தலைசிறந்த ஆன்மீக வாதியாகவும் திகழ்ந்திருப்பார்.

ஐன்ஸ்டைன் அறிந்திருக்க வேண்டிய அந்த மாற்று விஞ்ஞானத்தை இன்று வேதாத்திரி மகரிசி அவர்கள் நமக்குத் தந்திருக்கிறார்கள். இந்த மாற்று விஞ்ஞானம் நமக்குப் பல புதிய பார்வைகளைத் தருகிறது.

"Where Einstein ends < Maharishi starts. It is perfect relay race"

ஒருங்கிணைப்பு விசையே ஐன்ஸடைனின் கடைசி மூச்சு. ஆனால் வேதாத்திரிக்கு அதுதான் ஆரம்ப மூச்சு.

ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் வீட்டில் அவரது விருந்தினர் அறையில் இரண்டே இரண்டு புகைப்படங்கள் இருக்கின்றன. ஒன்று நியூட்டன், மற்றொன்று மகாத்மா காந்தி.

நமது தேசத்தந்தை மகாத்மா காந்தி பற்றி ஒருமுறை ஐன்ஸ்டைன் கூறியது.

❖ Generations to come,will scarcely believe that such a man ever walked on this earth in fiesh and blood.

மகாத்மா காந்திக்குப் பொருந்துகிற இந்த வாசகம் வேதாத்திரி மகரிசிக்குப் பொருந்தும்.

### வேதாத்திரி தத்துவம்

சுமார் 1500 கோடி ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சிறு புள்ளிவெடித்து, இந்தப் பிரபஞ்சம் உருவாகி விரிந்துகொண்டே செல்வதாகப் பெருவெடிப்புக் கொள்கை (Big bang Theory) கூறுகிறது

இந்தப் பெரு வெடிப்புக் கொள்கையில் பல கேள்விகள் எழுகின்றன. அந்தப்புள்ளி வெடிக்கக் காரணமென்ன? அந்தப் புள்ளிக்கப்பால் இருப்பது வெற்றிடமா? அல்லது ஏதோ ஒரு பொருண்மையில்லா (Non material) ஊடகமா?

இந்தக் கேள்விக்கு இன்றைய பெருவெடிப்புக் கொள்கையில் சரியான பதில்கள் இல்லை.

வேதாத்திரி மகரிசியின் தத்துவத்தில் பிரபஞ்சம் ஆரம்பமானது ஒரு புள்ளியின் வெடிப்பில் அல்ல, மாறாக எங்கும் நீக்கமற இருக்கின்ற சுத்தவெளியின் மலர்ச்சி தான் பிரபஞ்சத்தின் ஆரம்பம்.

இன்றைய பெரு வெடிப்புக் கொள்கையில், உயிரினத்தின் தோற்றத்தைப் பற்றி எந்த ஒரு கோட்பாடும் இல்லை. ஆனால் வேதாத்திரி மகரிசியின் மாற்று விஞ்ஞானத்தில் பரமாணுக்களாகிய வேதான்களின் சுற்று ஓட்டமே உயிராக வருகிற பேருண்மை பேசப்படுகிறது.

சுத்தவெளியே இப் பிரபஞ்சத்தின் மூலம். அதன் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தமே இப்பிரபஞ்சத்தின் ஒருங்கிணைப்பு விசை. "Unified Force" என்பதே வேதாத்திரிய விஞ்ஞானத்தின் அடிப்படைக் கோட்பாடு.

விஞ்ஞானிகளே அடிப்படைத் துகளை மட்டுமே ஆராய்ந்து கொண்டிராமல், அதற்கும் அப்பால் செல்லுங்கள். ஆதிமூலமாகிய சுத்தவெளியிலிருந்து விஞ்ஞானம் ஆரம்பமாகட்டும் என்பது இன்றைய விஞ்ஞானிகளுக்கு மகரிசியின் அறைகூவல்.

மூலங்கள் நான்கு என்ற நியூட்டனின் சித்தாந்தத்தில் எழுந்தது 19ம் நூற்றாண்டின் விஞ்ஞானம்.

மூலங்கள் இரண்டு என்ற ஐன்ஸ்டைனின் சித்தாந்தத்தில் அமைந்தது 20 ஆம் நூற்றாண்டின் விஞ்ஞானம்.

வருகிற 21 ஆம் நுற்றாண்டின் விஞ்ஞானம். மூலம் ஒன்றே என்று வேதாத்திரி மகரிசியின் சுத்தவெளித் தத்துவத்தின் மேல் அமையும்.

அப்படி அமையும் போது நியூட்டன் மற்றும் ஐன்ஸ்டைன் சித்தாந்தங்களை விரித்து ஒரு முழுமையான தத்துவமான வேதாத்திரிய விஞ்ஞானமாகப் பல தனித்தன்மையோடு விளங்கும்.

**அதன் தனித் தன்மைகள் யாவை?**

மேலை நாட்டின் விஞ்ஞானக் கோட்பாடுகளுக்கு ஆன்மீக அடிப்படையில்லாததால் இன்றைய விஞ்ஞானத்தில் சில அற்புதமான மற்றும் அதிநுட்பமான உண்மைகள் விடுபட்டுப் போய்விட்டன.

அப்படி விட்டுப்போன பல அம்சங்களில் ஒன்று தள்ளுவிசை (Repulsive Force). மற்றொன்று தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றல் (Self Compressive surrounding force) இந்த இரண்டு அம்சங்களும் இன்றைய விஞ்ஞானக் கோட்பாடுகளில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஆகவே அங்குச் சிக்கல்கள் பெருகுகின்றன. தள்ளு விசையில் ஏற்படுகிற மாற்றமே ஒரு அமைப்பின் பரிமாணங்களை நிர்ணயிக்கிறது

என்பது வேதாத்திரிய பிரபஞ்சத் தத்துவத்தின் ஒரு முக்கிய விஞ்ஞானக் கொள்கையாகும். (Universe is nothing but repulsive force and its fluctuations.”

சுத்தவெளி, தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தம், வேதான், காந்தம், தன்மாத்திரை, உயிர், மனம் போன்ற மறைபொருள்களையும். தனிமங்கள், அவைகளின் குணங்கள், நட்சத்திரங்கள், அண்டம் போன்ற தோன்றப் பொருள்களும் இணைத்து ஒரு மகத்தான பிரணாமச் சரித்திரமாக, (வேதாத்திரிய விஞ்ஞானம்) என்ற புதிய தத்துவம் இன்று உலகெங்கும் பரவி வருகிறது ஐன்ஸ்டின் சொன்ன நொண்டி-குருடன் உதாரணம்.

விஞ்ஞானத் துறையிலே நீண்ட காலம் தன்னுடைய வாழ்வையே அர்ப்பணித்து தன்னுடைய உலகுக்கு ஒருபெரிய சாதனையை வழங்கிய பெரியார் ஐன்ஸ்டின் சொன்னார்.

தத்துவம் இலலாத விஞ்ஞானம் குருடனைப் போல உள்ளது. விஞ்ஞானம் இல்லாத தத்துவ ஞானம் நொண்டியைப் போன்றது என்று அவர் சொன்னார்.

ஞாலத்தை அறிவது விஞ்ஞானம். மூலத்தை உணர்வது மெய்ஞ்ஞானம் என்று சொன்ன வேதாத்திரியார் விஞ்ஞானம் விளக்கைப் போன்றது. மெய்ஞ்ஞானம் சூரியனைப் போன்றது என்பார்.

விஞ்ஞானத்தின் பயனாய் பொருள் பெருகும் அளவிற்கு விளைவறிந்து அளவுமுறை பிறழாது வாழ மெய்ஞ்ஞானம் மக்களிடையே மேலோங்க வேண்டும். மிக இன்றியமையாத இதை முதலில் செய்வோம் என்றும் வேதாத்திரியார் கூறுகிறார்.



# 15. வேதாத்திரியத்தில் கன்பூசியஸ்

அறநெறி வழியே உலக சமுதாயத்தில் தனி மனிதனாகவும் பொது மனிதனாகவும் வாழ்வது எப்படி எனச் சிந்தித்தவர் கன்பூசியஸ். .இதனை வாழ்க்கை நெறியாக மாற்றித்தந்தவர் வேதாத்திரி.

சீன மக்களின் அடிப்படை கருத்துகளைத் தொகுத்து ஒரு கோட்பாடாக வகுத்த முதல் மனிதர் பெரும் சீனத் தத்துவ அறிஞரான கன்பூசியஸ் ஆவார்.

அவருடைய கோட்பாடு தனி மனிதனின் அறவொழுக்கத்தையும், அறநெறியின் அடிப்படையில் மக்களை ஆண்டு பணிபுரியும் அரசாங்கத்தைப் பற்றிய கருத்தையும் தழுவியது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக சீன மக்களின் வாழ்க்கையும், பண்பாடும் இதில் ஊறித் திளைத்திருந்தன. இதன் செல்வாக்கு உலக மக்கள் தொகையின் ஒரு பகுதி முழுவதும் பரவியிருந்தது.

**கன்பூசியஸ் வாழ்க்கை வரலாறு [கி.மு.551 – கி.மு.479]**

வடகிழக்குச் சீனாவில் இன்றைய ஷாண்டுங் மாநிலத்திலுள்ள லூ எனும் பகுதியில் கி.மு. 551 ல் கன்பூசியஸ் பிறந்தார்.

இவருடைய மூதாதையர்களில் ஒருவர் சுங் அரச பரம்பரையைச் சார்ந்தவர் எனச் சொல்வதுண்டு.

கன்பூசியஸின் தந்தை சூ-லியாங்-கே அப்பட்டினத்தின் அதிகாரியாக இருந்தவர். நெஞ்சுரம் வாய்ந்த மாவீரர்.

அவருக்குத் திருமணமாகி நிறையப் பெண் குழந்தைகள் பிறந்தன. ஆனால் அவருக்கு நீண்ட காலமாக ஆண் மகவு இல்லை.

சந்ததியில்லாமல் குறைபட்டுக் கொண்டிருந்த அவரது 70 ஆவது வயதில் 17 வயது நிரம்பப் பெறாத ஒரு பருவ மங்கையை மணந்தார். அவர்களுக்குப் பிறந்த ஆண் குழந்தையே கன்பூசியஸ்.

இவரது தந்தை யென் குடும்பத்து குமரியொருத்தியிடம் காதல் கொண்டிருந்தார் என்றும் அக்காதலர்களுக்குப் பிறந்த குழந்தைதான் கன்பூசியஸ் என்றும் மற்றொரு வரலாறு உண்டு.

மகான்கள் எல்லாம் அவதரிக்கும் போது காணப்படும் அதிசயங்கள் அற்புதங்கள் அறிகுறிகளெல்லாம் கன்பூசியஸ் பிறந்தபோதும் காணப்பட்டனவாம்.

அவரது இளமைப் பருவத்திலேயே அவரது தந்தை இறந்தார்.

ஆகவே கன்பூசியசும் அவரது அன்னையும் வறுமையில் வாழ்ந்தனர்.

இளைஞராக இருந்த போது சிறிய அரசாங்க அதிகாரியாகப் பணிபுரிந்தார். ஆனால் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் பதவி துறந்தார்.

அதன்பின்னர் 16 ஆண்டுகளாக மக்களுக்குப் போதித்து வந்த காலத்தில் அவரது கோட்பாட்டைக் கேட்டு ஏராளமானவர்கள் அவரைப் பின்பற்றினார்கள்.

கன்பூசியஸ் சீன நாட்டின் மாபெரும் ஞானி மட்டுமல்ல. உலகம் முழுவதற்குமே பொதுவான ஒரு தத்துவ ஞானி.

ஞானி என்றால் உலகியலைத் துறந்துவிட்டு ஒதுங்கி நிற்கும் பரமாத்திக யோகி அல்ல. அவர் உபதேசம் செய்ததும் வெறும் ஞான மார்க்கம் அல்ல. நடைமுறை வாழ்வில் சாதாரண மனிதனும் பின்பற்றக் கூடிய கர்ம மார்க்கந்தான். வேதாத்திரி மகரிசியும் இதைத்தான் செய்தார்.

இவரைப் பெரிய மகான் என்று பயபக்தியுடன் மக்கள் பன்னெடுங்காலமாகப் போற்றி வந்தாலும் மக்களை வியப்பில் ஆழ்த்தும் அற்புதச் செயல்கள் எதுவும் இவர் நிகழ்த்தவில்லை.

அவரது 50 ஆவது வயதில் லூ அரசாங்கத்தில் அவருக்கு ஓர் உயர் பதவி வழங்கபட்டது.

ஆனால் 4 ஆண்டுகளுக்குப் பிறகு அரசவையிலிருந்து எதிரிகள் அவரை பதவியிலிருந்து விலக்கி அரசைவிட்டே வெளியேற்றி விட்டனர்.

அடுத்த 13 ஆண்டுகளாக அவர் அங்குமிங்குமாக அலைந்து திரிந்து போதித்து வந்தார்.

கடைசியாக அவர் தாயகம் திரும்பித் தம் வாழ்வின் இறுதி 5 ஆண்டுகளை அங்கு கழித்தார். கி.மு. 479 ல் அவர் மறைந்தார்.

கன்பூசியஸ் ஒரு மதத்தை நிறுவியராகப் போற்றப்படுகின்றார். ஆனால் அது முற்றிலும் உண்மையன்று. அவர் கடவுளைப் பற்றி மிக அரிதாகவே குறிப்பிட்டார்.

மறு உலக வாழ்வு பற்றி வாதிக்க மறுத்தார். எல்லா வகையான மெய்விளக்க ஊகக் கோட்பாடுகளையும் தவிர்த்தார்.

அடிப்படையில் அவர் ஓர் உலகியல் தத்துவ அறிஞர். தனிமனித, அரசியல் அறநெறியிலும் ஒழுக்கத்திலும் அக்கறை காட்டினார்.

கன்பூசியஸ் சீன மக்களைக் கவர்ந்ததற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவது அவருடைய வாய்மையும் நேர்மையும் தான்.

இரண்டாவது, அவர் மிதவாதியாகவும், நடைமுறைவாதியாகவும் இருந்தார். மக்கள் தம்மால் சாதிக்க முடியாதவற்றைச் செய்யுமாறு அவர் சொல்லவில்லை.

அவர்கள் ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டுமென்று அவர் கூறியபோது அவர்கள் புனிதர்களாக இருக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கவில்லை.

இதிலும் பிறவற்றிலும் அவர் சீன மக்களின் நடைமுறை மனப்பாங்கையே பிரதிபலித்தார்.

அவருடைய கொள்கைகள் சீனாவில் பெரும் வெற்றி பெற்றதற்கு இதுதான் ஒருவேளை காரணமாக இருக்கக்கூடும்.

கன்பூசியஸ் சீன மக்களைத் தம் அடிப்படை நம்பிக்கைகளை விட்டு விடுமாறு கேட்கவில்லை. அதற்கு மாறாக அவர் அவர்களுடைய மரபான அடிப்படை இலட்சியங்களையே தெளிவாகவும் உறுதியாகவும் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறினார்.

ஒரு வேளை உலக வரலாற்றில் வேறு எந்தத் தத்துவ அறிஞரும் கன்பூசியஸைப் போல் தம் நாட்டவரின் அடிப்படைக் கருத்துக்களுடன் அவ்வளவு நெருங்கி இருந்ததில்லை எனலாம்.

கன்பூசியஸ் பற்றி வேதாத்திரி மகரிசி.

**வேதாத்திரியத்தில் கன்பூசியஸ்**



**கன்பூசியஸ்**

மனிதன் மகிழ்ச்சியோடும் நெறியோடும் வாழ்வது எப்படி என்பதை கன்பூசியஸைப் போல் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறியவர் வேறுயாருமே இல்லை.

மனித இனத்திற்கு உபயோக ரகமான முறையில் இவரை விட வேறுயாருமே போதிக்கவில்லை.

இவர் சீனாவின் முடி சூடா மன்னர் என்று சிந்தனையாளர் எவரையும் நையாண்டி செய்யும் வால்டேரே உணர்ச்சியுடன் எழுதியிருக்கிறார். வேதாத்திரியும் இவரைப் புகழ்ந்திருக்கிறார். இதுவே இவரது சிறப்பிற்குப் போதும்.

திருவள்ளுவரைப் போல் வேதாத்திரி மகரிசிப் போல் இவர் ஒரு அறநெறியாளர். அதோடு இராஜ தந்திரியாக அனுபவம் பெற்றவர்.

குருகுல மகான். கல்வி கற்பிக்கும் போதானாசிரியர். பழம் நூல்களை தொகுக்கும் பதிப்பாசிரியர்.

சீடர்களோடு நடமாடும் ஒரு பல்கலைக் கழகம். கவிஞர். இசைப்பாடகர்.

சங்கீதமேதை, அரசியல்வாதி, இயற்கைவாதி, இலட்சியவாதி, காரியவாதி, தத்துவஞானி, வாழ்க்கையோட்டத்தில் நாடோடி.

இத்தனை சிறப்பியல்புகளும் ஒருங்கே வாய்ந்தவர். இவ்வியல்புகளால் பெற்ற அனுபவங்களைக் கொண்டு ஒரு புதிய கொள்கையை மனித சமுதாயம் பற்றிய ஒரு புதிய லட்சியத்தை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

அந்த லட்சியங்கள் தான் என்ன?

ஒரே உலகம். ஒரே மனித சமுதாயம். ஒரே பொது ஒழுக்கம். உலகம் முழுவதற்கும் ஒரே ஒழுங்கு. ஒரே பொதுநெறி.

இத்தகைய உலகப் பொதுநல சமுதாய அமைப்பின் கீழ் தனிமனிதன் பொது மகனாக வாழவும், தன்னலமற்று பிற நலப்பற்றை

மேற்கொண்டு சகோதர பாசத்தோடு பழகவும், அன்பு வழியில் அறநெறியைப் பின்பற்றி இயற்கையோடு இயைந்து இன்பம் பெறவும், மனிதத் தன்மையைப் பண்படுத்தி வளர்த்துப் பூரணத்துவம் அடையவும் வேண்டும்.

இவ்வாறு 2500 ஆண்டுகளுக்கு முன் கன்பூசியஸ் சிந்தித்து பழமைப் பண்புகளை அஸ்திவாரமாக அமைத்து அதன் மீது அறநெறிகள் வகுத்து ஒரு கொள்கையை எழுப்பி உலகின் முன் நிறுத்தினார்.

அதை இன்று கன்பூசியனிஸம் எனப் போற்றி உலகம் சிந்தித்து வருகிறது.

கன்பூசியஸின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்று. இயேசு கிறிஸ்துவின் பொன்னான விதியின் திரிபு.

'' பிறர் உனக்கு எதைச் செய்ய வேண்டாமென விரும்புகிறாயோ. அதைப் பிறருக்குச் செய்யாதே.''

வேதாத்திரி மகரிசி இக் கருத்தினை வேறு கோணத்தில் இரண்டொழுக்கப் பண்பாடாக மானுடத்திற்கு தந்துள்ளார்கள்.

1. **நான் என் வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் மனதுக்கும் துன்பம் தரமாட்டேன்.**

2. **துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.**

### அறநெறி என்றால் என்ன?

அறநெறி என்றால் ஒழுக்கம் கடமை ஈகை தான். இம்முறையை கடைப்பிடித்து வாழும் வாழ்க்கை அறநெறி வாழ்க்கையாகும்.

கன்பூசியஸின் அடிப்படை நோக்கு பழமைப் பற்றுடையது. அவர் கடந்த காலமே பொற்காலமென்று நம்பினார். அரசரும் மக்களும் பழைய அறநெறித் தரங்களையே பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தினார்.

ஆயினும் உண்மையில், அறநெறி முன்மாதிரியினால் ஆள வேண்டுமெனும் கன்பூசியசின் இலட்சியம் முற்கால நடைமுறையாக இருந்ததில்லை. ஆகவே, கன்பூசியஸ் புதியது புனைந்த சீர்திருத்தவாதியாகவே இருந்தார்.

❖ தன் சக மனிதர்களை நேசிப்பதுதான் மேன்மையான மனிதத் தன்மை. அவர்களை அறிவதுதான் அறிவு!

- ❖ அமைதியான குணம், திடமான மனம், எளிமை, இயல்பு, நிதானம், நாவடக்கம், இவை மேன்மையான மனிதனின் தன்மைகள்.

- ❖ பணிவுடைமை, பரந்த மனப்பான்மை, நேர்மை, சிரத்தை, கருணை இந்த ஐந்து இயல்புகளையும் இவ்வுலகில் பயில முடியாதவர்களை மேன்மையான மனிதரெனக் கருத இயலாது.

- ❖ சிறந்த கல்வியின் நோக்கத்தை மூன்று கூறுகளாக வகைப்படுத்தலாம். முதலாவது. மனிதன் தன் ஆன்ம இயல்பைப் பழுதுபடாத வண்ணம் பாதுகாப்பது. இரண்டாவது. மக்களுக்கு திருந்திய புதியதொரு வாழ்க்கை முறையை வகுத்துக் கொடுப்பது. மூன்றாவது, பரிபூர்ண நிலை என்பது என்னவெனச் சரிவர உணர்ந்த பிறகு தான் ஒருவனுடைய வாழ்வில் இலட்சியம் என்பது உருவாகும்.

- ❖ அனைவரிடமும் அன்பு காட்டுவதுதான் உபகாரம் எனப்படும். அனைவரிடமும் அன்பு செலுத்துங்கள். நல்லவர்களின் நட்பை நாடுங்கள்.

- ❖ தன்வீட்டில் தன் குடும்பத்து அங்கத்தினர்களுடன் அன்பு நிலையில் வாழ்பவன் தான் நாட்டு மக்களுக்கு அமைதியைப் பற்றிக் கூறத் தகுதியுடையவன் ஆகிறான்.

- ❖ கடமை-மனித இனம் முழுமையும் கடைப் பிடிக்க வேண்டிய நேர்மையான பாதையாகும்.

- ❖ மக்களின் நேர்மையான ஒழுக்கத்தைப் பற்றி கவனிப்பது அரசினுடைய முக்கிய கடமை ஆகும்.

கன்பூசியஸ் வேதாத்திரி காலம் மாறுபட்டாலும் கருத்துகள் ஒன்றேயாகும்.

**கன்பூசியஸ்** உராய்வில்லாமல் ரத்தினங்களைப் பளபளப்பாக்க முடியாது. சோதனைகளின்றி மனிதரைச் சரியானவராக்க முடியாது.

**வேதாத்திரி** வந்த துன்பம் ஏற்றுச் சகித்து அவற்றைப் போக்க வழிகண்டு முறையோடு ஆற்றி இன்பம் காத்து எந்தத் துன்பம் வரினும் எதிர்நோக்கி நிற்பாயேல் இன்பமே மிகுதிப்படும். துன்பங்கள் தோல்வியுறும்.

**கன்பூசியஸ்** தேவை என்பது பலவீனமானவரையும் பலசாலியாக்கும்.

**வேதாத்திரி** துன்பத்திலிருந்து விடுபட ஆன்மா ஒரு செயலையோ, பொருளையோ, சூழ்நிலையையோ நாடுகின்றது. இந்த நாட்டமே தேவையுணர்வாகும்.

**கன்பூசியஸ்** கடமை மனித இனம் முழுமையும் கடைப் பிடிக்க வேண்டிய நேர்மையான பாதையாகும்.

மக்களின் நேர்மையான ஒழுக்கத்தைப் பற்றி கவனிப்பது அரசினுடைய முக்கிய கடமையாகும்.

**வேதாத்திரி** உனக்கும் நல்லதாய் ஊருக்கும் நல்லதாய் நினைப்பதும் செய்வதும் நித்தியக் கடன்.

**கன்புசியஸ்** அனைவரிடமும் அன்பு காட்டுவதுதான் உபகாரம். அன்பு செலுத்துங்கள். நல்லவர்களின் நட்பை நாடுங்கள்.

**வேதாத்திரி** அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் கடமை எல்லாம் அன்பின் செயலாகும்.

அறநெறி வாழ்வு மக்களிடம் எவ்வாறு இயல்பாக மலரும் என்பதை வேதாத்திரி மகரிசி கூறுகிறார்.

❖ இன்றுள்ள விஞ்ஞான காலத்திற்கு ஏற்ப மக்களிடம் அறிவு வளர்ந்துள்ளது. தெய்மென்ற நிலையைத் தெளிவு பட விளக்கினால், அந்தத் தெய்வ நிலையுணர்வினால், மாபெரும் ஆற்றல் எல்லா உயிர்களிடத்தும் ஒவ்வொரு விண்துகளைச் சுற்றிலும் நிறைந்து நின்று இயங்கிக் கொண்டிருக்கும் காட்சியை மக்கள் அக உணர்வாக பெறுவார்கள். அந்த உள்ளொளியில்தான் ஒவ்வொருவருக்கும் துன்பம் அளிக்கக் கூடாது, துன்பம் நீக்க என்னால் இயன்ற உதவி செய்ய வேண்டும் என்ற அறநெறி வாழ்வு மக்களிடம் இயல்பாகும்.

மேலும் வாழ்வுக்குத் தேவையான அறநெறிகள் என்ன என்பதையும் வேதாத்திரி மகரிசி வகுத்து தந்துள்ளார்கள்.

1. வாழ்வின் நோக்கம், தேவைகள், விருப்பங்கள் இவற்றை மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும். இவை ஒன்றுக்கொன்று முரண்படாமல் அமைத்துக் கொள்ள வேண்டும்.

2. தனக்கு அமைந்துள்ள சூழ்நிலைகளையும் வாய்ப்புக்களையும் கணித்துக் கொள்ள வேண்டும்.

3. இயற்கையின் ஒழுங்கமைப்பும், அதன் ஆற்றலின் விளைவான காரண காரிய விளைவு விதியைப் பற்றி உணர்ந்து கொண்டு மதித்துப் போற்றி நடக்க வேண்டும்.

4. வாழவேண்டிய முறைகளையும், ஆற்றவேண்டிய செயல்களையும் வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. இத்தகைய வாழ்வுக்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்வதற்கு உடல் வலிமையையும், திறனையும், அறிவையும் வளர்த்துக் கொள்ள் வேண்டும்.

6. விடாமுயற்சியோடும், எண்ணம், சொல், செயல் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

7. அவ்வப்போது வாழ்க்கையில் ஏற்படும் தவறுகளைத் தற்சோதனை, செயல்திருத்தம் என்ற இரண்டு வழிகளிலும் திருத்தித் தன்னைத் தூய்மையாக்கிக் கொண்டே இருத்தல் வேண்டும்.

இத்தகைய அறநெறிகளை வாழ்விலே பின்பற்றி செயல்பட்டால், மனித வாழ்வில் உள்ள் சிக்கல்கள் அனைத்தும் படிப்படியாகக் குறைந்து நிறைவும் அமைதியும் உடைய வாழ்க்கை வாழலாம் என்று வேதாத்திரியார் வழி காட்டுகின்றார்.

இந்த நோக்கம் நிறைவேண்டுமானால் முதலில் சிந்தனையாற்றலை மக்களிடம் தூண்டிவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

இதுவே தினசரி வாழ்விலும் கல்வி முறையிலும் மனித குலத்திற்கு வழிகாட்டியாய் அமைய வேண்டும்.

இந்த அடிப்படையில் சிந்தித்துத் தேவையற்ற செயல்களை, சடங்கு முறைகளை ஒதுக்கிவிட்டு, வாழ்க்கைத் திட்டங்களை முறையாக வகுத்துக் கொண்டு வாழவேண்டிய அவசியத்தை சிந்தித்து உணரும் போது மனித சமுதாயம் உயர்வு பெறும் என்று வேதாத்திரியார் கூறுகின்றார்.

கன்பூசியஸ், வேதாத்திரி மகரிசி போன்ற உலக சிந்தனையாளர்கள் கூறும் இத்தகைய அறநெறிகளை வாழ்விலே பின்பற்றிச் செயல்பட்டால், நமது வாழ்வு இனிமையாகவும், அமைதியாகவும், சிறப்பாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# துணை நின்ற நூல்கள்


- வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 பானுகுமார்.
- ஜேம்ஸ் ஆலனின் வாழ்க்கையை அமைக்கும் எண்ணங்கள், எம்.எஸ். உதயமூர்த்தி.
- பிரபஞ்ச சரித்திரமும் உயிரினங்கள் வரலாறும்.
- விளக்குகள் பல தந்த ஒளி வில்லியம் எயிஷ்லர் வாட்சன்.
- வேதாத்திரியச் சிந்தனைகள், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவுர்.
- இந்த நூற்றாண்டு தந்த மகான் - அருள்நிதி அழகர் ராமானுஜம்
- சிந்தனையாளர் இங்கர்சால், இராதாமணாளன்.
- நியூட்டனின் ஈர்ப்பு விசையும் மகரிசியின் இறுக்கவிசையும் டாக்டர் மாதவன், பெங்களூர்.
- வேதாத்திரிய இலக்கியம் ஆய்வுக் கோவை, வேதாத்திரியப் பதிப்பகம்.
- அறிஞர்கள் வாழ்வில் நடந்த அற்புத நிகழ்ச்சிகள், எடையுர் சிவமதி.
- சிந்தனையாளர் ஐன்ஸ்டைன் ப.நா. பாலசுப்பிரமணியன்.
- டார்வின் தந்த பரிணாமக் கொள்கையும் மகரிசியின் தன்மாற்றக் கொள்கையும் அருள்நிதி எஸ். ரேணுகா கலியமூர்த்தி.
- சிந்தனையாளர் அரிஸ்டாட்டில், கிருஷ்ணன் பாலா.
- வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

- விஞ்ஞான அடித்தளங்களின் அசைவுகளும் மாற்றங்களும் - அருள்நிதி அழகர் ராமானுஜம்.
- அன்பொளி மாத இதழ்கள் - வேதாத்திரி மகரிசி.
- ஞானக்களஞ்சியம்,யோகிராஜ் வேதாத்திரி மகரிசி.
- தத்துவச் சிகரங்கள் -டாக்டர் அழகர் ராமானுஜம்.
- மனம், வேதாத்திரி மகரிசி.
- தமிழ் விக்கிப்பிடியா
- உலக சமாதானம் - யோகிராஜ் வேதாத்திரி மகரிசி
- இண்டர்நெட் தகவல்கள்.
- சிந்தனையாளர் கன்பூசியஸ், கோமேதகவேலு.
- வேதாத்திரி மகரிசியின் நூல்கள், சொற்பொழிவுகள்
- The 100 – Meeraa Publication. Chennai.
- As You Think – James Aleln.
- The Origin of Species by Charles Darwin
- Mind is the Master - James Aleln
- As a Man Thinketh - James Aleln
- The Republic ... Plato,
- Plato: Plato the Teacher
- The Trial and Death of Socrates by Plato
- The Hemlock Cup: Socrates, Athens and the Search for the Good Life (Hardcover) by Bettany Hughes

# ஆசிரியரின் பிற நூல்கள்

- *வேதாத்திரி மகரிசியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்*
- *காலமே உன் உயிர்*
- *டென்சனை வெல்வது எப்படி?*
- *ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே*
- *அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்*
- *அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்*
- *தியானம் பழக 100 தியானச் சிந்தனைகள்*
- *நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்*
- *ஓய்வுக்குப்பின்னும் உற்சாக வாழ்க்கை.*
- *தன்னம்பிக்கை மலர்கள்.*
- *மன்னார்குடி வரலாறு*
- *கோள்களை வென்ற இடைக்காட்டு சித்தர்*
- *நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்*
- *புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்*
- *குருவுடன் வாழ்ந்தவர்*
- *தாயுமானவரும் வேதாத்திரி மகரிசியும்*

- *இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்*
- *நபிகள் நாயகம் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்*
- *வேதாத்திரி மகரிசியின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்*
- *வேதாத்திரி மகரிசி பற்றி 100 அறிஞர்கள்.*
- *வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 (ஐந்து பாகங்கள்)*
- *வள்ளலாரும் வேதாத்திரி மகரிசியும்*
- *தவம் (சிறுகதைத் தொகுதிகள்)*
- *செயலே விளைவு ( சிறுகதைத்தொகுதி)*
- *ஞானதீபமும் ஞான ஒளியும்*
- *வேதமுதல்வரும் வேதாத்திரி மகரிசியும்*
- *ஞாலம் போற்றும் ஞானிகள்*
- *தினசரி தியானம்*
- *மகாவீரரும் வேதாத்திரி மகரிசியும்*
- *வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்*